வரு.74 இல. 08 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI தினகரன் වාරමඤ්ජරී
2022 பெப்ரவரி 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை February 20 Sunday, 2022
32 பக்கங்கள் 40/-






07 மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு


18 போலிகளிடம் ஏமாற வேண்டாம் - டிம்பிள் ஹயாதி


19 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் கூச்சப்படத் தேவையில்லை


24 எப்போதையும் விட சிறப்பாக விளையாட ஜோகோவிச் தயார்


**யுத்தத்தில் உயிரிழந்தவரை தனிப்பட்ட முறையில் நினைவு கூரலாம்;**

# பயங்கரவாதிகளை நினைவுகூர எவருக்குமே அனுமதியில்லை

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை



**ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு**

யுத்தத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தால் அவரை தனிப்பட்ட முறையில் நினைவுகூரலாம். ஆனால் பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதிக்க முடியாதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

மனித உரிமை குழுக்கள், மனித உரிமை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் தீர்மானங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. 04

# சகலரும் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்வது அவசியம்

## மட்டக்களப்பு சுகாதார பணிப்பாளர் Dr சுகுணன் கோரிக்கை



மூன்றாவது தடுப்பூசியுடன் கொவிட் 19 நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கான அனுகூலமான நிலைமையுள்ள காரணத்தால் அனைவரையும் கட்டாயம் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கு.சுகுணன் வேண்டுகோள் விடுத்துள்ளார். 04

# தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைக்க இந்தியா உதவ வேண்டும்

## இந்திய தூதுவரிடம் TNA மீண்டும் கோரிக்கை



தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை இந்தியா பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முன்வைத்தார்.

இந்தியாவுக்கு இலங்கை 04



அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர் காலசூரி திவ்யா சுஜேனின் மாணவிகளான நித்யா லோகேஸ்வரன் கோபிநாத், சுருதி கோபிநாத் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று (20) ஞாயிற்றுக்கிழமை மாலை 06 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும். ஓய்வுபெற்ற அதிபரும், மூத்த நடனக் கலைஞருமான திருமதி மாலதி சிவகுமார், பிரதம விருந்தினராகவும், இந்திய கலாசார நிலைய பணிப்பாளர் டாக்டர் ரேவந் விக்ரம் சிங்க், சித்ரசேன வஜிர ஆடல் நிறுவனத்தின் பணிப்பாளர் உபேகா சித்ரசேன, கொழும்பு மகளிர் கல்லூரி அதிபர் தீபிகா தசநாயக்க ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். திவ்யா சுஜேனின் நெறியாள்கையில், இசை மேதை டாக்டர் ராஜ்குமார் பாரதியினால் இவ்வரங்கேற்ற அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

# அரசுக்கு எந்தவித கஷ்டத்தையும் கொடுக்கமாட்டோம்

**வவுனியா விசேட நிருபர்**



நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்க மாட்டோம். நாங்கள் மக்களது பிரச்சினையை பேசுவோம். மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் அதனை பேச முன்னிற்போம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 04

## லேக்ஹவுஸ் நிறுவுனர் டி.ஆர்.விஜயவர்தனவின் 136 ஆவது ஜன தின நிகழ்வு




லேக்ஹவுஸ் நிறுவுனர் டி.ஆர்.விஜயவர்தனவின் 136 ஆவது ஜனன தினத்தையொட்டி நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சமய நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# பொலிஸ் P.C. கொலை இதுவரை 04 பேர் கைது

தங்காலை பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்களில் ஒரு பெண்ணும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி இரவு தங்காலை விதாரந்தெனிய பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், அவரது மனைவி மற்றும் அவரது இளைய சகோதரர் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

தாக்குதலில் கான்ஸ்டபிள் உயிரிழந்துள்ளதுடன் அவரது இளைய சகோதரர் பலத்த காயங்களுடன் காலி, கராப்பிட்டிய 04

# உள்ளூராட்சி தேர்தல் இந்த வருட இறுதியில்

## நாம் தயார் என்கிறார் தலைவர்

**மாத்தளை சுழற்சி நிருபர்**



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஒரு வருடகாலத்துக்கு ஒத்திவைத்திருக்கின்ற போதும் தேவை என்றால் அதனை இந்த வருட இறுதியில் எமக்கு நடத்த முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புன்சி ஹேவா தெரிவித்தார். 04

# தடுப்பிலுள்ளோரை விடுதலை செய்யுங்கள்

## அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் 04

# சமுதித்தவுக்கு பாதுகாப்பு வழங்க நீதிமன்று உத்தரவு

## B அறிக்கை தாக்கலுக்கு நடவடிக்கை



சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கெஸ்பேவ நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கெஸ்பேவ நீதவான் ருவந்திகா வீரசிங்க, பொலிஸ் விசேட பிரிவிற்கு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். 04

# நாட்டின் முன்னேற்றத்துக்கு தேசிய நல்லிணக்கம் மிக மிக அவசியம்

## யாழ்ப்பாணத்தில் வைத்து அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதார நெருக்கடிகளோ அல்லது கல்வி சம்பந்தமான சிக்கல்களோ எத்தகைய பிரச்சினைகளானாலும் எமது நாட்டின் தேசிய நல்லிணக்கம் மிக முக்கியமானதென ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அரசியல்வாதிகளை விட ஊடகவியலாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் பெரும் 04

# உலகில் வேகமாக பரவும் 'B.A. 2' வைரஸ்

## WHO எச்சரிக்கை விடுப்பு

ஒமிக்ரோனிலிருந்து உருமாறிய பி.ஏ.2 வகை வைரஸால், மீண்டும் உலகளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இது குறித்து, உலக சுகாதார அமைப்பின், கொவிட் 19 தொற்று குறித்து ஆய்வு செய்யும் தொழிநுட்பக்குழுவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் தெரிவிக்கையில்,

கோவிட் 19 தொற்று தொடர்ந்து பரவி வருகிறது. இந்நிலையில் ஒமிக்ரோன் தொற்றிலிருந்து 'பி.ஏ.1 பி.ஏ.1.1 பி.ஏ.2 மற்றும் 04

**ஊடகத்துறையில் 50 வருடம்**

# தினகரன் தில்லைக்கு இன்று பாராட்டு விழா



இலங்கையில் ஊடகத் துறையில் 50 வருடத்தை பூர்த்தி செய்துள்ள எமது தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு பாராட்டுவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கரவெட்டி தினகரன் நிருபராக சுமார் 40 ஆண்டுகாலம் 04

## எங்கள் கருத்து...

# ஆர்ப்பாட்டங்கள், கையெழுத்து நாடகங்கள் திடீரென முளைத்தெழுந்த காரணமென்ன?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகளால் கொழும்பிலும், அதைத் தொடர்ந்து வடக்கிலும் பொதுமக்களிடமிருந்து கையெழுத்து பெற்றுக் கொள்ளும் வேட்டை நடைபெற்று வருகின்றது. அதற்கும் அப்பால் நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை தமிழ்க் கட்சிகள் பலவும் தமிழ் பேசும் இனத்தின் ஏனைய கட்சியினரையும் இணைத்துக் கொண்டு முன்னெடுத்து வருகின்ற செயற்பாட்டையும் அவதானிக்க முடிகிறது.

இந்த வேளையில் ஏன் இந்த திடீர் ஆர்ப்பாட்டங்களும் கையெழுத்து வேட்டையும் என்று ஆராய்ந்து பார்த்தால், எதிர்வரும் மார்ச் ஆரம்பமாக இருக்கின்ற மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் மறைமுக நடவடிக்கையே என்பது சகலருக்கும் தெரியும்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களை எட்டி நிற்கும் இன்றைய காலப் பகுதியில், யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல் சம்பவங்களை இன்றும் ஞாபகப்படுத்தி அதற்காக குரல் கொடுத்து வருகின்ற அமைப்புகளை மற்றும் அரசியல் கட்சிகளை உண்மையில் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால் இந்த செயற்பாடுகள் உண்மையில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்படுகின்றனவா என்று உற்று நோக்கினால் நிச்சயமாக அதனை இல்லை என்றே 04

**இலங்கைக்கு கடத்தவிருந்த**

# 400 கிலோ கஞ்சாவுடன் தமிழகத்தில் ஐவர் கைது



தமிழகத்திலிருந்து படகு மூலம் இலங்கைக்குக் கடத்தவிருந்த 400 கிலோ கஞ்சாவை நாகபட்டிணம் காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளதுடன், ஐந்து பேரை கைதுசெய்துள்ளனர்.

நாகபட்டிணம் கீச்சாங்குப்பத்தில் உள்ள, பழைய மீன்பிடித் துறைமுகப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த விசைப் படகு ஒன்றிலிருந்து 04

**காரைநகர் கோவளம் கடற்பகுதியில்**

# அத்துமீறி மீன்பிடித்த ஆறு இந்தியர்கள் கைது

**யாழ் விசேட நிருபர்**



இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மேலும் 06 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால், யாழ்ப்பாணம் கோவளம் வெளிச்ச வீட்டிலிருந்து வடமேற்கு திசையில் இலங்கை கடற்பரப்பில் வைத்து நேற்று (19) அதிகாலை இம்மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, படகொன்றையும் கைப்பற்றியுள்ளதாக 04

## விக்கல் வீராச்சாமி



அண்ணே, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி யாழ்ப்பாணத்திலயும் கொழும்பிலயும் கையெழுத்து வேட்டை மும்மரமா நடக்குது போல....

அதில பகிடி என்னவெண்டா கையெழுத்து வைக்கிற பலருக்கும் எதுக்கு கையெழுத்து வைக்கிறோம் எண்டு தெரியாம இருக்கிறதுதான்...!!!

# டி.ஆர்.விஜவர்த்தனவின் 136 ஆவது ஜனன தின சமய நிகழ்வுகளில்...



படங்கள்: கயான் புஷ்பிக்க, சிந்தக்க குமாரசிங்க






**அரசியலமைப்பின் வரைவைப் பார்த்த பின்னரே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூற முடியும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தெரிவித்தார். எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.**



# அரசியலமைப்பு வரைபை பார்த்த பின்னரே சு.கவின் நிலைப்பாட்டைக் கூற முடியும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா பேட்டி

**கே: அரசாங்கத்தின் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றிக் கூற முடியுமா?**

பதில்: மாவட்ட ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து இதில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது. அரசின் இவ்வேலைத்திட்டத் வெற்றியாக்குவது குறித்து கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றதுடன், ஒதுக்கப்பட்ட நிதியை உரிய முறையில் பயன்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. வாழ்வாதார அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமென நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் வலியுறுத்தப்பட்டதுடன், அது தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடி குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், இதனைத் தீர்ப்பதற்குக் காணப்படும் ஒரே வழியான ஏற்றுமதியை அதிகரிப்பது பற்றியும், நாட்டுக்கான இறக்குமதிப் பொருட்களை முடிந்தவரை குறைப்பது பற்றியும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. குறிப்பாக, தேயிலையை மாத்திரமன்றி தேங்காய், கறுவா உள்ளிட்ட ஏனைய விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இதனை விட அறிவிக்கப்படாத நிலையில் மேற்கொள்ளப்படும் மின்வெட்டு குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**கே: இந்தியன் ஒயில் நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் மேலும் இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் விலையேற்றத்தை நோக்கிச் செல்லுமா?**

பதில்: இது நிதி அமைச்சும் எரிசக்தி அமைச்சும் கூடித் தீர்மானிக்க வேண்டிய விடயம். வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். எரிபொருள் விலையை உயர்த்தினால், அது வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிப்பதற்கு வழியை ஏற்படுத்தும். அதேசமயம் உலக சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது என்பதையும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு நாம் ஏற்கனவே நிறைய நிவாரணங்களை வழங்கியுள்ளோம். மக்களுக்கு மேலும் நிவாரணம் வழங்குவது எளிதல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**கே: நாட்டில் புதிய கொவிட்–19 திரிபின் தாக்கம் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையை சமாளிக்க மற்றுமொரு முடக்கம் அல்லது பயணக் கட்டுப்பாட்டுக்குச் செல்வது பற்றி அரசாங்கம் ஏதேனும் திட்டங்களைத் தயாரித்துள்ளதா?**

பதில்: பொருளாதாரம் நிலைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாக வளர்ச்சியடைந்த பல நாடுகள் முடக்கங்கள் என்ற முடிவிலிருந்து விலகியுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் மக்களை பணிக்குச் செல்ல அனுமதித்துள்ளனர். இந்த அடிப்படையில் நாட்டை முழுமையாக முடக்க வேண்டிய அவசியம் இல்லையென நான் நினைக்கின்றேன்.

**கே: ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசநாயக்கவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட முட்டைத் தாக்குதல் அரசியல் நோக்கம் கொண்டதெனக் குற்றம் சாட்டப்படுகிறது. இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இது விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கான சுதந்திரம் அவர்களுக்கு உள்ளது. அந்த தாக்குதலைக் கண்டிக்கிறேன். இருப்பினும், தாக்குதல் குறித்த உண்மை அல்லது ஆதாரங்கள் இல்லையென்பதால் இது பற்றி யாரிடமும் தெரிவிக்க முடியாது. பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது பொலிஸாரின் கையில்தான் உள்ளது. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது கட்சித் தலைவருக்கும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சுதந்திரம் இருக்க வேண்டும். அத்தகைய செயலை ஜனாதிபதி ஒருபோதும் மன்னிக்க மாட்டார்.

**கே: அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்றும், 19 வது திருத்தம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சிலர் கூறுகின்றனர். இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

பதில்: புதிய அரசியலமைப்பு வரைபு முன்வைக்கப்படும் போது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை நாம் தெரிவிப்போம். இந்த விடயத்தை நாம் பகுதி பகுதியாக எடுத்துப் பார்க்க முடியாது. அரசியலமைப்பை ஒரே ஆவணமாக எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். 20 ஆவது திருத்தம் மற்றும் இரட்டை குடியுரிமை ஆகியவை தற்காலிக நடவடிக்கையாக கொண்டு வரப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியலமைப்பின் வரைபை ஆழமாக ஆராயும். புதிய அரசியலமைப்புச் சட்டவரைவை மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு தாமதமின்றி வழங்க வேண்டும் என்று கூறியுள்ளோம்.

**கே: பணத்தை அச்சடிப்பதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூறியுள்ளது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: இந்த வாதத்தில் இரண்டு பக்கங்கள் உள்ளன. அமெரிக்கா போன்ற பல வளர்ந்த நாடுகளில் கூட இன்னும் பல நாடுகளில் பணம் அச்சிடப்படுகிறது. நாங்கள் பணத்தை அச்சிடுகிறோம், ஆனால் அது ஒரு வரம்பிற்குள் செய்யப்பட வேண்டும். அரசாங்கத்தில் உள்ள பொருளாதார நிபுணர்கள் இந்தப் பிரச்சினையை ஆராய்வார்கள். பொருளாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க, அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இதைச் செய்வார்கள்.

**கே: நிதி உதவிக்காக சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதற்கான இறுதி முடிவு அமைச்சரவையால் எடுக்கப்பட்டதா?**

பதில்: தொழில்நுட்ப ரீதியான ஆதரவுக்காக திறைசேரியின் அதிகாரிகள் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்பில் உள்ளனர். ஆனால் அவர்கள் நிதி உதவிக்கு செல்வார்களா என்பது இன்னும் தெரியவில்லை. எவ்வாறாயினும், இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து எமது நாட்டை விடுபடச் செய்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் நிலைமையைச் சரி செய்வதற்கான மதிப்பீட்டை மேற்கொள்ளலாம். இந்த விவகாரம் தொடர்பில் விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட வேண்டும்.


**கே: மாகாணசபைத் தேர்தல்கள் நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டு வருவதால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னர் தெரிவித்திருந்தது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் நிறைவேற்றியிருந்தோம்.

**கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திடம் கையளிக்க விசேட பிரேரணையொன்றை தயாரித்துள்ளதாக அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். கூட்டணி அமைப்பதற்கான பிரேரணைகள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேலும் பல கட்சிகளுடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவித்துள்ளார். இதில் ஏதேனும் உண்மை உள்ளதா?**

பதில்: இந்தப் பிரேரணை அண்மையில் அகில இலங்கை கட்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. எங்கள் கோரிக்கையை அரசுக்கு அனுப்புவோம்.

> **“ பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு நாம் ஏற்கனவே நிறைய நிவாரணங்களை வழங்கியுள்ளோம். மக்களுக்கு மேலும் நிவாரணம் வழங்குவது எளிதல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் ”**




# காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதன் நன்மைகள்

எரிபொருள் செலவு மற்றும் சூழல் பாதிப்பு குறித்து கவனம் செலுத்தும் உலக சமூகம் மீளுருவாக்க மின்சக்தி உற்பத்தி பற்றி அதிக கவனத்தைச் செலுத்தி வருகின்றது. சூரிய வெப்பத்தை மின்சாரமாக மாற்றும் முயற்சி அதிகமாக மேற்கொள்ளப்படுவதுடன், இயற்கையான காற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

டென்மார்க் அரசு காற்றை உபயோகப்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் புதிய சாதனையை புரிந்துள்ளது. காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் உதவியுடன் 2 .1 ட்ரில்லியன் வோட் மின்னுற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அம்மின்சார உற்பத்தி அந்நாட்டின் தேவையில் 68 சத வீதமாக உள்ளது. 2033 ஆம் ஆண்டளவில் தேவைப்படும் மேலதிக மின்சார தேவையை உற்பத்தி செய்வதற்காக வடகடலில் செயற்கைத் தீவு ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு பாரிய காற்றாலையுடன் கூடிய தூண்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் அந்நாட்டு சரித்திரத்திலேயே பாரிய முதலீடாக அமையுமென கருதப்படுகின்றது. 18 உதைப்பந்தாட்ட மைதான அளவிலான பாரிய இந்தத் தீவில் அமைக்கப்படும் காற்றாலைகள் மூலமாக வருடம் பூராவும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

டென்மார்க் மற்றும் நோர்வே இடையே மின்சார பரிமாற்ற ஒப்பந்தம் உள்ளது. இயற்கை காற்று வேகம் குறையும் வேளையில் மின்சார உற்பத்தி குறைவடையும். அச்சந்தர்ப்பத்தில் நோர்வே அரசாங்கத்திடமிருந்து மின்சாரம் விலைக்கு வாங்கப்படும். ஏனைய காலங்களில் டென்மார்க் காற்றாலை மின்சாரத்தை திரும்பவும் மீள் விற்பனை செய்வதாக கூறப்படுகின்றது.

இந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக இரண்டு நாடுகளுக்கு இடையே இரண்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை அரசுடன் இணைந்த நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. அதற்கான சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இரண்டு நாடுகளுக்கும் இடையே அதி சக்தி வாய்ந்த மின் கம்பிகள் 500 கிலோமீட்டர் தூரத்திற்கு விரிவடைந்து உள்ளதாக கூறப்படுகின்றது. கணக்குப் பார்த்தால் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான மின் பரிமாற்றத்திற்கு செலவே இல்லை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

சீனா மற்றும் அமெரிக்கா உலகிலேயே பாரிய அளவிலான காற்றாலை மின் உற்பத்தி நாடுகளாகும். 2020 ஆம் ஆண்டில் இந்த இரண்டு நாடுகளிலும் அமைக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தின் அளவு உலக மின்சார உற்பத்தியில் சரிபாதியாகும். சர்வதேச அறிக்கைகளுக்கு அமைய தற்போது உலகில் உள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் 750 கிஹாவோட் மின்உற்பத்தி கொள்ளளவு காணப்படுகின்றது. வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படும் ஒரு பில்லியன் மெட்ரிக் தொன் கார்பன்டயொக்சைட்டின் அளவை இதன் மூலம் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. மின் உற்பத்திக்காக மசகு எண்ணெய், நிலக்கரி அல்லது இயற்கை வாயு பாவிக்கப்படும் நாடுகளில் இந்த விடயங்களில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன.

நிபுணர்களின் அறிக்கைகளின்படி காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கு இலங்கையின் சூழல் பொருத்தமானது. நுவரெலியா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பல இடங்களில் தற்போது காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. இலங்கையில் வடபிரதேசத்தில் மன்னாரை அண்டிய பிரதேசங்களில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான சாத்தியம் உள்ளது என ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 5000 மெகாவோட் மின்சாரத்தைஉற்பத்தி செய்யும் வசதிகளுண்டு. தற்போது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சார உற்பத்தியை கூட மீறும் அளவுக்கு பெரும் பரிமாணமாகும். இலங்கையின் மொத்த மின் உற்பத்தி 4300 மெகாவோட்டாகும். நீர் ,நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் மின்னுற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை விட காற்றின் மூலம் அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது.

நாளுக்கு நாள் மசகு எண்ணெயின் விலை அதிகரித்து செல்கின்றது .தற்போதுள்ள மசகு எண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிக்கு செலவாகும் அந்நிய செலாவணியின் அளவு 4 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்படலாம். அந்நிய செலாவணி பற்றாக்குறை பெட்ரோலியத்தை கூட விலைக்கு வாங்க முடியாது கடன் வாங்கும் நிலைமையில் காணப்படுகின்றது. அடிப்படை முதலீடுகளை தவிர ஏனைய செலவுகளற்ற காற்றாலை மின் உற்பத்தி மீது கவனம் செலுத்தாதது ஏன்?

பசுமை மின்சார உற்பத்தி அதாவது சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத திட்டங்களை முன்வைத்தால் சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து நிதி உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும். முதலீடுகளுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கக் கூடும். முதலீட்டாளர்களின் செலவில் அமைக்கப்பட்ட பின்னர் ஒரு காலத்தில் மீண்டும் நாட்டிற்கு பொறுப்பேற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஒப்பந்தங்களை கைச்சாத்திட கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. நீண்ட கால முதலீடுகள் என்ற ரீதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை ஊக்குவிப்பது சரியான நடவடிக்கையாக அமையும்.

ஒரு அலகு மின்சாரத்துக்கு செலுத்தப்படும் விலை குறித்து பாவனையாளர்களுக்கு அக்கறை உண்டு. மின்சார சபை அதிகளவு நட்டத்தில் நடத்தப்பட்டு வருவதோடு அதற்கு பொது மக்களே கொடுப்பனவுகளை செய்கின்றார்கள் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். மின்சார சபையின் நட்டம், நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான செலவுகளை கணக்கிடும் அதிகாரிகள் மின்கட்டணத்தை அதிகரிக்குமாறு யோசனை கூறியுள்ளார்கள். காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான யோசனைகளை முன் வைப்பதற்கு ஏன் விரைவுபடுத்துகிறார்களில்லை. அரசாங்கத்திற்கு முதலீடு செய்வதற்கான நிதி இல்லை. தனியார் நிறுவனத்துக்கு வழங்கும் யோசனையை முன்வைத்தால் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்கள் போராட்டத்தை ஆரம்பிக்கின்றன. தேசிய வளத்தை ஏலம் விடுவதாக குரலெழுப்பவும் இடமுண்டு. சாதாரண மக்களுக்கு மின்சாரக் கட்டணத்தை செலுத்துவது இலகுவான விடயமல்ல. மாதிரியை மாற்றினால் செலவை குறைக்கலாம் அரசியல்வாதிகள் மாற்றத்திற்கு தயாரில்லை. பொதுமக்களின் துயரம், வேதனை பற்றி கருதாத அரசியல் முறைகளால் நாட்டிற்கு நன்மை உண்டா?

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# தடுப்பூசி அட்டை உள்ளவருக்கே திருகேதீஸ்வரம் வர அனுமதி

## சிவராத்திரி பூஜை வழிபாடுகள் குறித்து GA கருத்து

**தலைமன்னார் விஷேட நிருபர்**



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகளுக்காக நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தர உள்ளதால் தடுப்பூசி செலுத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கே ஆலயம் வர அனுமதிக்கப்படுமென மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் 01 ஆம் திகதி (01032022) மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,..

கடந்த வருடத்தை விட இவ்வருடம் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தர அனுமதி வழங்கி உள்ளோம். வருகை தருகின்ற பக்தர்கள் முழுமையாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

தடுப்பூசியை பெற்றுக்கொண்டமைக்கான ஆதாரமாக தடுப்பூசி அட்டையை அல்லது தடுப்பூசி அட்டையை கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்து கொண்டு வர வேண்டும். கடமையில் ஈடுபடுத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர்கள் நுழைவாயிலில் பரிசீலனை செய்வர்.

அதன் போது காண்பிக்க வேண்டும்.திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருகை தருகின்ற சகல பக்தர்களும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும். அதற்கான சகல ஒழுங்குகளும் சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் உணவு வழங்குவதற்கான வியாபார நிலையங்கள் அமைக்கப்படும். ஆனால் உணவை பெற்றுக் கொண்டு சென்று உண்ண வேண்டும். உணவகங்களிலிருந்து சாப்பிட முடியாது.

பாலாவி தீர்த்தத்தில் இறங்கி குளிப்பதற்கு சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் பக்தர்கள் பாலாவி தீத்தத்தை பெற்றுக் கொள்வதற்கு அங்கு கடமையிலிருக்கும் தொண்டர்கள் நீரை அள்ளி பக்தர்களுக்கு கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு வர முடியாத பக்தர்களுக்காக தொலைக்காட்சிகளில் நேரடி ஒலிபரப்பு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் அரச வாகனங்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலகர் சபை,திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் உலக ஹிந்தி தின கொண்டாட்டங்கள்

**எம்.ஏ.அமீனுல்லா,**
**மாவத்தகம தினகரன் நிருபர்**



கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் உலக ஹிந்தி தினம் (16) கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் நடைப்பெற்றது. நிகழ்வு கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் டாக்டர் ஆதிரா எஸ் தலைமையில் அவரின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. பிரதம அதிதியாக பங்கேற்ற சபரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பீடத்தின் பீடாதிபதி டாக்டர் சம்பத் பெர்னாண்டோ மற்றும் கௌரவ விருந்தினர்களாக பங்கேற்ற சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழிகள் பீடத்தின் பீடத்தலைவர் டாக்டர் மகேஷ் ஹப்புகொட, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் நுண்கலை பீடத்தின் பீடத்தலைவர் டாக்டர் சுதேஷ் மந்திலக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக்கத்தின் ஹிந்தி விரிவுரையாளர் டாக்டர் வஜிரா குணசேன மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஹிந்தி விரிவுரையாளர் பிரெசில் நாகொடவிதான ஆகியோரது உரைகளுடன் தொடர்ந்தது.

நிகழ்வில் இலங்கையில் ஹிந்தி மொழியை ஊக்குவிக்கும் வகையில் கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன. இலங்கையில் ஹிந்தி மொழியை பரப்புதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் பங்களிப்பு செய்ததற்காக 14 ஹிந்தி ஆசிரியர்களுக்கு 'ஹிந்தி பிரசார் சம்மான்' விருது வழங்கப்பட்டன.

## தினகரன்...

**சேவையாற்றியுள்ள சின்னத்துரை தில்லைநாதனுக்கான பாராட்டு விழா இன்று 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு மைக்கல் விளையாட்டுக்கழக மண்டபத்தில் நடைபெறும்.மைக்கல் நேசக்கரம், மைக்கல் விளையாட்டுக்கழகத் தலைவர் த. வேணுகானன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.தயாபரன், சிறப்பு விருந்தினர்களாக ஊடகவியலாளர்களான ந. பொன்ராசா, க. உதயராசா, எஸ் மகாலிங்கம், க. கனகராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.**

## அத்துமீறி...

**கடற்படையினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை படகுடன் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு கடற்படையினர் இழுத்து வந்துள்ளனர்.**

## பொலிஸ் P.C. கொலை...

வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் மற்றும் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தெற்கு அதிவேக வீதியில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சதுரங்க தில்ஷான் (36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.அவர் தங்கியிருந்த வீட்டுக்கருகில் சிலருடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## சமுதித்தவுக்கு பாதுகாப்பு...

நீதிமன்ற உத்தரவுக்கமைய ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளன.

பிலியந்தலை பகுதியிலுள்ள சமுதித்த சமரவிக்கிரமவின் வீட்டின் மீது கடந்த 15ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கி பிரயோக சத்தமும் கேட்டதாக சமுதித்த சமரவிக்கிரம தெரிவித்திருந்தார்.

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவிற்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றமையினால், அவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி சட்டத்தரணி குவேரா டி சொய்சா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு, கெஸ்பேவ நீதிமன்றில் மனுவொன்றின் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த கோரிக்கையை ஆராய்ந்த நீதவான், ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவிற்கு பாதுகாப்பை வழங்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## 400 கிலோ கஞ்சாவுடன்...

*200 பைகளில் பொதி செய்யப்பட்ட 400 கிலோ கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.சம்பவம் தொடர்பில், ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், நான்கு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ஆந்திர மாநிலத்திலிருந்து வாகனம் மூலம் நாகபட்டிணம் மாவட்டத்துக்கு கஞ்சாவைக் கடத்தி அங்கிருந்து படகு மூலம் இலங்கைக்குக் கடத்த திட்டமிடப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா, விசைப்படகு மற்றும் நான்கு மோட்டார் சைக்கிள் மதிப்பு ஒரு கோடியே 52 இலட்சம் இந்திய ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## தடுப்பிலுள்ளோரை...

தொடர்புடைய வகையில் அரசாங்கத்தினால் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய 07 பரிந்துரைகளையும் அச்சபை முன்வைத்துள்ளது.

இன்னமும் வழக்குப்பதிவு செய்யப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த 34 வயதான டிவானியா முகுந்தன், 28 வயதான செல்வநாயகம் சசிகரன், காத்தான்குடியைச் சேர்ந்த 23 வயதான மொஹமட் இமாம் ஆகியோரை விடுவிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி ஒருவரை நீண்ட காலத்துக்குத் தடுத்து வைப்பதற்கான வாய்ப்பை வழங்கும் இச்சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுமையை சிறுபான்மையினரே தற்போதும் தாங்கிக் கொண்டிருக்கின்றனர் என்றும் அச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிரகாரம் கொண்டிருக்கக்கூடிய கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையில் இச்சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

## பயங்கரவாதிகளை நினைவுகூர...

*உயர்நீதிமன்ற நீதியரசர் எம்.எம்.டீ நவாஸினால் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.*

*2021 ஜனவரியில் ஜனாதிபதி மனித உரிமைகள் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறல்கள் மற்றும் அதுபோன்ற பாரதூரமான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுக்கள் ஆணைக்குழுக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்த குழுவை நியமித்திருந்தார்.*

*இந்த ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை ஏற்கனவே கடந்த வருடம் ஜூலை மாதம் வெளியாகியிருந்தது.*

*கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களில் யுத்தத்தை எதிர்கொண்ட 75 பேரின் சாட்சியங்களை அடிப்படையாக வைத்து ஆணைக்குழு தனது பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது. இரண்டாவது அறிக்கை 107 பக்கங்களை உள்ளடக்கியதாக வெளியாகியுள்ளது.*

*2015 இல் வெளியான பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் வழக்கு தாக்கல் செய்யுமாறும் அல்லது இழப்பீட்டை வழங்குமாறும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.*

*ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த மக்கள் பொருளாதார ரீதியில் எழுச்சி பெறுவதற்கு அரசாங்கத்தின் ஆதரவு அவசியமென தெரிவித்துள்ளதாக ஆணைக்குழு அந்த பரிந்துரையில் தெரிவித்துள்ளது.*

*பயங்கரவாதிகளை நினைவு கூருவதற்கு இடமளிக்கக் கூடாதென ஆணைக்குழு தெரிவித்துள்ளதாகவும் யுத்தத்தில் எவராவது உயிரிழந்தால் உயிரிழந்தவர்களை தனியாக நினைவுகூரலாம் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற நீதியரசர் எம்.எம்.டீ நவாஸ் தெரிவித்துள்ளார்.*

## உள்ளூராட்சி தேர்தல்...

தேர்தல் சர்ச்சைகளை தீர்ப்பதற்கான சட்டம் தொடர்பான பயிற்சி கருத்தரங்கு மாத்தளை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்ற தேர்தலை உரிய காலத்துக்கு நடத்த முடியாதென தெரிவித்து விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தேர்தலை ஒருவருட காலத்துக்கு ஒத்திவைத்துள்ளார். அரசியலமைப்பில் அமைச்சருக்கு இருக்கும் அதிகாரத்துக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

என்றாலும் ஒத்திவைக்கப்பட்டுள்ள தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் இந்த வருடம் செப்டெம்பர் 20ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் ஆணைக்குழுக்கு கிடைக்கின்றது. அதன் பிரகாரம் இந்த வருடம் பெரும்பாலும் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்த முடியும்.

தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையாகும். அதனால் தேர்தல் ஆணைக்குழு என்றவகையில் நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்துவதற்கு தயாராக இருக்கின்றோம்.

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான தேவையான சூழல் நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. அதன் பிரகாரம் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றிக்கொண்டு தேர்தல் நடவடிக்கைகளுக்கு செல்ல முடியும் என்றார்

# எங்கள் கருத்து...

## ஆர்ப்பாட்டங்கள், கையெழுத்து நாடகங்கள் திடீரென முளைத்தெழுந்த காரணமென்ன?

*சொல்ல வேண்டும். ஏனெனில் இந்த மனித உரிமைகள் விடயம் தொடர்பாக குரல் கொடுக்கும் அமைப்புகள் அல்லது தமிழ்க் கட்சிகள், முன்னர் தமக்கு சாதகமாக அமைந்த ஐந்து வருட கால நல்லாட்சியில் இதனை மறந்து செயற்பட்டதனாலேயே இந்த சந்தேகம் ஏற்படுகிறது. அந்த ஐந்து வருட கால நல்லாட்சி அரசாங்கத்தில் முக்கிய வகிபாகம் வகித்த தமிழ்க் கட்சிகள் பலவும் அன்று மௌனமாக இருந்ததுடன், நல்லாட்சி அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் சபையில் காப்பாற்றும் முயற்சிகளிலேயே தீவிரமாக செயற்பட்டு வந்தன.*

*ஏன் அன்று இவர்களால் இறுதி யுத்த காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டை முன்வைக்க முடியாமல் போனது? அந்த அரிய சந்தர்ப்பத்தை இவர்கள் பயன்படுத்தத் தவறியது ஏன் எனும் கேள்வியும் இப்போது மக்களது உள்ளத்தில் எழத் தொடங்கியுள்ளது.*

*உண்மையில் இவ்விடயம் தொடர்பாக அனைவரும் சிந்திக்க வேண்டும். தமது அரசியல் தேவைகளுக்காக யுத்த காலத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்களை பயன்படுத்துவதும், பின்னர் தமக்கு தேவையான காலத்தில் அதனை மறந்து செயற்படுவதும் தமக்கு வாக்களித்த மக்களை ஏமாற்றும் ஒரு செயல்பாடாகவே கொள்ள வேண்டும்.*

*எனவே யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களை தொடர்ந்தும் பொருட்படுத்தாது, எமது அடுத்த கட்ட செயற்பாடுகள் குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். மக்கள் இப்போது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என பாகுபாடின்றி இந்த அரசாங்கத்தில் 'ஒரே நாடு, ஒரே மக்கள்' எனும் சிந்தனையில் நடத்தப்பட்டு வருகிறார்கள்.*

*இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்தகால சம்பவங்களை இரைமீட்டுப் பார்த்து தமக்கு சாதகமாக அமைத்துக் கொள்ளும் அரசியல் தலைமைகள் மற்றும் அரசியல் கட்சிகளை மக்கள் புறந்தள்ளி ஒதுக்கிவிட்டு, தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும்.*

*கொரோனா வைரஸ் தாக்கத்தினால் நாடு பல்வேறு பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளது. இதிலிருந்து மீண்டு எழுவதற்கான வழிவகைகளை நாம் தேட வேண்டும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாடு தள்ளப்பட்டு இருக்கையில், அதில் அரசியல் குளிர்காய எவராவது நினைப்பார்களேயானால் அவர்கள் உண்மையில் நாட்டின் தேசத்துரோகிகளாகவே கணிக்கப்பட வேண்டும்.*

*இறுதி யுத்தகாலத்தில் மக்கள் இன்னலுக்கு உள்ளான போது, மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு தாம் மட்டும் தமது குடும்பத்தாருடன் வெளிநாடுகளுக்குச் சென்று தஞ்சம் புகுந்த தமிழ் அரசியல் தலைமைகள் இன்று திரும்பி வந்து அதே மக்களை வைத்து அரசியல் செய்து வருவதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும்.*

*நியாயமான கோரிக்கைகளுக்கு போராடுவதும், அவற்றை போராட்டம் மூலம் பெற்றுக் கொள்வதும் ஜனநாயக நாட்டில் உள்ள மக்களுக்கான உண்மையான உரிமையாகும். அதனை விடுத்து மக்களை கேடயங்களாக வைத்து தமது அரசியல் அதிகார வாழ்க்கையை நீடித்துக் கொள்வதற்காக திட்டமிட்டு செயல்படும் தலைமைகளை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.*

## உலகில் வேகமாக...

*பி.ஏ.3 எனப் பல துணை வைரஸ்கள் உருவாகியுள்ளன. அவற்றை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். பெரும்பாலானோர், பி.ஏ.1 வகை வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல், பி.ஏ.2 வகை வைரசால் தற்போது அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதர வகைகளைக் காட்டிலும், பி.ஏ.2 வகை வைரஸ் அதிவேகமாகப் பரவி வருகிறது.*

*பி.ஏ.1 வகையை விட, பி.ஏ.2 வகை கொடியது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. எனினும், அதன் தீவிரத்தை உணர, அதை நாங்கள் கண்காணித்து வருகிறோம்.*

*ஒமிக்ரோன் வகை வைரஸ் குறைந்த பாதிப்பு தரக்கூடியது எனக்கூற இயலாது. எனினும், டெல்டாவை விட அது சற்று குறைவாகப் பாதிப்பு தரக்கூடியது தான்.*

*ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதிக உயிரிழப்புகளும் பதிவாகிறது. எனவே நாம் கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.*

*உலகம் முழுதும், மூன்றாம் அலைக்கு வழிவகுத்த, ஒமிக்ரோன் வகை கோவிட்19 தொற்றின் பரவல் தற்போது குறைந்து வரும் நிலையிலும் பி.ஏ.2 வைரஸ் அதிவேகமாகப் பரவிவருகின்றமை கவலையளிப்பதாகவும்.*

## தமிழருக்கு நியாயமான...

*கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் பண்ணுவதில் இந்தியா தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேவேளை தொடர்ந்தும் இந்தியா அந்தப் பங்களிப்பை செய்ய வேண்டும் என்றார்.*

*நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் இந்திய இல்லத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதுவர் வினோத் ஜேக்கப், அரசியல் துறை முதன்மை செயலாளர் திருமதி பானு பிரகாஷ் ஆகியோரோடு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்,பேச்சாளர் எம்.எ.சுமந்திரனும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.*

*இதன்போதே இரா சம்பந்தன் இந்த கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினார்.*

*இச் சந்திப்பின் போது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர் மற்றும் இந்தியப் பிரதமர் ஸ்ரீநரேந்திர மோடி ஆகியோர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் விசேடமாக பேசப்பட்டது. அத்தோடு வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.*

*இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இலங்கையின் தமிழ் தேசிய பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்கள் இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் 13ஆது திருத்தத்திற்கு அப்பால் சென்று அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்குவதாக இருந்தது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் பண்ணுவதில் இந்தியா தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேவேளையிலே தொடர்ந்தும் இந்தியா அந்தப் பங்களிப்பை செய்து இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சம்பந்தன் முன்வைத்தார்.*

*சுமார் ஒன்றரை மணிநேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் வேறு பல விடயங்கள் தீர்க்கமாக ஆராயப்பட்டன.*

## நாட்டின் முன்னேற்றத்துக்கு...

பொறுப்புள்ளதென தெரிவித்துள்ள அவர், வரலாறு அதை ஒப்புவித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வெளியீட்டுப் பணியகம் நேற்று முன்தினம் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெருமவினால் யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அந்த நிகழ்வையடுத்து மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ள யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர்:

ஜனநாயக எல்லைக்குள் விமர்சனங்கள் இருக்க முடியும். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள முடியும். விவாதங்கள் தர்க்கங்களை மேற்கொள்ளவும் முடியும் அது ஜனநாயகத்தின் அடையாளமாகும். எனினும் அதை ஒருபோதும் எம் மத்தியிலான நட்புறவுக்கு தடையாக அமைந்துவிட இடமளிக்க வேண்டாம்.

விவாதங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானது. எனினும் அந்த விவாதங்கள் இறுதியில் இணக்கப்பாட்டுடன் முடிவடைய வேண்டும்.

சிங்கள மொழியை தாய்மொழியாக கொண்ட ஊடகவியலாளர்கள் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட ஊடகவியலாளர்கள் எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதுபோன்று தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட ஊடகவியலாளர்கள் சிங்கள மொழியை உபயோகிக்கும் ஊடகவியலாளர்களின் சிந்தனை எவ்வாறானது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஊடகவியலாளர்கள் பரிமாற்ற வேலைத்திட்டம் ஒன்றை எதிர்காலத்தில் முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம்.

மிகவும் முன்னேற்றமடைந்த ஊடக வாசகர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளனர் இந்த மாவட்டத்தில் மட்டும் 05 பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றில் உதயன், தினக்குரல்,வலம்புரி, ஈழநாடு மற்றும் காலைக்கதிர் ஆகியன உள்ளடங்குகின்றன. இதுபோன்ற பிரதேசம் நாட்டில் வேறு எங்கும் கிடையாது.

மொழி சுதந்திரத்தை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கடுமையான சட்ட திட்டங்கள் மூலம் ஊடகத்தை நிர்வகிக்க முடியும் என்பதை நான் ஒருபோதும் நம்ப மாட்டேன். அதற்கு சுயாதீனமான ஒழுங்குபடுத்தல் அவசியம். நாமே அதனை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## சகலரும் மூன்றாவது...

மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தக்கூடிய நிலைமையுள்ளதாகவும் அதனை தவிர்த்துக்கொள்ள அனைவரையும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் தேவையற்ற வதந்திகளை நம்பவேண்டாமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட வரிசைகளில் நின்று மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பொது மக்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்து வருகின்றது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள கிராமங்களில் மூன்றாவது தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் முதலாம் இரண்டாம் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கு.சுகுணனின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதனின் தலைமையில் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

## அரசுக்கு எந்தவித கஷ்டத்தையும்...

சிறிலங்கா சுதந்திக் கட்சியின் வன்னி மாவட்ட மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று (19) நடைபெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்துடன் நான் சம்மந்தமுள்ளவனாக இருக்கின்றேன். இதற்கு நிறைய காரணங்களுள்ளன. நான் ஜனாதிபதியாக முன் பல அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்தேன்.

சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம் என பல பொறுப்புக்களில் இருந்தேன். அதன் போது வன்னி பிரதேசத்துக்கு வந்து பல சேவைகளை செய்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்ய அதிக வாக்குகளை நீங்கள் வழங்கினீர்கள். நான் ஜனாதிபதியாக இருந்த போதும் பல சந்தர்ப்பங்களில் வன்னிக்கு வந்தேன்.

ஜனாதிபதியாக இருந்த போது இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திகளை செய்துள்ளேன். வடக்கு, கிழக்குக்கு என ஒரு அமைப்பை நான் நிறுவினேன். யுத்தம் நடந்த பகுதிகளில் அபிவிருத்திகளை துரிதப்படுத்துவதற்கு அந்த அமைப்பை நிறுவினேன். என்னால் பல அபிவிருத்திகளை செய்ய முடிந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற வேறுபாடு என்னிடம் இல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற எந்த வேறுபாடும் இல்லை. அனைவரையும் இந்த நாட்டு மக்கள் என்று தான் பார்கின்றேன். எனது மனதிலிருந்து சொல்கின்றேன். நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்று தான் நினைத்து கொண்டிருக்கிறேன்.

# தமிழ்த் தரப்புடன் எவை தொடர்பாக பேசவுள்ளோம் என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்



**தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைக்கு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வழங்கிய செவ்வி**

**கேள்வி: பயங்கரவாத தடைச்சட்ட சீர்திருத்தத்திற்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரன் குழுவினரால் கையொப்பம் பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதே அது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** கையெழுத்தை யாரிடம் சமர்ப்பிப்பது என்பது பற்றி இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. இது வெளிநாடுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படப் போகின்றதா அல்லது இந்த கையெழுத்து ஆவணத்தை வைத்து குளிர்காயப் போகிறார்களா என்ற கேள்வி இருக்கின்றது. இலங்கையில் கையெழுத்து இயக்கம் நடத்துவதென்பது எருமை மாட்டில் மழை பெய்த மாதிரி. ஆகவே இதில் பிரயோசனம் இல்லை. ஏட்டிக்குப் போட்டி போல இவர்கள் செயல்படுவதாகவே தெரிகிறது.

அரசியல் கைதிகளின் விடுதலையைப் பற்றி அவர்களிடம் எந்தத் திட்டவட்டமான கொள்கையும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி பெயரளவில் கைதி விடுதலை பற்றிப் பேசுகிறார்கள். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது அனைவரின் விருப்பம் தான். ஆனால் அது கட்சிகள் செய்வதைப் போன்று ஏட்டிக்குப் போட்டியான விடயமல்ல மாவை சேனாதிராஜா என்ன செய்தார்? கட்சிகள் தயாரித்த ஆவணத்தில் கையெழுத்து வைத்துவிட்டு, கூட்டத்திலும் சம்மதம் தெரிவித்துவிட்டு இறுதியாக கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை. இது என்ன நாடகம் என கேட்க விரும்புகின்றேன். பயங்கரவாத தடைச்சட்டத்தை நல்லாட்சி காலத்திலேயே நீக்கியிருக்க வேண்டும். இப்பொழுது கையெழுத்து வேட்டையை ஆரம்பித்திருப்பது வேடிக்கையாக இல்லையா?

**கேள்வி: கானல் நீராகிப் போன ஜெனிவா தீர்மானத்தை நம்பி இருப்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதாக இல்லையா?**

**பதில்:** எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இன்றைக்கு பல தீர்மானங்களை கொண்டு வந்து பல்வேறு அழுத்தங்களை இலங்கை அரசு மீது திணிப்பதைப் பார்க்க முடிகிறது. எனினும் காலம் பிந்திவிட்டதாக உணர்கிறோம். ஆனால் நிச்சயமாக பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன. ஆகவே, அதன் ஊடாக சர்வதேச அழுத்தத்தை இலங்கை மீது பிரயோகிக்க முடியும். என்று நினைக்கின்றேன். எங்களுக்கான சர்வதேச நீதியும் கிடைக்கும் என நம்புகிறேன். ஒரு நீதியாக சர்வதேச அழுத்தத்தின் மூலம் இலங்கையில் நாங்கள் எங்களை ஆளக்கூடிய ஆட்சி முறையை வென்றெடுக்க முடியும் நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

**கேள்வி: தமிழ் தரப்புக்கள் பிரிந்து இருப்பது சிங்கள தரப்பிற்குள் ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிகிறதே! சிங்கள அரசியல் தரப்பினரின் செயற்பாடுகள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

> **13ஆம் திருத்த சட்டத்தில் உள்ள இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துங்கள் என்று கேட்பதில் முரண்பாடு இருக்கின்றது. இதில் சிங்கள தலைமைகள் மகிழ்ச்சியடைய முடியாது. அரசு கொண்டு வருகின்ற புதிய அரசிலயமைப்பு ஒரு வேளை சாத்தியப்படுமானால் அது ஒரு ஒற்றையாட்சி அரசியலமைப்பாக இருக்கும். தமிழர் அரசியலமைப்பை நிராகரிக்கின்ற பொழுது தமிழர்களின் பிரச்சினையை அப்போது சிங்கள சமூகம் முழுமையாக புரிந்து கொள்ளலாம்.**

**பதில்:** ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றோம். 13ஆம் திருத்த சட்டத்தில் உள்ள இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துங்கள் என்று கேட்பதில் முரண்பாடு இருக்கின்றது. இதில் சிங்கள தலைமைகள் மகிழ்ச்சியடைய முடியாது.

அரசு கொண்டு வருகின்ற புதிய அரசிலமைப்பு ஒரு வேளை சாத்தியப்படுமானால் அது ஒரு ஒற்றையாட்சி அரசியலமைப்பாக இருக்கும். தமிழர் அரசியலமைப்பை நிராகரிக்கின்ற பொழுது தமிழர்களின் பிரச்சினையை அப்போது சிங்கள சமூகம் முழுமையாக புரிந்து கொள்ளலாம்.

**கேள்வி: 13வது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்கு அரசும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினரும் செயற்படுகின்றார்கள். 13ஐ நீக்குது தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமானதா?**

**பதில்:** 13ஐ அமுல் செய்வோம் என்று கேட்பது இந்தியாவை நிஜமான உலகிற்கு கொண்டு வரும். இந்திய இலங்கை ஒப்பந்தம் உயிருடன் இருக்கின்றதா என்பதை தெளிவுபடுத்த வேண்டிய நிலமை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. நாங்கள் எல்லோரும் தெளிவாக இருக்கின்றோம். புதிய அரசியலமைப்பு ஒரு வேளை வந்தால், ஏற்கனவே உள்ள சட்டத்தை முழுமையாக செயற்படுத்துங்கள் என்பதே என்னுடைய நிலைப்பாடு.

**கேள்வி: தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்களில் இந்தியா மௌனம் சாதிக்கும் போது, தொடர்ந்தும் இந்தியாவை நம்புவது நன்மை அளிக்குமா?**

**பதில்:** இந்தியாவிற்கு இன்று பூகோள நலன் சார்ந்த நிலமையில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இன்று அமெரிக்கா, சீனா, ஜப்பான், அவுஸ்ரேலிய நாடுகள் அடங்கிய குவாட் அமைப்பு இறுக்கமாக நின்று செயற்பட வேண்டிய தேவை வந்திருக்கின்றது. ஆகவே, வடகிழக்கில் உள்ள அரசியல் உரிமையைப் பலப்படுத்துவதிலும், எமது நியாயத்தை நிலைநாட்டுவதிலும், இந்தியா அதிக கரிசனை கொள்ள வேண்டும்.

**கேள்வி: ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னர் உங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் எனக் கருதுகிறீர்கள்?**

**பதில்:** இலங்கை மீது இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் சாட்சியங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் சூழ்நிலையில், சேகரிக்கப்பட்ட சாட்சியங்களை வைத்துக்கொண்டு, சர்வதேச நீதிப் பொறிமுறைக்குள் நாங்கள் கொண்டு செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். அச் சூழலில் ஒரு அரசியல் தீர்வும் ஏற்படும் நீதியும் கிடைக்கும் என நம்புகிறோம் சர்வதேச சமூகத்துடன் இணைந்தும், எமது புலம் பெயர் அமைப்புக்களுடன் இணைந்தும், முன்னேறி மிக விரைவில் ஒரு தீர்வை எமது மக்களுக்குப் பெறக்கூடிய வாய்ப்பு பிரகாசமாக காணப்படுவதாகவே தெரிகிறது.


**கேள்வி: இலங்கை அரசாங்கம் தமிழ் தேசிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக தெரிகிறது. பேச்சுவார்த்தை தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** இலங்கை அரசாங்கம் என்ன விடயம் தொடர்பாக பேசவுள்ளது என்பது பற்றி தெளிவுபடுத்த வேண்டும். புதிய அரசியலமைப்பை பற்றி பேசுவதாக இருந்தால், இவ்வளவு காலத்திற்குள் பேசியிருக்க வேண்டும். ஒரு நிபுணர் குழுவை அமைத்து அவர்கள் தமது யோசனைகளை சமர்ப்பித்து, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கையளித்த பின்னர், அதில் ஒரு சில திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் பேசலாம். தேர்தல் முடிந்து இரண்டாண்டுகள் கடந்த பின்னரா பேச வேண்டும்?

சுமித்தி தங்கராசா...

# தெளிவத்தை 88

## படைப்பில் ஓய்வின்றி இயங்கும் பிரம்மா



"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று சொல்வார்கள் இறைவன் நேரில் வந்து எழுதப் பழக்குவது என்பது சாத்தியமான காரியம் அல்ல. ஒரு சமயப் பெரியார் அல்லது அறிஞர் பெருமகன் ஒருவர் ஊடாகவே எழுதப் பழகிக்கொள்ளும் ஒரு சம்பிரதாயம் தமிழ் மக்களது பாரம்பரிய ஒரு நிகழ்வாக அமைந்திருக்கிறது. குடும்பத்தில் ஒரு பிள்ளை கல்வி பயிலும் வயதை அடைந்ததும், பெற்றோர்கள் ஒரு சுபநாளில் அந்தப் பிள்ளைக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கும் ஒரு வைபவத்தை நடத்திவைக்கிறார்கள். அதனை 'ஏடு தொடக்கல் என்றும் சொல்வதுண்டு. இதுவே குழந்தையின் எழுத்தின் ஆரம்பமாகும்.

அன்றைய சுபநாளில் தொடங்கும் எழுத்து, சிலருக்கு பாடசாலை கல்வி நிறைவடையும் வரை தொடரும், பலருக்கு தொழில்புரியும் காலம்வரை தொடரும். ஒரு சிலருக்கு வாழ்வின் இறுதிக்காலம் வரை தொடரும். அந்தவகையில் அடையாளப்படுத்தக்கூடிய ஒருவராகத் திகழும் பெருமைக்குரியவராக தெள ிவத்தை ஜோசப் விளங்குகிறார்.

அன்று தொடங்கிய அவரது எழுத்து இன்றும் வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது.

கலை இலக்கிய உலகத்தின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றுத் திகழும் தெளிவத்தை ஜோசப் இம்மாதம் 16ஆம் திகதியன்று அகவை 88இல் கால் பதித்துள்ளார். என்பது ஒரு நல்ல செய்தியாகும். சாதாரணமாக ஒருவருக்கு பிறந்தநாள் என்றால் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே மகிழ்ச்சியில் இருப்பார்கள். ஆனால் இவரது பிறந்த தினம், குடும்பத்தினர், உறவினர்களையும் கடந்து அனைத்து கலை இலக்கிய ரசிகர்களையும் மகிழ்ச்சிப்படுத்தி வருகிறது என்பது விசேஷமானது.

இவர் 1934ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதியன்று பதுளை மாவட்டம் ஊவா கட்டவளை என்ற இடத்தில் சந்தனசாமி பரிபூரணம் தம்பதிகளுக்கு புதல்வனாகப் பிறந்தார். பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து கொண்ட பின்னர் 1950ஆம் ஆண்டில் தெளிவத்தையில் ஆசிரியப் பணியாற்றிவரும் போது எழுத ஆரம்பித்தார். அப்போது தனது பெயருடன்தெளிவத்தை என்பதை இணைத்துக் கொண்டார்.

இவரது முதல் சிறுகதையான "வாழைப்பழத்தோல்" 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'உமா' சஞ்சிகையில் பிரசுரமாகியிருக்கிறது. ஆசிரியப் பணியிலிருந்த ஜோசப் 1964ஆம் ஆண்டிலிருந்து கொழும்புவந்து அன்றைக்கு புகழ்பெற்ற நிறுவனமாக விளங்கிய ஸ்டார் பிராண்ட் கொன்பெக்ஷனரியில் கணக்காளராக இணைந்து கொண்டார். கொழும்புக்கு வந்த பின், எழுத்துத் துறையில் வேகமாக நடைபயில ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் சிறுகதைகள் மூலம் தனது இலக்கிய முயற்சிகளை தொடக்கிய இவர் 1960ஆம் ஆண்டுக்குப் பின் குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வுக் கட்டுரை, திரைப்படக் கதை வசனம், தொலைக்காட்சி மற்றும் வானொலிக்கான நாடகங்கள் எனப் பல தளங்களில் தனது எழுத்து முயற்சிகளை விஸ்தரித்தார். இதனூடாக, மலையக இலக்கியத்துடன் சேர்ந்து ஈழத்து இலக்கியத்தை யும் வளப்படுத்தியதுடன், உலகத் தமிழ் இலக்கியத்துக்கும் உரம் சேர்த்தார்.

தெளிவத்தை ஜோசப் பவளவிழாவையொட்டி 2010ஆம் ஆண்டு 'ஞானம்' இலக்கிய சஞ்சிகை காத்திரமான விஷயங்களுடன் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டிருந்ததுடன், அதே வருடம் மே மாதம் 16ஆம் திகதியன்று கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் பவளவிழா சிறப்பு நிகழ்வொன்றையும் ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

தெளிவத்தை ஜோசப் ஈழத்து எழுத்துத் துறையில் முன்னேறிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அதாவது 1974ஆம் ஆண்டு இவர் சந்தித்த ஒரு அதிருப்தியான சம்பவத்தை ஞானம் சஞ்சிகை இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

"தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துலகப் பிரவேசத்தின் போது, இவரை ஓரங்கட்ட முனைந்தவர்கள் பலர். இவரது முதலாவது நாவலான 'காலங்கள் சாவதில்லை' 1974இல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்து, அவ்வாண்டில் சாகித்தியப் பரிசுக்குத் தேர்வாகியது. இது தொடர்பான விமர்சனமும் தமிழகத்தில் தீபம் சஞ்சிகையில் வெளியாகியது.

இருந்தபோதும், அக்கால இலக்கிய சட்டாம்பிள்ளைகளால் திட்டமிட்டு அந்நாளில் பரிசுத் தேர்விலிருந்து நிராகரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இத்தகைய நிலைமை இருந்தபோதும், எதிர்நீச்சலடித்து தன்னை இலக்கிய உலகில் நிலை நிறுத்திக்கொண்டவர் தெளிவத்தை ஜோசப்.

ஞானம் சஞ்சிகை வெளியிட்ட தெளிவத்தை ஜோசப் பவளவிழா மலரில் அதன் ஆசிரியர் தி.ஞானசேகரன், "மலையகம் என்னும் உணர்வுக்குத்தனது எழுத்தாற்றலால் உருவம் கொடுத்தார் ஜோசப் மலையக இலக்கியத்தின் அடையாளத்திற்கும் தனித்துவத்திற்கும் இவரது எழுத்துக்களும் தொகுப்புகளும் ஆய்வுப் பணிகளும் பெரும் பங்காற்றியுள்ளன என்று தனது ஆசிரிய கருத்துரையில் தெரிவித்துள்ளார்.

தெளிவத்தை ஜோசப்பின் ஒவ்வொரு படைப்புகளையும் விரிவாகக் குறிப்பிட்டு தனியாக ஆய்வு செய்யப்படுவது அவசியமாகும். காலங்கள் சாவதில்லை, காதலினால் அல்ல, நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் ஆகிய நாவல்களையும், பாலாயி, ஞாயிறு வந்தது, மனம் வெளுக்க ஆகிய குறுநாவல்களையும், நாமிருக்கும் நாடே என்ற சிறுகதை தொகுதியையும், மலையக சிறுகதை இலக்கிய வரலாறு, என்ற ஆய்வு நூலையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இந்நூல் இவரை சிறந்த ஆய்வாளராக இனம் காட்டியதாக அந்நாளில் விமர்சனங்கள் வெளியாகியிருந்தன.

இலங்கையில் வெளியாகும் அனைத்து நாளிதழ்களிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. அந்நாளில் கே.வி.எஸ். மோகன் வெளியிட்ட கதம்பம் சஞ்சிகையிலும் எழுதியிருக்கின்றார்.

ஈழத்து முன்னோடி எழுத்தாளராகத் திகழ்ந்த பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம்: (நந்தி) இவரைப் பற்றி இவ்வாறு சொல்கிறார்.

"ஒரு சிலையை, ஒரு பூமாலையை பார்க்கும் போது பெறப்படும் அனுபவம் ஒரு சிறுகதையை படிக்கும் போது ஏற்பட வேண்டும். சிறுகதையில் ஒரு சொல்கூடத் தேவையில்லாது இருக்கக்கூடாது. தெளிவத்தை ஜோசப் கதைகளிலும் சொற்கள் சரியாகி வந்து விழுகின்றன. ஒரு கவிதைப் பண்போடு தனது கதைகளின் வசன நடையைக் கையாண்டிருக்கின்றார். வெற்றியும் அடைகின்றார்."

தமிழ்நாட்டின் சுபமங்களா சஞ்சிகை தேசிய இலக்கியப் பேரவையுடன் இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் 'குடைநிழல்' என்ற இவரது குறுநாவலுக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. தமிழ்நாட்டின் கலைமகள் சஞ்சிகையிலும் பல சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.

இவரது எழுத்துத் திறமைக்கு சான்று பகரும் வகையில் பல விருதுகளையும் பெற்றுள்ளார். ஊவா மாகாண சாகித்திய விருது, மத்திய மாகாண சாகித்திய விருது, இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது, அரச கலாபூஷணம் விருது, இந்து கலாசார திணைக்களம் வழங்கிய இலக்கியச் செம்மல், பேராதனை பல்கலைக்கழக தமிழ் ஒன்றியத்தின் விசேட விருது, கம்பன் கழகம், யாழ்இலக்கிய வட்டம், மட்டக்களப்பு இலக்கிய மன்றம் என்பன வழங்கிய விருதுகளும் இவருக்கு கிடைத்துள்ளன. இந்தியா விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் வழங்கிய பரிசும் கௌரவமும், கொடகே நிறுவனத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருதும் இவருக்கு பெருமை சேர்த்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

2014ஆம் ஆண்டு அரசின் சாகித்திய ரத்னா விருது ஜனாதிபதியால் இவருக்கு வழங்கி வைக்கப்பட்டது. தமிழகம் சென்னையில் நடந்த இலக்கிய மாநாடுகள், கனடா நூல் கண்காட்சி, அவுஸ்திரேலியா பிரித்தானியா போன்ற நாடுகளில் நடந்த இலக்கிய நிகழ்வுகள் என்பனவற்றிலும் கலந்து சிறப்பித்திருப்பதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஒரு மூத்த எழுத்தாளர் உன்னத படைப்பாளி என்ற நிலையில் கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக எழுதிக்கொண்டிருக்கும் தெளிவத்தை ஜோசப் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான வண்ணவானவில் சஞ்சிகையில் கடந்த பதினைந்து மாதங்களாக 'எஸ்.பொ ஈழத்து இலக்கியத்தில் ஒரு கலகக்காரன்' என்ற தொடர் கட்டுரையை எழுதிவருவது மிகப் பிந்திய மகிழ்ச்சிகரமான தகவலாகும்.

பிரபல எழுத்தாளர்கள் பலர் வயது முதிர்வு காரணமாக எழுதுவதைக் கைவிட்டிருக்கும் நிலையில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் தெளிவத்தை ஜோசப் "எழுத்திலே ஓய்வுகாண விரும்பாத ஒருவர்" என்று இவரது இலக்கிய நண்பர்கள் பலர் சொல்வதுண்டு. சாதாரணமாக ஒருவர் பதவியிலிருந்துதான் ஓய்வுபெறவேண்டும். ஆனால், தனது கையில் பேனா இருக்கும்வரை தன்னால் எழுதக்கூடிய ஆற்றலும் உடல்வலுவும் உள்ளவரை எழுதிக்கொண்டிருப்பது என்பது இறைவனின் ஓர் அருட்கொடையாகும் என்றுதான் சொல்ல வேண்டும்.

சில மூத்த எழுத்தளர்கள் தமது பேரக் குழந்தைகளை சீராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் சரக்கு தீர்ந்துவிட்டது என்று ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் காலமாகிவிட்டனர். சிலர் வேறு விஷயங்களில் ஈடுபட்டு எழுத்தை மறந்து விட்டனர். அறுபதுகளில் இருந்து இன்றைக்கும் வீரியத்துடன் எழுதிக் கொண்டிருப்பவர்கள் ஒரு சிலர்தான். அவர்களில் முதன்மையானவர் தெளிவத்தை.

ஒருவருக்கு எழுத்தும் படைப்பும் இயல்பாகத்தான் வரும். எழுத்தாளன் தமிழுக்கும் பேராசிரியர் தமிழுக்கும் இடையே வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இன்றைக்கு எளிதில் புரிந்து கொள்கிறமாதிரி எழுதுவது தெளிவத்தையாருக்கு அன்றைக்கு மாதிரியே இன்றைக்கும் கை வருகிறது. அதற்கு உதாரணமாக அவரது எஸ்.பொ. தொடரைச் சொல்லலாம். எஸ்.பொன்னுத்துரை ஒரு சர்ச்சைக்குரிய படைப்பாளர், அவரைப் பற்றி எழுதும் போது அவரை புகழ்ந்து செல்லாமல் நடுநிலை நின்று எஸ்.பொ. தவறிய இடங்களையும் தெளிவத்தை சுட்டிக்காட்டி செல்லக் குட்டுக்களையும் வைக்கிறார். இந்த துணிச்சல் அனைவருக்கும் கைவராது.

இவர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்து எதிர்காலத்தில் சிறப்பாக எழுதிக் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், அதனூடாக காத்திரமான படைப்புகளை கலை இலக்கிய உலகுக்கு வழங்குவதற்கு எல்லாம்வல்ல இறையருள் துணைநிற்கவேண்டும் என கலை இலக்கிய ரசிகர்கள் சார்பாக பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.



அ. கனகசூரியர்...

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு வருகை தருவதற்கான சாத்தியம் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியிருக்கும் நிலையில், அவரைச் சந்திப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போதிருந்தே ஆர்வம் காட்டி வருகின்றனர்.**

# பிரதமர் மோடியை சந்திப்பதில் கூட்டமைப்பு தீவிர முனைப்பு!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருமிடத்து அவரைச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்தச் சந்திப்பின் போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவருக்கு விரிவாக எடுத்துக் கூற இருப்பதாகவும் சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.



தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பான நீண்ட கால சிக்கலுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் இந்தியாவின் அழுத்தம் அதிகரிக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் வலுப்பட்டு வரும் நிலையில், இரா.சம்பந்தன் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு இந்திய தரப்பைக் கோரியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி பிம்ஸ்டெக் மாநாட்டில் (வங்காள விரிகுடா பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு முயற்சி) கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தருவதற்கான சாத்தியம் தென்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த மாநாட்டை இலங்கை நடத்தவிருப்பதுடன், இதில் அரச தலைவர்கள் நேரடியாகப் பங்கெடுப்பதா அல்லது மெய்நிகர் முறையில் பங்கெடுப்பதா என்பது பற்றி இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அரசாங்கத் தலைவர்கள் நேரடியாகக் கலந்து கொள்வதாக இருந்தால் பாரதப் பிரதமர் இலங்கை வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இருந்தபோதும் இதுபற்றி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் எதுவித உறுதிப்படுத்தல்களையும் இதுவரை வழங்கவில்லை.

இலங்கையிலுள்ள மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கும் வகையில், 1987ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் தலையீட்டுடன் கொண்டு வரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை உரியபடி நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு ஆவணமொன்றை ஏற்கனவே அனுப்பி வைத்திருக்கும் நிலையில், தமிழர்களின் அபிலாஷைகள் குறித்து இந்தியப் பிரதமருடன் பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது எதிர்பார்த்துள்ளது.



இலங்கை விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் அக்கறை காண்பித்து வரும் நட்பு நாடு என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இருந்தபோதும், இலங்கை விடயத்தில் இந்தியா தற்பொழுது காண்பிக்கும் அக்கறையானது தமிழ் மக்களின் அபிலாஷைகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்காது என்பதே அவதானிகளின் கருத்தாக உள்ளது.

கொவிட்19 தொற்றுநோயின் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் நட்பு நாடுகளின் உதவியைப் பெறும் நிலைக்கு இலங்கை இப்போது தள்ளப்பட்டுள்ளது. டொலர் தட்டுப்பாடு உள்ளிட்ட பல நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு அரசாங்கத்தை எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வரும் நிலையில், இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளின் உதவியை முதலில் பெறுவது குறித்தே இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

**கொவிட் பொருளாதார நெருக்கடி வேளையில் இந்தியா வழங்கும் அதிகரித்த உதவிகள்; இந்திய அக்கறையானது இலங்கைத் தமிழர்கள் மீதான அக்கறைக்கும் அப்பாற்பட்டது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்**

இந்த வரிசையில் இந்தியாவின் உதவிகளை இலங்கை நாடியிருப்பதுடன், பல விடயங்களில் உதவிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், சில தினங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவுக்குச் சென்று பேச்சுகளை நடத்தி விட்டுத் திரும்பியிருந்தார்.

அது மாத்திரமன்றி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் ஒன்லைன் மூலம் நடைபெற்ற சந்திப்பில் இந்தியாவிடமிருந்து உதவிகள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் எரிபொருள் கொள்வனவுக்கு கடன் வழங்க முன்வந்த இந்தியா, கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் ஊடாக எரிபொருட்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது.

**இலங்கை தொடர்பான சீனாவின் பிரசன்னம் குறித்தே புதுடில்லி பிரதான கரிசனையுடன் இருக்கையில், இலங்கைத் தமிழர் நலன்கள் மீது இப்போது அக்கறை செலுத்தப்படுமா என்பதில் உள்ள சந்தேகங்கள்!**

இது மாத்திரமன்றி, எதிர்வரும் நாட்களில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் ஒருமுறை இந்தியாவுக்குச் செல்லவிருப்பதாகவும், இதன் போது இந்தியாவிடமிருந்து மேலும் உதவிகள் கிடைக்கவிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளில் சீனா நெருக்கமாகி பல்வேறு உதவிகளைச் செய்துள்ளமையால் இந்தியா சில காலமாக அதிருப்தியடைந்திருந்தது. இந்த நிலையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மீண்டும் பலமடைந்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறித்து இந்தியா அதிருப்தியைக் கொண்டிருந்தாலும், இக்கட்டான சூழ்நிலைகளில் எப்பொழுதும் இலங்கையைக் கைவிடாத நட்புக் கொண்ட அயல்நாடாக இந்தியா காணப்படுகிறது என்பதை நாம் மறுக்க முடியாது. இலங்கை கடற்பரப்பில் ஏற்பட்ட கப்பல் தீவிபத்து சம்பவங்களில் கூட உடனடியான ஓடிவந்து உதவியது இந்தியா என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வரிசையில் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா மீண்டும் ஒருமுறை உதவிக்கரம் நீட்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில், இலங்கை விடயத்தில் இந்தியாவின் அக்கறையானது தமிழர்களின் பிரச்சினை என்பதற்கும் அப்பால் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவது என்ற பரந்த எல்லைக்குச் சென்றுள்ளதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

---

**இந்திய நாட்டு எல்லைக்குள் சீனா ஊடுருவுவதாக தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் ஒருபுறமிருக்க, இதேவிதமான குற்றச்சாட்டை நேபாளமும் சீனா மீது சமீபத்தில் முன்வைத்துள்ளது. சீனா தங்கள் நாட்டு எல்லைக்குள் ஊடுருவலில் ஈடுபட்டுள்ளதாக நேபாள அரசு அண்மையில் முதன்முறையாக அதிகாரபூர்வமாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

# இந்தியாவுக்கு அடுத்தபடியாக நேபாள எல்லைக்குள்ளும் ஊடுருவும் முயற்சியில் சீனா!



சீன நேபாள நாடுகளுக்கு இடையே பொதுவான எல்லைக் கோடு இருக்கும் நிலையில், சீனாவின் அத்துமீறல் குறித்து நேபாள அரசு சமீபத்தில் முன்வைத்த குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு நேபாளத்தின் ஹூம்லா மாவட்டத்தில் சீனா அத்துமீறுவதாக கூறப்பட்டதை அடுத்து, கடந்த ஆண்டு செப்டம்பரில் இது சம்பந்தமாக அறிக்கையைத் தயாரிக்க நேபாள அரசால் அறிவுறுத்தப்பட்டது.

ஆனால், நேபாளத்தில் உள்ள சீனத் தூதரகமோ இந்த ஊடுருவல் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளது. சமீபத்திய சில ஆண்டுகளாக நேபாள அரசு, சீனாவுடனான தன் உறவை மேம்படுத்திக் கொள்ள முயற்சித்து வந்துள்ள போதிலும் சீனா தனது நாட்டு எல்லையை விஸ்தரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது.

ஒருபுறம் இந்தியாவின் பிரதேசங்களை தன்வசப்படுத்துவதில் கவனம் செலுத்திக் கொண்டே தற்போது நேபாள பிரதேசங்களையும் அபகரிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றது.

நேபாளத்துக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லை இமயமலையை ஒட்டி சுமார் 1,400 கி.மீ உள்ளது. இந்நிலையில் நேபாளத்தின் குற்றச்சாட்டு அறிக்கையானது சீனாவுடனான உறவுகளை மேம்படுத்தும் நேபாள அரசின் முயற்சியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



**நேபாள விவசாயிகளின் கால்நடை மேய்ச்சலை சீனா கட்டுப்படுத்தி வருவதாக முறைப்பாடு; கைலாயமலையில் சமய நடவடிக்கைகளுக்கும் இடையூறு!**

1960களின் முற்பகுதியில், இரு நாடுகளுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளுமே தொலைதூரப் பகுதிகளாக இருப்பதால் அங்கு செல்வது எளிதல்ல.

தரைப்பகுதியில் எல்லையானது தூண்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், சில நேரங்களில் நேபாளம் மற்றும் சீனாவின் எல்லைப்பகுதி வரையறைகளைப் புரிந்து கொள்வதே கடினமாக உள்ளது.

ஹூம்லா மாவட்டத்தில் சீனாவின் அத்துமீறல் குறித்த தகவலைத் தொடர்ந்து, நேபாள அரசு ஒரு பணிக்குழுவை அங்கு அனுப்ப முடிவு செய்தது. இந்தக் குழுவில் பொலிஸ்துறை அதிகாரிகள் மற்றும் அரசின் பிரதிநிதிகள் இருந்தனர்.

நேபாள எல்லைப் பகுதியில் உள்ள லாலுங்ஜோங் பகுதி கைலாயமலைக்கு அருகில் இருப்பதால் பாரம்பரியமாக யாத்திரிகர்களை ஈர்க்கும் மையமாக இருந்து வருகிறது. குறிப்பாக இது இந்துக்கள் மற்றும் பௌத்தர்களுக்கு புனிதமான இடமாக இருந்து வருகின்றது.

ஆனால், இந்தப் பகுதியில் சமய நடவடிக்கைகளைக் கூட சீனப் பாதுகாப்புப் படையினர் தடுத்ததாக நேபாள அரசின் பணிக்குழு அறிக்கை கூறியுள்ளது. மேலும், நேபாள விவசாயிகளின் கால்நடை மேய்ச்சலை சீனா கட்டுப்படுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



**எந்தவொரு அச்சுறுத்தலையும் முறியடிக்க தயார் நிலையில் இந்தியா! எல்லையில் நவீனரக ஆயுதங்களுடன் இராணுவத்தினர் குவிப்பு!**

சில பகுதிகளில் சீனா எல்லைத் தூண் அருகே வேலி அமைத்து, நேபாளப் பகுதியில் கால்வாயை ஒட்டி வீதி அமைக்க சீனா முயற்சிப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேபாள உள்ளூர்வாசிகள் பெரும்பாலும் எல்லைப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கத் தயங்குகிறார்கள் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஏனெனில் அவர்களில் பலர் எல்லையைத் தாண்டி சீன சந்தைக்குச் செல்கிறார்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க)



# இன்னும் ஒரு வாரத்தில் ஆரம்பமாகிறது மனித உரிமைகள் பேரவை 49 ஆவது அமர்வு

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நிலையில், இலங்கை விவகாரம் குறித்து முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்க அரசாங்கம் தயாராகி வருகிறது. இலங்கை பற்றிய தனது அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சர் பச்லட் சமர்ப்பிக்கவிருக்கும் அதேவேளையில், அதற்குப் பதிலளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

இலங்கை விவகாரம் குறித்து முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கு எதிர்வரும் நாட்களில் இலங்கை தனது பதிலை எழுத்து மூலம் அனுப்பி வைக்கவிருக்கும் இன்றைய பரபரப்பான நிலையில், ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்தின் விளக்கம் தொடர்பாக அரசுக்கு சாதகமான நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளிப்படுத்தியுள்ளார்.

ஜெனீவா மாநாட்டில் நீதி கிடைக்கும் என்ற பெரும் நம்பிக்கையுடனேயே தாங்கள் இதில் கலந்து கொள்ளவிருப்பதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

“இலங்கையுடன் நட்புறவுடன் செயற்படும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு நாங்கள் எப்போதும் தயாராகவே உள்ளோம். இவ்வாறு செயற்படுவதன் ஊடாக பிரச்சினையைத் தீர்க்க முடியும் என நம்புகின்றோம். எதிர்வரும் நாட்களில் ஆரம்பமாகவுள்ள 49 ஆவது அமர்வில் இந்த விடயங்களை முன்வைக்க எதிர்பார்த்திருக்கின்றோம்” என்று அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.



## விமர்சனங்களுக்குப் பதிலளிக்க தயாராகும் இலங்கை அரசு!

சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டே புலிகளும் இராணுவப் படையும் போரிட்டமையால் இராணுவத்தினர் சர்வதேச நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய தேவை கிடையாது என்றும், உள்ளகப் பொறிமுறையின் ஊடாக விடயங்களைக் கையாள்வதே பொருத்தமானது என்றும் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் சமர்ப்பிக்கும் எழுத்துமூல அறிக்கை எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளது. இவ்வாறான பின்னணியில், சர்வதேசத்துக்கு தமது சார்பில் நிலைமைகளை எடுத்துக் கூறுவதற்காக இலங்கையின் குழுவொன்று ஜெனீவா செல்லவுள்ளது. இக்குழுவில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் அலி சப்ரி உள்ளிட்டவர்களுடன் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவிருப்பதாக வெளிவிகார அமைச்சுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

சர்வதேசத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் காணப்படுவதாக மேற்கத்தேய நாடுகள் பல குற்றஞ்சாட்டியுள்ளன. இலங்கை தொடர்பான பிரேரணையைக் கொண்டு வந்த பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் இதுவிடயத்தில் தமது அக்கறையைக் காண்பித்து வருவதுடன், சில தமிழ் அரசியல்வாதிகளும் வழமைபோன்று இலங்கைக்கு எதிரான தமது பிரசாரங்களை முன்னெடுப்பதில் இப்போது முனைப்புக் காட்டியுள்ளனர்.

இருந்தபோதும் இலங்கை அரசாங்கம் சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதை நாம் மறுக்க முடியாது. 1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்தல், யுத்தத்தினால் போரில் பாதிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், சட்டத்தரணி ஹிஸ்புல்லா வழக்கில் பிணை வழங்குவது தொடர்பான சட்டமா அதிபரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டமை போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இதில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், இதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் பொருட்டு ஒழுங்குப் புத்தகத்திலும் இவ்விடயம் சேர்க்கப்பட்டுள்ளது. சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை அடிப்படையாகக் கொண்டு இச்சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்தத் திருத்தத்தின் ஊடாக தடுத்து வைக்கப்படும் காலம் குறைக்கப்படுதல் உள்ளிட்ட திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

எனினும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக அரசாங்கம் சர்வதேசத்துக்கு உறுதியளித்திருப்பதால், தற்பொழுது முன்வைக்கப்படும் சட்டத்திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்விடயத்தைப் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டிப் பேசியிருந்ததுடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் கையெழுத்துக்களைத் திரட்டும் போராட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளார். இதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவும் கிடைத்துள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள கையெழுத்து வேட்டையில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட மதத் தலைவர்கள் பலரும் தமது கையொப்பத்தை வழங்கியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியிலேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் குறித்த பேச்சுக்கள் எழுந்துள்ளன. அது மாத்திரமன்றி, இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருவேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருந்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதும், சுதந்திர தின உரையின் போதும் இவ்விடயத்தை அவர் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இழப்பீடுகள் வழங்கும் அலுவலகம் மற்றும் காணாமற் போன ஆட்களுக்கான அலுவலகம் உள்ளிட்டவற்றின் செயற்பாடுகள் முன்னேற்றகரமான நிலையில் காணப்படுகின்றன. இது போன்ற சாதகமான விடயங்களை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

மறுபக்கத்தில் ஒவ்வொரு வருடமும், மார்ச் மற்றும் செப்டெம்பர் ஆகிய மாதங்களாகும் போது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அக்கறை காண்பிப்பதும், அதன் பின்னர் அவற்றைக் கைவிடுவதும் வழமையான நிகழ்வுகளாக மாறியுள்ளன என்பதையும் மறந்து விட முடியாது.





யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்துள்ள போதும் சர்வதேச அரங்கிற்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்களின் பிரச்சினைகள் எந்தளவுக்கு தீர்க்கப்பட்டுள்ளன என்பதற்கான விடை இதுவரை தெளிவாக இல்லை. அதுமாத்திரமன்றி சர்வதேச நாடுகள் தமக்கு சார்பான அரசாங்கமொன்று இலங்கையில் அமையும் போது தமது பிடியை தளர்த்துவதும், தமக்கு சார்பான அரசாங்கமொன்று அமையாதவிடத்து அதன்மீது தமது பிடியை இறுக்குவதையும் நாம் இங்கு அவதானிக்க வேண்டும்.

பூகோள ரீதியாக இலங்கையின் அமைவிடம் மற்றும் ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகள் என்பனவும் இந்த விடயத்தில் தாக்கம் செலுத்துகின்றன. வெறுமனே தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைத்து விட வேண்டும் என்பதில் சர்வதேசம் அதீத அக்கறை கொண்டுதான் தமது காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றது என்று கூறிவிட முடியாது.

இருந்த போதிலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமக்கு எப்படியாவது ஒரு தீர்வு கிடைத்து விடாதா என்ற அங்கலாய்ப்பு மக்கள் மத்தியில் காணப்படத்தான் செய்கிறது. இதனை யார் பெற்றுத் தந்தாலும் சரி நீதி கிடைக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

எனினும், அரசியல்வாதிகள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மக்களை ஏமாற்றி வருகின்றனரே தவிர நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்குத் தயாராக உள்ளது என பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவை தொடர்பில் அழுத்தம் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழர்களின் பிரச்சினை என்பது தமக்குப் பிடிக்காத அரசாங்கத்தை சர்வதேச அரங்கத்தில் நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்கான ஒரு துரும்புச்சீட்டாகப் பயன்படுத்தப்படக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையில் நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடாக அமைய வேண்டும். அதனை விடுத்து, இலங்கையின் பூகோள அமைவிடத்தை உள்நோக்கமாகக் கொண்டு உலகநாடுகள் காண்பிக்கும் அக்கறையும், அதற்கு எதிர்வினையாற்றும் ஏனைய நாடுகளின் செயற்பாடுகளும் மக்களின் உண்மையான பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்காது என்பதே நிதர்சனமாகும்.


“சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை ஆர்வம்”

**இலங்கையை சர்வதேச அரங்கில் நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்காக தமிழர் விவகாரத்தை துரும்புச்சீட்டாக பயன்படுத்தும் சில மேற்கு நாடுகள்!**

UNHRC

## பாதை இல்லை, பஸ் போக்குவரத்து இல்லை, ஆஸ்பத்திரி வசதி இல்லை...

# அவதிப்படும் புப்புரஸ்ஸ கந்தலா தோட்ட மக்கள்



கண்டி மாவட்டம், புப்புரஸ்ஸ ஸ்டெலன்பேர்க், தோட்டத்தில் மூன்று தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த 700 கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. மிகக் கஷ்ட பிரதேசம் இது! கண்டி நுவரெலியா மாவட்டங்களின் எல்லையாக அமைந்துள்ள தோட்டம்.

இங்கே ஆங்கிலேயர் காலம் முதல் நோயாளிகளை தங்கவைத்து மருத்துவம் பார்த்த வைத்தியசாலை கடந்த 15 வருடங்களாக மூடப்பட்டுள்ளது. 10 வருடங்களாக மூடப்பட்டுள்ள உப தபாலகம் இங்குள்ளது. நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர் குடியிருப்புகள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

குதிரை வண்டிகள் ஓட அமைக்கப்பட்ட ஆங்கிலேயர் காலத்து பாதைகளில் 10 வருடங்களாக பஸ்சேவை இல்லை. இவ்வாறு இத்தோட்டத்தின் அருமை பெருமையை அடுக்கி கொண்டு போக முடியும். இத்தோட்டத்துக்கு அண்மித்த நகராக புப்புரஸ்ஸ 7 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளபோதும் இது ஒரு சிறிய நகரம் மட்டுமே.

வங்கிக் கிளைகள், பெற்றோல் நிரப்பு நிலையம், நகை அடகு கடை, புடவைக் கடை, போதிய பொருள்வாங்க நல்ல பலசரக்கு கடைகள் இல்லை. தனியார் வைத்தியசாலை, மருந்தகம், சதோச போன்ற அத்தியாவசிய சேவை நிலையங்கள் இல்லை.

இதனால் இந்த தோட்ட மக்கள் புப்புரஸ்ஸ நகரை நாடுவதில்லை! இருந்தும் புப்புரஸ்ஸ நகரில் இருந்து கந்தலா தோட்டத்திற்கு பஸ்சேவை ஒன்று இருந்தது. பாதை படுமோசம் எனக்கூறி பஸ்சேவையை கண்டி தெற்கு அரச போக்குவரத்து சபை கடந்த 10 வருடங்களுக்கு முன் நிறுத்திவிட்டது.

இந்தப் பாதை சுமார் 4 கிலோமீட்டர் தூரத்துக்கு மக்கள் நடை பயணமாகக் கூட செல்ல முடியாதவாறு சேதமடைந்துள்ளது. இருந்தும் பன்விலதன்ன வைத்தியசாலைக்கு இப்பாதையின் ஊடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

முச்சக்கர வண்டிக்கு 1000/= அறவிடுகின்றனர். பஸ்சேவை இருக்குமேயானால் 100 ரூபாய் மட்டுமே செலவாகும்.

தாய் சேய் மருத்துவ பரிசோதனைக்காக டெல்டா தோட்ட வைத்தியசாலைக்கு இப்பாதையின் ஊடாகவே செல்ல வேண்டியுள்ளது. இங்கு செல்ல முச்சக்கர வண்டி கட்டணம் 750 ரூபா! வைத்தியசாலைக்குச் சென்றதுமே தேவை நிறைவேறாது.

இரண்டு மூன்று மணிநேரம் சுணங்கும். எனவே ஆட்டோ ஓட்டுநரும் தாமத கட்டணத்துடன் 1300 ரூபாய் அறவிடுகின்றனர். இது மரங்கள் நிறைந்த காட்டு வழி. காட்டுப் பன்றிகள், சிறுத்தைகள் என்பவற்றின் நடமாட்டம் அதிகம். நூற்றுக்கணக்கான குளவிக் கூடுகள் இப்பாதையில் உள்ளன.

இவ்வாறான பிரச்சினைகள் பாதை நெடுக காத்திருக்கும். இவர்கள் தமது தேவைகளுக்காக புசல்லாவ நகரையே நாடுகின்றனர்.

### மழைக் காலத்தில் பாதைகள் பன்றிக் குட்டைகளாக மாறிவிடுகின்றனவாம்!





படங்கள்: தெல்தோட்டை தினகரன் நிருபர்





கந்தலா தோட்டத்தில் இருந்து புசல்லாவ நகருக்கு 14 கிலோமீட்டர் தூரம். இதில் சுமார் 5 கிலோமீட்டர் தூர பாதை குண்டும் குழியுமாக உள்ளது. மழைக் காலத்தில் இப்பாதை சேறும் சகதியுமாக பன்றிக் குட்டையாகி விடுகிறது.

இக்காலத்தில் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டு விடும். ஸ்டெலன்பேர்க் தமிழ் வித்தியாலயத்திற்கு புசல்லாவ பகுதிகளில் இருந்தே ஆசிரியர்மார் வருகின்றனர். இதனால் ஆசிரியர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். புசல்லாவ நகர் பகுதிகளுக்கு செல்லும் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள், தொழிலுக்கு செல்வோர் என பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்கள் புசல்லாவ, கம்பளை வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது. 1500 ரூபாய் தொடக்கம் 3

ஆர். நவராஜா...

ஆயிரம் வரையில் வைத்தியசாலை போக்குவரத்திற்காக செலவிட வேண்டியுள்ளது.

பாதை சேதம் காரணமாக முச்சக்கரவண்டிகள் அடிக்கடி பழுதாவதால் முச்சக்கர வண்டிச் சாரதிகள் பலர் முச்சக்கர வண்டி ஓடுவதை நிறுத்திவிட்டு வேறு தொழில்களுக்கு சென்றுவிட்டனர்.

பாதையில் எல்ஃப் ரக வேன் ஒன்று மட்டும் தற்போது சேவையில் உள்ளது. இதுவும் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றது.

எம்மை எமது மலையக அரசியல் பிரமுகர்கள் தமது போக்குவரத்து மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆயிரம் ரூபா சம்பளப் போராட்டத்தை நீடிப்பதா? கூட்டு ஒப்பந்தத்துக்கு திரும்புவதா?

**இரு தலைக் கொள்ளி எறும்பாக பெருந்தோட்ட சமூகம்**

**‘ மலையக தொழிற்சங்கங்களிடம் ஒற்றுமை என்பது மருந்துக்கும் கிடையாது. தமது அரசியல் இருப்புக்கான ஆதார கருவிகளாக மலையக மக்களை மாற்றியமைப்பது ஒன்றையே பல சங்கங்கள் கொள்கையாக கொண்டுள்ளன’**

கூட்டு ஒப்பந்த முறைமை மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும் என்று பெருந்தோட்ட மக்கள் ஹட்டன் நகரில் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். நிச்சயம் இது மக்களின் தன்னெழுச்சிப் போராட்டமாக இருக்க வாய்ப்பே இல்லை. ஏனெனில் அந்தளவு பெருந்தோட்டமக்கள்யதார்த்தநிலைமையைபுரிந்து கொண்டிருப்பதாக கூற முடியாது. இன்று 1000 ரூபா சம்பளத்தை முழுமையாகப் பெற முடியாமற் போனமைக்கு கூட்டு ஒப்பந்தம் கைவிடப்பட்டுள்ள நிலையும் ஒரு காரணம் என்பதே நிதர்சனம்.

ஆனால் இதன் தாற்பரியங்கள் தர்க்கரீதியிலான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படாமல் கடந்த காலங்களில் கபட நாடகம் ஆடி வந்தன மலையக தொழிற்சங்கங்கள். இதன் பின்னணியிலேயே 1000 ரூபா சம்பள கோரிக்கையை எந்தவொரு எதிர்வு கூறலுக்கும் உட்படுத்தாது முன் வைத்தன இத்தரப்புகள். இதன் காரணமாக 1000 ரூபாய் சம்பள உயர்வின் நடைமுறைச் சிக்கல், அதன் ஸ்திரத்தன்மை என்பது பற்றிய உள்வாங்கல்கள் ஏதுமின்றி அவசரக் கோலமாகவே எல்லாமே நட ந்தேறின.

இதற்கு பதிலடி தரும் வகையில் கம்பனி தரப்பு கூட்டு ஒப்பந்தத்தினால் இனி பலன் கிடையாது.

அதிலிருந்து தாம் விலகுவதாக அறிவித்தது. இது இ.தொ.காவுக்கு கொடுத்த அதிர்ச்சி வைத்தியம். அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் அந்தஸ்து கொண்ட தொழிற்சங்கங்களான இ.தொ.கா., இ.தே.தோ.தொ.சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு (10 மலையக தொழிற்சங்களின் இணைப்பு) கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறப் போவதாக கூறியிருந்தன. ஆனால் இது உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை. கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன.

ஆனால் இ.தொ.காவுக்கு இது பிடித்தமான சங்கதியாக இருக்க முடியாது. ஏனெனில் இ.தொ.காவின் அப்போதைய தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தான் கூட்டு ஒப்பந்தத்தின் சூத்திரதாரி.

எனவே அதனை கைவிடுவது என்பது உசிதமாக இருக்கப் போவதில்லை இ.தொ.காவிற்கு.

2016களில் சம்பள நிர்ணயத்துக்கான கூட்டு ஒப்பந்தத்தை மீள் பரிசீலனைச் செய்யப் போவதாக அமரர் ஆறுமுகன் தொண்டமான் கூறினார். ஆனால் இறுதிவரை அவர் எதனையுமே செய்யவில்லை.

கூட்டு ஒப்பந்தம் தோட்டத் தொழிலாளர்களை தன்வசப்படுத்திக் கொள்ள ஒரு பொறி. அதனைக் கைவிடுவது என்பது சாதாரண விடயமாக இருக்காது.

பொதுவாக கூட்டு ஒப்பந்தம் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சாதகமான பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள் இன்றி சம்பள விவகாரத்தைக் கையாள முடியும். இணக்கப்பாட்டின் அடிப்படையில் தொழிலாளர் நலன்கள் பாதுகாப்பு என்று நல்ல சமாசாரங்கள் அதில் இருக்கவே செய்கின்றன. எனினும் கடந்த காலங்களில் குளறுபடிகள், இழுத்தடிப்புகள் ஏற்படவே செய்தன. இதற்கு காரணம் ஒப்பந்த ஷரத்துக்களை உரிய முறையில் செயற்படுத்தாததே. இதற்கான அழுத்தங்களைக் கம்பனி தரப்புக்கு ஏற்படுத்துவதில் தொழிற்சங்க தரப்புகள் பலவீனமாகவே இருந்துள்ளன.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் இருக்கும் வரை கூட்டு ஒப்பந்தம் பற்றிய ஒரு நம்பிக்கை இருக்கவே செய்தது. கம்பனி தரப்பினை வழிக்குக் கொண்டு வரக்கூடிய ஆளுமையும் அனுபவமும் அவருக்கு இருந்தன. ஆனால் அந்த முதிர்வு நிலை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு இல்லை. இதனாலேயே அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் விரும்பாத சம்பள நிர்ணய சபையின் தலையீட்டுக்கு ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்கள் இணங்க வேண்டி நேர்ந்தது என்கிறார்கள் எதிர்தரப்பினர்.

ஜீவன் தொண்டமானை பொறுத்தவரை 1000 ரூபா சம்பளத்தை ஏதாவது ஒரு வழியில் பெற்றுத்தந்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம். இரண்டாவது, அரசாங்கத்தில் அவருக்கு (அவரது கட்சிக்கு) இருக்கும் செல்வாக்கு. இரண்டுக்கும் விடப்பட்ட சவாலாகவே 1000 ரூபா சம்பள விவகாரம் மாறிப்போயிருக்கிறது.

எனினும் தொழிலாளர்களது சம்பள விடயம் வருங்காலத்தில் எவ்வாறு கையாளப்படப் போகிறது? அது எந்த வகையில் தொழிலாளர்களுக்குச் சாதகமாக அமையும்? இதை எத்தரப்பும் எண்ணிப் பார்த்திருக்கவில்லை.

தோட்டத் தொழிற்துறையில் தற்போது பெண்கள் மட்டுமே அதிகமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களை வைத்து போராட்டங்கள் நடத்துவது எல்லாம் முன்னைய காலங்களைப்போல விளைவுகளை ஏற்படுத்தப் போவதில்லை.

இது கம்பனி தரப்புக்கும் தெரியும்.

பன். பாலா ...

மலையக தொழிற்சங்கங்களுக்கும் புரியும். இதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மீதான தமது நம்பிக்கையைச் சிறுகச்சிறுக இழந்து வருகிறார்கள். அத்துடன் மலையக தொழிற்சங்கங்களிடம் ஒற்றுமை என்பது மருந்துக்கும் கிடையாது. தமது அரசியல் இருப்புக்கான ஆதார கருவிகளாக மலையக மக்களை மாற்றியமைப்பது ஒன்றையே பல சங்கங்கள் கொள்கையாக கொண்டுள்ளன.

ஏற்கனவே பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கூட்டு ஒப்பந்தத்துக்குப் பதிலாக ஒருமாற்றுப் பொறிமுறை இனம் காணப்பட வேண்டும் என்றொரு கருத்தை (சில வருடங்களுக்கு முன்) முன் வைத்தமை ஞாபகம் வருகிறது. தேயிலை தொழிற்துறையில் முன்னெடுக்கப்படும் பாரம்பரிய கொடுப்பனவு முறைமைகளிலிருந்து மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் அது கருத்துத் தெரிவித்திருந்தது. இதற்கான விமர்சனங்கள் எதனையும் எந்தவொரு தொழிற்சங்கமும் பதிவு செய்யவில்லை. ஏனெனில் மாற்றுத் திட்டம் எதுவுமே தம்வசம் இல்லாத வங்குரோத்து நிலைமை.

பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் பல வீனங்களையும் அவை தோட்ட மக்களை ஏமாற்ற அவ்வப்போது வகுக்கும் வியூகங்களையும் சரியாக புரிந்துக்கொண்டு தக்க சமயத்தில் தலையில் குட்டு வைக்கத் தயங்குவது இல்லை கம்பனி தரப்பு. எனவே தொழிற்சங்கங்களை எப்படி விழிபிதுங்கச் செய்வது என்பது கம்பனி தரப்புக்கு அத்துப்படியான சமாச்சாரம்.

மலையக தொழிற்சங்கத் தலைமைகளும் அரசியல் வாதிகளும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் மேம்பாடு தொடர்பில் உருப்படியான நீண்டகால செயற்திட்டங்கள் எதனையும் கைவசம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தல்கால விஞ்ஞாபனங்கள் வெறும் பம்மாத்துக்களே ஆகும். அதனை நிறைவேற்றக்கூடிய ஆக்கபூர்வமான நிழல் நடவடிக்கைகளில் கூட அவை ஈடுபடுவது கிடையாது.

கட்சிக்குள் கலந்துரையாடல்கள், அறிவு ஜீவிகளுடன் ஆலோசனைகள் என்பதெல்லாம் தேர்தல்கால உபாயங்கள்.

குறிப்பாக 1000 ரூபா தினக்கூலி வாங்கித் தந்ததுடன் அதனை முழுமையாக தொழிலாளர்களுக்கு பெறக்கூடிய வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்து முன்னேற்பாடு செய்யாமற் போனமை தொழிற்சங்கங்கள் விட்ட பெருந்தவறு. சம்பள நிர்ணய சபைக்கூடான கூட்டு எவ்வளவு காலத்துக் கு தொடரும்? அல்லது தொடர வேண்டும் என்பதையிட்டும் இத்தொழிற்சங்கங்களிடம் தீர்மானம் ஏதும் கிடையாது.

இந்நிலையில் தான் தொழிற்சங்கங்களுக்கும் தோட்டக் கம்பனிகளுக்குமிடையிலான முணைப்பாட்டினை மேலும் முடுக்கி விடவே சம்பள அதிகரிப்பு உதவியுள்ளது. ஏனெனில் கூட்டு ஒப்பந்தத்தின் சாதகமான தன்மைகளுக்கும் சேர்ந்தே சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது. இன்று 1000 ரூபாய் பெறக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் இழந்து போய் மக்கள் வெறும் வாயை மெல்ல வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால இது பற்றிய தீர்விற்கான நகர்வுகளை மேற்கொள்ள வக்கில்லாத நிலையில் மக்களை தூண்டிவிட்டு போராட்டங்களில் ஈடுபடுத்த தயாராகி விட்டுள்ளன மலையக தொழிற்சங்க அமைப்புகள்.


அதன் பின்னணியிலேயே பெருந்தோட்ட பிரதேசங்களில் 1000 ரூபாய் சம்பளம் முழுமையாக கிடைக்கக் கோரி தோட்ட மக்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களில் குதிக்கும் காட்சிகள் தென்படுகின்றன. கோரிக்கையில் குற்றமேதும் இல்லை. ஆனால் இதனை அடைய இப்போராட்டங்கள் வழி வகுக்குமா என்பதே கேள்வி!

இத்துடன் இப்பொழுது கூட்டு ஒப்பந்தம் மீட்டுத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தோட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஏலவே கம்பனி தரப்பு கூட்டு ஒப்பந்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் சம்பள நிர்ணய சபையிலிருந்து பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் வெளியேற வேண்டும் என்று நிபந்தனை போட்டுள்ளது.

இப்பொழுது அவதானிகளின் கேள்வி என்னவென்றால் மலையக தொழிற்சங்கங்கள் நிபந்தனையை ஏற்றுக் கொண்டு சம்பள நிர்ணய சபையிலிருந்து விலகி கூட்டு ஒப்பந்தத்துக்கு உயிர்டுகொடுக்கப் போகின்றதா என்பதுதான்.

ஏனெனில் நாம் ஆரம்பத்திலேயே பதிவிட்டதைப் போல இது மக்களின் தன்னெழுச்சிப் போராட்டமா? அல்லது இதன் பின்னணியில் வேறு ஏதாவது தரப்புகள் காய்நகர்த்தி ஆயிரம் ரூபா கோரிக்கையை திசை திருப்பும் முயற்சியா எனபது குறித்து ஐயப்பாடுகள் எழவே செய்கின்றன.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவைக்காமல் இருந்தால் சரி. ஆயிரம் ரூபா சம்பளப் போராட்டத்தை நீடிப்பதா?



# யுத்தச் சூழலில் இருந்து மீண்டு விட்டோம் என்பதை உணர

# சுயாதீனமான சூழலில் வாழ்வதே சிறப்பு

"அடுத்த ஐந்தாண்டு வேலைத்திட்டத்தை மூன்று ஆண்டுகளுக்குள் முடிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்" என்று கூறியுள்ளார் ஜனாதிபதி. இது நடந்தால் நல்லது. மகிழ்ச்சி.

ஏனென்றால், நாடு இப்பொழுது எதிர்கொண்டிருக்கும் நிலை மிகப் பாரதூரமானது. உற்பத்தி வீழ்ச்சி அல்லது போதாமை. பொருளாதார நெருக்கடி. அந்நியச் செலாவணியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, கொவிட் தாக்கம் போன்றவற்றிலிருந்து நாடு மீள வேண்டியுள்ளது.

இதற்கு விரைவான, சிறந்த, புதிய மேம்பாட்டுத்திட்டங்களும் நடவடிக்கைகளும் அவசியம். ஏறக்குறைய இடர் நீக்கு நடவடிக்கைகளைப் போல துரிதமாக இவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவேதான் ஜனாதிபதியின் அறிவிப்பை நாம் மகிழ்ச்சியுடன் நோக்க வேண்டியுள்ளது.

ஆனால், இதற்கு நடைமுறையில் பல பிரச்சினைகள் உண்டு. ஒன்று கொவிட் 19 இன் புதிய அவதார வடிவங்கள். இரண்டாவது, நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி. மூன்றாவது, உள்நாட்டின் அரசியல் குழப்ப நிலவரம். நான்காவது நாட்டில் பெருகியுள்ள ஊழல். ஐந்தாவது, அரச திணைக்களங்கள், அதிகாரசபைகளில் காணப்படும் அசிரத்தை.

ஆகவே ஜனாதிபதியின் அல்லது அரசாங்கத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவற்கு பல நெருக்கடிகளைக் கடக்க வேண்டும். முன்னுள்ள சவால்களை முறியடிக்க வேண்டும்.

இதற்குச் சரியான பொறிமுறை அவசியம்.

தற்போது பல நடவடிக்கைகளையும் படைத்துறையின் பங்கேற்புடன்தான் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இதைக்குறித்த விமர்சனங்கள் இருந்தாலும் இதை வரவேற்போரும் உண்டு. காரணம், விரைவான செயற்பாடு.

ஊழல் குறைவு. வினைத்திறன் அதிகம் போன்றவையாகும்.

ஆனாலும் சிவில் செயற்பாடுகளில் படைத்துறையினரின் நேரடித் தொடர்பாடல் நீண்டகால அடிப்படையில் பாதிப்பை உண்டாக்கும் என்ற ஜனநாயக நோக்கு நிலை உண்டு.

இந்த நிலை உருவாகுவதற்குக் காரணமாக இருப்பதும் சிவில் நிர்வாகத்தில் இயங்குவோரே. அவர்களுடைய அசிரத்தையும் வினைத்திறனின்மையும் ஊழலும் தவிர்க்க முடியாமல் படைத்தரப்புக்கான வாசல்களைத் திறந்து விடுகிறது. உதாரணமாக, சட்டவிரோத மணல் அகழ்வு, காடழிப்பு மற்றும் மரம் வெட்டுதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சுற்றுச் சூழல், கனிய வளங்கள், வன இலாகா, பொலிஸ் போன்ற தரப்புகள் உள்ளன. இதை விட மாவட்டச் செயலங்கள் வேறுள்ளன.

இருந்தும் இவை கட்டுப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் நடந்து கொண்டேயிருக்கிறது.

அப்படியென்றால் இவற்றில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்றுதானே அர்த்தம்.

இதைக்குறித்து மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயம் கவலையளிப்பது. அவர்கள், இந்தத் தரப்புகளின் மீது நம்பிக்கை இழந்த நிலையில்தான் உள்ளனர்.

இதற்குப் பதிலாகச் சில இடங்களில் படையினர் கண்காணிப்பைச் செய்கின்றனர்.

அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் அவ்வாறான இடங்களிலும் இவை கட்டுப்படுத்தப்படுகின்றன.

இதை மக்கள் அவதானிக்கின்றனர். அதிகம் ஏன், யாழ்ப்பாணத்தில் படையினர் குறைக்கப்பட வேண்டும். விலக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாகவே விடுக்கப்படுகிறது. ஒரு பொதுமகன் என்ற அடிப்படையில் இதை யாரும் வரவேற்பர். ஏனெனில் உலகெங்கும் உள்ள நடைமுறையின்படி போரில்லாத சூழலில் மக்கள் மத்தியில் இல்லாமல் படையினர் புறத்தில் ஒதுக்கம் கொண்டிருப்பதே வழமை. அமெரிக்கா தொடக்கம் சீனா வரையில் இதுதான் நிலை.

இதன்படி நாமும் யுத்தச் சூழலில் இருந்து மீண்டு விட்டோம் என்பதை உணர, அந்த உணர்வுப் பாதிப்பிலிருந்து மீள சுயாதீனமான சூழலில் வாழ்வதே சிறப்பு.

ஆனால், இதை மக்கள் முழுமையாக ஏற்கிறார்களா? என்பது கேள்விக்குரியதே.

ஏனென்றால் அங்கே (யாழ்ப்பாணத்தில்) வாள் வெட்டுத் தொடக்கம் இளையோர் மத்தியில் காணப்படும் வன்முறை நடவடிக்கைகள் வரையில் படையினரின் நிலைகொள்ளலை வரவேற்பதாகவே உள்ளது.

படையினர் முற்று முழுதாக நீக்கப்பட்டு விட்டால் எல்லாமே பாழாகி விடும், தமக்குப் பாதுகாப்பற்றுப் போய் விடும் என்று கருதுவோர் பலருள்ளனர்.

இது எவ்வளவு மோசமான ஒரு நிலை?

அப்படியென்றால் சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற தரப்புகளின் வினைத்திறன் என்ன? பொறுப்பென்ன? என்ற கேள்விகள் எழுகின்றன.

இதேவேளை இதை மறுவளமாகப் பார்ப்போரும் உண்டு. இந்த வன்முறைகள் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. வன்முறைக் குழுக்கள் உள்நோக்குடன் உருவாக்கப்படுகின்றன என்று இவர்கள் கூறுகிறார்கள்.

அப்படியென்றால், நாடு எங்கே போகிறது?

அப்படியென்றால் இதன் பின்னுள்ள சேதி என்ன?

இப்படிச் சிக்கலடைந்திருக்கும் நாட்டின் சூழலில் திட்டமிட்டவாறு மூன்று ஆண்டுகளுக்குள் இலக்கை எட்டுவதற்குக் கூட்டுப் பொறிமுறை அவசியம்.

இந்தக் கூட்டுப்பொறிமுறை என்பது அனைத்துத் தரப்பினரையும் முடிந்த வரையில் உள்ளீர்ப்பதாக இருக்க வேண்டும்.

இது பல எலிகள் கூடினால் வளை எடுக்காது என்ற முதுமொழியை பலருக்கும் நினைவு படுத்தலாம். ஆனால், அப்படியல்ல இது. ஒரு தேசிய இடரின் போது அல்லது நெருக்கடியின் போது அனைத்துத் தரப்பின் பங்களிப்பும் பங்கேற்பும் கிடைக்க வேண்டும். அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் சிறப்பானது.

இலங்கையில் அமைதியை, சமாதானத்தை, அதற்கான அரசியற் தீர்வை எட்டுவது தொடக்கம் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அந்நிய சக்திகளின் தலையீடு மற்றும் ஆக்கிரமிப்பு போன்ற வற்றையெல்லாம் தடுப்பதற்கும் இந்தக் கூட்டுப் பங்கேற்பும் பங்களிப்பும் அவசியம்.

ஏனென்றால் இவற்றினால் உண்டாகும் பாதிப்பு அனைத்துத் தரப்பையும் தாக்குகின்றது. அது எத்தகையதாக இருந்தாலும் கூட.

எனவேதான் அனைத்துத் தரப்பின் பங்கேற்பும் பங்களிப்பும் அவசியம் என வலியுறுத்தபடுகிறது.

இதை எட்டுவதற்கு அதற்கான உளநிலைகளை தயார்ப்படுத்த வேண்டும்.

ஏனெனில் இலங்கையின் அரசியற் பண்பாடு என்பது எதிர் எதிர்த்துருவ நிலைப்பட்டது.

ஒரு தரப்பு ஒரு தீர்மானத்தை எடுத்தால் அது எவ்வளவு சரியாக இருந்தாலும் மறு தரப்பு அதை மறுத்து நிராகரிப்பதே வழமையாகி விட்டது.

இவ்வாறான உளநிலையில் கூட்டுச் செயற்பாட்டுக்குரிய மனப்பாங்கை உடனடியாக வளர்க்க முடியாது. அதற்கொரு பண்பாட்டுத் தயாரிப்பு வேண்டும். அதை அரசாங்கம் முன் வந்து செய்ய வேண்டும். அதற்கே இதில் அதிக பொறுப்புண்டு. அப்படிச் செய்யும்போதுதான் எதிர்பார்க்கும் இலக்கை எட்ட முடியும். இதொன்றும் மந்திரமோ மாயமோ இல்லை.

நடைமுறை ரீதியாக எட்டப்பட வேண்டி ஒன்று. அவசியமான ஒன்று. நாடு என்பது அனைவருக்கும் பொதுவானாது.

அதன் வளங்கள் தொடக்கம், சட்டம், ஒழுங்கு, நீதி, வளர்ச்சி, வீழ்ச்சி என அனைத்திலும் அனைவருக்கும் பங்கும் பொறுப்பும் உண்டு. அனைவரும் சரியாகவும் சீராகவும் இயங்கும்போதே நெருக்கடியைக் கடக்க முடியும். வளர்ச்சியின் – முன்னேற்றத்தின் இலக்கை எட்ட முடியும்.

அப்படியென்றால் எந்தத் திட்டத்திலும் அனைவருக்கும் பங்கும் பங்கேற்பும் உண்டு அல்லவா!

நமது ஆட்சி முறை எப்படியானது?

மக்கள் பிரதிநிதித்து முறையை அடிப்படையாகக் கொண்டதல்லவா. அதில் பல தரப்புகளின் பங்கேற்புக்கும் பங்களிப்புக்கும் இடமுண்டே. பாராளுமன்றத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதில் பல வேறு தரப்புகளின் சங்கமிப்புள்ளதல்லவா.

இதன் திரண்ட வடிவம்தான் எதிர்காலத்துக்கான திட்டமிடல்களும் நடவடிக்கைகளுமாகும். ஆதுவும் இந்த இடர் நெருக்கடிக் காலத்தில் இதை இன்னும் கூர்மையாக நாம் ஒருங்கிணைக்க வேண்டும்.

இதை நாடும் மக்களும் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஒரு சிறந்த கப்டனாக நாட்டின் தலைவர் இதை வழிநடத்த வேண்டும்.

அதற்கான அறை கூவலைக் காலமும் தேசமும் விட்டுக்கொண்டிருக்கிறது. பார்ப்போம் நல்லன நடக்கட்டும் என்று எதிர்பார்ப்போம்.

கருணாகரன் ...✍

# ஜெனீவாவில் ரெடியாகும் வியூக அரசியல் விமோசனமளிக்குமா?



எல்லோருக்கும் ஆறுதல் தரும் அமர்வாகக் கருதப்படும் ஐ.நா மனித உரிமைகள் மாநாடு ஆரம்பமாகும் காலம் நெருங்குகிறது. நீதி தேடிய அல்லது தீர்வு கோரிய அமர்வாகவே இந்த மாநாடு நோக்கப்படுகிறது. இதுவரை எத்தனை நாடுகள் தீர்வைப் பெற்றன? என்பதெல்லாம் வெளிச்சத்தில் பார்க்குமளவுக்கு இருட்டில் தேங்கி கிடக்கும் விடயமிது.

ஆனாலும், இன்றளவும் இதை நம்பும் நிலைமைகளும் இருக்கிறதே! இது பாதிக்கப்பட்டோருக்கு ஏற்பட்டுள்ள பரிதாபம் தான். இலங்கை விவகாரமும் இங்கு அடிக்கடி பேசப்படும் விடயமாகிவிட்டது.

இதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அண்மைக்காலமாக ஐரோப்பாவில் அடைந்து வரும் செல்வாக்குகளும் ஒரு காரணம்தான்.

நாட்டிலிருந்து 1983ஆம் ஆண்டுமுதல் வெளியேறப் புறப்பட்ட இவர்களை இரண்டு வகைக்குள் அடக்க முடியும். அடைக்கலம் தேடி வெளியேறியோர், அறிவாளிகளாக வெளியேறியோர் என்பதே அந்த வகைகள். இவ்வாறு சென்ற இலங்கைத் தமிழர்கள், அந்நாடுகளில் அரசியலுட்பட பல துறைகளிலும் தவிர்க்க முடியாத சக்திகளாகிவிட்டனர்.

பலர் எம்.பிக்களாகவும், இன்னும் சிலர் நிபுணத்துவர்களாகவும் மிளிர்ந்து, தாயக உறவுகளுக்கு பலம் சேர்ப்பதால்தான் இந்த விவகாரம் சூடுபிடித்து அலைகிறது. இலங்கையில் நடந்த விவகாரங்களை தமிழர்கள் தூக்கிப்பிடிப்பதும், இதற்கு எதிராக சிங்களத் தரப்பு உசுப்பேற்றப்படுவதும், இலங்கையின் இரு தேசிய இனங்களுக்கு இடையில் இடைவெளியை நீட்டிக்கொண்டே செல்கிறது. நடந்தவைக்கு நியாயம் கேட்கிறது தமிழ் தரப்பு, பொருளாதார அபிவிருத்திகள் தமிழர்களின் தேவைகளுக்குப் பரிகாரம் என்கிறது அரசு.



உண்மையில் அரசை விடவும் தமிழர் தரப்புக்குத்தான் ஐரோப்பாவில் அதிக பலம். இருந்தும் அரசுகளின் ஆதரவு இவர்களுக்கு இல்லாதுள்ளதால் அடிக்கடி தளம்ப நேரிடுகிறது. இலங்கை அரசுக்கு உள்ள ராஜதந்திர உறவுகள் அளவுக்கு இவர்களிடம் இல்லை. தமிழர்களுக்கென உலகில் ஒரு ஆட்சி இல்லாதமையும் இதற்கான காரணங்களில் ஒன்றாகலாம். அவ்வாறில்லாதிருந்தும் இவர்களுக்குள்ள ஐரோப்பிய பலம் இருக்கிறதே! இது இலங்கையுட்பட அனைவரையும் ஆச்சரியப்படுத்துகிறது.

பொருளாதார அபிவிருத்திகளை விடவும் பொறுப்புக்கூறலே தமிழர்களுக்கு அவசியப்படுவதாக, ஐ.நா விஷேட அறிக்கையாளர் நாயகம் பப்லோ டி கிரீப் அறிக்கையிட்டிருப்பதில் இரு விடயங்களுள்ளன. ஒன்று தமிழர்களின் ஐரோப்பிய பலம், அடுத்தது அரசைக்குறி வைக்கும் நகர்வு. ஏற்கனவே சில படை அதிகாரிகளுக்கு விசா வழங்க மறுத்திருந்த சில வெளிநாடுகள், இப்போது நீதித்துறை அதிகாரிகளுக்கும் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒருபுறத்தில் இவைகள், சுதந்திர அரசின் ஆளுமைக்கான எச்சரிக்கைகளாகவே பார்க்கப்படுகின்றன. இந்த எச்சரிக்கைகள் மற்றும் குறிவைத்தல்கள்தான், தென்னிலங்கையை உசுப்பேற்றும் அரசியல் வியூகங்களாக கையாளப்படுகின்றன. எனவேதான், இந்த விடயங்கள் கனிவாகப் பேசப்பட வேண்டியவைகளாகிவிட்டன.

நாட்டின் இந்த, இன்றைய நிலைமைகளை தமிழர் தரப்பு உணர்வதவசியம். இத்தனை வருடங்களாக இழுத்தடிக்கப்படும் இந்நிலைமைகள், இன்னும் இழுபட்டால் பாதிக்கப்பட்ட தரப்பின் பார்வைகள் மறுதலையாகலாம்.

கிடைக்கப்போவது தூரமாகி வருகையில், கிடைக்கவுள்ள அபிவிருத்திகளைப் பெறும் மனநிலைகள் வளர்ந்தால், தமிழர் தரப்பு உரிமைகள் அர்த்தமிழக்க ஆரம்பிக்கலாம். இது அரசாங்கத்தின் நீண்டகால யோசனைகளுக்கு உயிரூட்டுவதாகவே அமையும். இவ்வாறு அமைவதுதான் இனித்தேவை என்ற மனநிலைகளை வளர்க்கும் அரசின் சிந்தனைகளில் எல்லோருக்கும் சமநீதி இருந்தால் அதுவே போதும் என்றாகிவிடும். சிறுபான்மை சமூகங்களில் நிலவும் கருத்தாடல்களில், இவை பற்றியும் இப்போது பேசும் நிலைமைகள் எழ ஆரம்பித்துள்ளதையும் நாம் கவனத்தில்கொள்வது சிறந்தது.

சுஐப் எம்.காசிம் ...✍

விமானசேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

**விமான விபத்துக்களில் பாதிக்கப்படும் குடும்பங்களை நினைவுகூரும் சர்வதேச நாளாக பெப்ரவரி 20 ஆம் திகதியை பிரகடனப்படுத்தல் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பான தகவலை சேகரித்தல்**

மாநாட்டின் தீர்மானங்களின் பிரகாரம், சிக்காகோ மாநாட்டின் சாராரொருவராக அமைந்திருப்பதனால் பத்தொன்பதாவது சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பில் (ICAO) அடக்கப்பட்டவாறு நியமமாக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு இலங்கையானது அமைந்தொழுகுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

தேவைப்படும் வேளையில் விமான விபத்தொன்றில் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களின் இடர்களை இலகுவாக்குவதற்காக ஏற்புடையதாக ICAO 9 ஆம் தீர்மானம் அமைந்துள்ளது. மேற்கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 20 ஆம் திகதியன்று '' விமான விபத்துக்களில் பாதிக்கப்படும் குடும்பங்களை நினைவுகூரும் சர்வதேச நாளாக'' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மேலேயுள்ள கூற்றின் வரிசைப்படி, கடந்த காலத்தில் விமான விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் தகவலை இந்த அதிகாரசபையானது சேகரிக்க விரும்புகின்றது.

இவ்வாறான தகவலை சமர்ப்பிப்பதற்காக இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபையின் **www.caa.lk** என்ற இணையதளத்தை பார்வையிடுமாறு பொது மக்கள் அழைக்கப்படுகின்றனர் என்பதுடன் எதிர்காலத்திலும் இந்த செயற்பாடானது தொடர்ந்தும் செயற்படும்.

**கப்டன் தேமியா அபேவிக்ரம**
**சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகம்**
**மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர்.**

20.02.2022.

# திருக்கேதீஸ்வர கட்டுப்பாடுகள் மனதுக்கு கவலை தரும் விடயம்

## அரச அதிகாரிகள் பக்கச்சார்பின்றி நடக்க வேண்டும் –அங்கஜன் எம்.பி

இவ்வாண்டு மகாசிவராத்திரி பூஜை நிகழ்வுகளுக்கு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை துரதிஷ்டவசமான கவலை தருகிற விடயமாகும்.

கொவிட்19 தாக்கத்திலிருந்து நாடு வழமைக்கு திரும்பிவரும் சூழலில், இந்துக்களின் சிறப்புவாய்ந்த மகா சிவராத்திரி விரத பூசைகளில் கலந்து கொள்ளும் பக்தர்களை இலக்கு வைத்து பல கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எனது கண்டனத்தை வெளிப்படுத்துகிறேன்.

மன்னார் மாவட்டத்தின் மற்றுமொரு திருவிழா நிகழ்வுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்திவிட்டு, திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சிவராத்திரி பூசைகளுக்கு மாத்திரம் கட்டுப்பாடுகளை விதிப்பது பக்கச்சார்பான செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 01ஆம் திகதிக்கு பின்னர், பொது இடங்களுக்கு பிரவேசிக்கும் மக்கள் 03 கொவிட்19 தடுப்பூசிகளை பெற்றமைக்கான தடுப்பூசி அட்டையை கொண்டிருக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.



இருப்பினும் மக்களை குழப்பமடையச் செய்யும் வகையிலும் அரசாங்கத்தின் அறிவிப்பையும் மீறும் வகையிலும் இத்தகைய கட்டுப்பாடுகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள சிவராத்திரி பூசை நிகழ்வுகளுக்காக விதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய இறுக்கமான கட்டுப்பாடுகள் இந்துக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும் கவலையை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கடந்த ஆண்டிலும் இத்தகைய பக்கச்சார்பான வகையில் திருக்கேதீஸ்வர பக்தர்களுக்கு மாத்திரம் அதிகப்படியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. எனவே இவை தொடர்ச்சியான திட்டமிட்ட செயல்களாகவே இந்துக்கள் கருதுகின்றார்கள்.

அரச அதிகாரிகள் பக்கச்சார்பில்லாமல், மத விழுமியங்களை சமமாக மதித்து செயற்பட வேண்டிய பொறுப்புக்குரியவர்கள். மாறாக இத்தகைய செயற்பாடுகள் தமிழர்களுக்குள் மதப்பிரிவினையை இன்னும் வலுப்படுத்தும் ஆபத்து காணப்படுகிறது.

எனவே, திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி பூசைகளுக்கு செல்லும் பக்தர்களின் நம்பிக்கை, மத விழுமியத்தை மதித்து மாவட்ட செயலக அதிகார மட்டம் செயற்படவேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் உலக ஹிந்தி தினம் (16) கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.
படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

**அலுவலக கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக் கோரல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வடமேல் மாகாண அலுவலகத்தை நடத்திச் செல்வதற்காக குருநாகல் நகர மத்தியில் இருந்து 3 கி. மீற்றருக்குள் அமைந்துள்ள 10,000 சதுர அடி அளவான தகைமைகளுடனான அலுவலகத்திற்கு பொருத்தமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படை/வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

- இக் கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
- இக் கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பாவித்து இலகுவாக அடையக் கூடிய வர்த்தக மயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்த பட்சம் கிட்டத்தட்ட 15 வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் தரை முழுமையாக டைல் செய்திருத்தல் வேண்டும்.
- மூன்று சுற்று மின் வழங்கலுடன் வேறாக மின் மீற்றர் இருத்தல் வேண்டும். மின்சாரம் தடைப்படும் வேளையில் பாவிப்பதற்கு 50KW மின் பிறப்பாக்கி இயந்திரம் இருப்பது மேலதிக தகைமையாகும்
- நேரடி நீர்க் குழாய் தொடர்புகளுடன் வேறாக நீர் மீற்றர் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டிடத்திற்கு மேலாக நீர் கிட்டத்தட்ட 2000L அளவு சேமித்து வைக்கக் கூடிய நீர்தாங்கி/தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் அடிப்படை மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிரிகள் மற்றும் ஏனைய துணைப் பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வருகை தரும் பயனாளிகளுக்கு தங்கி இருப்பதற்கு கட்டிடத்திற்கு முன்பாக கிட்டத்தட்ட 1200 சதுர அடி அளவான பிரிக்கக் கூடியதான இடம் இருத்தல் வேண்டும்.
- இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதாக அறிவித்த பின்னர் கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 வாரத்திற்குள் பெற்றுக் கொள்ளும் தகைமை இருத்தல் வேண்டும்.
- சேவையை பெற்றுக் கொள்வதற்கு வருகைதரும் பயனாளிகள் 10 பேர் மட்டில் ஒரே முறையில் அமர்ந்து தமது கடமை சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான இடவசதிகள் கட்டிடத்திற்குள் இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் மலக்கழிவுகளை அகற்றும் முறைமைகள் முறையாகத் தயார் செய்யப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்
- ஊழியர் குழாம் மற்றும் வெளியாட்களுக்கு பாவிப்பதற்காக கிட்டத்தட்ட 06 மலசல கூடங்கள் வேறு வேறாக இருத்தல் வேண்டும்.
- அறைகளை வேறாக்குதல் பணியகத்தின் தேவையின் பிரகாரம் இடம் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதன் காரணமாக குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.
- வளிச்சீராக்கி அமைப்பை பொருத்தி இருத்தல் மேலதிக தகைமையாகும்.
- குத்தகை வழங்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு உட்பட்டு கொடுப்பனவுள் இடம் பெறும் (குறைந்தபட்ச தொகை)

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்**

- விலைமனு பத்திரத்துடன் பணியகத்திற்கு வழங்கப்படும் கேள்வி ஆவணம்
- மாதாந்த குத்தகைத் தொகை ரூபா
- குத்தகையுடன் சம்பந்தப்பட்ட சொத்தின் நிலையான முகவரி
- கட்டிட உரிமையாளர் உரிமை பெற்றுக் கொண்ட உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
- சொத்துடன் சம்பந்தப்பட்ட வரைபடம்
- உறுதி செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம் (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவான அல்லது A3 அளவானதாக சிறியதாக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட போட்டோப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
- குத்தகை வழங்குநரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இல மற்றும் அதன் தெளிவான போட்டோப் பிரதி
- கட்டிட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்
- இணக்கச் சான்றிதழ்
- மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்ற சிட்டைகளின் பிரதிகள்
- குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் குறித்த சொத்திற்கான உரித்துரிமை அறிக்கையை சொத்துரிமையுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அதனை பிரதேசத்தின் சட்டத்தரணியொருவரை ஈடுபடுத்தி தயாரித்து இறுதியில் அவரது பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இல. 234இல், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தில் அமைந்துள்ள பிரதி பொது முகாமையாளர் (செயற்பாட்டு பெறுகை) பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022.03.14ம் திகதி பி.ப. 1.00 இற்கு அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது மேற்பக்க மூலையில் 'மாகாண பணியகம் (குருநாகல்) கட்டிடத்தை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தல் PR/02/04-1(43)-2 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் உரிமை பணியகத்தின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தேர்ந்தெடுத்தல்கள் இடம்பெறும். கேள்வி ஆவணங்கள் இல. 277, புத்தளம் வீதி, குருநாகலில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/பெக்ஸ்: 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

**அக்கறையில் மான்புற**
**இக்கறையில் கைகோர்ப்பு**

**பயிற்சியற்ற வேலை ஆட்கள் தேவை**
**ஆண்/ பெண்**
* உணவு, தங்குமிடம் இலவசம்
* ஊதியம் 35,000.00 மேல்
தொடர்புகளுக்கு
**071-4333203**

# மேலும் 125 பாடசாலைகள் தேசிய தரத்திற்கு உயர்வு

## கல்வியமைச்சு நேற்று தெரிவிப்பு

தேசிய பாடசாலை தரத்திற்கு மேலும் 125 பாடசாலைகள் தரமுயர்த்தப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகள் இல்லாத 125 பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றும் தேசிய பாடசாலைகளாக நியமிக்கப்படுமென தேசிய பாடசாலைகளின் பணிப்பாளரான கித்சிறி லியனகம தெரிவித்துள்ளார்.

பல கட்டங்களாக நடைபெறவுள்ள 1,000 தேசிய பாடசாலைகளின் திட்டங்களின் ஒரு பகுதியாக இலங்கையில் 831 பாடசாலைகள் தேசிய பாடசாலை மட்டத்துக்கு உயர்த்தப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 09 மாகாணங்களிலுள்ள 09 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, இலங்கையில் 382 தேசிய பாடசாலைகள் இயங்கி வருவதுடன், மாணவர்களுக்கு சிறந்த கல்வி அனுபவத்தை வழங்குவதே தேசிய பாடசாலைகள் திட்டத்தின் நோக்கமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஓருயிரைக் காப்பாற்றுவதற்காக சிறுநீரகமொன்றை அன்பளிப்புச் செய்யுங்கள்**

17 வயது இளைஞரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக உதவுகள். தற்பொழுது கொடிய சீறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு உயிராபத்தில் உள்ள இவருக்கு உதவுங்கள். உங்கள் கருணையினால் அவர் சாதாரண வாழ்க்கைக்கு மீள்வதற்காக உதவுங்கள். ஆர்வமுள்ள நன்கொடையாளர் B+ அல்லது O+ குருதியை உடையவராக இருத்தல் வேண்டும். நீங்கள் அவரின் உயிரைக் காப்பாற்றக் கூடியவராகவும், சாதாரணமான இளைஞன் ஒருவராக வாழ்வதற்காகவும் உங்களின் கருணையுள்ளம் உதவி செய்யும்.

**0742144184 அல்லது 0705699976**

**புவிச்சரிதவியல், அளவை, மற்றும் சுரங்கங்கள் பணியகம்**
**சூழல் அமைச்சு**

# பதவி வெற்றிடம்

**வலையமைப்பு / வன்பொருள் தொழில்நுட்ப உதவியாளர்**

புவிச் சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகம் 1992 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்கம் கொண்ட சுரங்கங்கள் மற்றும் கனிப் பொருட்கள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதொன்றாகும். புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தில் மேலே குறிப்பிட்டுள்ள பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வலையமைப்பு / வன்பொருள் தொழில்நுட்ப உதவியாளர் - எம்ஏ 2-2**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**
**வாழ்தொழில்**
1. தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் (ஐந்து) மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**
**வாழ்தொழில்**
வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக தேவைப்படும் மேலே கூறப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**
வயதானது 18 இற்கு குறைவாக இல்லாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

சம்பள அளவுத்திட்டமானது 02/**2016** என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைந்திருக்கும்.
எம்ஏ – 2-2 30,310-10x300-7x350-04x600-20x710-52,360 ரூபா.

**பதவிக்குரித்துடைய பொது நிபந்தனைகள்:**
➢ தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமது சம்பளத்தின் 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். பணியகத்தினால் 12% ஐ ஊ.சே. நி. இற்கும் மேலதிகமாக 3% ஐ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யப்படும்.
➢ அரசாங்க கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரர்கள் தமது உரித்தான நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
➢ வைத்தியசாலை மருத்துவ காப்புறுதி வசதிகள் முறையொன்றுக்கு உரித்துடையதாகும்.
➢ வெளிவாரி நோயாளர் மருத்துவ விலைப்பட்டியல் மீள் நிரப்பல் செய்யும் வசதிகளுக்கும் உரித்துடையதாகும்.
➢ விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தின் உண்மை நிலையை சரிபார்ப்பதற்காக விண்ணப்பத்தில் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
➢ கல்வி மற்றும் ஏனைய உரித்தான சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.
➢ விண்ணப்பத்தை அடக்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட்டு தமது விண்ணப்பங்களை கீழ்க் காணும் முகவரிக்கு 2022.03.11 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**பணிப்பாளர் நாயகம்,**
**புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல.: 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே**

# இலங்கை வர்த்தக நாமத்துடன் பத்திக், கைத்தறித் துணிகள் வெளிநாடுகளில் ஊக்குவிப்பு

வெளிநாடுகளுக்கிடையில் இலங்கை வர்த்தக நாமத்துடன் பத்திக் துணிகள் மற்றும் கைத்தறித் துணிகள், வடிவமைப்புக்களை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களிடம் கைவினைப் பொருட்களை வழங்கும் நிகழ்வு பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இந்நிகழ்வு நடைபெற்றது. இதன் போது இலங்கையிலுள்ள 63 வெளிநாட்டு தூதுவர்கள் மெய்நிகர் ஊடாக கலந்து கொண்டதோடு, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவினால், வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு நினைவுப் பொதியொன்றையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நாட்டில் ஏப். 30க்கு பின்னர் அமுலுக்கு வரவுள்ள புதிய நடைமுறை

நாட்டிலுள்ள கொவிட்19 தடுப்பூசி தொகை, எதிர்வரும் ஜூலை மாதத்துடன் காலாவதியாகுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். தற்போது, இலக்கு வைக்கப்பட்டுள்ள தரப்பினருக்கான தடுப்பூசி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 6.2 மில்லியன் பேருக்கு இதுவரையில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

பொது இடங்களுக்கு செல்பவர்கள், பூரண தடுப்பூசி ஏற்றத்திற்கு உள்ளாகியிருக்க வேண்டுமென்ற நடைமுறை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியின் பின்னர் அமுலுக்கு வரவுள்ளது. இதற்கமைவான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

பொதுமக்கள் பூரண தடுப்பூசி ஏற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்களா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ள செயலி ஒன்றையோ அல்லது அட்டை ஒன்றையோ அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.





மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்ற அரச நாடகவிழா 2021, இரண்டாம் நாள் நிகழ்வை பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் 'கண்டறியாத டொக்டர்' எனும் குறு நாடக தயாரிப்பாளர் என். ஹரனுக்கு ஞாபகார்த்த விருது வழங்கி வைப்பதையும் அருகில் நிலையத்தின் பணிப்பாளர் தரணி அனோஜா கமகே, பிரபல திரைப்பட நாடக நடிகர் ரொட்னி வர்ணகுலசூரிய ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதியின் மேலதிக செயலராக சட்டத்தரணி சமிந்த நியமனம்



பிரதமரின் மேலதிக செயலாளராக பணியாற்றிய சட்டத்தரணி சமிந்த குலரத்ன, ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் தரப்பு பிரதான அமைப்பாளரின் செயலாளராகவும் பணியாற்றியுள்ள இவர் தேசிய மற்றும் சர்வதேச நிர்வாக, இராஜதந்திர அனுபவங்கள் கொண்டவராவார்.

ருவன்வெல்ல இராஜசிங்க மத்திய மகா வித்தியாலய பழைய மாணவரான இவர் உச்சநீதிமன்ற சட்டத்தரணி மற்றும் சட்டப் பட்டதாரியாவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பர்கிங்ஹாம் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ மற்றும் நிர்வாகம் தொடர்பான பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் ஜனாதிபதி உதவிச் செயலாளர், ஜனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளர், எதிர்க்கட்சி மேலதிக செயலாளர், பிரித்தானிய இலங்கை தூதரக அமைச்சின் ஆலோசகர் போன்ற பல பதவிகளை வகித்துள்ள இவர், 20 வருடத்துக்கும் அதிக அனுபவம் உள்ளவராவார்.

அவர் லண்டனிலுள்ள தூதரக சேவை சங்க உப தலைவராக நியமிக்கப்பட்ட முதலாவது தென்ஆசிய நாட்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

# துரைவி 91 வது பிறந்த விழாவும், விருது வழங்கலும், நினைவுப் பேருரையும்



துரைவி 91 வது பிறந்த விழாவும், விருது வழங்கலும், நினைவுப் பேருரையும் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிறன்று மாலை 5.30 மணிக்கு ZOOM வழியாக நடைபெறவுள்ளது. படைப்பாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வரவேற்புரையையும் நிகழ்ச்சித் தொகுப்பையும் மேமன்கவி நிகழ்த்த, நன்றியுரையை ராஜ்பிரசாத் துரை விஸ்வநாதன் நிகழ்த்துவார். 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த மொழிபெயர்ப்பு நூலாக துரைவி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள எம். ரிஷான் ஷெரிப்பின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த தக்ஷிலா ஸ்வர்ணமாலியின் 'அந்திம காலத்தின் இறுதி நேசம்' எனும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்கும்,. 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆய்வு நூலாக துரைவி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அக்கரைப்பற்றை சேர்ந்த எம்.அப்துல் றஸாக் (தென்கிழக்கு பல்கலைக்கழகம்) எழுதிய 'கிழக்கிலங்கை தமிழ் இலக்கிய திறனாய்வு வளர்ச்சி' எனும் நூலுக்கும் விருதுகள் வழங்கப்படும். துரைவி 91 வது பிறந்த தின நினைவுப் பேருரையை 'மலையக தமிழ் மக்களின் வாழ்வும்; இலக்கியமும்துரைவியை முன்வைத்து' எனும் தலைப்பில் ஆய்வாளரும், விமர்சகருமான எஸ். வன்னியகுலம் நிகழ்த்துவார்.




திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளின் மாநில அமைச்சு

## பாடத் தொகுதி எழுத்தாளர்கள் (Lesson Writers) மற்றும் பாடத் தொகுதி மொழிப்பெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

[பாடத் தொகுதிக்கு கொடுப்பனவு அடிப்படையில்]



தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கைத்தொழில் வினைஞர் மற்றும் NVQ பாடநெறியின் கீழ் கல்வி பெறும் பயிலுனர்களுக்கு தேவையான

- **சிங்கள மொழியிலான பாட தொகுதிகளை எழுதுதல்**
- **சிங்கள மொழியிலான பாடத்தொகுதிகளை மொழிபெயர்ப்பு செய்தல் [சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு]**

பின்வரும் விடயத்துறைகளில் பட்டதாரிகள் அல்லது டிப்ளோமாதாரிகள் மற்றும் சிங்கள தமிழ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எங்களுடன் இணைவதனூடாக நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்கல்வியை வழங்கும் மேன்மையான நோக்கிற்கு பங்காளராவதுடன் உங்களது தொழிலுக்கு மேலதிகமாக உயர் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். தேவையான தகைமைகளுடனான விண்ணப்பத்தை பணிப்பாளர் (தரத்தன்மை) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல: **971,** ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய என்னும் முகவரிக்கு 2022 மார்ச் 07ஆம் திகதிக்கு முன் அனுப்பவும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பாடத்திட்ட எழுத்தாளர்களின் தேர்வு என குறிப்பிட வேண்டும்.

### கைத்தொழில் வினைஞர் தொழிற்துறைகள் Craft Trades

- மோட்டார் வாகன பெயின்டர் - Automobile Painter
- கள உதவியாளர் (விவசாயம்) - Field Assistant (Agriculture)
- அறை உதவியாளர் - Room Attendant
- அழகுக் கலை நிபுணர் - Beautician
- குளிர்சாதன மற்றும் குளிரூட்டி பொறிமுறையாளர் - Refrigeration & Air conditioning Mechanic
- ஹோட்டல் பணியாளர் - Waiter/Steward
- சமையலாளர் - Cook
- மரவேலை கைவினைஞர் (கட்டிடம்) - wood Craftsman (Building)
- வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (பல்பொருள் அங்காடி) - Super Market Customer Services Assistant
- முகாமைத்துவ சேவைகள் அதிகாரி - Management Services Officer
- மருந்தக நிபுணர் - Pharmacy Technician
- சூரிய மின் சக்தி ஃபோட்டோவோல்டாயிக் அமைப்பு நிபுணர் -Solar Photovoltaic System Technician
- தையல் இயக்குனர் - Tailor
- மோட்டார் வாகன மின்னியல் நிபுணர் - Automobile Electrician

NAITA
தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

www.naita.gov.lk

தவிசாளர்,
தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
இல.971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, ராஜகிரிய.
0112888782-7



அடையாள இலக்கம்

## தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை
## வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான விண்ணப்பப்படிவம்

01. காணி உரிமையாளரின் பெயர்:....................................
02. முகவரி:....................................
03. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
04. தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐
05. காணி அமைவிடம் பற்றிய விபரங்கள்,
    5.1 மாவட்டம்: ....................................
5.2 பிரதேச செயலகப் பிரிவு: ....................................
    5.3 பிராந்திய அலுவலகம்: ....................................
    5.4 கிராம சேவகர் பிரிவு: ....................................
    5.5 தேயிலை பரிசோதகர் / விரிவாக்கல் அதிகாரி பிரிவு: ....................................
06. காணியின் பெயர்: ....................................
07. நீங்கள் அதிகார சபையினால் வழங்கப்படும் நிவாரணத்தைப் பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும்.
    புதிய தேயிலை பயிர்ச்செய்கை   தேயிலை மீள்பயிர்ச்செய்கை   பாழடைந்த பயிர்ச்செய்கை   சமுர்த்தி
08. இயைபுடைய நிவாரணம் தொடர்பான விபரங்கள்:
    8.1 தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கம்:....................................
    8.2 பதிவிலக்கம்: ....................................
    8.3 அனுமதிப்பத்திர இலக்கம்: ....................................
09. தேயிலை பயிர் செய்துள்ள காணியின் அளவு ஹெக்டயார் ....................................
    9.1 ஏக்கர் ................ ரூட்................ பேர்ச் ................
10. தேயிலை பயிர் செய்யப்பட்ட வருடம்: ....................................

பின்வரும் வகையில் உங்களின் விருப்பத்தின் அடிப்படையில் 40000.00 ரூபாவுக்கு மேற்படாத வகையில் 20000.00 ரூபா மாதாந்த வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உங்களது விலங்கு / பயிர்ச்செய்கையைத் தெரிவு செய்துகொள்ளல் வேண்டும்.

திகதி:................................   ............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

பரிந்துரைக்கின்றேன்,

....................................................................................
தேயிலை பரிசோதகர் / விரிவாக்கல் அதிகாரியின் கையொப்பம்

| | வகை | எண்ணிக்கை | முதலீடு (ரூபா) | மாதாந்த வருமானம் (ரூபா) | வருடாந்த வருமானம் (ரூபா) | நீங்கள் தெரிவு செய்த வகையின் எதிரில் ✓ அடையாளமிடவும். |
|---|---|---|---|---|---|---|
| 01 | கோழிக் குஞ்சுகள் | 25 | 32000.00 | 12000.00 | 144000.00 | |
| 02 | காளான் | 01 | 35000.00 | 18000.00 | 216000.00 | |
| 03 | பாக்கு | 20 | 2000.00 | 4000.00 | 48000.00 | |
| 04 | வெற்றிலை | 40 | 4000.00 | 3200.00 | 38400.00 | |
| 05 | தேனீ | 01 | 15000.00 | 2500.00 | 30000.00 | |
| 06 | மிளகு | 40 | 4000.00 | 6000.00 | 72000.00 | |
| 07 | வெனிலா | 40 | 4000.00 | 16000.00 | 192000.00 | |
| 08 | நில வேம்பு | 40 | 6900.00 | 2000.00 | 6000.00 | |
| 09 | கற்றாளை | 40 | 4000.00 | 2000.00 | 24000.00 | |
| 10 | கோப்பி | 20 | 4000.00 | 4000.00 | 48000.00 | |
| 11 | ஏனையவை (நீங்கள் தெரிவு செய்யும் வகையின் எதிரில் குறிப்பிடவும்) | | | | | |

## பெருந்தோட்ட அமைச்சு

நிறுவனத் தோட்டங்களின் மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் சார்ந்த பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

## தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை

### வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களை வலுப்படுத்துவதற்காக விண்ணப்பங்கள் கோரல்

**தேயிலை சிறு பற்றுநிலங்களில் மேலதிக வருமானத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக**

- கோழி நிர்வாகம்
- தேனீ நிர்வாகம்
- காளான் செய்கை
- விவசாய ஏற்றுமதி பயிர்கள் (மிளகு, பாக்கு, வெற்றிலை, வெனிலா, கோப்பி போன்றன)
- மூலிகைக் கன்று பயிர்ச் செய்கை (நில வேம்பு, கற்றாளை, வெண் சந்தனம்)
- ஏனைய பயிர்ச் செய்கை செயற்றிடம்

மேலதிக அறிவுரைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை உங்களது தேயிலைக் காணி அமைந்துள்ள பிரதேசத்தின் தேயிலை சிறு பற்றுநில அதிகார சபையின் பிராந்திய அலுவலகம் / வலய அபிவிருத்தி அலுவலகம் / தேயிலை பரிசோதகர் / விரிவாக்கல் அதிகாரி / தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக அல்லது தலைமை அலுவலகத்தின் உடனடி தொடர்பிலகத்துடன் (1974) தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் 2022 மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

*''சுபீட்சத்தின் நோக்கம் மூலம் உங்கள் கைகள் வளமாவதுடன் உங்களுக்கும் வெற்றி நாட்டுக்கும் வெற்றி''*



**தலைவர்,**
**தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

- காலி பிராந்திய அலுவலகம்: 091-7201126
- களுத்துறை பிராந்திய அலுவலகம்: 034-7200183
- இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்: 045-7201243
- நுவரெலியா பிராந்திய அலுவலகம்: 052-4930247
- மாத்தறை பிராந்திய அலுவலகம்: 041-7200395
- கேகாலை பிராந்திய அலுவலகம்: 035-7201254
- ஊவா பிராந்திய அலுவலகம்: 057-7200241
- கண்டி பிராந்திய அலுவலகம்: 081-7200827

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பல ஜனநாயக நாடுகள் பொருளாதார ரீதியாக பின்தங்கியிருப்பது ஏன்?

**ஒரு ஜனநாயக நாடு சிறப்பாகச் செயற்பட வேண்டுமென்றால் அந்நாட்டின் தாபன ரீதியான கட்டமைப்புகள் சுதந்திரமாகவும் சிறப்பாகவும் செயற்பட வேண்டும். நாட்டின் இயல்பான இயக்கத்திற்கு அவசியமான நிறுவனங்கள் தடைகளின்றிச் செயற்பட வேண்டும்.**

நாட்டின் பொருளாதார முகவர்களாகிய வீட்டுத்துறையினர் நிறுவனத்துறையினர் மற்றும் நாட்டை நிர்வகிக்கும் அரசாங்கத்துறையினர் ஆகிய மூன்றும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டு நாளாந்த பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

பொதுவாக நோக்குமிடத்து நாடொன்றில் அரசியல்வாதிகளையும் நிருவாக அதிகாரிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் தொழிலாளர்களை உள்ளடக்கிய பொதுமக்கள் வர்த்தக சம்மேளனங்கள் தொழிற் சங்கங்கள் பொதுக் கருத்துருவாக்கும் சிந்தனை நிறுவனங்கள் (think tanks) அரசு சாரா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் ஒரு நாட்டில் சர்வதேச பிரசன்னத்தை வெளிப்படுத்தும் தூதரகங்கள் உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக நிறுவனங்களின் கிளைக் காரியாலயங்கள் ஆகிய அங்கங்களைக்காண முடியும்.


அது தவிர சுதந்திரமாகச் செயற்படும் நீதித்துறை மற்றும் ஜனநாயகத்தின் காவல் நாய் (watch dog) என்று போற்றப்படும் ஊடகத்தறை என்பனவும் முக்கிய பங்காளர்களாக இருப்பதையும் நாம் காணமுடியும். முறையான கால இடைவெளிகளில் இடம்பெறும் ஜனநாயக ரீதியிலான தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் அடுத்துவருகின்ற தேர்தல் வட்டம் வரை நாட்டை ஆளும் பொறுப்பில் இருத்தப்படுகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசத்தை மாத்திரமின்றி முழு நாட்டின் பாதுகாப்பு பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கருதி தமது பதவிகளையும் அதிகாரங்களையும் பயன்படுத்திச் சேவையாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

ஜனநாயக நாடுகள் பலவற்றில் மக்கள் பிரதிநிதிகளாக தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கல்வித்தகுதி மற்றும் ஏனைய சிவில் தகைமைகள் தொடர்பில் கவனமாக இருக்கிறார்கள். ஆனால் பிரபல்ய ஜனநாயகத்தை (popular democracy) விரும்பும் கீழைத்தேய நாடுகள் பலவற்றில் அரசியல் வாதியாவதற்கானகல்வித்தகுதிகளோ சிவில்தகைமைகளோ பற்றி பெரிதாகக் கண்டு கொள்ளப்படுவதில்லை.

பலவேளைகளில் மக்கள் மத்தியில் வில்லனாகவே கருதப்படும் ஒருவர் கூட எதிர்மறைப் பிரபலத்தன்மையின் (negative popularity) காரணமாக இலகுவில் அரசியலில் புகுந்து விடுவதை நாம் அவதானிக்கலாம். அடிப்படைக் கல்வித்தகைமை என்பதை எதிர்பாராத ஒரு தொழிலாக இது பார்க்கப்படுகிறது.

சமூகத்தின் அடிமட்டத்தொழிலில் ஒருவரை வேலைக்கு அமர்த்தும் போது அதற்கு அடைப்படைக் கல்வித்தகைமையை எதிர்பார்க்கும் ஜனநாயகக் கட்டுமானங்கள் ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்கு எதுவித கல்வித்தகைமைகளையும் கருத்திற்கொள்ளாமல் விடுவது வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். மறுபுறம் பணபலம் இல்லாத ஒரு நபரால் இலகுவில் அரசியலில் புகுந்துவிட முடியாது என்பது பிரபல ஜனநாயகத்தின் மற்றொரு அவலட்சணமான முகமாகும். திறமையான மற்றும் துடிப்பான அரசியல்வாதிகள் பலர் பணபலமின்மை காரணமாக ஓரங்கட்டப்பட்டு விடுவதையும் நாம் காணலாம்.



> **சமூகத்தின் அடிமட்டத்தொழிலில் ஒருவரை வேலைக்கு அமர்த்தும் போது அதற்கு அடைப்படைக் கல்வித்தகைமையை எதிர்பார்க்கும் ஜனநாயகக் கட்டுமானங்கள் ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்கு எதுவித கல்வித்தகைமைகளையும் கருத்திற்கொள்ளாமல் விடுவது வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். மறுபுறம் பணபலம் இல்லாத ஒரு நபரால் இலகுவில் அரசியலில் புகுந்துவிட முடியாது என்பது பிரபல ஜனநாயகத்தின் மற்றொரு அவலட்சணமாக முகமாகும்**



எனவே பணபலம் படைத்த சண்டித்தனம் காட்டக்கூடிய நாகரிகமற்று மற்றவரை மோசமாக விமர்சிக்க வல்ல பலர் பதவிக்கு வந்து விடுவதை கீழைத்தேய ஜனநாய நாடுகளிலே நாம் பார்க்க முடியும். தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படும் போது குதிரைப்பந்தயத்தில் ஓடக்கூடிய குதிரை மீது பந்தயப்பணம் கட்டப்படுவதைப் போல கட்சிகள் மேலே சொல்லப்பட்ட தகுதிகளைக் கொண்டோருக்கே போட்டியிடச் சந்தர்ப்பம் கொடுக்கின்றன. அங்கு கல்வித்தகுதியோ அரசியல் ஒழுக்க விழுமியங்களோ கருத்திற்கொள்ளப்படுவதில்லை. எனவே கட்சிகள் தெரிவுசெய்து அறிவிக்கும் வேட்பாளர்கள் மத்தியில் இருந்தே பொதுமக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டியதாகி விடுகிறது.

இவ்வாறான ஒரு புறச்சூழலில் ஆட்சியமைக்கும் ஒரு அரசாங்கம் முழுமையாக மக்களினதும் நாட்டினது எதிர்பார்க்கைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. தாம் தேர்தலில் செலவழித்த பணத்தை எவ்வாறு மீளப்பெறுவது அடுத்துவரும் தேர்தலுக்கு முன் எவ்வாறு சொத்துக் குவிப்பது என்பதே அவர்களின் தொழிற்பாட்டுக் குறிக்கோளாக (objective function) இருக்கும். அவர்களுக்கு வாக்களித்த வாக்காளர்களின் குறிக்கோள் தமது தனிப்பட்ட நன்மைகளை அடைவதற்கு எவ்வாறு அரசியல்வாதிகளின் தயவை நாடலாம் என்பதாக இருக்கும் அதேவேளை அரசுதுறை அதிகாரிகளின் செயற்பாட்டுக்குறிக்கோள் ஓய்வு பெறுமுன்பு எவ்வாறு உயர்பதவியில் அமரலாம் என்பதாக இருக்கும்.

எனவே தான் பிரபல ஜனநாயகம் நிலவும் நாடுகளில் பல இன்னமும் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாகவே உள்ளன. அது மட்டுமன்றி இத்தகைய நாடுகளில் உருவாக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகள் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் நாட்டின் தேவை கருதி உருவாக்கப்பட்டவையாக இல்லாமல் அந்த நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தின் கனவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டவையாக இருக்கும். இவற்றின் இலக்குகளை அடையமுடியுமா இல்லையா என்பது பற்றியெல்லாம் எவரும் கேள்வி எழுப்பமாட்டார்கள். இன்னாரது விருப்பம் இது அதற்கான திட்டவரைவை குறிப்பிட்ட பேராசிரியர்களையும் நிபுணர்களையும் கொண்ட குழுவின் மூலம் பூர்த்தி செய்யுங்கள் என்றே கட்டளை பறக்கும். அவர்களும் எப்படியாவது முயற்சித்து செய்து முடிப்பார்கள்.

(16ஆம் பக்கம் பார்க்க)



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# உக்ரைனை மையப்படுத்தி ஐரோப்பாவை இலக்கு வைக்கும் புட்டின்

## இரு வல்லரசுகளின் இழுபறிக்குள் சிக்கிக் கிடக்கும் உக்ரைன்

**ரஷ்ய உக்ரையின் போர் உத்திகள் தொடர்கின்ற அதேசமயம் அமெரிக்கா குறிப்பிட்டது போல் 16ஆம் திகதியை கடந்தும் அமைதி நீடித்தாலும் அங்கே போர்ப்பதற்றம் ஓயவில்லை. உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகளை விலக்குவதென்பது பொய்யான செய்தி எனவும் மேலதிகமாக ஏழாயிரம் துருப்புக்களை ரஷ்யா கிரிமியாவுக்குள் குவித்துள்ளது எனவும் அமெரிக்கா கூறிவருகிறது. அதற்கான ஆதாரமாக தனது புலனாய்வு தகவல்களையும் செய்மதிப் படங்களையும் வெளிப்படுத்தி வருகிறது.**

அதே நேரம் இராஜதந்திர நகர்வுகள் முடிவுக்கு வரவில்லை என்பதையும் வெள்ளைமாளிகை தெரிவித்து வருகிறது. அமெரிக்காவுக்கு புறம்பாக பிரிட்டன் ஜப்பான் போன்ற நாடுகளும் ஏற்கனவே இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிகிறது. எதுவாயினும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது நகர்வுகளை அதிக பதட்டமின்றி மேற்கொண்டுவருவதுடன் உக்ரையின் மீது போர் தொடுப்பதை இலக்காக கொள்ளவில்லை என்பதை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

முதலில் அமெரிக்காவின் அண்மைய நகர்வுகளை அவதானிப்பது அவசியமானது. கொவிட் தொற்றுக்கு பின்னர் உருவாகியிருக்கும் புவிசார் பொருளாதார போக்கில் ரஷ்ய ஐரோப்பிய உறவினை அமெரிக்கா அச்சுறுத்தலாக கருதுகிறது. எரிவாயு குழாய்த் திட்டத்தால் அமரிக்கா அதிகம் குழப்பமடைந்துள்ளது என்பதைக அதன் வெளிப்பாடுகளிலிருந்து காணக்கூடியதாக உள்ளது. ஜேர்மனிக்கும் ரஷ்யாவுக்குமான எரிவாயுக் குழாய் திட்டமானது முழு ஐரோப்பாவுக்குள்ளும் ரஷ்யாவின் செல்வாக்கு வளர்ச்சியடைய உதவும் எனவும் அதனால் ரஷ்யப் பொருளாதாரம் பலமடைவதுடன் புடினைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் எனவும் அமெரிக்கா கருதுகிறது. அதனால் ரஷ்ய உக்ரையின் போரை வைத்துக் கொண்டு அத்தகைய எரிவாயுக் குழாய்த்திட்டத்தை தகர்ப்பதுடன் ஐரோப்பாவுக்கான எரிவாயு மற்றும் பெற்றோலியத்தை அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்வதன் முலம் அமெரிக்கப் பொருளாதாரத்தை பாதுகாக்க முடியும் எனவும் பைடன் நிர்வாகம் கருதுகிறது.

குறிப்பாக ஐரோப்பா 5 சதவீதத்திற்கு குறைவான எரிவாயுவை அமெரிக்காவிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. இதனை கடந்த ஒரு தசாப்பத காலத்தில் 23 சதவீதமாக அமெரிக்கா ஐரோப்பிய யூனியனுக்கு எரிவாயுவை ஏற்றுமதி செய்துள்ளது. ரஷ்யா 41 சதவீதமான எரிவாயுவை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்கிறது. அது மட்டுமன்றி அத்தகைய எரிவாயு ஏற்றுமதியால் ஐரோப்பாவின் மீதான ஆதிக்கத்தை தக்கவைக்க முடியுமெனவும் அமெரிக்கா கருதுகிறது. ஐரோப்பா அமெரிக்கா பக்கமா ரஷ்யாவின் பக்கமா என்பதே உலக ஆதிக்கத்திற்கான போட்டியாக மாறியுள்ளது.

அமெரிக்கா இரண்டாம் உலகப் போரிலிருந்து தற்போது வரை ஐரோப்பாவுடன் கூட்டமைத்துக் கொண்டு உலகத்தை ஆதிக்கம் செய்வதுடன் ஐரோப்பாவையும் ஆதிக்கம் செய்துவருகிறது. அமெரிக்கா ஐரோப்பாவை இழப்பதென்பது உலக ஆதிக்கத்தை இழப்பதாகவே அமைய வாய்ப்புள்ளது. இதுவே ரஷ்ய உக்ரைன் விவகாரம் வலுவடையக் காரணமாக உள்ளது. அத்தகைய போர் ஏற்படுமாக இருந்தால் அது ரஷ்யவை தோற்கடிப்பதற்கான போராகவே அமையும். அதாவது உக்ரைனில்ரஷ்யா வெற்றி பெற்றாலும் ஐரோப்பாவுடனான உறவில் தோல்வியை சந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகவே அமையும். அதனை நோக்கியே அமெரிக்கா ரஷ்யாவை நகர்த்த முனைகிறது. உக்ரையின் மீது ரஷ்யா போரை ஆரம்பிக்கப் போவதாக அமெரிக்காவே முதலில் தகவலை வெளிப்படுத்தியது. அது மட்டுமன்றி போருக்கான திகதியையும் அமெரிக்காவே அறிவித்தது. ஏறக்குறைய அமெரிக்கா உலக நாடுகள் மத்தியில் ரஷ்யா தொடர்பில் அதிக முன்னெச்சரிக்கைகளை வெளிப்படுத்துகிறது. அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்த பிரிட்டனும் அத்தகைய தூண்டல்களை வெளிப்படுத்தியதை காணமுடிந்தது. பிரான்ஸ்ன் ஜனாதிபதி ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்தே நிலமை சுமூகமடைய ஆரம்பித்தது. ஆனாலும் ரஷ்யா ஒரு போரை தொடக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா கவனம் கொண்டுள்ளது என்பதை இதே பகுதியில் குறிப்பிட்டபட்டிருந்தமை கவனிக்கத் தக்கது.



இதே நேரம் ரஷ்ய ஜனாதிபதி புடின் பற்றிய அவதானிப்பு ஊடகங்கள் மத்தியில் வேறுவிதமானதாக உள்ளது. ரஷ்யப் பத்திரிகையாளர் அன்ட்ரூ கொலெஸ்னிகோவ் மற்றும் கொம்மர்சண்டில் ஜேர்மன் நாட்டுத் தலைவரும் கூட்டாக செய்தியாளர் கூட்டத்தில் புட்டினின் நடத்தையை மதிப்பீடு செய்யும் போது ரஷ்ய தலைவர் போர் அச்சுறுத்தல் பற்றி ஒரு வார்த்தையையேனும் இதுவரை வெளிப்படுத்தவில்லை எனவும் உக்ரைன் வழியாக ஐரோப்பிய எரிவாயு விநியோகம் பற்றி அவ்வளவு உள் அமைதியுடன் பேசுகையில், ஒருவர் ஒரு எளிதான முடிவை அடைய முடியும் என்பதைக் காட்டும் விதத்தில் ஊடகங்களுடன் உரையாடுகின்றார். அது மட்டுமன்றி புடின் உண்மையில் எந்த படையெடுப்பையும் பற்றி தீவிரமாக சிந்திக்கவில்லை. எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே ரஷ்யா நோக்கங்கள் இன்னும் தெளிவாக வெளிப்படுத்தவில்லை என்று ரஷ்யா மற்றும் மத்திய ஆசியாவிற்கான திட்ட இயக்குனர் ஓல்கா ஒலிகர் தெரிவித்தார். ரஷ்ய ஜனாதிபதி புடினது அணுகுமுறைகள் அதிக இராஜதந்திரம்' மிக்கதாகவே அமைந்துள்ளன. அவற்றை நோக்குவது அவசியமானது.

முதலாவது, புட்டின் ஐரோப்பாவுடன் மோதுவதை தவிர்க்கவே விரும்புகின்றதை அவதானிக்க முடிகிறது. ஐரோப்பா ரஷ்யாவின் பின்தளமாகவே உள்ளது. அது தனித்து அரசியலாக மட்டுன்றி பொருளாதாரமாகவும் வர்த்தக மையமாகவும் உள்ளது. அத்தகைய ஐரோப்பாவை இழக்காத விதத்தில் செயல்படும் உத்தியைக் காணமுடிகிறது. ஆனால் அதற்காக தனது கோரிக்கையான நேட்டோவில் உக்ரைன் இணைவதை தடுப்பதற்கான கோரிக்கையை ரஷ்யா கைவிடாதுள்ளமை கவனிக்கத் தக்கது. அதனையே பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியுடன் உரையாடும் போது பகிர்ந்துள்ளார். அவ்வாறு நோக்கும் போது ரஷ்யா ஐரோப்பாவை அணைத்துக் கொள்வதன் மூலம் அமெரிக்காவை ஐரோப்பாவிலிருந்து விலக்கி வைக்க முயற்சிக்கிறது. அதற்காகவே மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் உரையாட இணக்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது, அமெரிக்காவின் அனைத்து செய்திகளையும் பலவீனப்படுத்தும் நகர்வை கச்சிதமாக ரஷ்யா மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக உக்ரைன் எல்லையில் ரஷ்யாவின் படை குவிப்பினை பெரும் பிரச்சாரமாக அமெரிக்கா மேற்கொண்டதுடன் போரை ரஷ்யா தொடக்கப் போவதாக அமெரிக்க வெளியுறவு செயலாளர் பிளிங்டன் தெரிவித்திருந்த போதும் ரஷ்யா இரண்டையும் நிராகரித்ததுடன் படைகளை பின்வாங்குவதாக பாதுகாப்பு சபையில் தெரிவித்துள்ளது. தனது நாட்டின் எல்லைக்குள் படையைக் குவித்த ரஷ்யா தற்போது படையை விலக்கிக் கொள்வதென்பது அமெரிக்காவின் அனைத்துக் கணிப்பினையும் தகர்ப்பதாகவே அமைந்துள்ளது. ஆனால் புடின் தனது இலக்கு நிறைவடையாது படைகளை முழுமையாக விலக்கிக் கொள்ள மாட்டார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆனால் அமெரிக்கா அத்தகைய பிரச்சாரத்தின் மூலம் போரைத் தவிர்த்திருப்பதாகவும் ரஷ்யா படைகளை விலக்க முடியாத நிலையையும் போரைத் தொடக்க முடியாத நிலையையும் அமெரிக்க ஏற்படுத்தியிருப்பதாகவும் விளங்கிக் கொள்ள முடியும்.

மூன்றாவது, நேட்டோ படைகள் பல்கேரியா மற்றும் ஹங்கேரியை நோக்கி நகர்ந்திருப்பதுடன் உக்ரைனில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் மேலதிக படைகள் அண்மைய வாரங்களில் உக்ரைனுக்குள் நுழைந்துள்ளன. இதனை எதிர்கொள்வதற்கான உத்திகளை வகுத்துள்ள ரஷ்யா, அமெரிக்காவுடனான முரண்பாட்டை உக்ரைன் விவகாரத்திற்கு புறம்பானதாக கையாள திட்டமிடுகிறது. தொடர்ச்சியாக அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தாலும் பேச்சுக்களை கைவிடாது மேற்கொள்வதில் புடின் கவனம் செலுத்துகிறார். ரஷ்யா போரை கைவிடத்திட்டமிட்டாலும் அமெரிக்காவும் நேட்டோவும் போரை நிகழ்த்தும் விதத்திலேயே காய்களை நகர்த்துகின்றன.

எனவே உக்ரைன் ரஷ்ய விவகாரம் அமெரிக்கரஷ்யவிடயமாக மாறியதுடன் உலப் போர் பற்றிய பிரமையை அமெரிக்க ஜனாதிபதி பைடன் வெளிப்படுத்தி வருகிறார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# பேட்டைச் சண்டியனாக உருவெடுத்திருக்கும் புட்டின்



# யுத்தம் நிகழாதா என எதிர்பார்த்திருக்கும் சீனா!

அருள் சத்தியநாதன்

அடுத்த உலகயுத்தம் மத்திய கிழக்கில் இருந்தே ஆரம்பிக்கும். முதலிரண்டு போர்களைக் போலல்லாது மூன்றாம் உலகப்போர் மாதக் கணக்கிலோ வருடக் கணக்கிலோ நீடிக்காது. உக்கிரமான ஒரு முழு அளவிலான போர் இறுதியில் எய்யப்பட்டவனை மாத்திரமின்றி எய்தவனையும் அழித்தே விடும். எனவே போர் ஒன்று மூளாமல் பார்த்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்பதை எல்லா பலம்பொருந்திய நாடுகளும் அறியும் என்று நாம் இவ்வளவு காலமாக நம்பி வந்திருந்தாலும் உலகின் யுத்த முனைப்புகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. மத்திய கிழக்கில்தான் யுத்தம் ஆரம்பமாகும் என்ற பிரபலமான நம்பிக்கை தற்சமயம் மங்கிப் போயுள்ளது.

சில வருடங்களுக்கு முன் பெரும் யுத்தமொன்று ஆப்கானிஸ்தானில் மையம் கொண்டபோது அதுவிரிவடையும் என எதிர்பார்க்கப்பட்டது. குவைத் யுத்தம், ஈராக் யுத்தம் பின்னர் அரபு வசந்தத்தின் தொடர்ச்சியாக சிரியாவில் நடைபெற் மனித அவலங்களுடன் கூடிய யுத்தம் என்பனவும் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தங்களாகவே காணப்பட்டன.

யுத்தங்கள் விரிவடைந்து செல்லாமைக்கான பிரதான காரணம் மக்கள் யுத்தங்களை விரும்பவில்லை என்பதேயாகும். மேலும் யுத்தம் மிகுந்த செலவை ஏற்படுத்துவதோடு சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளாதாரத்தையும் சீர்குலைக்கக் கூடியவை. வலுச்சண்டைக்காரன் அமெரிக்காவைத்தவிர எல்லா நாடுகளுமே பெரிய, நீண்டகால யுத்தங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவே விரும்புகின்றன. துப்பாக்கி யுத்தங்களை விட பொருளாதார ரீதியான 'யுத்தங்களே' அதிக பலன் தருபவை என்பதை முக்கியமான பெரிய நாடுகள் உணர்ந்துள்ளன.

எனினும் பெரிய, சிக்கலான யுத்தமொன்று ஆரம்பமாகி விடுமோ என்ற அச்சம் அவ்வப்போது ஏற்படத்தான் செய்கிறது. பல நாடுகள் சம்பந்தப்படக்கூடிய யுத்தமொன்று நடைபெறக் கூடிய இடமாக தாய்வானைக் குறிப்பிட முடியும். சீன டிரகன் எப்போது வேண்டுமானாலும் தாய்வானை கபளீகரம் செய்யலாம் என்ற அச்சம் இப் பிராந்தியத்தில் தொடர்ந்து கொண்ட இருக்கிறது. சீன அரசு தன் ஒரே சீனா என்ற கோட்பாட்டில் மிக உறுதியாக இருக்கிறது. தாய்வான் தனது நாட்டின் தவிர்க்கவே முடியாத ஒரு பகுதி என்பதே சீன அரசின் கொள்கை. போர்தொடுத்தால் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தாய்வானுக்கு ஆதரவாகக் களத்தில் குதிக்கும் என்றும் உலகளாவிய பொருளாதாரத் தடைக்கு சீனாமுகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதும் சீனாவின் பிரதான கவலை. சீனா இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தனியொரு வல்லரசாக, பொருளாதார சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்பதே சீனாவின் பிரதான இலக்கே தவிர, போரில் இறங்கி பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டு இலக்குகளைத் தவற விடுவதல்ல என்பதில் சீனா கறாராக இருக்கிறது.

பெரும்போரை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு இடம் ரஷ்ய பிராந்தியம்.

ரஷ்ய பெரும் பிராந்தியத்தில் ஒரு அகோர யுத்தம் கிளர்ந்தெழுந்து நீடிக்கலாம்; அது அப் பிராந்தியத்தையும் தாண்டிச் சென்று பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றொரு பதற்ற நிலை கடந்த நான்கு வாரங்களாக நிலவி வந்தது. கடந்த 16ம் திகதி கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் உக்ரேன் எல்லையோரமாக ரஷ்யா குவித்து வைத்திருந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட படையினரின் ஒரு பகுதியை வாபஸ் பெறத் தொடங்கியிருப்பதாக அறிய முடிகிறது. ஏற்கனவே உக்ரேனில் ஒரு பகுதியாக விளங்கிய கிரிமியாவை 2014ம் ஆண்டு மார்ச் மாதம் ரஷ்யா படையெடுப்பின் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டது. உலகமும் அதை நாளடைவில் மறந்து போனது. தற்போது ரஷ்யா உக்ரேனையும் ஆக்கிரமித்து தன்னுடன் இணைத்துக் கொள்ளலாம் என ரஷ்யா கருதுகிறது என்பதை விட எப்போது வேண்டுமானாலும் அது நடக்கலாம் என்ற அச்சம் உக்ரேனுக்கு 2014 முதலே ஏற்பட்டு விட்டது.

கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டதும் தான் பாதுகாப்பற்ற நிலையில், ரஷ்ய கரடிக்கு முன்பாக சுண்டெலியைப் போல உணரத் தலைப்பட்டதால் உக்ரேன் தன் பாதுகாப்புக்காக அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் நோக்கி சாயத் தொடங்கியது. இது சர்வதேச அரசியலில் இயல்பானதுதான்.

உண்மையில் உக்ரேனை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் விளாடிமிர் புட்டின் காய்களை நகர்த்தினாரா அல்லது தன் வாசலோரம் அமெரிக்க தலைமையிலான நேட்டோ அமைப்பு வந்து விடுவதை எவ்வாறேனும் தடுத்துவிட வேண்டும் என்பதற்காக இந்த போர்ப் பூச்சாண்டியை அவர் அவிழ்த்து விட்டாரா, தெரியவில்லை.

ஏற்கனவே இது போன்ற ஒரு சம்பவம் 1962ம் ஆண்டு அமெரிக்காவுக்கு அண்மித்ததாக நடைபெற்றது. அமெரிக்காவின் புளோரிடாவில் இருந்து சற்று தொலைவில் அமைந்திருக்கும் தீவே கியூபா. அங்கே ரஷ்யா ஏவுகணைத் தளங்களை நிறுவ ஆரம்பித்தது. அணு ஆயுதங்களை சுமந்து செல்லக் கூடிய விமானங்களை அனுப்பி வைத்ததோடு அவை இறங்கக் கூடியதாக விமான நிலையத்தையும் புனரமைத்தது.

இதன்பின்னர் ஏவுகணைகளும் ரஷ்யாவில் இருந்து கப்பல்கள் மூலம் கியூபாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. உளவுத்துறை மூலம் கியூபாவில் என்ன நடக்கியது என்பதை அறிந்து கொண்ட அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி, கியூபாவை ஆயுதமயப்படுத்துவதை உடனடியாக நிறுத்தும்படி ரஷ்ய அதிபர் குருஷேவிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் குருஷேவ் காது கொடுத்த மாதிரித் தெரியவில்லை என்பதால் கியூபாவை பிடல் காஸ்ட்ரோ கைப்பற்றும் சமயத்தில் அமெரிக்கா அசமந்தமாக நடந்து கொண்டது போல இவ்விடயத்திலும் கோட்டை விட்டால் அமெரிக்காவின் வாசலிலேயே ரஷ்யாவின் ஏவுகணைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்த ஜோன் கென்னடி, மிகக் கடுமையாக நடந்து கொள்ளத் தீர்மானித்தார். ஏனெனில் கியூபாவில் அணுவாயுத ஏவுகணைகள் நிறுத்தப்படுமானால் மெக்சிகோ, வொஷிங்டன், புளோரிடா, விண்வெளி ஏவுதளமான கேப் கெனவரல், பனாமா, தென்கிழக்கு அமெரிக்க பிரதேசங்களை நோக்கி ரஷ்யாவினால் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்த முடியும் என்பது அமெரிக்காவின் அச்சம். நடுத்தர வீச்சு ஆற்றல் கொண்ட அணுவாயுத ஏவுகணைகளே கியூபாவில் நிறுத்தி வைக்கப்படப் போவதாக அமெரிக்கா கருதியது.

எனவே 1962 அக்டோபர் 22ம் திகதி வெள்ளை மாளிகையில் இருந்து ஜனாதிபதி கென்னடி ஒரு உத்தரவை விடுத்தார். கியூபாவில் தளங்களை அமைப்பதையும் ஏவுகணைகளை நிறுத்துவதையும் ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும். அதை நாம் எதிர்த்து நிற்போம். இந்நெருக்கடி ஒரு உலகளாவிய அணுவாயுத யுத்தமாக மாறி எமது வாயில் வெற்றியானது சாம்பலாக விழலாம். ஆனாலும் நாம் இவ்விவகாரத்தில் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

இன்று முதல் கியூபாவைச் சுற்றி கடற்படை முற்றுகையை அமெரிக்கா ஆரம்பிக்கிறது. எமது அனுமதியின்றி எந்தக் கப்பலும் கியூபா துறைமுகத்தை அடைய முடியாது என்பதாக அமெரிக்க அதிபரின் பேச்சு மிகக் கடுமையான தொனியில் அமைந்திருந்தது. கியூபாவை ஏவுகணைகள் ஏந்திய ரஷ்ய கப்பல்கள் அண்மித்த நிலையிலேயே அமெரிக்கா இக்கடல் முற்றுகையை ஆரம்பித்ததால், அடுத்ததாக என்ன நடக்கும்; ரஷ்ய போர்க் கப்பலை அமெரிக்கக் கடற்படை மறிக்கும்போது மோதல் நிலை ஏற்படுமா என்றெல்லாம் உலக நாடுகள் புருவங்களை உயர்த்தின. உண்மையாகவே மற்றொரு பெரு யுத்தத்தை நோக்கியே உலகம் நகர்ந்து கொண்டிருந்தது என்பது உண்மைதான்.

இக்கடல் முற்றுகை ஒரு மாதமும் 4 நாட்களும் நீடித்தது. ஆயுதங்களை அனுப்ப மாட்டோம் என ரஷ்ய அதிபர் உறுதியளித்தார். அமெரிக்க அதிபரோ, ஏற்கனவே நிறுத்தப்பட்ட அனைத்து ஏவுகணைகளும் அகற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். பின்னர் ரஷ்யா அதற்கு இணக்கம் தெரிவித்ததோடு, இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகம் முகம் கொடுத்த பெரும் போர் அச்சுறுத்தல் முடிவுக்கு வந்தது.

உக்ரேன் நேட்டோ அமைப்பின் உறுப்பு நாடானால் தன் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஏஜண்டாக உக்ரேன் மாறிவிடும், அது தமக்கு ஆபத்து என விளாடிமீர் புட்டின் கருதுவதை 1962 கியூபா நெருக்கடியோடு ஒப்பிடலாம். ஒரு சண்டியன் தன் ஏரியாவில் இன்னொரு சண்டியனுக்கு இடமளிக்க மாட்டான் அல்லவா!

இந்த 'பேட்டைச் சண்டியன்' கோட்பாடு உலக அரசியல் வரலாற்றில் முக்கியமான இடத்தை வகிக்கிறது. பேட்டைச் சண்டியனான இராவணன் சீதையைக் கவர்ந்து செல்ல, பெரு யுத்தம் வெடித்ததாக இராமாயணம் சொல்கிறது. முதலாம் உலகப் போருக்கான பல காரணங்கள் இருந்த போதிலும் பிரதானமான வெளிப்படையான காரணம் பேட்டைச் சண்டியனை நினைவு படுத்துவதாகவே இருக்கிறது. ஒஸ்ட்ரியா ஹங்கேரி பேரரசின் ஆர்ச்டியூச் இளவரசனான ஃபிரான்ஸ் பேர்டினன்ட் தன் மனைவியுடன் சேர்பியாவின் தலைநகரான சரஜீவோவுக்கு விஜயம் செய்தார். இவர் முடிக்குரிய இளவரசர். பொஸ்னியாவை ஹங்கேரி அடக்கி ஆள்வது பிடிக்காத சேர்பிய தீவிரவாதக் கும்பலைச் சேர்ந்த அறுவர் இளவரசரைத் தாக்கத் திட்டம் வகுத்தனர். 1914ஜூன் 28ம் திகதி இளவரசர் பேர்டினன்டும் மனைவி சோஃபியும் திறந்த காரில் சரஜீவோ தெருக்களில் பவனி வந்தபோது இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். பேட்டைச் சண்டியன் விடுவாரா? ஒரே மாதத்தில், 1914 ஜூலை 28ம் திகதி ஹங்கேரிய பேரரசு பொஸ்னியா மீது யுத்தப் பிரகடனம் செய்தது. அக் காலத்தில் பிணக்குகளில் தலையிட்டு, மத்தியஸ்தம் செய்வதற்கு ஐ.நா போன்ற உலக அமைப்புகள் இல்லை. அன்றைய உலகம் சில பேரரசர்களால் அவர்களின் விருப்பங்களுக்கு அமைய ஆளப்பட்டு வந்தது. இந்த யுத்தம் 1918 நவம்பர் 11ம் திகதி வரை நீடித்தது. யுத்தம் முடிந்தபோது இரண்டுகோடி பேர் இறந்திருந்தனர். மேலும் இரண்டுகோடி பேர் காய முற்றிருந்தனர். காரணம் அன்றைய பேட்டைச் சண்டியர்களின் தலைக்கனம்!

ஆனால் இன்றைக்கு இவ்வாறு தலை கொழுத்த தீர்மானங்களை எடுப்பது சிரமமானது. ஜோர்ஜ் புஷ் ஈராக்மீது ஒரு தலை கொழுத்தத் தீர்மானத்தை எடுத்திருந்தார். ஆனால் அதன்பின்னால் ஐரோப்பிய நாடுகளும் இணக்கம் தெரிவிக்கக் கூடிய ஒரு நாசகார திட்டத்தை அமெரிக்கா வைத்திருந்தது. ஈராக்மீது தாக்குதல் என்பது அவசர கதியில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல விளாடிமிர் புட்டின் படைகளை வாபஸ் பெறுவது போல பாவனை செய்து உக்ரேனின் நேச நாடுகள் அசந்திருக்கும் ஒரு சமயத்தில் உக்ரேனைத் தாக்கிக் கைப்பற்ற நினைத்திருப்பதாக அமெரிக்கா கருதுவதால்தான், உக்ரேன் மீது படையெடுக்கும் சாத்தியங்கள் அப்படியே இருப்பதாக ஜோபைடன் கூறியிருக்கலாம். உக்ரேன் எல்லையோரமாக ஒரு லட்சத்துக்கும் மேல் படைகளைக் குவித்துவிட்டு போர்ப்பயிற்சிதான் செய்தோம் என்று இப்போது ரஷ்ய அதிபர் சமாதானம் கூறியிருப்பது நம்பும்படியாக இல்லை.

புட்டினுக்கு மறுபடியும் சோவியத் ரஷ்ய ஒன்றியத்தை மீளவும் கட்டமைக்க வேண்டும் என்ற இலக்கு உள்ளது. அதன் ஒரு கட்டமாக உக்ரேனை ரஷ்யாவுடன் இணைந்துக்கொள்ள அவர் விரும்புகிறார். அதன்பின்னர் பேச்சுவார்த்தைகள் மூலமாக அல்லது வேறுவழிகளில் பக்கத்து நாடுகளையும் இணைத்து ஒரு ஒன்றியமாக, ஐக்கிய அரபுகுடியரசு/ ஐரோப்பிய யூனியன் போன்ற ஒரு அமைப்பாக சோவியத் ஒன்றியத்தைக் கட்டி எழுப்ப அவர் திட்டமிடுவதாகத் தெரிகிறது.

இது இப்படி இருக்க, உக்ரேன் ரஷ்ய மோதல் நிகழ்ந்திருந்தால் தமக்கு அது சாதகமாக இருந்திருக்கும் என்று ஒரு நாடு நினைக்குமானால் அது சீனாவாகவே இருக்க முடியும்.

ரஷ்ய – உக்ரேன் மோதல் நிலை எவ்வாறு உருவெடுக்கும் என்பதை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்த சீனாவுக்கு படை குறைக்கும் ரஷ்யாவின் புதிய அறிவிப்பு ஏமாற்றம் அளித்திருக்கலாம். யுத்தம் நடைபெற்றால் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் அந்த யுத்தத்தை எவ்வாறு எடுத்துக் கொள்ளும்? பதிலடி தாக்குதல்களை நடத்துமா? உக்ரேனைக் காப்பாற்ற இராணுவ ரீதியாகத் தலையிடுமா? பொருளாதார முட்டுக் கட்டைகள் ரஷ்யாவுக்கு எதிராக கொண்டு வரப்படுமா? என்றெல்லாம் சீனா உன்னிப்பாக கவனித்து வந்துள்ளது.

ஏனெனில் ரஷ்யாவுக்கு உக்ரேன் மீது கண் என்றால் சீனாவுக்கு தாய்வான் மீது கண். ரஷ்ய ஆக்கிரமிப்பை உலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, வாய் வீச்சோடு நிறுத்திக் கொள்ளுமானால், உலகளாவிய சலசலப்புகளின் பின் எல்லாம் அமைதியாகி விடுமானால் தாய்வான் மீதான சீன ஆக்கிரமிப்புக்கு அதை உதாரணமாகக் கொள்ளலாம் என சீனா திட்டமிட்டுவதாக அமெரிக்க அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதே சமயம் உக்ரேன் ஆக்கிரமிப்போடு சீன ஆக்கிரமிப்பை ஒப்பிட இயலாதென்றும் தாய்வானை சீனா விழுங்கினால் ஏற்படக் கூடிய பின் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சீனாவின் கடல் பட்டுப்பாதைத் திட்டமான one belt and Road Initiative திட்டத்துடன் உத்தேச தாய்வான் ஆக்கிரமிப்பு ஒப்பிடப்படுவதால் அப் பிராந்தியத்தில் அந்த அளவுக்கு சீனாவுக்கு ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் இடம் கொடுக்காது என்ற ஒரு பார்வையும் உள்ளது.




கியூபாவில் ரஷ்யா அமைக்கவிருந்த ஏவுகணை தளத்துக்கான பணிகள் நடைபெறுவதை சித்தரிக்கும் படம்


DAILY SKETCH

CUBA

SENSATIONAL MOVE BY KENNEDY

BLOCKADE!

Ultimatum to Kruschev

'Move those missiles'

PRESIDENT KENNEDY last night announced a full-scale blockade of Cuba to stop a build-up of Russian missiles there.

How to Relieve TENSE NERVOUS HEADACHES

Nothing acts faster than ANADIN

கடல் முற்றுகை தொடர்பான செய்தி




# அவள் மரணித்தும்...

**ந.யோகா கொழும்பு 10**

யார் யார்தான் சொன்னாலும்
அழுதழுது தொடச்சாலும்
பாவிமக ஒ நெனப்ப அழிசிடதான் முடியலையே...............

ஒ பேற பச்ச குத்தி
ஊருக்குள்ள வலம்வந்தேன்
ஊரும் அத பார்க்கயில
மனைவியினு நான் சொன்னேன் ................
கவி படிச்சி கவிபடிச்சி வைரமுத்து பேலானேன்

காதலிக்க வேணாமுன்னு
ஊருக்குள்ள சொல்லுவாங்க
காதலிச்ச பின்னாலே
அதையே நானும் சொல்லுரண்டி .............
பூவெல்லாம் சருகாச்சி
கண்ணிரெல்லாம் ரத்தமாச்சி
நாம ஒன்ன சேர்ந்து வாழ
ஒ உசுரே தடையுமாச்சி ...............

ஒன்ன எண்ணி கோட்டை ஒன்னு
இதயத்துல கட்டி வச்சேன்
ஒன்றா குடி போகும் முன்னே
ஒ உசுரு போயிடுச்சே
ஏனோ இந்த வாழ்க்கை என்று
எண்ணி எண்ணி சாகுரண்டி
என் நெலம தெரிஞ்சிகூட
கடவுள் மனசு இறங்கலடி ....................

பட்டாடை நீயும் கட்டி
பவளத்தோட கனவு கண்டேன்
நூலாட கட்டி இன்று
வாய் பேசா பூச்சான...........
ஒன்ன போல பொண்ணு ஒன்ன
உலகத்துல கண்டதில்ல
இன்றையோட இந்த பொண்ண
நானும் காண போறதில்ல ...........

# மௌனம்

**என்.பாரத் மானிப்பாய்**

உன் விழிகளில்
என் விழிகள்
விழித்ததும்
தொலைந்து போகின்றது
மொழிகள்
மிஞ்சுகின்றது
மௌனம் மட்டும்தான்
என்ன செய்வேன்



# தாய்மொழி

**இனுவில் வாகீசன்**

மொழியின்றி மனிதனில்லை
மனிதனின்றி மொழியில்லை
பூமியில் பேசிடும் மொழிகள்
யாவுமே தாய்மொழி
யாவர்க்கும் உரித்தாகும் மொழி

முதியோரில்லத்தாயாய்
அநாதையாகிறது தாய் மொழிகள்
மொழிகளை தத்தெடுக்கின்றனர்
மொழிகள் கலந்து தாய்மொழிகள்
அழிந்தனவே

தாயிடமிருந்து பிரிந்த சிசுவாய்
கிளைமொழிகள் பலவாயின
தாயினை மறந்த பிள்ளைகளாய்
கிளை மொழிகள் தாய்மொழியை மறந்தன

தாய்மொழி மறந்தவன்
தாயை மறந்தவனாகின்றான்
பிறமொழிகள் பயில்வது தவறல்ல
தாய்மொழி மறுப்பது தவறு

தாய்மொழி பேணுவோம்
தாயைப்பேணும் மகவாய்
தாய்மொழி இலக்கியங்கள் படைப்போம்
தாய் மொழி வளம் பெறவே

# ஏக்கத்தின் வலி

**அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம்**

காலம் விரிந்தாலும்
நேரம் இருந்தாலும்
பேசத் தெரிந்தாலும்
முடியவில்லையே

தூரம் இல்லாத
பிரிவும் காணாத
உலகம் அருகில் இருந்தும்
உறவாட முடியவில்லையே

இனம் மாறாத
குலம் பிரியாத
ஈர் உயிர் ஒன்றாக
முடியவில்லையே

சண்டைகள் அறியாத
துரோகங்கள் புரியாத
இரு மனம் இருந்தும்
இணைய முடியவில்லையே


காலம் கனிந்திருந்தும்
வாசல் திறந்திருந்தும்
காத்திருப்புக்கள் ஏன் தொடர்கிறது

எது இன்று
எதை தாண்டி
எங்கு போகிறது

இதுவும் கடந்துதானே போகும்

# இது உனக்கான நாள்

**ஷப்ரா இல்முத்தீன் அட்டாளைச்சேனை**



என் வாழ்வில்
எனக்கு மிகவும் பிடித்த நாள்
என் காத்திருப்புக்குள்
நான் கலந்து போகும் நாள்
நான் வாஞ்சையுடன்
கொண்டாட நினைக்கும் நாள்
என் வார்த்தைகளில்
அடிக்கடி மொழியப் படும் நாள்..
அது தான்
என் தந்தையின் பிறந்த நாள்...

பதினாறு குழந்தைகளுக்குள்
பிறந்து வளர்ந்தாய் ஒருவராய்
உன் முயற்சிலேயே மொத்தமாய் பயின்று
அனைவரிலிருந்தும் தனித்துவமாய் தெரிந்த
உன்னதமானவரே நீ...

கஷ்டம் என்று வாய் திறந்து சொன்னதில்லை
உன் வலிகளையும் நீ காட்டிக் கொண்டதில்லை
கேட்டதற்கெல்லாம் பதிலளித்தாய்
நான் கேட்டதெல்லாம் வாங்கித் தந்தாய்..

என்னை ஒரு இளவரசியாகப் பார்த்தாய்
என் உயர்வுகளுக்காய்
முழு மூச்சாக நின்று போராடினாய்

என் காவலாளி அல்ல நீ
என் வரமே...
சத்தமாய் சொல்கிறேன் நான்
என் காவலாளி அல்ல நீ
என் உயிரில் கலந்த உத்தமர் நீ

என் ஆசையெல்லாம்
வேறு ஒன்றும் அல்ல
என்னைக் குழந்தையாக
அரவணைக்கும் உன்னை
என்றுமே என்னோடு நான்
அணைத்திட வேண்டும்...
எனக்காக நீ பட்ட சிரமங்களை
எல்லாம் மறக்குமளவுக்கு
உனக்காகவும் கொஞ்சம்
வாழ்ந்திட வேண்டும்
அவ்வளவே...

எப்போதுமே என் பிரார்த்தனைகள்
ஒன்றே ஒன்று தான்
இன்று போல் என்றும்
உன் நலம் வேண்டுகிறேன்...

புன்னகை மாறா
உன் வதனத்தைப் பாரத்தவாறே
நகர வேண்டும் என் ஒவ்வொரு நாட்களும்
இனிமையாக...

# காதல் குருவி

**ஜலீலா முஸம்மில், ஏறாவூர்**

கண்களிரண்டையும்
மூடிக் காத்திருக்கிறேன்
உன் காதல்
வெளிச்சம் வரும்வரை

கடல் நீரென நினைத்து
ஓடி வருகிறேன்
கானல் நீராகிக் காதலே
கணத்தில் மறைகிறாய்

என் கவிதை வரிகளின்
பொருள் ஆகிறாய்
காதல் துன்பத்தைத்
தூவித் தூவி

விலகும் போது
நெருங்கி வருகிறேன்
வெறுக்கையிலே
நொருங்கிப் போகிறேன்

மாசற்ற கவிதை
நீ ஆகிறாய்
மனதுக்குள் என்றும்
நிலைத்து இருக்கிறாய்

பிழையாக
நீ வருகிறாய்
பிழை என்னைச்
சரி செய்கிறாய்

பிரபஞ்ச மாயைக்குள்
வியாபித்திருக்கிறாய்
சிறு துளி போல்
நானோ அலைந்து திரிகிறேன்

பெரும் பிரளயமாய்
உருவாகிறாய்
சிறு இதயத்துள்
அடைக்கலமாகிறாய்


நிலையான
நதியாக நீயிருக்கிறாய்
கடல் நான் காதலிக்கவே
உன்னைத் தேடி வருகிறேன்

எப்பொழுதும் எதிலும்
கவிதை ஆகிறாய்
என் எழுதுகோலை
ஊன்றமுன்னரே

பாசமுடன்
பரிந்து வா
புவி மீது என்னைப்
புரிந்து கொள்ள

பிரிவின் வலியைப்
புறக்கணிக்க முடியவில்லை
ஆத்மார்த்தமாக
வலியோடு வாழ்கிறேன்

சுற்றிலும்
படர்ந்து செல்கிறேன்
உன்னடியைப் பற்றிக் கொண்ட
காதல் கொடி நான்



# புதிய உலகம்

**வரக்காமுறையூர் ராசிக்**



பிஞ்சுகளை பிய்த் தெரியும்
பெரிய மனிதர் கூட்டமே
குஞ்சுகளைசிறகில் மூடும்
கோழிகளைக் கொஞ்சம் பாரும்

மானக் கண்ணில் குத்தும்
மாந்தர் கூட்டமே கேளும்
ஊணக் கண்ணுக் கெல்லாம்
இருளும் ஒளியும் ஒன்றே

பொறாமை தீயில் எரியும்
படித்தார் உலகே பாரும்
சிறுமை எண்ணம் கொண்டார்
சிறப்ப தில்லை காண்பீர்

சந்தேகத் தனலில் வேகும்
சாத்தானிய இனமே கேளும்
சந்தோசம் என்பது மட்டும்
சந்ததிக்குமில்லை சொட்டும்

சுட்டும் விரலால் எம்மை
சுட்டிடும் இனமே கேளும்
மட்டில்லா உம் குறைகள்
மறைப்ப தேனோ மண்ணில்

விளையும் பயிரை எரிக்கும்
வீணர் இனமே பாரும்
இளையவர் கையில் தானே
இனியொரு உலகம் மலரும்

# மயக்கத்தில் வீழ்ந்த மானுடம்

**இக்பால் அலி**

வயிற்றுக்கு தலைதுவட்டும்
மரக்கறி மேடைகள்
இடி மின்னல் அடித்து
கருகிக் கிடக்கின்றன

லயன் கம்பராக்களின்
அடுப்படியில்
சூரியன் உதிக்கவில்லை

நடுத்தர வர்க்கத்தின்
முகத்தில்
கரு மேகக் கூட்டங்கள்

சந்தை வியாபாரிகள்
வானத்தை சபித்து
சரித்திரம்
எழுதுகிறார்கள்

பணக்கார கூட்டம்
வெட்கத்தில் தலைகுனிந்தபடி
ஓரிரு வாடின மரக்கறிகளை
வாங்கி
அடி வயிற்றைப்பிடித்தபடி
காருக்குள் ஒளிகின்றனர்

வானத்தின் முகத்தில்
விசக்கருத்தால் அப்பிய
வாசனைப் பவுடரின் மயக்கத்தில்
வீழ்ந்த மானுடம்
கிழிந்த ஆடையுடன்
நிர்மாணமாய் கிடக்கிறது

பட்டினிச் சாவு வருமுன்
தம் பாவக் கறைகளைப் போக்கி
இடி மின்னலின்
சாபத்தில் இருந்து விடுதலையாகி
வயலுக்குள் நாற்று நட்டு
தோட்டத்திற்குள் இரத்தம் பாய்ச்சி
புது மேடைகளில் நாற்று நடுவோம்
தோட்டம் செழித்து வளரும்

# நச்சு மரம் நடுவாயோ?

**ஷஹி ஸாதிக்**

இருகப்பிடித்திருந்தேன்...

ஓர் நாள்!
கருகி வெடித்ததென் உலகம்!
உருகி உருகி
மெழுகாய் கரைந்த காதல்...
உறைந்து இன்னும்
வலியாய் படிந்தது
மனதுள்!

நெலிந்தோட பாதையில்லா
கொதிக்கும் துன்ப நதி,
நெஞ்சுக்குள்
வெந்து வெந்து...

மனதுக்குள் சேர்த்து வைத்த
மலர்கள் எல்லாம் கருகிப் போயின!
மணந்து நான் வளர்த்த மலர்
மணம் முறிய மர்த்துப் போயின!

இனி,
சருகுகள் தான் மிச்சம்

உலர்ந்து போன
உறவின்
உயிர்க் கொடி,
உதிரமென உருகிய விழிகள்!

உயிரின்
உதிரம்
உறைந்து படிந்து போனதோ?

உலர்ந்து உடைந்தது
படர்ந்து நின்ற உறவு!
சிதைத்து வீழ்த்தப்பட்ட – என்
அடர்ந்து நின்ற காடு!

கொதித்த மனதுள்
எல்லாம் கருகிட,
கொடுமை நச்சு மரமாய்
நின்றது!

விதைத்தவர் யாரோ?
வீணாய்ப் போனது என்னவோ
விரிந்து தடித்த என்
விருட்சம் தான்!

மனங்களுக்குள்
விடம் விதைத்து,
மணம் சிதைத்து,
விவாகம் அறுத்து,
மனையை இடித்து,
விளையாட்டு?

மழை வரும்
மனங்கள் மலரு!
மறுபடியும்
மதிலாய் உயரும்!

இயமனே!
இனியும்,
நச்சு மரம்
நடுவாயோ?

# மீசை பகை

**நிலவூர்ச் சித்திரவேல் திருகோணமலை**

ஆசை மனிதனுக்குப்
பகையென்று புகன்றனர்
ஆன்றோர் ஆனால்
எனக்கோ இன்று
மீசை பகையாகி
நிற்கிறதே!
பின்னே என்னவாம்
என் தலைமுடி எல்லாம்
கன்னங் கரேல் என்றிருக்க
மீசையில் நாலுமயிர்
நரைகாட்டி எந்தன்
முதுமைக்குக்
கட்டியம் கூறுகிறதே!
எனக்கு வரும் சினத்துக்குச்
சிரைத்திடலாம் மீசையினை
என் செயலாம்! பின்னர்
'மீசை வைச்ச ஆம்பிளை'யாய்
நானிருக்க முடியாதே!

# தொண்டு சிறக்கட்டும்

**கவி மணி அ. கௌரிதாசன் ஆலங்கேணி கிழக்கு**

பல்லாண்டு காத்தி ருந்து
பதவியில் இணைந்து கொண்ட
நல்லா சிரியர்; தொண்டர்
நலமுடன் வாழ்க நீடு!
பள்ளியில் மாணாக்கர் தம்
படிப்பிலே கவனம் வைத்து–
உள்ளத்துத் தூய்மை யோடு
உண்மையாய் சேவை தாரீர்!

பெற்றதாம் அறிவை மேலும்,
பெருக்கிட வேண்டும் நீவிர்!
கற்றலை இறுதி மட்டும்
கணக்காயர் பேண வேண்டும்!
மற்றவர் போலே இன்றி
மகத்துவம் பெற்ற நீங்கள்
பற்றுடன் மாணாக் கர்க்குப்
பண்பையும் ஊட்ட வேண்டும்!

போதைக்கு அடிமை யாகிப்
பொல்லாங்கி செய்யும், யெல்லாப்
பாதையை அவர்கள் விட்டுப்
பண்புடன் வாழக் "கல்விப் –
போதையை ஊட்ட வேண்டும்;
பொறுமையைக் காக்க வேண்டும்!
தோதான கல்வி உங்கள்
தொண்டினால் சிறக்க வேண்டும்!

## இந்தியாவுக்கு அடுத்தபடியாக... (06ஆம் பக்கத் தொடர்)

எனவே, பாதுகாப்பை உறுதி செய்ய நேபாள இராணுவம் அங்கு ஒரு சாவடியை அமைக்க வேண்டும் என்றும் இந்த அறிக்கை பரிந்துரைத்திருந்தது. இது தவிர, நேபாளமும், சீனாவும் எல்லை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண, செயலிழந்த நிலையில் இருக்கும் செயல்முறைகளை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இதேவேளை நிபுணர்கள் இதுபற்றி தெரிவிக்கையில், "எல்லைக்கு அருகில் வசிக்கும் மக்கள் தாங்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை தெளிவாக தெரிவிக்க வேண்டும். இவர்களால் மட்டுமே நேபாள எல்லையை சரியாக பாதுகாக்க முடியும்" என்கிறார்கள்.

வரைபட நிபுணரும், நேபாள நில அளவைகள் துறையின் முன்னாள் தலைவருமான புத்திநாராயண் ஷ்ரேஷ்டா இக்கருத்தைக் கூறினார். இதுஒருபுறமிருக்க, நேபாளத்தில் சுமார் 20,000 திபெத்திய அகதிகள் வாழ்கின்றனர். இந்தியாவில் இருந்தும் பல திபெத்தியர்கள் நேபாளத்திற்கு வருகிறார்கள். இந்தச் சூழலில் திபெத்தியர்களுக்கான வழிகளையும் சீனா சமீபத்திய ஆண்டுகளில் மூடியுள்ளதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகின்றது.

நேபாளத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சீனாவின் அத்துமீறல்கள் இருப்பதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இந்த அறிக்கைகள் தொடர்பாக தலைநகர் காத்மண்டுவிலும் ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. இது தொடர்பாக நேபாளத்தில் உள்ள சீன தூதரகம் கடந்த மாதம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

“நேபாளத்துடன் சீனாவுக்கு எல்லைப் பிரச்சினை எதுவும் இல்லை. போலி அறிக்கையால் நேபாள மக்கள் குழப்பமடைய மாட்டார்கள் என்று நம்புகிறோம்” என்று சீன தூதரகம் தான் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது.

மறுபுறத்தில் இந்தியா-சீனாவுக்கு இடையே நிலவி வரும் எல்லைப் பிரச்சினைக்கு தொடர்ந்து தீர்வு காண முடியாமல் இருக்கும் நிலையில், சீனாவுடன் உள்ள எல்லைப் பகுதிகளில் இந்தியா தனது இராணுவ நடவடிக்கைகளை சமீபத்தில் அதிகப்படுத்தியுள்ளது.

சீனாவுடனான எல்லையில் அமைந்துள்ள லடாக், அருணாச்சல பிரதேசம், ஹிமாசலப் பிரதேசம், உத்தரகாண்ட் ஆகிய பகுதிகளில் இராணுவ கட்டமைப்பு வளர்ச்சியுடன் இராணுவத்தையும் நிறுத்தி வைப்பதையும் இந்தியா அதிகப்படுத்தியுள்ளது.

இது போன்ற கட்டமைப்பை இந்தியா மேற்கொள்வது புதிதல்ல என்றாலும், இந்தத் திட்டங்களை நிறைவேற்ற இருக்கும் அவசரமும் வேகமும் இங்கு கவனிக்கத்தக்கவையாகும்.

கடந்த ஆண்டு, எல்லைப் பகுதியான லடாக்கில் இரு நாடுகளின் வீரர்களுக்கிடையே நடந்த மோதலில், 20 இந்தியப் படையினரும், குறைந்தபட்சம் நான்கு சீனப் படையினரும் உயிரிழந்தனர். இதனையடுத்து, எல்லைப் பகுதியில் இந்தியாவின் திட்டங்கள் கவனத்தை ஈர்த்துள்ளன.

லடாக் மோதலையடுத்து, எல்லைப் பகுதியில் இந்தியா வீதிகள் அமைப்பது, ரயில் பாதைகளை இணைப்பது, விமானத் தளங்களை அமைப்பது போன்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இராணுவ உபகரணங்களை நவீனமாக்கும் பணியிலும் பெரும் முதலீடு செய்துள்ளது.

"தற்செயலாக எது நடந்தாலும், அதனை சமாளிக்க இந்தியாவிடம் ஒவ்வொரு துறையிலும் போதுமான படைகள் உள்ளன" என்று இந்திய இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலாட்படை, பீரங்கிப்படை, வான் பாதுகாப்பு, பீரங்கிப் படை வண்டிகள், கப்பற்படை ஆகிய பிரிவுகளிலும் புதிய போர் உருவாக்கங்களுக்கு இந்தியா அனுமதி அளித்துள்ளது. இந்த குழுக்கள் பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனான எல்லைப் பகுதிகளில் அவசர கால கட்டத்தில் வேகமாக முன்னேற உதவும்.

இதில் ஒரு முக்கிய கட்டடமைப்பு திட்டமாக, ஓர் முக்கிய மலைப் பாதையில், கடல் மட்டத்திலிருந்து 4000 மீட்டர்களுக்கு மேல் ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சுரங்கப்பாதை விரைவில் செயல்பாட்டுக்கு வரவுள்ளது. உலகிலேயே மிகப் பெரிய இரு வழி சுரங்கப்பாதையாகவுள்ள இந்த சுரங்கப்பாதை, சீனாவின் தடுப்புக்காவல் இல்லாமல் இந்தியா தனது படைகளை முன்னெடுத்து செல்ல உதவும் என்ற உள்நோக்கத்தில் கட்டப்பட்டுள்ளது.

படைகளையும் பொருட்களையும் கொண்டு செல்ல லடாக்கின் எல்லைப் பகுதியில், இராணுவம் முக்கிய வீதி நிர்மாணிப்பதாக இந்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

கடந்த சில மாதங்களாக, சீனாவின் எல்லைப் பகுதியில் உள்ள மூன்று முக்கிய பகுதிகளில், இந்தியா தனது படைகளையும் ஜெட் விமானப் படைகளையும் நகர்த்தியுள்ளது. அப்பகுதி மக்களுக்கு இது தெரிந்துள்ளது என்று ‘ப்ளூம்பேர்க்’ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, தற்போது இந்தியா சுமார் இரண்டு இலட்சம் படைகளை எல்லைப் பகுதிகளை பாதுகாக்கும் விதமாக அமைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 40 சதவீதம் அதிகம்" என்று அச்செய்தி கூறுகிறது.

## பிரதமர் மோடியை...
(06ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் இந்தியாவுக்குப் போட்டி நிலையொன்றை ஏற்படுத்தியிருப்பதால் இலங்கையுடனான உறவை ஸ்திரப்படுத்துவதற்கே புதுடில்லி அதிக முனைப்புக் காட்டி வருகிறது.

இந்நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இந்தியா எந்தளவுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதைத் தெளிவாகக் கூற முடியாது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்போதைய தருணத்தில் தமிழர்களின் பிரச்சினைக்கு இந்தியாவிடமிருந்து அழுத்தத்தை எதிர்பார்ப்பது எந்தளவுக்கு சாத்தியமானதாக இருக்கும் என்பது தெரியவில்லை.

எனவே, தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து இந்தியாவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம் என மக்கள் மத்தியில் தோற்றப்பாட்டை ஏற்படுத்துவன் மூலம் அடுத்து வரக் கூடிய மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான தயார்படுத்தல்களை தமிழ் அரசியல் கட்சிகள் ஆரம்பித்துள்ளனவா என்ற சந்தேகமும் இங்கே எழுகின்றது. இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய வகையிலான இதயசுத்தியான முயற்சிகளை உள்நாட்டுக்குள் அதிகரிப்பதே தமிழ் அரசியல் தரப்புகளின் கடமையாகின்றது.

# கல்வி அமைச்சு

## திறன் விருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

## கேகாலை நகர் பல்கலைக்கழகம்

# (ஒப்பந்த அடிப்படையில் வெற்றிடங்கள்)

கேகாலை நகரப் பல்கலைக்கழகமானது, இளைஞர்களுக்கு இலவசமாக உயர்கல்வியை வழங்குவதன் மூலம், அவர்களை எதிர்காலத்திற்கு தேவையான திறன்களுடன் கூடிய சக்தி மிக்க புதிய பட்டதாரிகளாக மாற்றும், நோக்கத்துடன் கல்வி அமைச்சின் கீழ் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டது. இத்திட்டமானது 2209/14 எனும் இலக்கத்தினையும் மற்றும் 2021.01.04 எனும் திகதியினையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கீழ் நடைமுறைப்படுத்துகை செய்யப்படுகின்றது. பின்வரும் பட்டப்படிப்புகள் கேகாலை நகர பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகின்றன.

1. **பின் அறுவடை முகாமைத்துவம் மற்றும் பெறுமதி அதிகரிப்பு பீடம்**
   i. பின் அறுவடை முகாமைத்துவம் மற்றும் பெறுமதி அதிகரிப்பில் தொழில் நுட்ப இளமாணி சிறப்பு பட்டம்
2. **நிலையான சுற்றுலா மற்றும் விருத்தோம்புகை பீடம்**
   i. நிலையான சுற்றுலா மற்றும் விருத்தோம்புகையில் விஞ்ஞான இளமாணி சிறப்பு பட்டம்
3. **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப பீடம்**
   i. தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவத்தில் தொழில் நுட்ப இளமாணி சிறப்பு பட்டம்
   ii. தன்னியக்கம் மற்றும் தகவல் பகுப்பாய்வில் தொழில்நுட்ப இளமாணி சிறப்பு பட்டம்
   iii. பல் ஊடக தொழில் நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி சிறப்பு பட்டம்

தகைமையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து கீழ் குறிப்பீடு செய்துள்ள பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன (ஒப்பந்த அடிப்படையில்). சேவை காலத்தில் ஏழாண்டு விடுமுறைக்கு (sabbatical leave) தகுதியுடையவர்கள் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**01. நிர்வாகப்பிரிவு**
- i. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு I) (ஒப்பந்த அடிப்படையில்)
- ii. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு II) ( ஒப்பந்த அடிப்படையில்)
- iii. விரிவுரையாளர் பதவி (வகுப்பு II) (ஒப்பந்த அடிப்படையில் )
- iv. உதவி பதிவாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
- v. உதவி பொருளாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
- vi. தொழில் நுட்பவியல் உதவியாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்)
- vii. முகாமைத்துவ உதவியாளர்கள்

**02. பின் அறுவடை முகாமைத்துவம் மற்றும் பெறுமதி அதிகரிப்பு பீடம்**
- i. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு I) (ஒப்பந்த அடிப்படையில்)
- ii. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு II) (ஒப்பந்த அடிப்படையில்)
- iii. விரிவுரையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்)
- iv. செய்கை முறை விளக்கமளிப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

**03. நிலையான சுற்றுலா மற்றும் விருத்தோம்புகை பீடம்**
- i. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு I) (ஒப்பந்த அடிப்படையில்)
- ii. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு II) (ஒப்பந்த அடிப்படையில்)
- iii. விரிவுரையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்)
- iv. செய்கை முறை விளக்கமளிப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

**04. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பீடம்**
- i. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு I) (ஒப்பந்த அடிப்படையில்)
- ii. சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு II) (ஒப்பந்த அடிப்படையில்)
- iii. விரிவுரையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்)
- iv. செய்கை முறை விளக்கமளிப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

**சம்பளம் :-**

| | |
|---|---|
| ● சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு I) | ரூபாய் 91,310 + 7,800 (படிகள்) |
| ● சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு II) | ரூபாய் 79,360 + 7,800 (படிகள்) |
| ● விரிவுரையாளர் பதவி | ரூபாய் 69,580 + 7,800 (படிகள்) |
| ● உதவி பதிவாளர் | ரூபாய் 50,625 + 7,800 (படிகள்) |
| ● உதவி பொருளாளர் | ரூபாய் 50,625 + 7,800 (படிகள்) |
| ● செய்கை முறை விளக்கமளிப்பாளர் | ரூபாய் 40,920 + 7,800 (படிகள்) |
| ● தொழில்நுட்ப உதவியாளர் | ரூபாய் 31,625 + 7,800 (படிகள்) |
| ● முகாமைத்துவ உதவியாளர் | ரூபாய் 30,725 + 7,800 (படிகள்) |

## சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு I)

1. இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு விரிவுரையாளருக்கு தேவைப்படும் கல்வித் தகைமைகளினை விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும். (ஒப்பந்த அடிப்படையில்)

**மற்றும்**

2. குறைந்தபட்சம் 02 வருடங்கள் முழுநேர ஆராய்ச்சியோடு, தொடர்புடைய கற்கை துறையில் கலாநிதி பட்டத்தினை அல்லது தொடர்புடைய கற்கை துறையில் முதுகலைப் பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும். முதுகலை / ஆராய்ச்சி பணியின் விளைவாக புதிய கண்டுபிடிப்புகள் / புத்தாக்கங்களினை உருவாக்கியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**அல்லது**

3. அத்தகைய தொழில்சார் தகைமைகள் மற்றும்/ அல்லது தொடர்புடைய துறையில் தொழில்துறை அனுபவத்தினை சிறப்பான முறையில் பெற்றுக்கொண்டமையினை உறுதிப்படுத்தும் வகையில் நகர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பதிவு .

**மற்றும்**

4. **முதுகலைப் பட்டம்** பெற்றுக்கொள்ளப்பட்ட பின்பு பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறையில் குறைந்தது ஆறு (06) வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும் :
   i. பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்து இருத்தல்
   ii. தொழில்சார்பியல் அனுபவம்
   iii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆராய்ச்சி
   iv. மேலே (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளினை பெறுவதற்கான முதுகலை கற்கை .

**குறிப்புக்கள் :**

அ) மதிப்பீடு செய்யப்பட்ட ஆராய்ச்சி மற்றும் பரப்புதல் தொடர்பான நடப்பு வழிகாட்டுதல்கள் என்பது, ஒரு விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் மொத்தம் 15 மதிப்பெண்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதாகும். இதற்கான மதிப்பெண் திட்டத்தினை இணை பேராசிரியர்/ பேராசிரியர் பதவிக்கான மதிப்பெண் திட்டத்தின் பிரிவு 2.0 மற்றும் 3.1 இல் பெறலாம்.

## சிரேட்ட விரிவுரையாளர் பதவி (வகுப்பு II)

5. இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு விரிவுரையாளருக்கு தேவைப்படும் கல்வித் தகைமைகளினை விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும். (ஒப்பந்த அடிப்படையில்)

**மற்றும்**

6. குறைந்தபட்சம் 02 வருடங்கள் முழுநேர ஆராய்ச்சியோடு, தொடர்புடைய கற்கை துறையில் கலாநிதி பட்டத்தினை அல்லது தொடர்புடைய கற்கை துறையில் முதுகலைப் பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும். முதுகலை / ஆராய்ச்சி பணியின் விளைவாக புதிய கண்டுபிடிப்புகள் / புத்தாக்கங்களினை உருவாக்கியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அல்லது**

7. அத்தகைய தொழில்சார் தகைமைகள் மற்றும்/ அல்லது தொடர்புடைய துறையில் தொழில்துறை அனுபவத்தினை சிறப்பான முறையில் பெற்றுக்கொண்டமையினை உறுதிப்படுத்தும் வகையில் நகர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பதிவு.

**மற்றும்**

8. **இளமாணிப் பட்டம்** பெற்றுக்கொள்ளப்பட்ட பின்பு பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறையில் குறைந்தது ஆறு (06) வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும் :

v. பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்து இருத்தல்
vi. தொழில்சார்பியல் அனுபவம்
vii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆராய்ச்சி
viii. மேலே (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளினை பெறுவதற்கான முதுகலை கற்கை

**குறிப்புக்கள்**

**விரிவுரையாளர் பதவி**

1. தொடர்புடைய பாடத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் (மேல் பிரிவு) பெற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பு பட்டம் மற்றும் கற்பித்தல்/ ஆராய்ச்சி/ தொழில் சார் பணியில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம்

**அல்லது**

2. தொடர்புடைய பாடத்தில் இரண்டாம் வகுப்பில் (கீழ் பிரிவு) பெற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பு பட்டம் மற்றும் கற்பித்தல்/ ஆராய்ச்சி/ தொழில் சார் பணியில் குறைந்தபட்சம் 04 வருட அனுபவம்.

**அல்லது**

3. தொடர்புடைய பாடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பு பட்டம் அல்லது ஆகக்குறைந்தது இரண்டாம் வகுப்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் பட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட தொழில் துறையில் 05 வருட அனுபவத்தினை சிறப்பான முறையில் பெற்றுக்கொண்டமையினை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு பதிவு

**அல்லது**

4. அத்தகைய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் தொழில்சார்/ தொழில் துறை அனுபவத்தினை சிறப்பான முறையில் பெற்றுக்கொண்டமையினை உறுதிப்படுத்தும் வகையில் நகர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பதிவு

## உதவி பதிவாளர்

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் /உயர் கல்வி நிறுவகத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட இளமாணிப்பட்டம்

**அல்லது**

ஆ) இளமாணிப்பட்டத்துடன் முதுகலை பட்டம் / அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் நிர்வாகம் / முகாமைத்துவத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதுகலை டிப்ளோமா பட்டம்

**வயதெல்லை:** இருபத்திரண்டு வயதுக்கு (22) குறையாதவராகவும் முப்பது வயதுக்கு (30) மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

- பொது/ வியாபார நிர்வாகம்
- முகாமைத்துவம்
- அரச கொள்கைகள்
- மனிதவள முகாமைத்துவம்
- பொருளியல்
- சட்டம்
- நிதியியல் முகாமைத்துவம்
- கருத்திட்ட திட்டமிடுகை மற்றும் முகாமைத்துவம்
- தகவல் தொழில்நுட்பம்
- முகாமைத்துவம்/ நிர்வாகத்தினை பிரதான பகுதிகளாக கொண்ட வேறு ஏதேனும் துறை

## உதவி பொருளாளர்

1. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இறுதி பரீட்சை II இல் அல்லது அதற்கு இணையான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**அல்லது**

2. (அ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் கணக்கியலில் விசேடத்துவத்துடன் கூடிய இளமாணிப் பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

(ii) இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சை அல்லது அதற்கு சமனான பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் இளமாணிப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

(iii) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) அல்லது அதற்கு சமனான தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(ஆ) அரசு/ அரச கூட்டுத்தாபனம் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனம் ஆகியவற்றில் கணக்கியல்/ கணக்காய்வில் இரண்டு (02) வருட அனுபவம்

**செய்கை முறை விளக்கமளிப்பாளர்**

1. (அ) சம்பந்தப்பட்ட துறையை முக்கிய பாடமாக கொண்டு இளவிஞ்ஞானமாணிப்பட்டம் பெற்றிருத்தல்

**அல்லது**

(ஆ) சம்பந்தப்பட்ட துறையில் விசேட பட்டம் பெற்றிருத்தல்

**மற்றும்**

சம்பந்தப்பட்ட துறையில் கற்பித்தல் / தொழில்சார் பணியில் குறைந்தபட்சம் 01 வருட அனுபவம்.

## தொழில் நுட்பவியல் உதவியாளர்கள்

1. க.பொ.த. உயர்தர பரீட்சையில் விஞ்ஞானப்பிரிவில் மூன்று (3) விஞ்ஞானப் பாடங்களில் தேர்ச்சியினை ஒரே அமர்வில் பெற்றிருத்தல் வேண்டும். திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைவுற,சம்பந்தப்பட்ட பீடத்தினால் பாடங்களின் கலவையானது முடிவு செய்யப்படும்.

**மற்றும்**

தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஆகியவற்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் N.V.Q 5 க்குக் குறையாததுமான திறமைச் சான்றிதழை, தகவல் தொடர்பாடல் மற்றும் பல் ஊடக தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பம் அல்லது அதற்கு இணையான துறையில் பெற்றிருத்தல் வேண்டும் .

## முகாமைத்துவ உதவியாளர்

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் திறமை சித்தியுடன் சித்தி பெற்றிருக்க வேண்டும்:-
   i. சிங்கள மொழி / தமிழ் மொழி
   ii. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   iii. எண்கணிதம்

**மற்றும்**

2. க.பொ.த. உயர் தர பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.(பொது சாதாரண பரீட்சை தவிர)

   (இதற்குப் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெறுதல் போதுமானதாகும்.)

   கீழ் குறிப்பீடு செய்துள்ள தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தில், கணனி பிரயோகத்தில் ஆறு (06) மாதத்திற்கும் குறையாத அங்கீகரிக்கப்பட்ட தகைமை

   **மற்றும்**

   ஆ) கணனி பிரயோக பொதிகள் கையாளுதலில் இரண்டு வருட (02) அனுபவம்

**குறிப்பு: தகைமை**

அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ) விண்ணப்ப முடிவுத்திகதியன்றுக்கு இருபத்திரண்டு வயதுக்கு (22) குறையாதவராகவும் முப்பது வயதுக்கு (30) மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இ) சிறந்த நற்பண்புகளினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய மாதிரி விண்ணப்பப்படிவத்தை திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் இணையதளத்தில் (http://skillsmin.gov.lk) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், விண்ணப்பதாரர்கள் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்க இராஜாங்க அமைச்சின் இணையதளத்தில் உள்ள மேற்கூறப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் விபரங்களைப் நோக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

விண்ணப்பிக்கும் பதவியுடன் தொடர்புடைய கல்வித் தகைமைகள் (விரிவான பட்ட படிப்பு சான்றிதழ்கள்), தொழில்முறை மற்றும் சேவை சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் பிற தகுதிகளுக்கான சான்றிதழ்களின் நகல்கள் என்பனவற்றுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவமானது, செயலாளர், திறன்கள் அபிவிருத்தி , தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, 354/2, “நிபுனதா பியச”, எல்விடிகல மாவத்தை, கொழும்பு-05 என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் 2022, மார்ச் மாதம் 04 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரசு துறைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் பிற நிறுவனங்களினை சார்ந்த அலுவலர்கள் தங்களின் விண்ணப்பங்களை நிறுவன தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். நிறுவனத் தலைவருக்கு முன்வைக்கப்பட்டு அவரால் சான்றுபடுத்தப்பட்ட விண்ணப்பத்தின் மேலதிக பிரதியொன்று மேற்கூறப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

குறிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு**
**354/2, “நிபுனதா பியச”, எல்விடிகல மாவத்தை**
**கொழும்பு-05.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

# திருத்தம்

## ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு

சுற்றுலா பயணிகளை கவர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு ஏற்புடையதான வடிவமைப்பு, திட்டம், மதிப்பீடு மற்றும் அளவுப் பத்திர (BOQ) முப்பரிமாண வடிவமைப்புகளைத் தயாரிப்பதற்காக அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2022-02-06ஆம் திகதிய தினகரன் வாரமஞ்சரி, சிலுமின மற்றும் Sunday Observer பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தின் 03ஆம் பந்தி மற்றும் 07ஆம் பந்திகளில் பின்வரும் வகையில் திருத்தங்கள் செய்யப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பந்தி இல. | முன்பு குறிப்பிடப்பட்ட விபரங்கள் | திருத்தப்பட்ட விபரங்கள் |
|---|---|---|
| 03 | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-02-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-02-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் |
| 07 | விலைமனுக்கள் 2022-02-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும். | விலைமனுக்கள் 2022-03-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும். |

**செயலாளர்,**
***ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரம்,***
***சுற்றுலா, போக்குவரத்து, கலாசாரம் மற்றும்***
***புடைவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு,***
**ரஜ மாவத்தை, பதுளை.**
**2022-02-18.**

**(தொலைபேசி இல. 055-2231973/ 0701111881)**

# பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

# MFV "SAGARA No. 01"

## சிறிய கப்பல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் கொழும்பு அத்மிரல் உயர் நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம் கைது செய்யப்பட்ட தற்போது திருகோணமலை துறைமுகத்தில் உள்ள MFV 'SAGARA No 01' பெயருடைய கப்பல் (official No - 41961781 வகை Fishing Vessel GRT/NRT - 610/183) உயர் நீதிமன்றத்தின் அத்மிரல் தி மார்சல் இனால் 2022.03.08 பி.ப. 3.00 இற்கு கொழும்பு -12 ஹல்ஸ்ட்ரொப் வீதியில் அமைந்துள்ள திறந்த நீதிமன்றம் இல. 03 மண்டபத்தில் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும். (மேற்படி செயற்பாடுகள் தரப்பட்டுள்ளது எம்மிடம் உள்ள தரவுகளின் மூலம் என்பதால் அதன் தீர்க்கமான நிலை பற்றி பொறுப்புக் கூற முடியாது)

இதற்குச் சமுகமளிக்க விரும்பும் சகல கேள்விதாரர்களுக்கும் அதற்குத் தேவையான சகல விபரங்களையும் கீழ்க்காணும் முகவரியில் உள்ள அத்மிரல் தி மார்சல் இன் அலுவலகத்தில் மற்றும் இணையதளத்தில் அறிந்து கொள்ள முடிவதுடன் கப்பலை பரீட்சிப்பதற்கு தேவையான அனுமதியை மார்சல் இடம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இவ் ஏல விற்பனையின் இறுதித் தீர்மானம் உயர் நீதிமன்ற கட்டளையின் கீழாக இருக்கும்.

**அத்மிரல் தி மார்சல்,**
**வர்த்தக கப்பல் செயலகம், முதலாம் மாடி,**
**பிரிஸ்டல் கட்டிடம், 43-89,**
**யோர்க் வீதி, கொழும்பு -01.**
**தொலைபேசி இல. +94 112441429/ + 94 11 2435127**
**பெக்ஸ் +94 11 2435160**

**இணையத்தளம் www.dgshipping.gov.lk**
**மின்னஞ்சல் dmsmos@sltnet.lk**


# அழியா ஓவியம் கலைஞர் ஸ்ரீ சங்கர்



தென்னகத் திரைவானில்
முதல் பூத்த நம்மவர்
அமரர் கலைஞரே ஸ்ரீ சங்கரே
சகலகலா வல்லவனாய்
சதா காலமும்
சாதனை படைத்தவனே
தங்கக் குணத்தோடு
தரணியில்
மிளிர்ந்த தனயனே !
எம்மைத் தவிக்க விட்டு
எங்கே சென்றாய் !
கலைக்காக காலம்
தோறும்
கடல் அலைபோல்
ஓயாது
உழைத்தவனே !
வாழ்வின் காலம் அழியும்
வகை வகையாக
கோலங்கள் அழியும்
விரிந்த ஞாலம் அழியும்!
ஆனால் சங்கரின்
பரந்த கலை ஞானம்
ஒரு போதும் அழிவதில்லை
மர இலைகள் உதிரும்
கல் மலைகள் சிதறும்
கடல் அலைகள் ஓயும்
இவரது கலைகள்
உதிராது முதிரும்
சிதறாது சிறக்கும்
ஓயாது உயரும்
சங்கரின் கலை
சங்கின் நாதம்போல்
ஒலிக்கிறது
சங்கரின் கலை
மங்கள விளக்கு போல
ஒளிர்கிறது
சங்கரின் கலை
திங்கள்போல்
திகழ்கிறது
சங்கரின் கலையை
சமுதாயமே புகழ்கிறது !
மலர் மஞ்சம் போன்ற
வஞ்சம் இல்லா கலைஞர் ஸ்ரீ சங்கரின்
நெஞ்சத்தில் நாம்
அனைவரும்
அன்றும், இன்றும்,
என்றுமே தஞ்சம்!
அவரது ஆத்மா
சாந்தி பெறட்டும்!



**எம்.எஸ். தாஜ்மஹான்**





# பிரதேச அபிவிருத்தி வங்கி

## ஆக்கத் திறனுள்ள இளைஞர் யுவதிகளுக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியில் தொழில் வாய்ப்பு

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமைமிக்க ஊழியர்களை கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கு தேவையான தகைமைகளுடன், திறனுள்ள இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### முகாமைத்துவ பயிலுனர்கள்

**தேவையான தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் வகுப்பு சித்திகளுடன் வங்கியியல் மற்றும் நிதி, முகாமைத்துவம் (அரச/ வியாபார நிர்வாகம்) கணக்காய்வு, வணிக விஞ்ஞானம், பொருளியல் விஞ்ஞானம், கைத்தொழிற் கற்கை, மனிதவள முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கணினி அறிவியல், பொறியியல் விஞ்ஞானம், அறிவியல், கணக்கியல், சந்தைப்படுத்தல், சட்டம், புள்ளிவிபரவியல் அல்லது ஆதன மதிப்பீடுகள் தொடர்பில் விஷேட பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது,

சாதாரண சித்தியுடன் மேற்கூறிய துறை ஒன்றில் விஷேட பட்டம் அல்லது இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தில் வங்கியியல் மற்றும் நிதி தொடர்பான டிப்ளோமா அல்லது இலங்கை பட்டய கணக்காய்வாளர் நிறுவனத்தில் Business Level II அல்லது அதற்கு சமாந்தரமான தகைமை ஒன்று

அல்லது

இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்துடன் தொடர்புடைய அங்கத்துவம் அல்லது இலங்கை பட்டய கணக்காய்வு நிறுவனத்தில்/ ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் பட்டய நிறுவனத்தில்/ ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சான்றிதழ் பெற்ற கணக்காய்வாளர்கள் சங்கத்தின் இறுதி பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமாந்தரமான தகைமை ஒன்று கணினி தொழில்நுட்பம் மற்றும் இரண்டாம் தர மொழியில் கடமையாற்றும் தகைமையுடனான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சமூகப் பணிகள் பற்றிய சிறந்த புரிந்துணர்வு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**வயது**

விண்ணப்பங்கள் பாரமேற்கும் இறுதித்திகதியில் வயது 28 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் பாரமேற்கும் இறுதி திகதி**

விண்ணப்பங்கள் பாரமேற்கும் இறுதி திகதி 2022.03.02 ஆகும்.

**தெரிவு செய்யும் நடைமுறைகள்**

போட்டிப்பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவர். எழுத்துப்பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயப்பரப்பினுள் இடம்பெறும்.

| விடயம் | மொழி மூலம் |
|---|---|
| பகுப்பாய்வு திறன் நுண்ணறிவு திறன் பரீட்சை | தமிழ்/ சிங்களம்/ ஆங்கிலம் |
| பொது அறிவு | தமிழ்/ சிங்களம்/ ஆங்கிலம் |
| ஆங்கில மொழி ஆற்றல் பரிசீலனை | ஆங்கிலம் |

**பயிற்சியளித்தல் மற்றும் பணியமர்த்தல்**

பணியமர்த்தப்படுபவர்கள் இரு வருட காலங்களுக்கு பயிற்சி பெறுவது கட்டாயமாகும். இவ் இரு வருட காலப்பகுதியினுள் அரையாண்டு மதிப்பாய்வுக்கு உட்படுவர். வெற்றிகரமாக இரு வருட பயிற்சிக்காலத்தினை பூர்த்தி செய்யும் பயிலுனர்கள் அதிகாரி IV தரத்தில் நிரந்தர ஊழியராக பணியமர்த்தப்படுவதுடன் ரூபா. 54,635 - 750 X 3 - 56,885/- மாதாந்த ஆரம்ப கட்ட சம்பள அளவில் நிலைநிறுத்தப்படுவர் (மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 115,144/- ஆகும். )

**தகுதிகாண் காலம்**

ஒரு வருட தகுதிகாண் காலம் (இரு வருட பயிற்சிக்காலத்தினை பூர்த்தி செய்த பின்னர் கணிப்பிடப்படும்.) மற்றும் தகுதிகாண் காலத்தினுள் ஊழியர் மதிப்பாய்வுக்குட்பட்டு சேவையில் நிரந்தரமாக்கப்படும்.

**கொடுப்பனவுகள்**

முதலாவது ஆண்டின் பயிற்சிக்காலத்தினுள் ஒப்பந்த அடிப்படையில் ரூ. 40,000/- (சகலதும் உட்பட) நிலையான மாதாந்த கொடுப்பனவொன்று பயிலுனர்களுக்கு வழங்குவதுடன் இரண்டாவது ஆண்டு பயிற்சிக்காலத்தினுள் ரூ. 45,000/- (சகலதும் உட்பட) மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**விண்ணப்பித்தல்**

உங்கள் விண்ணப்ப படிவத்தினை இணையவழி (online) முறைமையில் சமர்ப்பிக்க எமது https://www.rdb.lk/careers எனும் இணைய பக்கத்திற்குள் பிரவேசித்து அதில் “Application for the post of Management trainee ’ இனை தெரிவு செய்க.

Careers திரையிலுள்ள “Instructions to candidates” இன் கீழ் உள்ள ஆவணத்தினை நன்கு வாசித்து கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப இணையவழி விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்க.

போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

மேற்கூறிய விண்ணப்பித்தல் நடைமுறைக்கு மாறாக எந்தவொரு வழிமுறையிலும் எக்காரணங்களுக்காகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்ய தவறும் அல்லது பிழையான தகவல்களை உட்படுத்திய விண்ணப்ப படிவங்கள் இவ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு வழியிலானதுமான அழுத்தங்கள் அல்லது பிழையான தகவல்களை முன்வைப்பது இப்பதவிக்கு தெரிவுசெய்ய தகுதியற்றவையாகும்.
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைத்தல் இணைத்துக்கொள்ளல், இவ் ஆட்சேர்ப்பினை பிற்போடல் அல்லது இரத்து செய்யும் உரிமை வங்கிக்கு உரித்தாகும்.

பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி,
இல. 933, கண்டி வீதி, வெதமுல்லை, கண்டி.
0112035454 | www.rdb.lk

SPMC

# வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

### மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு

பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்துடன் (SPMC) இணைவதற்கு தகைமை பெற்ற, சுறுசுறுப்பான, சுய ஊக்கமுடைய, தொழில் இலட்சியம் கொண்ட, குழுவாக இயங்கக்கூடியவர்களை நாம் தேடுகிறோம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. நாட்டின் எந்த ஒரு பகுதியில் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
III. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

### 1. மருந்தக முழு உதவியாளர் (PL -2 –GRADE 111)

**தகைமைகள் - வெளிவாரி அபேட்சகர்கள்**

(a) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலத்தில் 04 திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி.

**மற்றும்**

(b) மருந்தகத் துறையில் ஓர் ஆண்டு பயிற்சி (NVQ அளவு 2 அல்லது 3 இற்கு இணையானது)

**உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. நிரந்தரப் பதவி ஒன்றில் தொடர்ச்சியாக ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் மேலுள்ள கல்வி/ தொழில்பயிற்சியை பெற்ற, ஆரம்ப நிலை - தேர்ச்சியற்ற SPMC ஊழியராக இருத்தல்.

**சம்பள அளவு:**

PL-2 -2016 : ரூபா 25,750/= – 10x270 – 10x300 – 10x330 -12x350 – 38,950/=

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை**

**நலம்சார் கொடுப்பனவுகள்:**

- வரவு மற்றும் செயல்திறன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு.
- பயன்படுத்தப்படாத வருடாந்திர மற்றும் சுகயீன விடுமுறைகளை பணமாக்குதல்.
- மருத்துவ காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ மீளளிப்புத் திட்டம் வழங்கப்படும்.
- ஊ.சே.நி. இற்காக சம்பளத்தின் 15% கூட்டுத்தாபனம் பங்களிப்புச் செய்யும் அதேவேளை ஊழியர் 10% பங்களிப்புச் செய்வார்.
- ஊ.ந.நி. இற்காகவும் சம்பளத்தின் 03% கூட்டுத்தாபனம் பங்களிப்புச் செய்யும்.
- 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் மற்றும் MSD சுற்றுநிருபத்திற்கு அமைய பணிக்கொடை வழங்கப்படும்.
- ஏனைய நலம்சார் கொடுப்பனவுகள்.

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- பெயர், முகவரி மற்றும் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்து கல்வி சான்றிதழ்களின் உறுதிசெய்யப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். http://www.spmclanka.lk என்ற அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையதள பக்கத்தில் இருந்து விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்ய முடியும்.
- அரச திணைக்களம் மற்றும் சட்டரீதியான சபை ஊழியர்களின் விண்ணப்பங்கள், அவர் தேர்வு செய்யப்பட்டால், நியமனத்தை பெறுவதற்கு விண்ணப்பதாரரை விடுவிப்பதை உறுதிப்படுத்தி தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
- விண்ணப்பத்தை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு அதனை இந்த விளம்பரம் வெளியாகி 10 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட்**
**இரத்மலானை.**

## பல ஜனநாயக நாடுகள்... (12ஆம் பக்கத் தொடர்)

நாட்டின் தலைமைத்துவத்தின் தூர நோக்குடைய திட்டமிடலின் படி வெற்றிபெற்ற நாடுகளான சிங்கப்பூர் மற்றும் மலேசியாவை எடுத்துக் கொண்டால் லீக் குவான் யூவும் மஹதிர் முகம்மதுவும் பாமரர்களல்ல. நன்கு கற்றறிந்த அறிஞர்கள். எனவே தான் அவர்களால் தத்தமது நாட்டை விவேகபூர்வமாக தாம் அடைய எத்தனித்த இலக்குகளை நோக்கி நகர்த்த முடிந்தது. எய்த முடியாத திட்டங்களை அவர்கள் வகுக்கவில்லை. தான்தோன்றித் தனமாக அவற்றில் தலையிடவுமில்லை.

மேற்குலக ஜனநாயகங்களில் ஆளுங்கட்சி தான்தோன்றித் தனமாகச் செயற்பட முடியாதவாறு ஜனநாயக நிறுவனக் கட்டமைப்பு வலுவாக உள்ளது. எதிர்க்கட்சிகள், அரசாங்கம் கொண்டுவரும் நல்ல திட்டங்களுக்கு பூரண ஆதரவு வழங்கும் அதேவேளை அரசாங்கம் மோசமாக நடந்து கொண்டால் கடுமையாக எதிர்க்கவும் செய்கின்றன.

ஊடகங்கள் உள்ளிட்ட ஜனநாயகத்தின் தூண்கள் அத்தகைய நடவடிக்கைகளை சமூக வெளியில் பகிரங்கமாக விமர்சித்து எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக பொதுமக்கள் தேர்தலில் வாக்களித்ததோடு தமது ஜனநாயகக் கடமை முடிந்துவிட்டதாகவும் அடுத்த தேர்தல் வரை தமக்கு வேலையில்லை என்று நினைப்பதில்லை.

அரசாங்கத்தின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து கவனித்து தமது எதிர்பார்ப்புக்கு மாறாக செயற்படுமிடத்து ஜனநாயக வழிகள் மூலம் அவற்றைத் தடுத்து நிறுத்தவும் தவறுவதில்லை. ஆனால் பிரபல ஜனநாயகம் நிலவும் கீழைத்தேய நாடுகளில் மக்களின் குரல்கள் நசுக்கப்பட்டிருக்கும். மீறி ஒலித்தால் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும். ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் இத்தகைய நிலை தான் தொடர்கிறது.

தற்போது இணைய வசதிகளுடன் கூடிய இலத்திரனியல் தொடர்புகள் மூலம் சமூக இணைய வெளியில் மக்களின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருந்தாலும் ஆட்சியில் இருப்பவர்கள் அக்குரல்களின் நியாயமான கோரிக்கைகளை கண்டுகொள்வதில்லை. தொழிற்சங்கங்கள் வர்த்தக சம்மேளனங்கள் உள்ளிட்ட உள்நாட்டு நிறுவனங்களின் அழுத்தங்களும் பெரிதாக எடுபடுவதில்லை. சர்வதேச நிறுவனங்கள் ஊடான அழுத்தங்கள் வெளிப்பட்டாலும் தாய் நாட்டுக்கு எதிரான சர்வதேச சதி என்ற பிரபல கருத்துருவாக்கத்தின் மூலம் அதனை சமநிலைப்படுத்தி விடுகின்றனர்.

அரசியலில் கல்வி கற்றவர்களின் பிரவேசமும் தமது நாட்டைத்தாண்டிய உலகம் பற்றி பரந்த பார்வையும் இத்தகைய நாடுகளுக்கு இப்போதைய அவசியத்தேவையாக உள்ளது. ஆனால் இத்தேவைப்பாட்டை அடைய இந்நாடுகளுக்கு பல தசாப்தங்கள் தேவைப்படலாம்.

## உக்ரைனை மையப்படுத்தி... (12ஆம் பக்கத் தொடர்)

ஏறக்குறைய புடினது உத்திகள் போரை தயார்நிலைக்குள் வைத்துக் கொண்டு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவை விலக்குவதாகவே இருக்கிறது அல்லது அமெரிக்காவுக்கு பதிலாக ஐரோப்பாவுக்குள் ரஷ்யாவை நிலைநிறுத்துவதாகவே உள்ளது. ரஷ்யாவே இருதய நிலம் என்பதை மீளவும் உறுத்திப்படுத்தும் நகர்வுகளையே புடின் மேற்கொள்கின்றார். அவரது நேட்டோ தொடர்பிலான அச்சம் நியாயமானதாக அமைந்தாலும் ஐரோப்பாவுடனான நெருக்கமே பிரதான நகர்வாக தென்படுகிறது. அது தனித்து புவிசார் அரசியலாக அல்லாது புவிசார் பொருளாதாரமாகவும் தென்படுகிறது. இரு வல்லரசுகளது இழுபறிக்குள்ளும் உக்ரைன் அரசியல் இருப்பு அகப்பட்டுள்ளது ரஷ்யா தனது அயல் நாடுகளை பில்லாந்துமயவாக்கத்திற்குள் உட்படுத்த முயலுகிறதைக் காணமுடிகிறது.



# எதற்காக ஏன் கோபம்?

கோபம் ஏன் வருகிறது? பரிணாம ரீதியாக பார்த்தால் இரண்டு காரணங்களை சொல்கிறார்கள் அறிவியலாளர்கள். முதல் காரணம், கோபம் என்பது ஒரு விலங்கு தன்னை எதிரிகளிடமிருந்து தற்காத்து கொள்ளவும் இரை தேடல், இணை தேடல் போன்ற விஷயங்களில் தனக்கு போட்டியாக வருபவர்களை பயமுறுத்தி விரட்டவும் உருவான ஒரு செயல்.

இதற்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. ஒருவரது நடவடிக்கை நமக்கு பிடிக்கவில்லை அல்லது நாம் எதிர்பார்த்த ஒன்று நடக்கவில்லை என்றால், அவரை நமது வழிக்குக் கொண்டுவர உதவும் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கலாம். ஆக, எல்லா கோபத்துக்கு பின்னாலும் ஒரு ஏமாற்றம் இருக்கிறது. கோபத்தின் போது மூளையில் பல வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கோபம் அதிகம் வரும்போது உணர்வுப்பூர்வமான நிலையில் அறிவுப்பூர்வமாக யோசிக்கும் திறன் வெகுவாக குறைந்து விடுகிறது.

கோபத்தை குறைப்பதற்கும் அடுத்து என்ன செய்யலாம் என அறிவுப்பூர்வமாக யோசிப்பதற்கும் மூளையில் சில பகுதிகள் உள்ளன. மன அழுத்தம், விபத்து, மூளையில் ஏற்படும் நோய்கள், மது போன்றவை மூளையின் கோபத்தை கட்டுப்படுத்தும் பகுதியை பாதிக்கின்றன. அதனால் சிறு விஷயங்களுக்குக்கூட கட்டுப்படுத்த முடியாமல், ஏன் காரணமே இல்லாமல் கூட கடுங்கோபம் ஏற்படுகிறது. கோபப்படும்போது உடலில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இரத்த அழுத்தம் அதிகரிக்கும். இதயம் கண்டபடி துடிக்கும். கோபம் வரும் போது உடல் கொதிக்கத்தான் செய்கிறது. அதனால் தான் 'ஆறுவது சினம்' என ஔவையார் கூறினார்.

அளவுக்கு அதிகமான கோபத்தை கட்டுப்படுத்துவது எப்படி என்பது பலரது கேள்வி. எதிர்பார்ப்புகளே ஏமாற்றத்தை தருகின்றன. எதிர்பார்ப்புகள் இல்லாமல் ஏற்க தொடங்கினாலே பாதி கோபம் குறைந்துவிடும். வீட்டினுள் நுழைந்ததும் பொருட்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள். அவ்வாறு இல்லை என்றவுடன் உடனே ஏமாற்றம் வந்து கோபமாக வெடிக்கிறது. இருப்பதை அப்படியே ஏற்றுக்கொண்டால் ஏமாற்றமும் வராது. கோபமும் வராது.

கோபம் என்பது சடுதியாக நடைபெறும் ஒரு பழக்கம். சூடான பாத்திரத்தை தொட்டவுடன் கை சடுதியாக பின்செல்வதுபோல், ஒரு நிகழ்வு நடந்ததும் யோசிக்காமல் சடுதியாகக் கோபப்பட்டு பலரும் பழகியிருக்கிறோம். நாம் 'ஆத்திரமடையும் ஒவ்வொரு நிமிடமும் நாம் அறுபது விநாடி மகிழ்ச்சியை இழக்கிறோம்' என எமர்சன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. அதற்காக கோபம் என்பதே கூடாதா எனக் கேட்டால், அதுதான் இல்லை. நியாயமான காரணங்களுக்காக சரியான முறையில் கோபம் கொள்ளவே வேண்டும்.

# ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்

கர்ப்ப காலத்தில் மட்டும் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவதை தவிர்த்து, தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமான, சரிவிகித உணவுப் பழக்கத்தை தொடர வேண்டும்.

பெண்களின் ஆரோக்கியத்தில் ஏற்படும் பிரச்சினைகள் அவர்களின் மொத்த வளர்ச்சியையும் பாதிக்கிறது. எனவே, பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியம். நம் நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள பெண்கள் அதிகமாக உள்ளனர். ஊட்டச் சத்தின்மையால் உடல்நலம் மட்டுமன்றி, மனநலமும் பாதிக்கப்படுகிறது. வீட்டிலுள்ள எல்

லோரும் சாப்பிட்ட பின் கடைசியாக சாப்பிடுவது, சாப்பாடு தீர்ந்து போனால் டீ குடித்து, வயிறை நிரப்பிக் கொள்வது என பெண்களின் உணவு தியாகத்தை, பல வீடுகளிலும் பார்க்கலாம். '

போதிய விழிப்புணர்வு இல்லாமல், மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் முற்றிய நிலை வரை, பெரும்பாலான பெண்கள் செல்கின்றனர். மார்பக புற்றுநோய் அறிகுறிகளை அறியும் சுய பரிசோதனைகளை, வீட்டிலேயே செய்து கொள்ள முடியும் என்றாலும், ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவரிடம் சென்று சோதித்துக் கொள்வது நல்லது. 40 வயதுக்கு மேல், 'மெமோகிராம்' சோதனையை செய்து பார்ப்பதும் அவசியம். கர்ப்பப்பை வாய் புற்றுநோயை கண்டறிய, 'பொப் ஸ்மியர்' சோதனை செய்து கொள்ள வேண்டு ம். 11 வயது துவங்கி 40 வயது வரை உள்ள பெண்கள், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை தடுக்கும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்.

பெண்களில், 40 வயதுக்கு மேல் உள்ளவர்களைத் தாக்கும் பிரச்சினை, ஆஸ்டியோபொரோசிஸ். விட்டமின் டி பற்றாக்குறையால் ஏற்படும் இந்த பாதிப்பால் எலும்புகள் வலு இழந்து போகும்.

லேசாக அடிபட்டாலும் எலும்புகள் உடையக் கூடும். 40 வயதுக்கு மேலானவர்கள், எலும்பின் அடர்த்தியை கண்டறியும், 'டெக்சா ஸ்கேன்' சோதனையை செய்து கொள்ளலாம். எலும்பு தேய்மானத்தை துவக்கத்திலேயே கண்டறிந்தால் ஊசி மற்றும் மருந்துகள் மூலம் சரி செய்து விட முடியும். பெண்கள் தங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் எனில், முதலில் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டும். உடலும், உள்ளமும் உறுதியாக இருந்தால் தான் எதையும் சாதிக்கலாம்.





## மங்கையர் முற்றம்



## மசாலா சீஸ் பூரி

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| கோதுமை மாவு | - | 1 கப் |
| மைதா மா | - | 1 கப் |
| உருளைக்கிழங்கு | - | 2 |
| வெங்காயம் | - | 2 |
| பச்சை மிளகாய் | - | 3 |
| எலுமிச்சை சாறு | - | 1 1/2 டீஸ்பூன் |
| சீஸ் | - | 1 துண்டு (துருவியது) |
| மிளகாய் தூள் | - | கால் டீஸ்பூன் |
| கரம் மசாலா தூள் | - | ஒரு சிட்டிகை |
| இஞ்சி | - | சிறிய துண்டு |
| நெய் | - | சிறிதளவு |
| எண்ணெய், உப்பு | - | தேவையான அளவு |

**செய்முறை**

**உருளைக்கிழங்கை வேக வைத்து, தோல் உரித்து, கட்டியில்லாமல் மசித்துக் கொள்ளவும். வெங்காயத்தை பொடியாக நறுக்கவும். (அல்லது துருவிக் கொள்ளவும்). இஞ்சி பச்சை மிளகாயை விழுதாக அரைக்கவும். வெங்காயம், அரைத்த விழுது சேர்த்து வதக்கவும். கோதுமை மாவு, மைதா மாவுடன் துருவிய சீஸ், வதக்கிய வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய் விழுது, மசித்த உருளைக்கிழங்கு, நெய், மிளகாய்த்தூள், கரம் மசாலாத்தூள், எலுமிச்சை சாறு, உப்பு சேர்த்துப் பிசையவும் (தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் சேர்க்கலாம்). மாவை பூரியாக உருட்டி எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.**



# HELMET பாவனையும் முடி உதிர்தலும்

தலை கவசம் அணிந்தால் முடி உதிரும் என்ற எண்ணம் பெரும்பாலான மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களிடம் இருக்கிறது.

இரு சக்கர வாகனங்களில் பயணிப்பவர்கள் தலைகவசம் அணிவது அவசியமானது. உயிர் காக்கும் கவசமாக செயல்படும் அதனை அணிவதை அசௌகரியமாக கருதுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தலை கவசத்துக்கும், முடி உதிர்தலுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

தலைகவசம் அணியும்போது தலை முடியின் வேர்க்கால்களுக்கு செல்லும் காற்று (ஆக்சிஜன்) தடைபடும். அப்படி காற்று உட்புகுவதற்கு வழி இல்லாமல் போவதால் முடியில் வியர்வை படிந்துவிடும் என்பது வாகன ஓட்டிகளின் வாதமாக இருக்கிறது. ஆனால் அது தவறானது. ஏனெனில் வெளி காற்றில் இருந்து கிடைக்கும் ஒக்சிஜன் முடியின் வேர்க்கால்களுக்கு தேவைப்படுவதில்லை. அதற்கு தேவையான ஒக்சிஜன் இரத்தத்தில் இருந்து கிடைத்துவிடும்.

தலைமுடியை இறுக்கமாக வைத்திருக்கும் பட்சத்தில்தான் முடியின் வேர்க்கால்கள் வலிமை இழந்து முடி உதிர்வு பிரச்சினை ஏற்படுகிறது. குறிப்பாக பெண்கள் இறுக்கமாக தலைபின்னியபடி ஹெல்மெட் அணிந்து, ஆண்கள் குளித்ததும் தலைமுடியை நன்றாக உலரவைக்காமல் ஹெல்மெட் அணிவது போன்ற காரணங்கள் முடியின் ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடியவை.

தலைகவசம் எப்போதும் சுத்தமான நிலையில் இருக்குமாறு பராமரிக்க வேண்டியதும் அவசியம். அவற்றில் அழுக்கு படிந்திருக்கும் நிலையில் அப்படியே அணிவதுதான் முடியின் ஆரோக்கியத்திற்கு கேடாக அமைகிறது.

தலை கவசத்தை மென்மையாக கையாள வேண்டும். பருத்து துணி அல்லது கர்ச்சிப்பை தலையில் அணிந்து விட்டு அதன் மீது தலைகவசம் பயன்படுத்துவது தலை முடிக்கு பாதுகாப்பானது.

Ladies Fashion







# வெங்காயம் எதற்கெல்லாம் மருந்தாகிறது?

வெங்காயத்தில் புரத சத்துக்கள், தாது உப்புகள், விட்டமின்கள் உள்ளன. வெங்காயத்தின் காரத்தன்மைக்கு காரணம் அதில் உள்ள அலைல் புரோப்பைல் டை சல்பைடு ஆகும். இதுவே வெங்காயத்தின் நெடிக்கும், நறுக்கும் போது நமது கண்களில் கண்ணீர் வரக் காரணம் ஆகும்.

வெங்காயத்தில் சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் என்று இரண்டு வகை இருக்கிறது. ஜலதோஷம் வந்தால் ஒரு சின்ன வெங்காயத்தை மென்று சாப்பிட்டு வெந்நீர் குடித்தால் ஜலதோஷம் குறையும், தும்மல், நீர்க்கடுப்பு குணமாகும்.

வெங்காயத்தை பொடியாக நறுக்கி நல்லெண்ணெய் சேர்த்து வதக்கி, தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தக்கொதிப்பு குறைந்து, இதயம் பலமாகும். இவ்வாறு வெங்கயாத்தின் பயன்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இது உடலுக்கு மட்டுமல்ல தலைமுடிக்கும் நல்ல பலனை தரும். பொடுகு இருப்பவர்கள் வெங்காயத்தை கொண்டு எண்ணெய் தயாரித்து பூசினால் பொடுகு பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**எண்ணெய் தயாரிக்கும் முறை**

வெங்காயம் 100 கிராம் (சிறிதாக நறுக்கிய)
தேங்காய் எண்ணெய் 1 லீற்றர்

நறுக்கிய வெங்காயத்தை எண்ணெயில் கறுப்பு நிறம் வரும் வரை பொறிக்கவும். பொறிந்த வெங்காயம் எண்ணெயின் மேல் மிதக்கும் போது அடுப்பில் இருந்து இறக்கி ஆறவிடவும். ஆறிய எண்ணெயை நன்கு வடித்து எடுத்து ஒரு போத்தலில் ஊற்றி வைக்கவும்.

இந்த எண்ணெயை அடிக்கடி தலையில் தேய்த்து நன்கு மசாஜ் செய்து வருவதால் தலையில் உள்ள பொடுகு விரைவில் நீங்கி தலைமுடிக்கும் நல்ல ஆரோக்கியத்தைத் தரும்.



சினி மஞ்சரி

# போலிகளிடம் ஏமாற வேண்டாம் – டிம்பிள் ஹயாதி எச்சரிக்கை



விஷால் நடிப்பில் வெளியான வீரமே வாகை சூடும் படத்தில் கதாநாயகியாக நடித்த டிம்பிள் ஹயாதி போலிகளிடம் ஏமாற வேண்டாம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விஷாலின் வீரமே வாகை சூடும் படத்தில் கதாநாயகியாக நடித்தவர் டிம்பிள் ஹயாதி. பிரபுதேவாவின் தேவி2 படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார்.

இவர் தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்துள்ளார். தெலுங்கில் ரவிதேஜாவுடன் நடித்த கில்லாடி படம் திரைக்கு வந்துள்ளது. இவர் சமூக வலைத்தளத்தில் அடிக்கடி தனது கவர்ச்சி புகைப்படங்களையும் பகிர்ந்து வருகிறார்.

இந்த நிலையில் டிம்பிள் ஹயாதி பெயரை பயன்படுத்தி சிலர் திரையுலக முக்கிய பிரமுகர்களுக்கு செல்போனில் குறுந்தகவல் அனுப்பி மோசடியில் ஈடுபடுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து டிம்பிள் ஹயாதி கவனத்துக்கு சிலர் கொண்டு சென்றனர். இதனால் அதிர்ச்சியான அவர் போலிகளிடம் ஏமாற வேண்டாம் என்று எச்சரித்துள்ளார். சமூக வலைத்தள பக்கத்தில் டிம்பிள் ஹயாதி வெளியிட்ட பதிவில், "குறிப்பிட்ட எண்ணில் இருந்து வரும் அழைப்புகளை நம்பவேண்டாம். அந்த எண்ணில் இருந்து பேசுபவர்கள் எனது பெயரை பயன்படுத்தி முறைகேட்டில் ஈடுபடுகின்றனர். எனவே அந்த நம்பரை பிளாக் செய்து விடுங்கள். புகாரும் செய்யுங்கள்" என்று கூறியுள்ளார்.



நடன இயக்குனர், கதாநாயகன், இயக்குனர் என பல பரிணாமங்களில் பயணித்து கொண்டிருக்கும் பிரபு தேவாவின் அடுத்த படத்திற்கு ஜப்பானிய போர் வீரனின் பெயரை வைத்துள்ளனர்.

பிரபு தேவா இந்திய சினிமாவில் நடன இயக்குனர், கதாநாயகன், இயக்குனர் என பல பரிணாமங்களில் பயணித்து கொண்டிருப்பவர் பிரபு தேவா. இவர் தற்போது 'யங் மங் சங்', 'பஹிரா', 'பொய்க்கால் குதிரை', 'மை டியர் பூதம்' போன்ற பல படங்களில் நடித்துவருகிறார். இவர் கடைசியாக நடித்த "தேள்" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் நடிகர் பிரபு தேவா அடுத்தாக இயக்குனர் சாம் ரோட்ரிக்ஸ் இயக்கும் படத்தில் நடிக்கிறார். இப்படத்தில் விடிவி கணேஷ், மாஸ்டர் மகேந்திரன் போன்ற பல முன்னணி நடிகர்கள் நடிக்கின்றனர். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை கைதி, மாஸ்டர் போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் லோகேஷ் கனகராஜ் அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இப்படத்திற்கு 'முசாசி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஜாய் பிலிம்ஸ் பாக்ஸ் என்டர்டைமென்ட் நிறுவனத்தின் சார்பில் ஜான் பிரிட்டோ தயாரிக்கிறார். ஜப்பானிய போர்வீரரான முசாசியின் பெயரை இப்படத்திற்கு வைத்திருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# போர் வீரராக மாறும் பிரபுதேவா



இசையமைப்பாளர் வித்யாசாகரின் மகன் ஹர்ஷ வர்தன், சிபிராஜ் நடிக்கும் புதிய படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாக இருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஹர்ஷ வர்தன் 2003இல் வெளியான ஸ்டுடண்ட் நம்பர் 1 படத்திம் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானர் நடிகர் சிபி சத்யராஜ். அதன்பின் அவருடைய தந்தை சத்யராஜுடன் சேர்ந்து மன்னின் மைந்தன், வெற்றிவேல் சக்திவேல் படங்களில் நடித்தார். இவர் நடிப்பில் வெளியான நாய்கள் ஜாக்கிரதை, ஜேக்சன் துரை, கட்டப்பாவ காணோம், சத்யா போன்ற பல படங்களில் நடித்து அனைவரையும் கவர்ந்தார். இவர் நடிப்பில் கடைசியாக வெளியான கபடதாரி படம் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றார். இவர் நடிப்பில் மாயோன், ரங்கா, வட்டம், ரேஞ்சர் உள்ளிட்ட படங்கள் வெளியாக உள்ளன.

அதன்பின் அறிமுக இயக்குனர் பாண்டியன் ஆதிமூலம் இயக்கும், புதிய படத்தில் சிபி நடிக்க உள்ளார். இவரின் 20வது படமாக இது உருவாகிவருகிறது. பிக் பிரிண்ட் பிக்சர்ஸ் சார்பில் கார்த்திகேயன் இப்படத்தை தயாரிக்கிறார். இந்தப் படத்தில் பிரபல இசையமைப்பாளர் வித்யாசாகரின் மகன் ஹர்ஷ வர்தன் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இவர் ஏ.ஆர்.ரஹ்மான், ஜி.வி.பிரகாஷ், தமன் போன்ற பல முன்னணி இசையமைப்பாளருடன் பணியாற்றியிருக்கிறார். இப்படத்தில் பின்னணி இசைக்கு அதிக வாய்ப்பு இருப்பதால் இந்தப் படத்தை ஆர்வத்துடன் ஒத்துக் கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

# தமிழ் சினிமாவில் அறிமுகமாகும் வித்யாசாகரின் மகன்

# பிரபல மலையாள நடிகர் கோட்டயம் பிரதீப் மாரடைப்பால் மரணம்



மலையாள திரையுலகின் முன்னணி நடிகரான கோட்டயம் பிரதீப் மாரடைப்பால் காலமானார். கோட்டயம் பிரதீப் பிரபல மலையாள நடிகர் கோட்டயம் பிரதீப் மாரடைப்பால் கொச்சியில் காலமானார். அவருக்கு வயது 61 ஆகும். அவரது மறைவு கேரள திரையுலகத்தினர் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அவரது மறைவுக்கு கேரள திரையுலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

2001ஆம் ஆண்டு தனது 40வது வயதில் ஐ.வி. சசி இயக்கிய 'ஈ நாடு இன்னலே வரே' படத்தின் மூலம் திரையுலகின் அறிமுகமான கோட்டயம் பிரதீப் பல்வேறு திரைப்படங்களில் நகைச்சுவை கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். 'ராஜமாணிக்யம்', '2 ஹரிஹர் நகர்', 'ஒரு வடக்கன் செல்ஃபி' உள்ளிட்ட படங்களில் இவரது நகைச்சுவையின் மூலம் மிகவும் பிரபலமடைந்தார். 2016ஆம் ஆண்டு சிறந்த துணை நடிகருக்கான ஏசியாநெட் காமெடி விருது இவருக்கு வழங்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு கவுதம் மேனன் இயக்கத்தில் வெளியான 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தில் ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

அப்படத்தில் இவர் பேசும் வசனங்கள் அப்போது மிகவும் பிரபலமாக இருந்தன. அதன் தாக்கமாக அதே போன்றதொரு கதாபாத்திரத்தை இயக்குநர் அட்லீ தனது 'ராஜா ராணி' திரைப்படத்தில் அவருக்கு கொடுத்தார். இவரது மறைவு மலையாள திரையுலகில் மிக பெரிய இழப்பு என்று ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு வருகின்றனர்.



நடிகை சமந்தா தமிழ் சினிமா பெரிய அளவில் கொண்டாடும் ஒரு பிரபலம். இவரது நடிப்பில் அடுத்து காத்து வாக்குல ரெண்டு காதல் படம் வெளியாக இருக்கிறது.

விக்னேஷ் சிவன் இயக்க விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா ஆகியோர் நடித்துள்ளார்கள், இப்படத்தை தாண்டி தெலுங்கு மற்றும் ஆங்கிலத்திலும் சில படங்களின் படப்பிடிப்பில் பிஸியாக இருக்கிறார்.

இந்த நேரத்தில் தான் விஜய்யின் பீஸ்ட் பட அரபிக் குத்து பாடலுக்கு நடனம் ஆடி வீடியோ வெளியிட்டுள்ளார்.

# தனுஷுடன் விவாகரத்திற்கு பிறகு ஐஸ்வர்யா விளக்கம்



தமிழ் சினிமாவில் நாங்கள் பிரிகிறோம் என்று வருட ஆரம்பத்தில் ரசிகர்களுக்கு ஷாக் கொடுத்தவர்கள் தனுஷ்ஐஸ்வர்யா ஜோடி.

அறிவிப்புக்கு பின் தனுஷ் நானே வருவேன் படப்பிடிப்பில் பிஸியாக ஐஸ்வர்யா தனி குழுவுடன் இயக்கும் இசை ஆல்பத்தில் பிஸியாக வேலை செய்து வருகிறார்.

அண்மையில் ஐஸ்வர்யா தனது ஆல்பம் உருவாக்கும் குழுவுடன் இருக்கும் புகைப்படம் வர தனுஷ் தனது மகன் யாத்ராவுடன் இருக்கும் போட்டோ வெளியாகி இருந்தது.

தற்போது ஐஸ்வர்யா ஒரு ஆங்கில நாளிதழுக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் அவரிடம் காதல் குறித்து கேள்வி கேட்டுள்ளனர். ஐஸ்வர்யா அதற்கு, காதல் ஒரு பொதுவான உணர்வு, ஒரு ஆளுக்கும் அவரின் தனிப்பட்ட விஷயத்துக்கும் தொடர்பில்லை.

நான் என் தந்தையை நேசிக்கிறேன், நான் என் அம்மாவை நேசிக்கிறேன், நான் என் குழந்தைகளை நேசிக்கிறேன்.

எனவே, அன்பை ஒரு தனிமையில் கட்டுப்படுத்தக்கூடாது என்று நான் நினைக்கிறேன். ஆம், நான் காதலிக்கிறேன் என்று கூறியிருக்கிறார்.

# பீஸ்ட் பட பாடலுக்கு ஆட்டம் போட்ட நடிகை சமந்தா

# எச்.ஐ.வி.தொற்றாளர்கள் கூச்சப்பட வேண்டாம்; எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**விசேட வைத்திய நிபுணர் தர்ஷனி மல்லிகாரச்சி (பாலியல் நோய்கள் மற்றும் HIV தொடர்பான) தகவல், கல்வி, தொடர்பாடல், ஆலோசனை மற்றும் ஆணுறைகள் பிரசாரம் தொடர்பான தேசிய தொடர்பாடல் அதிகாரியுடன் ஒரு சந்திப்பு**

**இலங்கையில் எச்ஜவி தொற்றின் தற்போதைய நிலைமை எவ்வாறு உள்ளது?**

HIV வைரஸை அறிந்துகொண்டு 40 லட்சம் தசாப்தங்களுக்கு பின்னரும் இலங்கை HIV/AlDS தொற்றுக்கான குறைந்தளவு வாய்ப்பினை கொண்ட நாடாகவே காணப்படுகின்றது. HIV பரவல் >0.1% மாகவே தொடர்ந்தும் நிலவுகின்றது. 2021ம் ஆண்டு முடிவில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த, HIV தொடர்களின் எண்ணிக்கை 4419 ஆகும். 2021 ஆம் ஆண்டில் புதிதாக 425 நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்ட தோடு பாதிக்கப்பட்ட நோயாளிகளிடையே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான விகிதம் 5:1 ஆகும். 15 தொடக்கம் 24 வயதான வர்களுக்கிடையே HIV பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து காணப்படுகின்றது.

புதிய மதிப்பீடுகளின் படி தற்போது HIV தொற்றளர்கள் 3700 பேர் வரையில் உள்ளதோடு அவர்களில் HIV தொற்று நிலைமையை அறிந்தவர்களின் எண்ணிக்கை 70% என கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் 83% மானோர் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

**சிலர் இரத்தப் பரிசோதனைக்காக பாவிக்கப்படும் ஊசியின் ஊடாக HIV தொற்றை பரப்புவதற்கு முயற்சி செய்வதாகக் கூறி அண்மைய நாட்களில் ஊடகங்களில் ஒலிநாடாக்கள் சில பரப்பப்பட்டன. அதனைப் பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? HIV பரவும் விதம் குறித்து தெளிவுபடுத்த முடியுமா ?**

HIV தொற்று ஏற்படும் மூன்று பிரதான முறைகள்,

1. பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள்.
2. ரத்தம் மற்றும் ஏனைய அவயவ திரவங்கள் ஊடாக.
3. தொற்றினையுடைய தாயிலிருந்து அவரது பிள்ளைக்கு.

நீங்கள் கூறிய ஒலிநாடாவை நானும் கேட்டேன். எவ்வாறாயினும் இந்த ஒலிநாடா மூலம் சமூகத்துக்கு தவறான கருத்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ரத்தம் மற்றும் சில அவயவ திரவங்கள் மூலம் எச்ஜவி பரவக்கூடும். ஆனால் அது புதிய ரத்தம் மற்றும் அவயவ திரவங்கள் மூலமாகவாகும். உதாரணமாக புதிய ரத்தம் காணப்படும் ஒரே ஊசியை பாவித்து குழுவாக போதைப் பொருட்களை பாவிக்கும் போதாகும். இரத்தப் பரிசோதனைக்காக பாவிக்கப்படும் ஊசியில் உள்ள இரத்தம் விரைவில் காய்ந்து விடும் அதனால் அந்த ஒலிநாடாவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அவர்கள் விவரிக்கும் விதத்தில் HIV தொற்று பிறருக்கு பரவ வாய்ப்பில்லை. இதற்கு முன்னரும் கூட திரைப்பட அரங்குகளில் மற்றும் கடற்கரைகளில் மனிதர்களால் HIV யை பரப்ப தொற்றுள்ள ஊசிகள் அவ்விடங்களில் போடப்பட்டன என ஒலி, ஒளி நாடாக்கள் மூலம் தெரிவிக்கப்பட்டன. சூரிய வெளிச்சம் மற்றும் வெப்பம் படும் போது இரத்தம் விரைவாக காய்ந்து போவதால் மற்றும் சூரிய வெளிச்சம் மற்றும் சூரிய வெப்பத்தால் HIV வைரஸ் அழிந்து போவதால் அந்த ஊசிகளில் HIV வைரஸ்கள் கொண்ட புதிய ரத்தம் காணப்படாது. ஆகவே இது உண்மையில் மனித வாழ்க்கையில் சாத்தியமானதல்ல.

இங்கு குறிப்பிட வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயம் , ரத்த பாவனையின் போது ஏதேனும் தொற்றுகள் உள்ளதா என பரிசோதிக்கும் போதும் சுகாதார ஊழியர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அனைத்து நபர்களுக்கும் புதிய ஊசியையே பாவிக்கின்றார்கள். சுகாதார ஊழியர்கள் ரத்த மாதிரியை பெறுவதற்கும் மற்றும் ஊசி மருந்து ஏற்றுவதற்கும் புதிய ஊசிகளையே பயன்படுத்துகின்றார்கள். ஒருபோதும் பாவித்த ஒரு ஊசியை உங்கள் உடம்பில் செலுத்துவதற்கு நீங்கள் அனுமதிக்காதீர்கள்.

**HIV தொற்று அவதானம் உள்ளவர்கள் யார்?**

பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடுபவர்கள் மற்றும் ஒரே ஊசியை பாவித்து குழுவாக போதைப்பொருளை பாவிக்கும் எந்த ஒரு நபருக்கும் HIV தொற்று ஏற்படும் ஆபத்து உள்ளது. அதனால் சமூகத்தின் பொறுப்பான நபராக நாம் அனைவரும் HIV பரவல் தொடர்பாக அறிந்திருக்க வேண்டியதோடு உங்களுக்கு HIV தொற்று ஏற்படக்கூடிய அவதானம் காணப்பட்டால் அதற்கான பரிசோதனையை செய்துகொள்ள எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

எவ்வறாயினும் சில நபர்கள் அவர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப அதிக அவ தானத்துக்கு உரியவர்களாக கருதப்படுகின்றார்கள். விசேடமாக பாதுகாப்பற்ற குதவழி உடலுறவில் ஈடுபடுபவர்கள், பலருடன் பாலியல் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட நபர்கள், பணத்துக்காக பாலியல் தொழிலில் ஈடுபடும் நபர்கள், இறுதியாக ஒரே ஊசியை பலரும் பாவித்து போதைப் பொருளை பாவிக்கும் நபர்கள் என்போர் அவற்றுள் அடங்குவார்கள்.

**HIV பரிசோதனை முக்கியமானது என நீங்கள் கூறினீர்கள்? ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?**

HIV பரிசோதனையை மேற் கொள்வதால் பல நன்மைகள் உண்டு.அதில் HIV என்பது கட்டுப்படுத்தக் கூடிய தொற்றாகும். ஆனால் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு முதலில் அதனை அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொள்ளாமல் அதனை கட்டுப்படுத்த ஒருகாலமும் முடியாது. அதனால் தொற்றுக்குள்ளான நபரை அறிந்து கொள்ளும் ஒரே வழி HIV க்கான இரத்தப்பரிசோதனை ஆகும். விஷேடமாக நீங்கள் HIV தொற்று அவதானம் உள்ளவரானால் கட்டாயமாக HIV க்கான பரிசோதனையை செய்து கொள்ள வேண்டும்.தேசிய பாலியல் நோய்கள்/ எய்ட்ஸ் தடுப்பு திட்டம் ஏனைய தரப்புடன் இணைந்து தொற்றினை தடுப்பதற்கு மற்றும் தொற்றுக்குள்ளான நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.



விசேட வைத்திய நிபுணர்
தர்ஷனி மல்லிகாரச்சி

தொற்றுக்குள்ளாவர்களை அறிந்து கொண்ட பின்னர் நாம் அவர்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஏனைய சுகாதார சேவைகளை இலவசமாக பெற்றுக் கொடுக்கின்றோம். தாமதமின்றி HIV க்கான சிகிச்சையை ஆரம்பித்தால் தொற்றாளர்கள் எய்ட்ஸ் நோய்க்கு உள்ளாவதை தடுக்க முடியும் அதனால் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் சாதாரண வாழ்வுக் காலத்தை வாழக் கூடிய சந்தர்ப்பத்தை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும். அதுமாத்திரமல்ல HIV தொற்றுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் HIV பரவுவதையும் தடுக்க முடியும்.

அது மாத்திரமல்ல HIV இல்லாத நபரொருவர் எதிர்காலத்தில் தொற்றுக்கு உள்ளாவதை தடுப்பதற்கும் தேவையான ஆரம்ப பாதுகாப்பை மேற்கொள்ள முடியும் என்பதால் HIV நிலைமை பற்றி அனைவரும் அறிந்திருப்பது நல்லது. அது மனதுக்கு ஆறுதலை பெற்றுத் தருவதோடு நாம் நேசிப்பவர்களை HIV தொற்றிலிருந்து பாதுகாக்க மேலும் ஒரு சந்தர்ப்பத்தை பெற்றுத் தரும்.

**பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் HIV பரவுவதை எவ்வாறு தடுக்க முடியும்?**

நாம் தொடர்ந்து அவர்களுக்கு சரியான சிகிச்சை அளிக்கும் போது அவர்கள் சரியான முறையில் நாள்தோறும் மருந்துகளை உட் கொண்டார்களானால் தொற்றுக்குள்ளான நோயாளியின் ரத்தத்தில் உள்ள வைரஸின் அளவு விரைவாக குறைவடையும். நாம் அதனை பின் வருமாறு " அறிந்து கொள்ள முடியாத அளவில் வைரஸின் அளவு குறைந்துள்ளது"என குறிப்பிடுகின்றோம்.அதனால்அவ்வாறானதொற்றாளர்கள் மூலம் தொடர்ந்தும் நோய் ஏனையோருக்கு பரவாது. அதன் மூலம் நாட்டில் புதிய தொற்றாளர்களில் வீழ்ச்சி ஏற்படும்.

**அவ்வாறென்றால் அதன்மூலம் அவர்களுக்கு அதன்பின்னர் பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபட முடியும் என்ற கருத்து முன் வைக்கப்படுகின்றதா?**

இல்லை. வேறு பாலியல் ரீதியிலான நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக அவர்கள் தொடர்ந்தும் ஆணுறைகளை பாவிப்பது நல்லது. முறையான சிகிச்சையுடன் அவர்கள் ஏனையோருக்கு இதனை பரவச் செய்ய மாட்டார்கள். ஆனால் HIV தொற்றை தவிர ஏனைய பாலியல் ரீதியாக பரவக்கூடிய தொற்றுக்கள் பல உள்ளன. அதனால் கொேேதாரியா, க்ளமீடியா, சிபிலிஸ், ஹெபடயிடிஸ் பீ போன்ற நோய்களில் இருந்து தன்னையும் ஏனையோரையும் பாதுகாப்பதற்காக HIV தொற்றுக்குள்ளான நபர்கள் எவ்வேளையிலும் ஆணுறையை பாவிக்கும்படி பரிந்துரைக்கின்றோம்.

**தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பது தவிர HIV யை தடுக்கக் கூடிய வேறு வழிமுறைகள் உள்ளனவா?**

ஆம், பாலியல் தொடர்புகளில் இருந்து விலகி இருப்பது மற்றும் ஒரு நம்பிக்கையான இணையுடன் மாத்திரம் உடலுறவை வைத்துக் கொள்வது பாலியல் நோய்கள்/ HIV யை தடுப்பதற்காக ஆரம்ப காலத்திலிருந்து பரிந்துரைக்கப்பட்ட முறைகளாகும். நான் முன்னர் குறிப்பிட்டவாறு HIV மற்றும் ஏனைய பாலியல் நோய்களை தடுப்பதற்கான சிறந்த முறை ஆணுறைகளை சரியான முறையில் மற்றும் தொடர்ந்தும் பாவிப்பது ஆகும்.

HIV சிகிச்சைக்காக வைத்திய விஞ்ஞானத்தின் அண்மை கால முன்னேற்றத்துடன் புதிய முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

**தொற்றாளர்களை அவமானமாக கருதுவது அவர்களை ஒரு படுத்திப் பார்ப்பது, HIV பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக அரச கிளினிக்குக்கு வருவதை பலரும் தவிர்க்கிறார்கள்.அது பற்றி நீங்கள் என்ன கூற முடியும்?**

ஆம் , HIV பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக பாலியல் நோய் கிளினிக்குக்கு வராது இருப்பதற்கு ஒரு காரணம் HIV தொற்று குறித்த அவமானம் மற்றும் சமூகம் ஒதுக்கி வைப்பது என்பனவாகும். எவ்வாறாயினும் பாலியல் நோய்க்கான கிளினிக்கில் உள்ள எமது பணியாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வரும் எந்த ஒரு நபரையும் அவர்கள் தரக்குறைவாக நடத்துவதில்லை நட்புடன் சேவைகளை பெற்றுக் கொடுக்க சரியான முறையில் பயிற்சிகளை பெற்றுள்ளார்கள்.

கிளினிக்கில் உள்ள சேவையாளர்கள் 100% ரகசிய தன்மையை பாதுகாப்பதோடு பாலியல் நோய்களுக்கான கிளினிக்குகளுக்கு வருவதற்கு யாரும் பயப்படத் தேவையில்லை. மேலும் விசேடமாக காத்திருப்பு காலத்தை குறைப்பதற்காக நபர்கள் கிளினிக்குக்கு வருவதற்கான புதிய சந்திப்பு முறை ஒன்றை நாம் அறிமுகம் செய்துள்ளோம்.


அது know4sure என்னும் இணையதளம் ஆகும். முதலில் நேரத்தை ஒதுக்கிக் கொண்டு கிளினிக்குக்கு வருவதென்றால் இந்த இணையதளம் மூலம் தங்களுடைய அவதானத்தை மதிப்பீடு செய்து நேரம் ஒன்றை ஒதுக்கிய பின்னர் கிளினிக்குக்கு வருகை தர முடியும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட் ...

இலங்கையில் 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பயண வரலாற்று அருங்காட்சியகமாக இதை அழைக்கலாம். இது காலத்தைப் பற்றியது (It's About Time). கண்காட்சிக்கென வடிவமைக்கப்பட்ட இரண்டு நடமாடும் கொள்கலனுக்குள் இலங்கை வரலாற்றுத் தகவல்கள் மற்றும் தகவல் தரும் நிறுவனங்களுடன், சிறிய மற்றும் தனித்துவமான திறனுடன் இந்த நடமாடும் அருங்காட்சியகம் அமைந்துள்ளது.








# எமது வரலாற்றை அனுபவரீதியாக விளக்கும் "எமது காலம்" அருங்காட்சியக கண்காட்சி









## இப்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில்

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் கலைப்பீட முன்றலில் இக் கண்காட்சியானது கடந்த 14 ஆம் திகதி முதல் இடம் பெற்று வருகிறது.

நாளை மறுதினம் (22) வரை இது நடைபெறுகிறது. தினமும் மு.ப. 9 மணிமுதல் பி.ப. 5 மணிவரை நடைபெறும் இக் கண்காட்சியானது முற்றிலும் இலவசம்.

இந்த கண்காட்சியில் அன்றாட மக்களின் கதைகள் மற்றும் ஒரு வரலாற்று தருணத்தின் நினைவைத் தூண்டும் ஒரு பொருளுடன் அவர்களுக்கு உள்ள தொடர்பு அவர்களின் பார்வையில் அதனை எவ்வாறு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அதனால் ஏற்பட்டுள்ள தாக்கங்களை வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை நினைவுகளின் காப்பகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்து 70 வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இக் கண்காட்சி எமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சாதாரண பார்வையாளராக பங்கேற்போர் அதனைப் பார்க்கும்போது தோன்றும் எண்ணத்தை, தமது வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களை, சொந்தக் கதை இருந்தால் அதனையும் எழுதி காப்பகத்தில் பங்களிக்கச் செய்யலாம்.

இதனை ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பதிவுசெய்ய முடியும்.

'இலங்கை வரலாற்றில் ஒரு சாளரம் (A Window into Sri Lankan History)' என்ற தலைப்பிலான இரண்டாவது கண்காட்சியானது, பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சியிலிருந்து 1948 வரை காலனித்துவ ஆட்சியின் முடிவு வரையிலான வரலாற்றுப் பாதையை விமர்சனரீதியான கண்ணோட்டமாகப் பார்க்கிறது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி இதற்கு தலைமைதாங்குகிறார்.

இவர் கடந்த 4 வருடங்களாக நவீன வரலாற்றிற்கு புதிய கண்ணோட்டங்களை வழங்கும் ஆழமான காப்பக ஆராய்ச்சியுடன் இந்த கதையை உருவாக்கியுள்ளார். இந்த கண்காட்சி சிங்கள மொழியில் மட்டுமே நடக்கிறது.

(22ஆம் பக்கம் பார்க்க)

பி. வீரசிங்கம் ...





கொழும்பு, கொள்ளுப்பிட்டி புனித மரியாள் மகளிர் பாடசாலையின் வருடாந்த மாணவ தலைவர்கள் தினம் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் திருமதி டபிள்யூ, ஜி. உபேந்திர லக்மாலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேல்மாகாண பிரதிக் கல்விப் கணிதப் பிரிவு பணிப்பாளர் நயனி பெரேரா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவ தலைவி விஹாங்கி நெத்மினிக்கு பதக்கம் அணிவிப்பதையும் மற்றும் ஏனைய மாணவ தலைவியர்களையும் படத்தில் காணலாம். (படம் : ருஸைக் பாருக்)

# அங்கிலிக்கன் பேராயருக்கு நூரளையில் இன்று வரவேற்பு

நூரளையூரான்

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு பேராயராக பதவியேற்றிருக்கும் அருட்தந்தை துசாந்த ரொட்ரிகோவுக்கு இன்று காலை 9 மணிக்கு நுவரெலியா பரி. திரித்துவ பேராலயத்தில் வரவேற்பு வைபவமும் திடப்படுத்தல் வழிபாடும் நடைபெறவுள்ளது.

இத் தேவாலயம் 170 ஆண்டு பழைமை வாய்ந்ததாகும் இது கொழும்பு பேராயர் துசாந்த ரொட்ரிக்கோ பேராயர் பதவி பெற்ற பின் நுவரெலியா பரிசுத்த திரித்துவ தேவாலயத்தின் முதலாவது விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு பேராயர் துசாந்த ரொட்ரிகோ இப்பேராலயத்தில் பல வருடங்களுக்கு முன்னர் ஊழியம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



சங்கவி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் நடத்திய வாழும்போதே வாழ்த்துவோம் தேசிய கலா விபூஷண விருது வழங்கும் விழாவில் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் உடப்பு குறூப் நிருபர் க. மகாதேவன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டபோது...

## எமது வரலாற்றை...

(19ஆம் பக்கத் தொடர்)

2019 பெப்ரவரி மாதத்தில் தொடங்கி 18,000 பார்வையாளர்களுடன் நான்கு மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்த அருங்காட்சியகம் மொரட்டுவை, வீரவில, நிட்டம்புவ மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து வயதினருக்கும் பல்வேறு ஊடாடும் கலை, கலாசார கண்காட்சிகள், செவிப்புலகட்புல காட்சிப்பொருட்கள் தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக நடைபெற்றது.

இந்த அருங்காட்சியகம் சுதந்திரம் பெற்றதில் இருந்து இலங்கையின் வரலாற்றின் பல்வேறு அம்சங்களைக் கொண்டு, நாட்டின் பன்முகத்தன்மையைக் கொண்டாடவும், வரலாற்றை வடிவமைப்பதில் நாம் வகிக்கும் பங்கை அங்கீகரிக்கவும் பார்வையாளர்களை அழைத்துச் சென்றதாகக் கூறும் அவர் கொவிட் தொற்று பரவல் காரணமாக கண்காட்சியை பரந்தளவில் நடத்தமுடியாமல் போனது என வருத்தம் தெரிவிக்கிறார் கண்காட்சி ஏற்பாட்டுக்குழு உறுப்பினர் சுலக்‌ஷனா டி மெல். “தற்போது நடமாடும் கண்காட்சியாக இதனை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கண்காட்சி நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம்” என்கிறார் சுலக்‌ஷனா.

இது காலத்தைப் பற்றியது (It's About Time) அடுத்த ஊடகமாகிய பொதுமக்கள் மொபைல் சாதனம் மூலம் அணுகக்கூடிய மெய்நிகர் அருங்காட்சியகம், கடந்த 18 ஆம் திகதியன்று கண்காட்சியில் வெளியிடப்பட்டது. அதேவேளை ஹேமமாலி விஜேசிங்க எழுதிய “சரத் விஜேசிங்கவின் வாழ்க்கை வரலாறு” எனும் புத்தக வெளியீடானது பெப்ரவரி 22 ஆம் திகதியன்று பி.ப. 4:00 முதல் பி.ப. 6:00 வரை கொழும்பு பல்கலைக்கழகத்தின் திறந்த வெளியில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் நினைவகம் மற்றும் சிறுபான்மையினரின் கருப்பொருளில் உள்நாட்டில் வளர்ந்துவரும் மற்றும் துறையில் தமக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துள்ள திரைப்படத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட 13 தனித்துவமான குறும்படங்களும் திரையிடப்படுகிறது.

கண்காட்சியில் நாளை (21) வரை பி.ப. 3:00 முதல் பி.ப. 4:30 மணிவரை திரைப்படங்கள் திரையிடப்படும்.

அனைத்து நிகழ்வுகளையும் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அணுகமுடியும். கடந்த காலத்தை கையாள்வதில் விமர்சனரீதியான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறையை நோக்கி உழைக்கும் இலங்கை நிபுணர்களின் தளமான historicaldialogue.lk என்ற இணையத்தளத்தில் இந்த அருங்காட்சியகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

AMNESTY TAX RETURN FILING
உங்கள் கம்பனி மற்றும் உங்கள் சொந்த விடயம் தொடர்பாக சுயவிருப்பு வெளிப்படுத்தலில் Amnesty Returns ஐ பதிவேட்டில் வைத்திருப்பதற்காக நாங்கள் செயற்படுகின்றோம். IRD இற்கு சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது 31.3.2022 ஆகும்.
அத்துடன் உங்கள் கம்பனிக்கு ஞாயவு ஐ சமர்ப்பிப்பதற்கும் நாங்கள் ஆயத்தமாக உள்ளோம் என்பதுடன் Credit Voucher கையேற்கும் வரையிலும் எமது பொறுப்பாகவிருக்கும்.
மேலதிக விபரங்களுக்கு 0777 892 966 உடன் தொடர்பு கொள்ளவும்.
Q CONTRA Accounting Consultants
# 88/24, Wekanda Road, Colombo -02.
www.qcontra.com

5 மாடி கட்டிடத்துடன் முதன்மையான காணி
விற்பனைக்கு
26.8 பேர்ச் வீதிக்கு 49 அடி முகப்பாக - வீடுகளை நிர்மாணிப்பதற்கான கட்டிடத் தொகுதிக்கு உகந்தது
முகவரி: ஸ் டப்ளியூ.ஏ. சில்வா மாவத்தை வெள்ளவத்தை
அலைபேசி : 0777 311 110

வாரமஞ்சரி BUDGET adz

போட்டோ குறும் விளம்பரம்



Korondo 2014 Diesel SUV, 95000Km, Record Available, Triptonic, Multifunction Streeing Wheel, Sensor Lights, 2WD, Fuel Colombo 18 - out 20. Mint Condition, 7.6M
077 910 96 14




Updated yourself with Global Start Up Consultants
Wide range of services for settlement in Canada
GLOBAL START UP CONSULTANTS
114, Anderson Road, Kalubowila, Dehiwala
0769 366 246 | 0769 194 061
0113 462 634
info.anusia@gmail.com







பதவி வெற்றிடங்கள்
நிருவாக அலுவலகத்தில் சேவைகள் - பெண்கள்
சேவையின் தன்மை - அலுவலக கடிதங்களை கேடாவை செய்தல் மற்றும் விலைப்பட்டியல் கொடுக்கல் வாங்கல் நபர்களுடனான தொடர்பு கொள்ளல் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் வழங்கல்.
சாதாரண நிருவாக எழுதுவினைஞர் - ஆண்கள்
'இதெல்லாம் கமிலாவின் நெருங்கிய பரிவாரங்கள் மீது எனக்கு அதிக நம்பிக்கையைத் தரவில்லை.'




# 1500 மீற்றர் உலக சாதனையை முறியடித்தார் Ingebrigtsen

ஒலிம்பிக் சம்பியனான Jakob Ingebrigtsen வியாழன் அன்று வடக்கு பிரான்சில் உள்ள லீவினில் 3 நிமிடம் 30.60 வினாடிகள் ஓடி 1500 மீற்றர் ஓட்டத்தில் உலக உள்ளரங்க சாதனையை முறியடித்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எத்தியோப்பியன் சாமுவேல் டெஃபெரா 3:33.70 வினாடிகளில் இரண்டாவதாக இருந்த சாதனையில் இருந்து நோர்வே வீரர் 0.46 வினாடிகளை வெட்டினார். இது 21 வயதான Ingebrigtsen இன் முதல் உலக சாதனையாகும்.

'இது எப்போதும் ஒரு வேகமான பந்தயம் மற்றும் இது மிகவும் நல்ல அரங்கம்,' Ingebrigtsen கூறினார், அவர் கடந்த ஆண்டு லீவினில் 3:31.80 என்ற ஐரோப்பிய உட்புற சாதனையில் வென்றார்.

'நான் வலுவாக முடிக்க விரும்புகிறேன்; கூட்டத்திற்கு இது நல்லது என்று நான் நினைக்கிறேன், ஆனால் முடிவிற்குச் செல்வதை விரைவுபடுத்துவது எனக்கும் நல்லது.'

Ingebrigtsen முறியடிப்பதற்கு முன் கடைசி 250 மீட்டர் வரை டெஃபெரா முன்னிலை வகித்தது.

2022 ஆம் ஆண்டிற்கான இலக்குகளின் பட்டியலில் ஜூலை மாதம் யூஜினில் உலக வெளிப்புற தலைப்பு உள்ளது.

அங்கு, 24 ஆண்டுகளாக 3 நிமிடம் 26 வினாடிகள் ஓடிய மொராக்கோ ஜாம்பவான் ஹிச்சாம் எல் குர்ரூஜின் உலக சாதனையை முறியடிக்க இங்க்ப்ரிக்ட்சன் விரும்பப்படுவார்.




'நான் அடிப்படையில் சிறந்த நேரத்தைச் செய்ய விரும்பினேன், ஆனால் உலக சாதனையை முறியடிப்பது ஒரு கனவு நனவாகும், அதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,' என்று நோர்வேஜியன் வியாழக்கிழமை மேலும் கூறினார்.

'இது எனது முதல் மாலை, இந்த மாலையை நான் மிக நீண்ட காலமாக நினைவில் வைத்திருப்பேன், எதிர்காலத்தில் நான் மற்ற சாதனைகளை முறியடிப்பேன் என்று நம்புகிறேன்.'

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

## வாழ்வாதாரமா சேதாரமா 212



தமிழ்க் கவி பேசுகின்றார்

## பணம் என்பதே வாழ்க்கையாகிப்போன காலம் இது

காலையில் பக்கத்து வீட்டுப் புதினங்களை வேடிக்கை பார்த்தவாறே எனது கடமைகளை செய்வது வழக்கம் அந்த வேடிக்கையானது சில நாட்களில் மகிழ்ச்சி தருவதாகவும் சில நாட்களில் வேதனை தருவதாகவும் அமைவதுண்டு.

வேறொன்றுமில்லை காலையில் எழுந்து முகத்தை கழுவு குளி சாப்பிடு பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிடு என்பது போன்ற கட்டளைகள் பிள்ளைகளுக்கும். ஏனப்பா ஆய்க்கினைப்படுத்திறியள் இருக்கிற வேலைக்க தேத்தண்ணிய குடிச்சிட்டு சும்மா இருங்கவன். போய் பாரணை அந்தாள் ஏதோ புறுபுறுக்கிது. என்றும் சத்தம் போட்டபடியே அந்த இல்லத்தரசி பரபரத்துக் கொண்டிருப்பாள். அதேசமயம் குளிப்பதற்காக கிணற்றடிக்கு போன கணவன் 'எங்கையப்பா அந்த டவலைக் கொண்டாவன்.' என கத்தும் சத்தமும் கேட்கும். இதே வேளை குசினியில் தாளித்தமணம் வந்து கொண்டிருக்கும். என்னவோ சமையல் காலைக்கானது ஒரு அடுப்பிலும் மத்தியானத்துக்கானது இன்னொரு அடுப்பிலும் வேகிக் கொண்டிருக்கும். அவற்றை டப்பாக்களில் கட்டியும் வைத்தாக வேண்டும்.

ஏங்க குளிக்கத்தானே கிணத்தடிக்கு போனவர் டவலைக் கொண்டு போகத் தெரியாதா? வயது போனவர்கள் தம்மளவில் கொஞ்சம் கவனித்துக் கொள்ள முடியாதா? வயது வந்த பாடசாலைப்பிள்ளைகள் தாமே பாடசாலைக்கு தயாராக முடியாதா? இப்ப பார்த்துத்தான் பால்காரன் சலவைக்காரன் பக்கத்து வீட்டுமாமி என வருவார்களா? ஒரு கையால எத்தினை வேலையத்தான் செய்யிறது. இனி இவ்வளவும் முடிச்சு நானும் பாடசாலைக்கு போக வேணும்.

பாடசாலை இடைவேளையின் போதுதான் பெண் ஆசிரியைகள் தமது காலை உணவை எடுத்துக் கொள்கிறார்கள். அலுவலகங்களில் அப்படியல்ல. காலையில் தேசியக் கொடியேற்றி கடமைகளை ஆரம்பித்ததும், அவர்கள் தமது கட்டுச்சாத மூட்டையை அவிழ்க்கிறார்கள். ஆக பெண்களுடைய வேலை நேரம் சொந்த தேவைகளுக்காக ஒதுக்கப்படுகிறது.

அரச அலுவலகங்களில் பொதுமக்கள் சேவைக்காக முன்னர் திங்களும் புதனும் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அது திங்கள் மட்டும் என குறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது மக்களுடைய பிரச்சினைகளை குறைக்காமல் நேரத்தை குறைத்திருக்கிறார்கள். இல்லாமலும் நேரத்தை கூட்டி வைத்துக் கொண்டாலும் இவர்கள் ஏனைய நாட்களில் வேலை செய்வது மிக அருமை. நானே கண்ட அனுபவித்த விடயம் காரியாலயத்தில் மக்கள் சமூகத்துக்காக ஒதுக்கிய நாட்களில் கூட அலுவலர் தன் கதிரையில் இருப்பதில்லை. நாமாக தேடினால் அவர் பெரிய அதிகாரி கூப்பிட்டு போயிருக்கிறார் என்பார்கள். அந்த பெரிய அதிகாரி அநேகமாக கன்ரீனில்தான் உட்கார்ந்து அவரோடு பேசிக் கொண்டிருப்பார். அவருக்கும் வீட்டில் என்ன கஷ்டமோ.

நாம் அனைவருமே வாழ்க்கையை ஒரு பிடிப்பில்லாமல் ஓட்டிக் கொண்டிருக்கிறோம் எமது குறிக்கோள் என்று எதுவுமில்லை பணம் பணம் பணத்தை மட்டுமே இலக்காக கொண்டு ஓடித் திரிகிறோம். முன்னர் பார்த்த வீட்டில், அவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டே அவர்கள் உழைத்தாக வேண்டுமா? பெரியவர்களை ஒழுங்காக பாராமரித்துக் கொண்டும் பிள்ளைகளை நிதானமாக அழுத்தமில்லாமல் பாடசாலைக்கு அனுப்பிக்கொண்டும் அவர்களோ பேசி மகிழ்ச்சியாக பொழுதை களித்துக் கொண்டும், ஆனந்தமாக வாழலாம். ஆனால் தானும் பார்க்கும் வேலையில் கிடைக்கும் சம்பளம் அவளுக்கு பெரிதாக தெரிகிறது. இந்தப் பணத்தைக்கொண்டு அவர்கள் என்னதான் சாதிக்கிறார்கள். அதுதான் வேடிக்கை பெரிய வீட்டைக்கட்ட லட்சக்கணக்கில் கடன் வாங்கி கட்டியும் முடித்து விடுவார்கள். உறவினர் நண்பர்களை அழைத்து பெரிதாக வீடு குடிபுகும் விழாவையும் நடாத்தி தமது பெருமையை பறை சாற்றலாம். எல்லாம் முடிந்தபின் இவர்கள் தலையில் கடன் சுமை மட்டும் அப்படியே நின்று விடுகிறது. அதனால் அவர்களுடைய சந்தோசம் எத்தனை நாட்களுக்கு என்றால், ஒரு நாளும் இல்லை. இப்போது வீடு அவர்கள் தலையிலேறி அவர்களைப் பிடித்தாட்டுகிறது.



கணவனும் மனைவியும் அரச ஊழியம் பார்க்கும் ஒரு குடும்பத்தின் பெண் சொல்கிறாள். நாங்கள் வீடு கட்டவும் உந்துருளி வாங்கவும் கடன் வாங்கினோம். இப்போது எனக்கு பால், மளிகைக்கடை, மரக்கறிக் கடை எல்லாவற்றிலும் கடன் இருக்கிறது. வாழ்க்கையே வெறுத்துப் போகிறது என்று. கடனை கட்ட மாட்டார்கள் என்ற கவலை இவர்களுக்கு கடன் கொடுத்த நிறுவனங்களுக்கு கிடையாது. அவர்கள் தமது கடனை இவர்களது வங்கியூடாகவே சம்பளத்தில் கழிக்கும் சலுகையை பெற்றிருப்பார்கள். ஒரு வருடைய வருமானத்துக்கு ஏற்ற கடன் எவரிடமும் இல்லை.

இந்த வாழ்க்கை முறையை இனி இவர்களால் மாற்றி அமைக்கவே முடியாது. என்றைக்காவது இவர்கள் கடன் தொகையை செலுத்தி மீளவும் முடியாது.

இவர்களால் குடும்பப் பிரச்சினைகள் வளரவே செய்யும் ஒரு கட்டத்தில் பெற்றோரை நிராகரித்து, முதியோர் இல்லங்களுக்கு அனுப்பவும் பிள்ளைகளை விரும்பிய துறையில் கற்பிக்க முடியாத நிலையும் தானாக தோன்றும்.

நான் சிறுவயதில் இருந்தபோது வீட்டுக்கு வீடு கிழவன், கிழவி என இருந்தார்களள. அம்மா, ஆச்சி, பெத்தாத்தை, ஆத்தை, அப்பாச்சி என அழகு தமிழில் அழைக்கும் பேரர்களுக்கு அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். எல்லா வீட்டிலும் அவர்களுக்கு மரியாதை இருந்தது. அவர்களிடம் கதை கேட்க ஒரு கூட்டமே அலைவோம். இன்று அவர்களின் கதைகேட்க யாருமே இல்லை. வந்தாலும் பேசினாலும் அதை காதுகொடுத்துக் கேட்க ஒரு ஜீவன் வேண்டுமே. வாழ்க்கையை வாழ பணம் தேவைதான். ஆனால் பணத்தை நாம்தான் கையாள வேண்டும். அது எம்மை கையாள நாம் அனுமதிக்கக் கூடாது. பணம் பாதாளம் மட்டும் பாயட்டும். அதற்காக நாம் அதை எடுத்து வயிற்றில் குத்திக் கொள்ள வேண்டாம். பழைய மனிதர்களிடம் தொழிலும் இருந்தது. வருமானமும் இருந்தது. தன்மானத்தோடு உழைத்து வாழ்ந்த நாட்கள் இனிமையானவை.

அங்கே ஆண், பெண் பேதமில்லை பெண் அமைதியாக தன் கடமைகளை செய்தாள். குடும்பத்தின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் அவளே காரணியாகி உடைந்து விடாத குடும்பங்களை பேணினாள். அந்த வாழ்க்கை மீண்டும் வரப்போவதில்லைத்தான். ஆனால் கடன் வாங்கி ஆடம்பரமாக வாழ்வதை நிறுத்தலாமே. பதிலாக நாம் ஒரு வீட்டைக் கட்ட விரும்பினால் அதற்கான பணத்தை சேமிக்கலாமே சேமித்த பணத்தில் செய்யும் செலவே மகிழ்ச்சி தரும். பெரியவர்களது அனுபவம் ஆலோசனைகள் எமக்கு மேலும் தெம்பூட்ட வல்லவை. காலையில் எழுந்து அம்மம்மா தேநீர் தாயாரிக்கிறார், அப்பப்பா முற்றம் கூட்டுகிறார், கணவன் காய்கறி நறுக்கிக் கொடுக்கிறார், பிள்ளைகள் தாமாகவே குளித்து பாடசாலைக்கு புறப்படுகின்றனர், அம்மா உணவளிக்கிறாள் என்பதான ஒரு கற்பனையை செய்து பாருங்கள் நமக்கு ஏறியுள்ள சுமை புரியும்.

இரண்டு மைல் நடந்து போன எனது பாடசாலைக்கு நாம் தனியாகத்தான் போவோம் வருவோம். எல்லோரும் நடைதான் ஆசிரியர்களும்கூட வருவார்கள்.

இன்றைக்கு இருநூறு மீட்டர் தொலைவிலுள்ள பாடசாலைக்கும் பிள்ளைகளை ஏற்றிச் சென்று இறக்கி விடவும் பின்னர் திரும்ப ஏற்றிக் கொண்டு வரவும் வேண்டும். இல்லையேல் பிள்ளைக்கு உத்தரவாதம் இல்லை.

ஆக பெரியவர்கள் வீட்டில் இருந்தால் நன்மை அவர்களால் இயங்கும் காலம் வரைக்குமே என்றாகும். இப்போது அவர்களும் இவர்களுக்கு சுமையாக மாறிவிடுகிறார்கள்.

அம்மா பிள்ளைக்கு அரவணைத்து ஊட்டுவது போல பிள்ளையால் தாயை அரவணைத்து ஊட்ட முடியவில்லை. இதுதான் வாழ்க்கை. பணம் என்பதே வாழ்க்கையாகிய காலம் இது.



வலம்புரி கவிதா வட்டத்தின் வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் மறைந்த கவிஞர் கவின் கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டி 2020, மற்றும் பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (13) காலை, கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெற்ற போது "கவின் கமல்" நினைவு மலரை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நிலையத்தின் தலைவர் டாக்டர்.தாஸிம் அகமதிடமிருந்து பெறுவதையும் நிலையத்தின் ஏனைய உறுப்பினர்களான டாக்டர்.எம்.எச்.நூர்தீன், மேமன் கவி, கலைக் கமல், ஆகியோருடன் சிறப்பதிதியாக கலந்து சிறப்பித்த பிரபல வர்த்தகர், எஸ்.ரவீந்திரன் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

## மாப்பிள்ளட கார்...



அயிரை மீன் ஞாபகம் வந்தது; மாறி மாறிக் குதித்ததைப் பார்த்துக் கொண்டிருந்தேன்; நிக்கல் கலர்; வந்தபுதிதில் பந்தயக் குதிரைபோல் "ஸ்டார்ட்" அடிக்கப் பறக்கும் ஹொண்டா 125; சிவப்பு, பச்சை, கறுப்புக் கோடுகளில் சைக்கிள்கள் இருந்தன; ஒவொன்றாக விற்றுப் புதிய மொடல் வரவர மாற்றி எடுப்பதில் தாவூத் மாமா சமத்தர்; "சில ராசிக்கு இரும்பு அயிட்டம் ஒத்துவரும்; எல்லா ராசிக்கும் எல்லாம் ஒத்துழைக்காது; நம் மாளுக்கு நம்பிக்கை இல்லா விட்டாலும் அதைப் பார்த்துத்தான் ஆக வேண்டும்; முன்னோர்கள் கணித்துக் சொன்னது ஒன்றும் பொய்யில்லை" அவர் நண்பர் அல்லாப்பிச்சை அக்கறையாகக் கூறுவார்...

காலம் காலமாகக் கிராமங்களில் வேரோடி வாழ்ந்த மக்களைப் படடணங்களை நோக்கிய நகர்வை முடிந்த மட்டுக்கும் கொண்டு சேர்த்தது இந்த மோட்டார் சைக்கில்கள்தான்; ஜவுளி விற்பவர்களோ, பித்தளை, பொன் வியாபாரிகளோ, ஓரளவுக்குக் கால்நடைகள் மூலம் சம்பாதிக்கும் பால் கலன் கட்டுபவர்களோ தபால் 90 சைக்கில்களில் வருவார்கள்; சிவந்த மேனியுடைய இதன் பாகங்களில் எனக்குப் பிடித்தது அந்தத் தில்லான கரியல்தான்...

இந்தப் பட்டியலில் BSA, நோட்டன், ரேம், சுசுகி என அழகிய ரகங்கள், ரசனைகள் உள்ளீடான சைக்கிள்கள் விற்பனைக்கு வந்தன; இவற்றில் நீண்ட காலம் பாவனையில் வைத்திருப்பவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் திட்டம் பத்திரிகைகளில் பிரசுரமாகும்; எங்களூர் மோட்டார் சைக்கிள்களில் அந்நாளில் பெண்கள் பயணிப்பது மிகமிகக் குறைவு; சொந்தமாக உணவகம் ஒன்றை நடத்திவந்த நேந்தம்பி, வைக்கலப்பா, சீனவெடியரு, சுறுமாப்போடி இவர்களே அன்றைய மோட்டார் சைக்கிள் மைனர்கள்; எங்கள் வீட்டின் அருகே தான் சீனவெடியரின் வீடும் இருந்தது; அவர் வீடு தேடிப் போய் அந்தச் சைக்கிளைத் தொட்டுப் பார்ப்பேன்; புன்னகை சுடரும் உதடுகளோடு நின்றிருக்கும் அவர் ஒருமுறை "ஸ்டார்ட்" எடுத்துக் காட்டுவார்; மரத்தில் அடையும் பறவைகளின் இரைச்சல்போல் அதிலிருந்து ஒலிகள் கேட்டது...

அப்படித்தான் கார்களும்; "ஸ்டாண்டட் வை வேன்" பெரும் வேட்டைக்காரன்; நூற்றுப்பதினேழு வயதுவரை அதன் நாமம் கார் விற்பனை உலகில் நிலைத்திருந்ததாகக் கூறுவார்கள்; மட்டு நகர் பிரதேசத்தில் இந்தக் கார் ஒரு "லைட் போஸ்ட்" டில் மோதியபோது எந்தச் சொட்டை சோரவும் இல்லாமல் போஸ்ட் மட்டுமே உடைந்து சிதைவுற்றதாம்; முட்டையின் வடிவில் பேபி ஒஸ்டின் கார் உற்பத்தி ஆனது; நெப்டியூன் கிரகத்திலிருந்து வானில் பறக்கும் மயில் ஊர்தி என்பர்; சிறு சிறு உருளைகளைப்போல் அதன் சக்கரங்கள்; நீள் நிலப் பரப்பில் புதையாமல் ஓடியது ஷவ்லட் கார்; தூரத்தில் நின்று பார்த்தால் ஆரத்திதான்; இதன் பெயரிலும் "டொச்" எனும் நாமத்திலும் லொறிகளின் இரு வேறு வர்க்கப் பெயர்கள் இருந்தன; ராட்ஷச உருவங்கள் அவை; சில வீதிகள் அவற்றுக்கு விதி விலக்கே; திருப்பி, நிமிர்த்தி எடுப்பதில் சாரதி களைத்துப் போவார்...

ராசா ரைவர் வயதை நிர்ணயமாகச் சொல்ல முடியாது; அறுபது இருக்கலாம்; ஆறாயிரமும் இருக்கலாம்; ஆனால் அத்தனை வருஷமும் சாப்பாட்டுக் கவலையே இல்லாமல் கொழு கொழுவென்று வளர்ந்த மேனி வனப்பம்; அந்த ஸ்ரேரியங் வீலைக் கைப் பிடித்துச் சுழற்றும்போது வியர்வை தண்ணீர் குவளையை எடுத்துக் கவிழ்த்தது போலிருக்கும்; இன்ஜின் பெட்டியை எட்டிப் பார்த்து எவருடனோ பேசுவதுபோல் முணுமுணுப்பார்; மேல் "சன் வைஸ"ரில் லைசன் பத்திரங்களுடன் நிறையக் காதல் கடிதங்கள் வைத்திருப்பார்; அவற்றை யாரும் காணாத நேரங்களில் எடுத்துப் படிப்பதைக் கண்டிருக்கிறேன்; மீண்டும் மடித்துச் சரிசெய்து வைக்கும்போது கண்கோளை ஓரங்களைத் துடைத்துக் கொள்வார்; சிலதை நானும் திருடி வாசித்திருக்கிறேன்; குண்டு குண்டான எழுத்து; மனம், குழப்பம், காதல், சந்திப்பு, கொஞ்சம், மச்சான் என்ற வார்த்தைகள் பல இடங்களில்வரும்; எங்கள் வெட்ட வளவில்தான் அந்த லொறியை நிறுத்தியிருப்பார்...

சின்னதாக ஒரு வீடு; முழுப் பச்சை நிறப் "பெய்ண்ட்" அடித்துப் பக்கத்துச் சுவரில் வளை பொருத்தி ஒரு "கராச்" இறங்கியிருப்பார்கள்; அதனுள் மொரிஸ் கவ்லி கார் பின்புறத்தைக் காட்டிக் கொண்டு கிடக்கும்; CE 356 அதன் இலக்கத் தகடு, பொன் எழுத்தில் மினுங்கும்; பெரும்பாலான கார்களின் ஆங்கில எழுத்துகள் "CELON" என்பதன் சுருக்கமாகவே அமைந்தன; CE, CY, CN, EN தளதண்ணீர் மனப்பாடம்போல் ஊரே அறிந்திருந்தது...

போர்ட் அங்கிலியா என்றால் சீனி முகம்மதுதான்; காட்டீச்சை மர நிழலில் ஒதுங்கிப்போய் நிற்கும் அந்த வெள்ளைக் காரின் அழகுக்கு ஏற்றாற்போல் அவரும் ஆடை உடுத்திருப்பார்; பிஜாமாச் சாரனுக்குள் சேர்ட்டை உள்வாங்கி வெளியில் கருப்புப் பட்டி அணிந்திருப்பார்; துடுப்புப் படகில் இறங்கிப்போய் நடை பாலத்தில் ஏறுவதுபோல வளைத்து ஒரு சுற்றுப் பார்த்துவிட்டுக் கதவை அடைக்கும் சத்தம் மூன்று வீடுகளுக்குக் கேட்கும்; கெளித்தி மீன்கள் குளத்தில் முதுகு தெரிய மூழ்கி நீந்தும் வடிவில்தான் தூர நின்று பார்க்க "ஸ்டூனிபேக்கர்" பாதையின் வளைவில் நகர்ந்து, நகர்ந்து பள்ளங்களில் அமர்ந்து வருவது தெரியும்; யாருக்கோ தலை குனிவதுபோல பணிந்து பணிந்து உயர்ந்து கார் ஊர்வதை ரசிப்பது ஆனந்தம்தான்...

போர்ட், மொரிஸ் ஒக்ஸ்போர்ட், கிளைனோ, ஒஸ்டின், ஹில்மன் இவை வரிசையாக இறக்குமதியான கார்கள்; வெளியில் பரவி நிற்கும் அசுத்தக் காற்றுகள் உள்ளே நுழைந்துவிடக் கூடாது என்கிற கவனத்தில் தடுப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன; அதனால் கிராக்கி அதிகம்; வாழைக்குருத்துப் பச்சை, கருஞ் சிகப்பு, வெள்ளைக் கோடுகளுடன் கரும் பச்சை இந்த நிறங்களில் "கெனடியன் போர்ட்" வந்தது; இதன் "டயஸ் போர்ட்"டில் சிறிய மின் விசிறியொன்றைப் பொருத்தி அது எந்நேரமும் ரைவரின் முகத்தைப் பார்த்தபடியே திரும்பியிருக்கும்...

ஏதும் அவசரமென்றால் மூத்தம்மா தலையில் முந்தானையைப் போட்டுக் கொண்டு கார் பிடிக்க ஓடுவார்; "கார் பிடித்தல்" என்றே இப்போதும் அழைக்கிறோம்; எங்களூரில் முட்டியப்பா என்றால் "கார் வைத்திருப்பவரா" என்று கேட்பார்கள்; அந்தளவு பிரபலம்; சின்ராசா, முருகேசு, பால்குடி மகேந்திரன், கார்ச் செயின், தண்டையல்ர மகன், சைது, பனையோலைக் கொத்துட லாபிர், புகாரி, மரியத்துட பேரன், மரிக்கொழுந்தரு, திருகுதாளம், மல்லிகா, கக்குசம், கார்க்கார மீரா, அச்சியம்மது, மம்மசன், சீமான், வால் முட்டி, இவர்களில் யூனிஸ் புதுமையானவர்; குள்ளமான உடலமைப்பு; அவருக்கும் காருக்கும் பொருத்தமில்லை; அவர் இருக்கையில் ஒன்றுக்கு இரண்டு தலையணை வைத்தே கார் ஓட்டுவார்; அப்போதும் முகம் பணிவாகவே இருக்கும்; சாரதி இல்லாத கார் எப்படித் தெரியுமோ அப்படி; பன்னீர்ர வடுவா என்பவரும் அந்நாளில் கார் வைத்திருந்தார்; அதன் ஹோர்ன் பாடிப் பாடி அடிக்கும்; மாப்பிள்ளை, மாப்பிள்ளட மகன், பேரன் என்று தொடர் சங்கிலியாக வாடகைக்கார் வைத்திருந்தார்கள்..

கரைவாகுப்பற்று வயலை முந்நூறு ரூபாய்க்கு விற்று "மொர்ஸ் மைனர்" கார் வாங்கி ஓட்டியதாக மாமா சொல்லுவார்; இதனையே "ஆமைக்கார்" என்பர்; தனது கோட்டமுனைக் கிராமத்துக்குக் குடும்ப சகிதம் அந்தக் காரில் செல்லும் வழியில் பெற்றோல் தீர்ந்து போனதால் வேறு வழி தெரியாமல் அருகில் இருந்த சில்லறைக் கடையில் மண்ணெண்ணெய் வாங்கி ஊற்றிச் செலுத்தியதாக ஒரு கதை இப்போதும் வைத்திருக்கிறார்; அந்த நிகழ்வின்பின் "மொர்ஸ் மைனர்" தன் இயல்பை மாற்றிப் புகையத் தொடங்கியதால் "ஸ்டார்ட்" இடையிடையே நின்றுபோனது; அதனால் தெருவில் வைத்துத் அதட்டினால்தான் விசை வருமாம்; சிறுவர் பட்டாளம் வீதி நெடுகிலும் தொடர்ந்து தள்ளிச் செல்வதை அவர் விரும்பாததால் காரை நாடார் கடையில் ஒப்படைத்ததாக மாமி கதைப்பார்.

# கட்டடக் கட்டமைப்பை நிறைவு செய்து 'Topping Off'ஐ கொண்டாடும் TRI-ZEN



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவன மா ன John Keells Properties (JKP) மற்று மொரு முக்கிய மைல்கல்லை கடந்து TRIZEN ஸ்மார்ட் வீட்டுத் திட்டத்தின் மூன்று கோபுரங்களின் கட்டமைப்பு நிறைவின் சிறப்பம்சமாக 'Topping Off' நிகழ்வுடன் கொண்டாடியது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் தலைவர் கிரிஷான் பாலேந்திரா மற்றும் John Keells Propertiesன் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் இந்த திட்டத்தில் பங்குதாரர்களாக உள்ளதுடன், இந்நிகழ்ச்சியில் Indra Traders மற்றும் அதன் ஒப்பந்த நிறுவனமான China State Construction Engineering Corporation பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த TRI ZEN ஊக்குவிப்பு முகாமையாளர் லும்பினி பத்திரகே, "தொற்றுநோயால் முன்வைக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் TRIZENஇன் கட்டுமானத்தை சீரான வேகத்தில் முன்னெடுப்பதில் எங்கள் குழுக்களின் கடின உழைப்பைஅங்கீகரிப்பதற்காகஇந்தவாய்ப்பைப் பயன்படுத்துகிறோம். இந்த மைல்கல்லின் மூலம், நாங்கள் இப்போது கட்டுமானத்தின் இறுதி கட்டத்தில் இருக்கிறோம், மேலும் இந்த அடுக்குமாடி குடியிருப்புகளை 2023க்குள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவோம் என்று நம்புகிறோம்." என தெரிவித்தார்.

உலகெங்கிலும் உள்ள கட்டிட நிர்மாணிப்பாளர்களிடையே ஒரு பாரம்பரியம் என்னவென்றால், topping off நிகழ்வில் இறுதி கட்டிட கட்டமைப்போடு தொடர்புடைய கட்டுமான நிர்மாணிப்பு நிறைவடைந்தமை மற்றும் கட்டமைப்பு கட்டுமானத்தைச் செய்யும் ஊழியர்களின் வெற்றி மற்றும் உள்ளக கட்டுமானத்திற்கு மாறியதற்கான மகிழ்ச்சியை கொண்டாடுவதற்கே ஆகும்.

TRIZEN ஸ்மார்ட் ஹோம் 52, 54 மற்றும் 52 மாடிகளில் மூன்று கோபுரங்களுடன் கட்டப்படும் மற்றும் கொழும்பில் 891 ஸ்மார்ட் வீடுகளைக் கொண்டிருக்கும்.

# இலங்கையில் உலகளாவிய வேலைவாய்ப்பை வழங்கும் Emapta



பிலிபைன்ஸ் நாட்டை தளமாகக் கொண்ட, அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான கடல்சார் பணியாளர் நிறுவனமான Emapta, பெப்ரவரி 15 செவ்வாய்க்கிழமை இலங்கையில் தமது அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தது. நிறுவனத்தின் உலகளாவிய விரிவாக்கமானது உள்நாட்டு தொழிலாளர்களை உலகெங்கிலும் உள்ள சிறந்த வணிகங்களுடன் இணைக்கும் வேலை வாய்ப்புக்களைத் தொடங்குகிறது.

அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, ஐக்கிய ,ராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள பல்வேறு தொழிற்துறைகளில் ,ருந்து 460க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ,ந்நிறுவனம் தமது சேவைகளை வழங்குவதால் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மிகப்பெரிய அளவில் காணப்படுவதாக நுஅயிவய வின் நிறுவுனர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியான டிம் வோர்பச் தெரிவித்தார்.

இலங்கையின் திறமைகள் சர்வதேச வெளிப்பாட்டிற்கு ஏற்றவாறு முதிர்ச்சியடைந்துள்ளதாக நான் நம்புகின்றேன். உள்நாட்டு தொழிலாளர் சக்தியை சர்வதேச சமூகத்துடன் ,ணைக்கவும், தொழில் வளர்ச்சிக்கான அவர்களின் பயணத்தில் அவர்களுக்கு தேவையான எல்லா வழிகளிலும் ஆதரவளிக்கவும் Emapta இங்கு காத்திருக்கிறது.' என டிம் தெரிவித்தார்.

Emapta வின் ,லங்கைக்கான முகாமையாளர் மனோ ஜெயச்சந்திரன் தலைமையிலான முக்கிய குழு, கொழும்பு குயின்ஸ் வீதியில் இல. 31 ,ல் அமைந்துள்ள சொகுசு கூட்டுத் தொழில் நிறுவனமாக Elegance Workspaces,ல் தமது அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தது.

கொழும்பு அலுவலகம், வணிக மாவட்டத்தின் மையத்திலும் மற்றும் முக்கிய நிறுவனங்களால் சூழப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக்கு வசதியாகவும் அமைந்துள்ளது.

# பணியாற்றுவதற்கு சிறந்த பணியகம் ஸ்டார் கார்மன்ட்ஸ் குழுமத்துக்கு சான்றிதழ்



சுகாதாரமாக திகழ்வது மற்றும் பங்கேற்கும் வழிமுறைகள் தொடர்பில் ஊழியர்களுக்கு முக்கியத்துமளிப்பது தொடர்பில் சர்வதேச ஆடை உற்பத்தியாளரான ஸ்டார் காமன்ட்ஸ் குழுமம் காண்பிக்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளினூடாக, பணியாற்று வதற்கு சிறந்த பணியிடங்களில் ஒன்றாக Great Place to Work நிறுவனத்தினால் இனால் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

நம்பகத்தன்மை, நேர்மைக்கு மதிப்பளிப்பது, பெருமை போன்றவற்றுக்காக புகழ்பெற்ற Trust Index Survey and Culture Audit Management கருத்தாய்வின் போது ஊழியர்களின் அனுபவங்கள் பகிரப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு இந்த சான்றளிப்பு ஸ்டார் காமன்ட்ஸ் குழுமத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பெறுமதிகள் நேர்த்தியானவையாகவும் உண்மையானவையாகவும் அமைந்திருப்பதாக சுமார் 90 சதவீதமான ஆய்வுப் பெறுபேறுகள் வெளிப்படுத்தியிருந்தன.

ஒவ்வொரு நபர் மத்தியிலும் பயிலல் மற்றும் வளர்ச்சியை தூண்டும் பணிச் சூழலை ஏற்படுத்தி பேணுவது என்பதில் நிறுவனம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அறிவுப் பகிர்வு என்பதில் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளது. கடந்த இரு தசாப்த காலப்பகுதியில், குழுமத்தினால் நாட்டிலுள்ள சகல தொழிற்சாலைகளிலும் 1784 பயிற்சி அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இதில் 41398 சிரேஷ்ட ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர். இதில் 700 மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சிகளும் அடங்கியிருந்தன.

நபர் ஒருவருக்கு வளர்ச்சியை எய்துவதற்கும் பயில்வதற்கும் பல வாய்ப்புகளை வழங்க வேண்டும் என ஸ்டார் காமன்ட்ஸ் குழுமம் கருதுவதுடன், ஊழியர்களின் மகிழ்ச்சி சுட்டெண்ணில் அதிகளவு பங்களிப்புச் செலுத்தும் காரணியாக அமைந்திருப்பதாகவும் நம்புகின்றது. ஒவ்வொரு ஊழியரிலும் இந்த விடயங்களுக்காக தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு முயற்சிப்பதுடன், ஸ்டார் காமன்ட்ஸ் குழுமத்தில் ஊழியர் விருத்தி என்பது பங்காண்மையாக கருதப்பட்டு, குழு அங்கத்தவர்களிடையே வளர்ச்சி தொடர்பான மனநிலையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

# உடல் எடைகுறைப்பில் 100 சத்திர சிகிச்சைகள் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் சாதனை




முன்னணி மருத்துவமனையான லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் அண்மையில் உடல் எடை குறைப்பு வகையிலான 100 சத்திர சிகிச்சைகளை (Bariatric Weight Loss Surgery) வெற்றிகரமாக மேற்கொண்டு தமது பயணத்தில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

உடல் எடை குறைப்பு சத்திர சிகிச்சையானது நீண்ட அறுவைகளின்றி சிறிய துவாரமொன்றில் கமராவொன்றை செலுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும். 48 மணித்தியாலங்களுக்குள் நோயாளிக்கு வீடு திரும்பக் கூடியவகையில் மேற்கொள்ளப்படும் இச் சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் கனிசமான அளவில் உடலின் எடையை குறைக்க முடிகின்றமை இந்த சத்திரசிகிச்சையின் விஷேட அம்சமாகும். இந்த சிகிச்சையினால் உடல் எடை குறைவதற்கு மேலதிகமாக நீரிழிவு தூக்கமின்மை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கடுமையான மன அழுத்தம் மற்றும் மலட்டுத்தன்மை போன்ற பல்வேறு வியாதிகளை வெற்றிகரமாக குணப்படுத்தவும் முடியும். லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கூட்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தீப்தி லொகு ஆரச்சி இது தொடர்பில் தெரிவிக்கையில் இவ்வாறான 100 சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்ட நாட்டின் ஒரே தனியார் மருத்துவமனையாக லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் புதிய வரலாறு படைத்துள்ளது என்றார்.

கடந்த 07 ஆண்டுகளில் இவ்வாறான சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவையான தொழில்நுட்பம், மருத்துவப் பயிற்சி மற்றும் வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால், பாதிப்பு இல்லாத வகையில் சிக்கல்களை கட்டுப்படுத்தி வெற்றிகரமான முறையில் இவ்வாறான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தில் முக்கிய பங்காற்றும் INSEE Cement நிறுவனம்



முன்னணி சீமெந்து உற்பத்தி நிறுவனமாகத் திகழும் INSEE Cement நிறுவனம் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்திற்கு தேவையான சீமெந்தினை INSEE Cement நிறுவனம் விநியோகம் செய்து வருகிறது.

புதியநீர்மின்னுற்பத்திநிலையத்தைஅமைத்தல், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் ஆகியன திட்டத்தில் அடங்கும். உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமானது மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை ஆகியவற்றுடன் இணைந்து நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு மேற்கொண்ட ஒரு முயற்சியாகும்.

இத்திட்டம் ஈரானிய ஒப்பந்த நிறுவனமான FARAB இற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், INSEE Cement நிறுவனம் இத்திட்டத்திற்கு 85,000 மெட்ரிக் தொன்னுக்கும் மேலாக தனது தனியுரிமத்தின் கீழான ரெபிட் ஃபுளோ மற்றும் சன்ஸ்தா சீமெந்து தயாரிப்புக்களை ஏற்கனவே வழங்கியுள்ளது.

இத்திட்டம் குறித்து கருத்து தெரிவித்த INSEE Cement நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி குஸ்டாவோ நவாரோ, "உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமானது நாடளவில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் புதுப்பிக்கத்தக்க மின்சார மூலத்தை தோற்றுவிக்கும், அத்துடன் பரந்தளவிலான விவசாய நிலங்களுக்கு தேவையான நீர்ப்பாசனத்தையும் வழங்கும்.

இது இலங்கையின் உணவு மற்றும் எரிசக்தி இருப்பினை மேலும் வலுப்படுத்த உதவும். குறிப்பாக, இது தொற்றுநோய்க்கு பிந்தைய சூழலில் முக்கியமானது. INSEE நிறுவனத்தில், வாழ்க்கைக்கான கட்டுமானத்தை நாங்கள் நம்புகிறோம். எனவே, இத்திட்டத்திற்கு மிகப்பெரிய சீமெந்து வழங்குநர்களாக இருப்பது பெருமையளிக்கிறது.

# சிறுவர்களை சுறுசுறுப்பாக்கும் மைலோ

**விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்களுடன் 12,000 சிறுவர்களுக்கு பரிசுகளை வழங்கியுள்ளது**




நெஸ்லே நிறுவனத்தின் மைலோ சமீபத்தில் முன்னெடுத்திருந்த 'Milo Moments' பிரச்சாரத்தின் மூலமாக 2022 ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கும் வகையில் மூன்று மாதங்களுக்கு வாரந்தோறும் 1000 வெற்றியாளர்களுக்கு வெகுமதி அளிக்கவுள்ளது. மடிகணினிகள், டெப் சாதனங்கள், ரீலோடுகள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், ஸ்கேட்போர்டுகள், கூடைப்பந்துகள், உதைப்பந்துகள், ஸ்கிப்பிங் ரோப்ஸ் (துள்ளல் கயிறு), சப்பாத்துகள் மற்றும் டிராம்போலின்கள் போன்ற விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்கள் இதில் அடங்கியுள்ளன. நெஸ்லே மைலோ தனது வாடிக்கையாளர்களை அவர்கள் வாழ்க்கையில் மேலும் முன்னேற உதவும் ஒரு வர்த்தகநாமமாக இருப்பதால், தொற்றுநோயின் சவால்களுக்கு மத்தியில் சிறுவர்கள் சுறுசுறுப்பாக இருக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை முன்னெடுக்கவும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் இந்தப் பிரச்சாரத்தை நடத்துகிறது.

'தொற்றுநோய் பரவ ஆரம்பித்திருந்த சமயத்தில், வெளிப்புற விளையாட்டுகள் மற்றும் அணியாக முன்னெடுக்கும் செயல்பாடுகள் தடைப்பட்டன. ஆகையால்சிறுவர்கள்தமது வீடுகளுக்குள் முடங்க வேண்டி ஏற்பட்டது. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு விளையாட்டு மற்றும் உடல்ரீதியான செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை எப்போதும் நம்பும் ஒரு வர்த்தகநாமமாக, இந்த சவாலான காலத்திலும் சுறுசுறுப்பாக இருக்க ஏராளமான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதை சிறுவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். எனவே, நாடு முழுவதிலுமுள்ள 12,000 சிறுவர்களுக்கு விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலமாக அவர்களை உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருக்க ஊக்குவிப்பதுடன், அவர்களின் கல்வித் தேவைகளுக்கும் ஆதரவளிக்க முடியும்,' என்று நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பு வகை சந்தைப்படுத்தல் முகாமையாளரான மொஹமட் அலி கூறினார்.

# ஈஸ்வரன் பிரதர்ஸ் தேயிலை ஏற்றுமதிப் பிரிவின் பணிப்பாளர்சபை அங்கத்தவராக அருணி குணதிலக



நாடறிந்த நிதிச்சேவைகள் நிபுணரான அருணிகுணதிலக, ஈஸ்வரன் பிரதர்ஸ் பணிப்பாளர்சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈஸ்வரன் பிரதர்ஸின் இந்த திறமிகு பணிப்பாளர் சபையில் நிறுவன மேலாண்மை நிபுணர் கலாநிதி. நளின் ஜயசூரியவின் சுயாதீன தலைமைத்துவத்தின் கீழ், சுயாதீன பணிப்பாளரும், சிலோன் டொபாக்கோ கம்பனியின் கணக்காய்வு குழுவின் தவிசாளரும் மற்றும் அம்பியன் கெப்பிட்டல் தவிசாளருமாகிய யுதிஷ்டன் கனகசபை, மற்றும் முன்னணி ஐரோப்பிய நிறுவனமான ஸ்டராட்ட ஜெம் பார்ட்னர்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட உபதலைவரும், பிரெக்சிட் ஆலோசனை சேவை வழங்குநருமான கேப்ரியல் டி ஆர்ச்சி மற்றும் பாகிஸ்தான் மற்றும் கென்யாவைச் சேர்ந்த புகழ்பெற்ற சர்வதேச தேயிலைத்துறை நிபுணரான ஹனீவ்ஜனு ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நிபுணத்துவம் வாய்ந்த அணியில் புதிய அங்கத்தவராக, பிராந்தியத்தில் முன்னணி நிதிச்சேவைகள் நிபுணரான அருணிகுணதிலக 2021 ஜூன் மாதத்தில் இணைந்திருந்தார். இதனைத் தொடர்ந்து ஹற்றன் நஷனல் வங்கியின் தலைமை அதிகாரியாகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

தமது நியமனம் தொடர்பில் அருணிகுணதிலக கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் முன்னணி வகிக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி நிறுவனங்களில் ஒன்றான ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். உலகம் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவரும் இக்காலப்பகுதியில், பன்முகப்படுத்தல் மற்றும் வளர்ச்சி தொடர்பான சிறந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஈஸ்வரன் பிரதர்ஸ்ஆரம்பித்துள்ளது. நிறுவனத்தின் செயற்பாடுகள் புதிய வழிமுறைகளில் முன்னெடுக்கப்படும் நிலையில், நிறுவனத்தின் தலைமைத்துவ அணியில் அங்கம் வகிப்பதை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்" என்றார்.



# வாரபலன்

20.02.2022 - 26.02.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

வேகம் மற்றும் விவேகத்துடன் செயல்பட்டு வெற்றி காணும் மேஷ ராசி நேயர்களே! மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது உங்கள் ராசி நாதன் செவ்வாய் 9ஆம் இடத்தில் தானாதிபதி சுக்ரனோடு கூடி இருக்கிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். இம்மாதம் அட்டமத்து கேது இருப்பதால் வெள்ளிக்கிழமை தோறும் வினாயகப்பெருமானை வழிபடுவது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 26 அதிஷ்ட நிறம் மஞ்சள்.

## ரிஷபம்

கொள்கைப் பிடிப்போடு செயல்பட வேண்டும் என கூறும் ரிஷப ராசிக்காரர்களே! மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது உங்கள் ராசிநாதன் சுக்கிரன் அட்டமத்தில் சஞ்சரிக்கிறார். 6ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சுக்கிரன் என்பதால் “கெட்டவன் கெட்டில் கெட்டிடும் ராஜயோகம்” என்பதற்கு ஏற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் வரப்போகிறது. இம்மாதம் ஜென்மத்தில் ராகு இருப்பதால் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 28 அதிஷ்ட நிறம் செம்மஞ்சள்.

## மிதுனம்

புத்திக்கூர்மையுடன் செயல்பட்டு புதுமை படைக்கும் மிதுன ராசி நேயர்களே! மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் புதன் 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அட்டமத்து சனியில் ஆதிக்கம் இருக்கிறது. குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். தேவைக்கேற்ப பணம் வந்து சேரும். இம்மாதம் அட்டமத்து சனியில் ஆதிக்கம் இருப்பதால் சனிக்கிழமை தோறும் அனுமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 21 அதிஷ்ட நிறம் நீலம்.

## கடகம்

பொதுநலத்தில் அக்கறை செலுத்தி புகழ் குவிக்கும் கடக ராசி நேயர்களே! மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்தில் கண்டக சனியில் ஆதிக்கமும் அட்டமத்து குருவின் ஆதிக்கமும் இருக்கிறது. எனவே எதிலும் நிதானத்துடன் செயற்படுங்கள். வரவை விட செலவு கூடும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருதட்சணாமூர்த்தியை வழிபடுவது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 22. அதிஷ்ட நிறம் பச்சை.

## சிம்மம்

நட்புக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுக்கும் சிம்ம ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சூரியன் சப்தம ஸ்தானத்தில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் மங்கள ஒலி கேட்க வழி பிறக்கும். இம்மாதம் ஞாயிற்றுகிழமை தோறும் சிவன் உமையாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 24 அதிஷ்ட நிறம் சிவப்பு.

## கன்னி

சமயோசிதமாகப் பேசி காரியங்களை சாதிக்கும் கன்னி ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது உங்கள் ராசி நாதன் புதன் பஞ்சம ஸ்தானத்தில் சனியோடு சஞ்சரிக்கின்றார். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. எனவே பொருளாதாரம் திருப்தி தரும். குடும்ப பிரச்சினை தீரும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் நவக்கிரகத்தில் உள்ள குருவை வழிபட்டுவருவது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 27 அதிஷ்ட நிறம் நீலம்.

## துலாம்

உறவினர்களை உபசரிப்பதில் உள்ளம் மகிழும் துலாம் ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சுக்கிரன் தன சப்தமாதிபதி செவ்வாயோடு சேர்ந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே வருமானம் திருப்தியாக இருக்கும். இம்மதம் அபிராமி அம்மன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 27 அதிஷ்ட நிறம் ஊதா.

## விருச்சிகம்

புகழ் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது தன ஸ்தானத்தில் உங்கள் ராசி நாதன் செவ்வாய் சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே சுக்கிர மங்கள யோகம் ஏற்படுகிறது. மங்கள நிகழ்வுகள் இல்லத்தில் இடம்பெறும். தொழில் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் எதிர்பார்த்தபடியே தொழில்முன்னேற்றமும் லாபமும் கிடைக்கும். இம்மாதம் பிரதோச விரதம் இருந்து நந்தி பெருமானையும் சிவன் உமையவளையும் வழிபட்டு வருவது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 27, அதிஷ்ட நிறம் சிவப்பு

## தனுசு

இல்லம் வருவோரை இனிதே உபசரிக்கும் தனுசு ராசி நேயர்களே! மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது உங்களுடைய ராசி நாதன் குரு பகவான் பாக்கிய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசியில் விரயாதிபதி செவ்வாயும் லாபாதிபதி சுக்ரனும் இருக்கிறார்கள். இம்மாதம் இராமபிரான் வழிபாடு நன்மை தரும். அதிர்ஷ்டம் தரும் திகதி 28 அதிஷ்ட நிறம் மஞ்சள்.

## மகரம்

தங்களை பெருமையாக பேச வேண்டும் என்று நினைக்கும் மகர ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது ஏழரை சனியில் ஜென்ம சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானை வழிபடுங்கள். அதிஷ்டம் தரும் திகதி 25 அதிஷ்ட நிறம் கருநீலம்.

## கும்பம்

எந்த காரியத்தை செய்தாலும் தீர ஆலோசித்து செய்யும் கும்ப ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சனி விரய ஸ்தானத்தில் இருக்கிறார். உங்கள் ராசியிலேயே குருவும் சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள்.விரய சனி முடியும் வரை நிதானமும் பொறுமையும் உங்களுக்கு கூடுதலாகத் தேவை. இம்மாதம் அனுமான் வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது. அதிஷ்டம் தரும் திகதி 27 அதிஷ்ட நிறம் றோஸ்

## மீனம்

சந்தர்ப்பங்களை சாதகமாக்க வேண்டும் என்று சொல்லும் மீன ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாத தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் குரு சூரியனோடு இணைந்து 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே வரவை காட்டிலும் செலவு அதிகரிக்கும். இம்மாதம் வளர்ச்சியில் உள்ள தளர்ச்சியை பைரவர் வழிபாடு தளர்த்தும். அதிஷ்டம் தரும் திகதி 28 அதிஷ்ட நிறம் கரும் பச்சை.

# ஆண்டுகள் நாற்பதை கடந்து சாதனை படைக்கும் ரூபவாஹினி தொலைக்காட்சி...

அமெரிக்காவில் 1954ஆம் ஆண்டில் அறிமுகமான தொலைக்காட்சி வர்ண ஒளிபரப்பைத் தொடர்ந்து உலகம் தொலைக்காட்சியின் ஆக்கிரமிப்புக்குள் மூழ்கத் தொடங்கியது. ஆனாலும் பிபிசியின் பரீட்சார்த்த தொலைக்காட்சி ஒளிபரப்பு 1928ஆம் ஆண்டில் மத்திய அலைவரிசையில் ஆரம்பக்கட்ட ஒளிபரப்பைத் தொடங்கியது. செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் வானொலியின் பலத்த ஆதிக்கத்தின் கீழ் உலகம் மூழ்கியிருந்த நிலையில்தான் தொலைக்காட்சி தனது வித்தைகளை உலகுக்கு ஒவ்வொன்றாக அறிமுகப்படுத்தி தனது அபார சக்தியை நிரூபித்துக் கொண்டிருந்தது.

1979 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு தொலைக்காட்சியின் அவசியம் குறித்து அன்றைய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவின் அரசாங்கம் ஜப்பானிய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. அதனைத் தொடர்ந்து ITN எனப்படும் சுயாதீன தொலைக்காட்சி சேவை தோற்றம் பெற்ற போதும் பரீட்சார்த்தமாகவே ஒளிபரப்பை வழங்கிக் கொண்டிருந்தது. ஆனால் உத்தியோகபூர்வமாக ஒளிபரப்பு ஆரம்பிக்கப்படவில்லை.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் வீழ்ச்சியை அடைந்த ஜப்பானுக்கு 1951ஆம் ஆண்டில் சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் அன்றைய இலங்கை நிதி அமைச்சராக இருந்த ஜனாதிபதி ஜெயவர்த்தன நிகழ்த்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையே இலங்கைக்கு தொலைக்காட்சி நிலையம் ஒன்றை முற்றிலும் இலவசமாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை ஜப்பானியர்களின் மனதில் தோற்றுவித்தது.

அத்துடன் ஜனாதிபதி ஜெயவர்த்தன அரசின்திறந்த பொருளாதாரக் கொள்கையே இலங்கை மக்கள் தம் வீடுகளில் தொலைக்காட்சி பெட்டிகளை பரந்த அளவில் வாங்கி வைத்துக் கொள்ளும் அளவுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் இன்னும் ஒரு கட்டம் தான் நாம் 24 மணி நேரமும் இப்பொழுது பாவித்துக் கொண்டிருக்கின்ற நவீனரக கையடக்கத் தொலைபேசிகள் ஸ்மார்ட்போன் போன்றவை ஆகும். மற்றும் இன்றைய நவீன சாதனங்கள் உயர்ரக வாகனங்கள் என்பவற்றின் தாராள இறக்குமதிக்கும் அதுவே காரணியாக அமைந்தது.

இனி விடயத்துக்கு வருகின்றேன்..... ஜப்பானிய உயர் தொழில்நுட்பம் மற்றும் கட்டிடக் கலையில் அமைந்த தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவால் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து இலங்கை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் முதல் தலைவராக சிவில் சேவையில் சிறந்த நிருவாகியாக விளங்கிய எம்.ஜெ.பெரேரா நிமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை 40 ஆண்டுகளாக பரந்துபட்ட சேவையை ரூபவாஹினி தனது ஒளிபரப்பினூடாக மேற்கொண்டு வருகின்றது.

செய்தி ஒளிபரப்புகள், கல்வி நிகழ்ச்சிகள், களியாட்ட நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நாடகம், விவரணங்கள், அரசியல் நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நேரடி ஒளிபரப்புகள் என்று நாளாந்தம் 18 மணி நேரத்திற்கும் அதிகமான ஒளிபரப்புக்களை வழங்கி வருகின்றது.

பிரதான தேசிய அலைவரிசை, நேத்ரா தமிழ் ஒளிபரப்பு அலைவரிசை, மற்றும் ஆங்கில நிகழ்ச்சிகளுக்கான Eye ஐ அலைவரிசை ஊடாக மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகி வருகின்றன.

தேசிய தொலைக்காட்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு வரை “நாமே முதலிடம் நாமே நம்பர் வன்” என்ற தொலைக்காட்சி அந்தஸ்தில் இருந்து வந்த போதிலும் பின்னாளில் புதிய தனியார் அலை வரிசை அறிமுகங்களின் போட்டி நிலைமை உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த நிலைமை வியாபார ரீதியிலும் பார்வையாளர்களை கவரும் நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட வரிசையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்திய போதிலும் தேசிய தொலைக்காட்சி தனித்துவமான பாதையில் தன் பயணத்தை தொடர்ந்தது.

நிகழ்ச்சிகளிலும் விளம்பரங்களிலும் எவ்வளவு போட்டித் தன்மை ஏற்பட்ட போதிலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தளர்ந்து விடாத உறுதியான பயணத்தை சுமார் 800க்கும் அதிகமான நிரந்தர ஊழியர்களின் கடின உழைப்புடன் தேசிய ரூபவாஹினி முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.



நூற்றுக்கணக்கான பணியாளர்களுடன் மட்டுமே பயணிக்கும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளுடன் ஒப்பிடும்போது போதிய ஆட்பலம், பொருளாதார வளம், சந்தைப்படுத்தல் வசதி, ஒளிபரப்பு மற்றும் அதி உயர் தொழில்நுட்ப வல்லமையுடன் மாபெரும் ஊடக வலையமைப்பு ஒன்றை தன்னகத்தே கொண்டு தனது தேசியத்தையும் தனித்துவத்தையும் இழந்துவிடாமல் 40 வருடங்களாக அதனைப் பேணிப் பாதுகாத்து தன் வெற்றிப் பயணத்தை தொடர்வது ஆரோக்கியமான ஒரு பணியாகும்.

தேசிய தொலைக்காட்சியின் ஊடகப் பயணத்தில் கால் பதித்து நானும் முப்பத்தி எட்டு வருடங்களை இந்த தருணத்தில் பூர்த்தி செய்வது மனதுக்கு பெரும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. நிகழ்ச்சித் தயாரிப்புகள், செய்தி ஒளிபரப்புகள், உள்நாட்டுப் பயிற்சிகள், வெளிநாட்டுப் பயணங்களும் பயிற்சிகளும், உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக சந்திப்புகள், சமூகத்தின் தேவைகளை மக்களின் குரலாக மாற்றி அமைத்த சந்தர்ப்பங்கள் மற்றும் புதியவர்களை இத்துறைக்குள் உள்வாங்கியதும் அவர்களுக்கு வழிகாட்டியதும் வாழ்வில் மறக்க முடியாத தருணங்கள் ஆகும். அத்துடன் ஒரு செய்தியாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக, நேர்முக வர்ணனையாளராக, தயாரிப்பாளராக,செய்தி வாசிப்பாளராக, பயிற்றுவிப்பாளராக நம்மை நாம் அர்ப்பணித்துக் கொண்டமை மெய் மறந்து பணியாற்றிய தருணங்கள் எனலாம். இவை அனைத்துக்கும் மேலாக நிருவாகத்தில் ஒரு அங்கமாக இருந்து ஒரு உறுதியான வழிகாட்டலை முன்னெடுத்தது மனதுக்கு ஆத்ம திருப்தியை தரக்கூடிய ஒன்றாகும்.

2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் பேராசிரியர் கங்காநாத் திசாநாயக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பதவி ஏற்ற போது மேற்கொண்ட ஆக்கபூர்வமான பணிகள் காலத்தால் அழியாத வரலாற்றுத் தடங்கள் ஆகும். அவரது பணிக்காலம் ஒரு பொற்காலம் என்பேன். தமிழ் செய்தி ஒளிபரப்பு ஒரு விசேட பிரிவாக உருவாக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் தோற்றம் பெற்றது. அந்தக் கணம் தொடக்கம் செய்திகள் புதிய பரிமாணத்துடன் முன்னெடுக்கப்பட்டது. அதிக வருமானம் ஈட்டும் பிரிவாக ரூபவாஹினி செய்திப் பிரிவை நாம் மாற்றி அமைத்தோம்.







புதிய பாணியில் செய்தி ஒளிபரப்பு, புதிய அறிவிப்பாளர்களின் அறிமுகம், புதிய பணியாளர்களின் நியமனங்கள், புதிய தயாரிப்பாளர்களுக்கு பயிற்சிகளும் நியமனங்களும், இது தவிர தமிழ் பேசுகின்ற பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் கலை கலாசார நலன் கருதி புதிய பிராந்திய செய்தியாளர்களின் நியமனங்கள் போன்றவை நமது விசேட வேண்டுகோளின் பேரில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளாகும்.

2016ஆம் ஆண்டு மீண்டும் முதல் தரத்துக்கு தமிழ் செய்தி கொண்டுவரப்பட்டது. அடுத்தடுத்து தொடர்ச்சியாக எமது செய்தியாளர்களுக்கும் செய்திவாசிப்பாளர்களுக்கும் அரச மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டன. “மக்கள் மனு” “உண்மையின் அடையாளம்” என்ற தலைப்பில் பொதுமக்களின் குறைகளுக்கு நேரடித் தீர்வுகள் செய்தி அறிக்கைகளின் ஊடாக வழங்கப்பட்டன.

ரூபவாஹினி தேசிய செய்திகள் சிகரம் தொட்ட வரலாற்றுத் தடங்கள் அவை. 2008ஆம் ஆண்டில் தமிழ் பேசும் மக்களுக்காக "நேத்ரா" என்ற பெயரில் ஒரு புதிய பிரத்தியேக அலைவரிசை தோற்றம் பெற்றது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

அரச தொலைக்காட்சி என்ற நிலையில் செய்தி மற்றும் நிகழ்ச்சிகளை கையாளும் போது தார்மீக பொறுப்பும் தேசிய நலன்சார்ந்த விடயங்களில் தனித்துவத்தைப் பேண வேண்டியதன் அவசியமும் எமக்கு என்றும் அதிகம் உண்டு. அது போலவே எதிர்பாராத நேரத்தில் நாம் சந்திக்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதும் வெற்றியுடன் பயணிப்பதும் முரண்பாடுகளை ராஜதந்திரரீதியாக கையாள்வதும் இந்த நீண்ட பயணத்தில் நாம் சந்தித்த கசப்பான உண்மைகளும் அனுபவங்களும் ஆகும்.





யூ.எல்.யாக்கூப் ...




# டச்சு - ஆங்கிலேய இறுதிப் போர் நிகழ்ந்த கைமன் வாசல்

கொழும்பு கோட்டையின் பிரதான பாது காப்பு கொத்தளம் என்றால் அது கைமன் வாயிலில் இருந்த கொத்தளம் தான். கொழும்பின் அன்றைய கோட்டையைச் சூழ வடக்காக பன்னிரண்டு கொத்தளங்களையும் அதனை இணைக்கின்ற உயர்ந்த அகன்ற சுவர்களாலும் அமைக்கப்பட்டிருந்தது. மேற்கில் கடலும் தெற்கில் செயற்கையாக அமைக்கப்பட்ட ஏரியையும் பாதுகாப்பாகக் கொண்டிருந்தது. தரை வழிப் போரை எதிர்கொள்வதற்கு மூன்று கொத்தளங்கள் இருந் தன. செயின்ட் ஜோன்ஸ் (St. John's), செயின்ட் ஸ்டீபன் (St. Stephen), செயின்ட் செபஸ்டியன் ஆகியனவே அவை. இவற்றில் பிரதான கொத்தளமான செயின்ட் ஜோன்ஸ் தான் கைமன் வாயிலோடு இருந்தது.

1655 இல் போர்த்துகேயரிடமிருந்து கொழும்பை கைப் பற்றுவதற்கு தலைமை தாங்கிய டச்சு ஜெனரல் கெராட் ஹல்ப்ட் (Gerard Pietersz Hulft) 1656ஆம் ஆண்டு ஏப்ரல் 10 அன்று இந்த கைமன் வாசலில் வைத்து தான் போர்த் துகேயரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் நினைவாகத் தான் அவர் முகாமிட்டிருந்த மேட்டுப் பகுதிக்கு ஹல்ப்ஸ் டொப் (Hulftsdorp) என்று வைக்கப்பட்டது. அங்கே தான் இன்றைய கொழும்பு உயர்நீதிமன்ற வளாகம் அமைந்திருக்கிறது.

போர்த்துகேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் கோட்டைக்குள் நுழைவதற்கான இந்த கைமன் வாசல் (Kayman's Gate) அருகே ஆயுதம் ஏந்திய காவலர் நிறுத் தப்பட்டனர்.மேலும் "கைமன் வாசல்"அருகே கட்டப்பட்டிருந்த பெரிய பழைய டச்சு காவற்கோபுரம் டச்சு காலத்திலேயேஇ டிந்து விழுந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது, கோட்டையும், புறக்கோட்டைப் பகுதியில் உள்ள தெருக்களும் நெரிசலான தெருக்களாக மாறின. **"கைமன் வாசல்"**இருந்த இடமும் பரபரப்பான சந்தையாக மாற்றப்பட்டது. உடைந்த உலோகப் பாத்திரங்களை வெல்டிங் செய்வதற்கான ப்ளீச் சர்கள், சப்பாத்து தயாரிப்பாளர்கள் உட்பட பல வணிகங்கள் இங்கு தொடங்கப்பட்டன. அந்த நேரத்தில் "கைமன் வாசல்" அருகே சவப்பெட்டி வர்த்தகம் ஒரு செழிப்பான வணிகமாக இருந்தது.

**பகிரங்க மரணதண்டனைக் களமாக**

ஆனால் அதைவிட இன்னொரு சுவாரசியமான காரணத் தையும் இக்கட்டுரைக்கான தகவல்களைத் தேடிக்கொண் டிருக்கும் போது கிடைத்தது. இலங்கையின் முதலாவது பத்திரிகையான உதயதாரகைப் பத்திரிகை அப்போது யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருந்தது. 1848 ஆம் ஆண்டு செப் டம்பர் 28 ஆம் திகதி வெளியான பத்திரிகை செய்தியின்படி கொலைக்குற்றங்களுக்காக ஒரு சிங்களவர் 4ஆம் திகதி திங்கட்கிழமை வழமையாக மரண தண்டனை நிறைவேற் றப்படும் இடமான 'கைமன் வாசலில்' தூக் கிலிட்டு மரண தண்டனை அளிக்கப் பட்டதாகவும், 11 ஆம் திகதி மேலும் இருவருக்கு மரண தண்டனையை நிறை வேற்றப் பட்டதாகவும் மேலும் இரண்டு பேர் 14 ஆண்டுகளுக்கு கடத்தப்பட்ட தாகவும், மேலும் 23 கிளர்ச்சியாளர் கள் அவ்வாறு நாடுகடத்தப்படுவதற்காக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் காண முடிந்தது.




1848 என்பது மலையக ஊவா பகுதிகளில் இலங் கையின் ஆங்கிலேயர்களுக்கு எதிரான வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த கெரில்லா பாணியிலான ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சி இந்தக் காலத்தில் தான் நிகழ்ந் தன. பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அக் கிளர்ச்சியாளர்களையும், மரண தண்டனை தீர்ப்பு வழங் கப்பட்ட பலரையும் இந்த கைமன் வாசலில் வைத்துத் தான் கொன்றிருக்கிறார்கள் என்று அறியமுடிகிறது. 1869 ஆம் ஆண்டு வரை பகிரங்க மரண தண்டனை இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உதயதாரகை இரு மொழிப் பத்திரிகை. இச்செய்தி பற்றிய அதன் தமிழ் மொழிபெயர்ப்பில் சில தகவல் பிழைகள் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. உதய தாரகைப் பத்திரிகையின் பெரும்பாலான செய்திகள், அரச அறிவித்தல்கள் என்பன முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பின்னர் தமிழாக்கம் செய்து வெளியிடப்பட் டுள்ளதை உணர முடிகிறது.

1938 இல் வெளியான இலங்கை பொலிஸின் வரலாறு (A History of the Ceylon Police)என்கிற நூலிலும் கைமன் வாயில் பகிரங்கமாக தூக்கிலிட்டு மர ணதண்டனை விதிக்கும் இடமாக எவ்வாறு இயங்கியது என்பது பற்றிய விபரங்களைக் காண முடிகிறது.

**மணிக்கோபுரம்**

1870கள் அளவில் கோட்டை என்கிற அடையாளம் பெரும்பாலும் மாறியிருந்தது. அதன் எல்லைச் சுவர்கள் கூட பெரும்பாலும் நீக்கப்பட்டிருந்தது. 1877 இல் வெளியான Old Ceylon என்கிற நூலில் "கோட்டையின் வாயிற்காவலர்க ளைக் கொண்ட அந்த அந்த கைமன் வாயில் இனி இப்போது இல்லை" என்கிறார் ஜோன் கெப்பர். அதற்கு முன் அந்தப் பகுதியானது நகரத்துக்குள் நுழைகின்ற வாசல் என்பதால் சனப்புழக்கம் அதிகம் இருந்த இடம் என்பதை வர்ணிக்கி றார்.1870களில் கோட்டையின் மதில்களும், கொத்தளங்க ளும் பெரும்பாலும் இடித்து தரைமட்டமாக்கி கோட்டைக்கும், புறக்கோட்டைக்கும் இடையிலான தடையை நீக்கி கொழும்பு நகரின் மையப் பிரதேசமாக ஆக்கினார்கள் ஆங்கிலேயர்கள்.

இறுதியாக "கைமன் வாசல் மணி"அதிகாரப்பூர்வமாக இரண்டு முறை ஒலிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1926 ஆம் ஆண்டு ஜனவரி 21,28 ஆகிய திகதிகள்.அது ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மரணத்தின் போது ஆட்டுபட்டித் தெரு வுல் பெண்டால் தேவாலயத்தில் அவருக்கு நினைவஞ்சலி செய் தியைத் தெரிவிப்பதற்காக ஒலிக்கப்பட்டது. அதன் பின்னர் 1945ஓகஸ்ட் 14 ஆம் திகதி. அதாவது இரண்டாம் உலகப் போரின் போது. மற்ற தேவாலயங்களின் மணிகளுடன் இம் மணியும் ஏக காலத்தில் ஒலித்தது.


கொழும்பு மெயின் வீதி

மார்ச் 22, 1926 அன்று டச்சு சீர்திருத்த சபையில் (TheGeneral Consistory) எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகா ரம் நகர அதிகாரிகளுக்கு விண்ணப்பித்ததன் மூலம் இறுதி யாக இந்த மணி சரிசெய்யப்பட்டிருக்கிறது.

கைமன் வாசல் பற்றிய சுவாரஸ்யமான செய்திகளில் ஒன்று; இலங்கையை ஆண்ட ஐரோப்பிய ஆட்சியாளர்க ளைக் காண்பதற்காக கண்டி இராச்சியத்திலிருந்து தூதர் கள் வரும் வேளைகளில் மேளதாளங்களோடு, வரவேற்பு கோஷங்களை எழுப்பியபடி கைமன் வாசல் வரை வந்து மரி யாதையுடன் அழைத்துச் செல்வதை சம்பிரதாயமாக பின்பற் றப்பட்டு வந்துள்ளது.

**இறுதி யுத்தம் நடந்த இடம்**

ஒல்லாந்தரிடமிருந்து கொழும்பை கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர் நடத்திய போர் 1795 ஆம் ஆண்டு யூலை, ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் உக்கிரமமாக நிகழ்ந்தது. இறுதியில் 1796 பெப்ரவரி 16ஆம் திகதி ஒல்லாந்தர் கொழும்பை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர். கொழும்பைக் கைப்பற்றுவதற்கான இறுதி யுத்தம் இந்த கைமன் வாசலரு கில் தான் நிகழ்ந்தது. அந்த யுத்தத்தின் போது கோட்டைக்குள் நுழைவதற்கான கைமன் வாசல் அருகில் 1796 பெப்ரவரி 12 இலிருந்து 14வரை நிகழ்ந்த இறுதிப் போரைப் பற்றி எம்.தி லா தொம்பே (M, de la Thombe) ஒரு முக்கியமான நூலை (Recueil de Notes sur l Attaque et defense de Colombo) எழுதியிருக்கிறார். ஒல்லாந்தரின் பிடி தளர்ந்ததும் கைமன் வாயிலை கைவிட்டு விட்டு கோட்டையிலிருந்து பின்வாங்கி கோட்டையின் கதவுகளை மூடியதுடன் இழுப்பாலங்களையும் இழுத்துக்கொண்டனர்.

பெப்ரவரி 14 ஆம் திகதி மதியம் 1 மணிக்கு மேஜர் அக்னிவ் (Major Agnew) என்கிற டச்சு படை அதிகாரி தனது நல் லெண்ண சரணடைவை வெளிப்படுத்தும் விதமாக ஒரு கொடியுடன் இந்த கைமன் வாயிலுக்கு வந்து ஆங்கிலேயரிடம் சர ணடைந்தார்.

ஆங்கிலேயர் இலங் கையைக் கைப்பற்றிய சிறிது காலத்தில் 1806 ஆம் ஆண்டு கொழும்பில் ஏற்படுத்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கான சட் டமொன்று ஆங்கிலேய ஆளுநர் மெயிட்லன்ட் காலத்தில் கொண்டுவரப்பட்டது. அச்சட் டத்தின் 14 ஆம் இலக்க விதியின் 4வது பிரிவின்படி சூரியன் மறைந்ததன் பின்னர் சந்தேகத்துகிடமான நபர்களைக் கண்டால் அவர்களைப் பிடித்து கைமன் வாயிலில் உள்ள காவலர்களிடம் ஒப்படைக்கும்படியும், அவர்கள் மீது அடுத்த நாளோ அல்லது அன்றிரவோ உரிய நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அக்காவலர்களுக்கு வழங்கப்படுவதாகவும் குறிப்பி டுகிறது.

1858 ஆண்டு வெளியான Almanacஇல் (வருடாந்த பதிவேடு) அப்போது கொழும்பின் மையப்பகுதியான கைமன் வாயில், ஹல்ப்ஸ்டொர்ப், மருதானை, வெலிக்கடை போன்ற இடங்களுக்கான மிஷனரிகளுக்கு பொறுப்பானவராக ஒரு தமிழர் இருந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரின் பெயர் வி.தேவசகாயம். அது போல அதே அறிக்கையில் கைமன் வாயில் அருகில் ஒரு மிஷனரி பாடசாலை இயங்கியிருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பதிவின் பிரகாரம் ஆங்கிலப் பாடசாலையில் (Kayman's Gate English School) 40 ஆண் மாணவர்கள் கற்றிருக்கிறார்கள். தமிழ்ப் பாடசாலையும் இருந் திருக்கிறது அதில் (Kayman's Gate Tamil School) 20 மாணவர் கள் கற்றிருக்கிறார்கள். சுமார் ஐந்து நூற்றாண்டுக் கதைகளை தன்னுள் வைத்து இரகசியமாக புதைத்து வைத்துக்கொண் டுள்ள இந்த கைமன் வாசல் இலங்கையின் அதிக சனப்புழக் கம் கொண்ட இடமொன்றில் மறைவாக இரும்பு வேலிகளால் கட்டப்பட்ட நிலையில் ஓர் ஓரத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறது. தவறாமல் இனி அதைக் கடந்து செல்லும் போது நின்று நினைவுகொள்ளுங்கள். **(தொடரும்)**

# மாசடைந்து வரும் நீர்கொழும்பு களப்பு



நீர்கொழும்பு களப்பு பிரதேசம் ஜா எல முகத்துவாரம் , சீதுவ , கட்டுநா யக்க, குறன, முன்னக்கர மற்றும் நீர்கொழும்பு, பிடிப்பன ஆகிய பிரதேசங் களை உள்ளடக்கிய உவர் நீர்வாழ் ஜீவரா சிகளைக் கொண்ட வளமிக்க நீர்ப் பரப்பா கும். நீர்கொழும்பு மாநகர சபை, மற்றும் சீதுவ/ கட்டுநாயக்க நகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங் களுக்கு உட்பட்ட பிரதேசமாகவும் நீர் கொழும்பு களப்பு உள்வாங்கப்பட்டுள்ளது . உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல் லாசப் பயணிகளை கவரும் நீர்ப் பிரதே சமாகவும் நீர்கொழும்பு களப்பு பிரதேசம் திகழ்கின்றது. கடந்த இரு தசாப்த காலங் களாக நீர்கொழும்பு களப்பு பிரதேசத்தின் உவர் நீர்ப்பரப்பில் கழிவு நீர் கலந்து சூழல் மாசடைதலை தடுப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் சுற்றாடல் பாது காப்பு பிரிவின் அதிகாரிகளும் நடவடிக்கை களை மேற்கொண்டனர்.


( படங்கள் : நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

மேலும் நீர்கொழும்பு மற்றும் கட்டுநா யக்க சீதுவ ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கம்பஹா மாவட்ட அலுவல கம் மற்றும் ஏனைய அரச நிறுவனங் கள் ஆகியவை இதனைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் அண்மை யில் மேற்கொண்டன. அவ்வாறான நடவ டிக்கைகளை விடவும் பொருளாதார வளம் கொண்ட நீர்ச்சூழலை பாது காப்பது நீர்கொழும்பு களப் பினைச் சுற்றியுள்ள சுற்றுச் சூழலில் வசிக்கும் பொது மக் களின் பாரிய பொறுப்பாகும். இவர்கள் கவனம் செலுத் தினால் இதனைத் தடுக்க முடியும் எனவும் கூறலாம. கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் மீனவக் குடும்பங் கள் தமது வாழ்வாதாரத்துக் காக நீர்கொழும்பு களப்பில் வசிக்கும் நண்டு, இறால் மற்றும் களப்பு மீன்கள் ஆகிய ஜீவராசிகளை விற்பனை செய்வ தன் மூலம் பெற்று வந்தனர். இதனால் தங்களத வாழ்க்கைச் செலவினங்களை யும் சமாளித்தனர். சிறப்பாகவும் வாழ்ந் தனர் . தேசிய மட்டத்தில் நீர்கொழும்பு களப்பு இரண்டாவது இடத்தில் உள்ளது. யாழ் குடாநாட்டின்களப்பு பிரதேசம் முதலி டம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நீர்கொழும்பு நகர மத்தியிலிருந்து நீர் கொழும்பு களப்பு பிரதேசம் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலேயே அமைந் துள்ளது . இதனால் நீர்கொழும்பு நகரத் துக்கு ரம்மியமான சூழலையும் இந்த நீர் வளம் வழங்கி வருகின்றது . களப்பை அண்டியுள்ள தரைப் பிரதேசத்தில் சிறிய ரக உல்லாச ஹோட்டல்களும் அமைந் துள்ளன . வார விடுமுறை நாட்களிலும் விடுமுறை காலங்களிலும் நீர்கொழும்பு களப்பு பிரதேசத்தினை ரசிப்பதற்கென்றே வெளியூர் வாசிகளும் வெளிநாட்டு உல் லாசப் பயணிகளும் கடந்த காலங்களில் வருகை தந்தனர்.

எனினும் அண்மைக் காலமாக அவர் களின் வருகை படிப்படியாக குறைந்து கொண்டே சென்றது. நீர்கொழும்பு நகரத் துக்கு அண்மையிலேயே உள்ள களப்பு பிரதான வீதியின் களப்பு பிரதேசம் , குட்டி தீவு களப்பு பிரதேசம் மற்றும் முன்னக்கர களப்பு பிரதேசம் எனக் குறிப்பிடப்படுகின் றன . பாரிய ஆழ் கடல் இயந்திரப் படகு களை தரித்து வைக்கும் நீர்ப் பிரதேசமாக இந்த நீர்ப்பரப்பு பயன்படுத்தப்பட்டு வரு கின்றது.

கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் அதாவது 50 வருடங்களுக்கு முன்னர் மேற்படி களப்பு பிரதேசத்தில் இறால், நண்டு மற்றும் மீன்கள் ஆகிய வற்றை மீனவர்கள் களப்பில் இறங்கி வலை வீசிப் பிடித்தனர். அன்றைய காலத்தில் சூரியன் மறைந்ததும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மீனவர்கள் களப்பில் வலை வீசி இறால், நண்டு மற்றும் மீன்களை பிடிப்பதற்கு ஆரம் பிப்பர். இரவு 8 மணிவரை வலை வீசிக் கொண்டே தமது தொழில் முயற்சியை மேற்கொள்வர் . மண்ணெண்ணையால் எரியும் சிமிணி விளக்குகளை தத்த மது மீன்பிடி வள்ளங்களில் வைத்துக் கொண்டு சுமார் 100 அல்லது 150 பேர் தமது இவ்வாறான தொழில் முயற் சியை களப்பில் மேற்கொள்வர் . இது ஓர் ரம்மியமான காட்சியாகவும் அன்று இருந்தது . களப்பில் பிடிபட்ட உவர் நீர் வாழ் ஜீவராசிகளை தமது வள்ளங்களி லுள்ள பிரம்பு கூடைகளில் சேர்த்து வைப் பார்கள். பின்னர் அவற்றை களப்பின் படுக்கைக்கு கொண்டு வந்து அங்கேயே விற்பனை செய்வர். இதனால் களப்பின் படுகை ஓரங்களில் இவற்றை வாங்கு வதற்கென்றே வியாபாரிகள் காத்திருப் பார்கள். அவ்வாறான நிலைமையை தற்போது கனவிலும் எதிர் பார்க்க முடியாது. ஏனெனில் களப்பினைச் சூழ வுள்ள தரைப் பிரதேசத்தில் சிற்றுண்டிச் சாலைகளே அதிகளவில் உள்ளன. அவ் வாறான உணவகங்களில் அதிகாலையி லிருந்தே சமையல் வேலைகள் ஆரம் பிக்கப்படுகின்றன .

அதன் போது மாமிச உணவுகளின் கழிவுகள் , பொரியல் செய்து அகற்றப் பட்ட எண்ணெய்க் கழிவுகள், கடதாசிகள் , கண்ணாடி சோடா போத்தல்கள் , பிளாஸ் டிக் போ்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகள் ஆகியவை தொடர்ச்சியாக களப்பு நீர்நிலைக்கே எறியப்படுகின்றன என சுமார் 50 வயதுடைய மீனவரொருவர் தெரி விக்கின்றார் . இது மிகவும் கவலையான விடயமாகும் .

நீர்கொழும்பு தினகரன் நிருபர்
ருஸ்மான் ...

# புதிய பிரதம நிர்வாக அதிகாரியை நியமிக்கின்றது பீபள்ஸ் இன்சூரன்ஸ் நிறுவனம்



பீபள்ஸ் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் புதிய பிரதம நிர்வாக அதிகா ரியாக திருமதி ஜீவனி காரிய வசத்தை நியமித்திருப்பதாக பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ அறிவித்திருந்தது. அவர் பீபள்ஸ் இன்சூரன்ஸ் நிறுவ னத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரியாக பணியாற்றிய தோடு , 2009 ஆம் ஆண் டிலிருந்து இந்நிறுவனத்தில் சேவையாற்றி வருகின்றார். சுமார் 25 வருட காலமாக காப்பறுதித் துறையில் அனு பவம் கொண்டுள்ள அவர், இலங்கையின் முதற்தர காப்புறுதி நிறுவனங்கள் பலவற்றிலும் சேவையாற்றியுள்ளார்.

திருமதி காரியவசம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் கௌரவப் பட்டம் பெற்ற பட்டதாரியும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய காப்பீட்டு நிறுனத்தின் இணை உறுப்பினராக வும் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து காப்பீட்டு நிறுவனத்தின் சிரேஷ்ட CIP இணை உறுப்பினராகவும் இருக்கின்றார்.

அவர் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை இலங்கை பட்டயக் காப்பீட்டு நிபுணர்கள் சங்கத்தின் உறுப்புச் செய லாளராகவும் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரை இலங்கை காப்புறுதிக் கல்வியகத்தின் உறுப்பினராகவும் செயலாற்றி யுள்ளார்.

வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட, பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்ட , தொழில்நுட்பம் சார்ந்த வணிக மாதிரி யைக் கொண்ட, இலங்கையின் பலம் வாய்ந்த பொதுக் காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனமாக பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ நிறுவனத்தை மாற்றியமைக்க காரியவசமும் அவரது முகாமைத் துவ குழுவும் தமது கவனத்தை செலுத்துவார்கள்.

2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ நிறுவனமானது, மக்கள் வங்கி மற்றும் பீபள்ஸ் லீசிங் உள்ளடங்க லான பீபள்ஸ் குழுமத்தின் உறுப்பினராக உள்ளது. பீபள்ஸ் இன்சூ ரன்ஸ் பீஎல்சீ நிறுவனம் இலங்கை முழுவதும் 125 க்கு மேற்பட்ட சேவை

நிலையங்களுக்கூடாக மோட்டார் வாகனங்கள், ஆதனம் , பொறுப்புகள் மற்றும் கடல் காப்புறுதி உட்பட்ட பரந்த வகையில் பொதுக்காப்பீட்டுத் தீர்வுகளை வழங்கி வருகின்றது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ நிறுவனம் 9 பில்லியன் ரூபாய் பங்குச் சந்தை மூலதனத் தோடு யூ ஃபிட்ச் தரப்படுத்தலையும் பெற்றுள்ளது.

# கடைகள் குத்தகைக்கு விடுவதில் குளறுபடி

## நுவரெலியா மாநகர சபைக்கு 254,786,700 இழப்பு

## கணக்காய்வாளரின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வருமா?

நுவரெலியா மாநகர சபைக்கு இருபத்து ஐந்து கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து என்பத்து ஆறாயிரத்து எழுநூறு ரூபா (25 47 86 700) வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

1980 ஆம் அண்டு முதல் கடந்த 40 வருடங்களாக குத்தகை பணத்தின் மிகுதி அறவிடப்படவில்லை. அதற்கான பொறுப்பை மாநகர சபையில் சேவையாற்றிய மாநகர ஆணையாளர் மாநகர கணக்காளர் வருமான பரிசோதகர்கள் கூட்டாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதிகாரிகள் தங்களுடைய கடமையில் இருந்து தவறியுள்ளமையால் அவர்களிடம் குறித்த தொகையை அறவிடுவதற்கு குறுகிய காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கணக்காய்வை மேற்கொண்ட குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் வர்த்தக நிலையங்களையும் கடைகளையும் வாடகைக்கு வழங்குகின்ற பொழுது அது தொடர்பாக பின்பற்ற வேண்டிய சில சட்ட நடைமுறைகள் இருக்கின்றன.

ஆனால் இந்தச் சட்ட திட்டங்கள் எதனையும் பொருட்டாகக் எடுக்காது உள்ளூராட்சி மன்றங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். இதற்குள் ஒரு அரசியல் செயல்படுவதையும் நாம் தெரிந்து வைத்திருக்கின்றோம்.

தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் நடத்தப்பட்ட கணக்காய்வில் நுவரெலியா மாநகர சபையும் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடைகளை வாடகைக்கு விடுவது தொடர்பில் சட்டதிட்டங்களுக்கு அப்பால் சென்று செயல்பட்டிருப்பது இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டுள்ள் 1980/46 இலக்கத்தை கொண்ட சுற்றறிக்கையின்படி வர்த்தக நிலையங்களை வாடகைக்கு வழங்க முடியும்.

மதிப்பிடப்படுகின்ற மாதாந்த வாடகை தொகையானது 5 வருடங்களுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில் மாநகர சபைக்கு சொந்தமான 463 கடைத்தொகுதிகளுக்கும் கடைசியாக 2009 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டாலும் அது 2020 ஆண்டு வரை நடைமுறைபடுத்தப்படவில்லை.

குத்தகையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக 2009 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட தொகையை 2012.01.01 முதல் நடைமுறைபடுத்துவது என 2011.11.31 அன்று மாநகர சபையால் தீர்மானிக்கப்பட்டாலும் அதனை நடைமுறைபடுத்தாமல் 2003 ஆம் ஆண்டு குத்தகையை மேலதிகமாக 25 சதவீதம் அதிகரித்து 2012.02.04 முதல் அந்த தொகையை அறவிட தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானிக்கப்பட்ட இந்த தொகை தொடர்பாக முறையான எந்த ஒரு ஆவணமோ சாட்சியமோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மதிப்பீட்டு அறிக்கைகளின்படி 2003 ஆம் ஆண்டு முதல் வர்த்தக நிலையங்களுக்கான குத்தகை அறவிடப்படாமையின் காரணமாக நுவரெலியா மாநகர சபைக்கு இருபத்து ஐந்து கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து என்பத்து ஆறாயிரத்து எழுநூறு ரூபா (25 47 86 700) இழப்பு ஏற்பட்டுள்ளது.

2010 நவம்பர் மாதம் 10 திகதியிடப்பட்ட CLP/NE/B/NEMC/2010/46 மற்றும் 2010 நவம்பர் மாதம் 10 திகதியிடப்பட்ட கணக்காய்வின்படி நுவரெலியா மாநகர சபையின் பிரதான மதிப்பீட்டாளர் 2003 பெப்ரவரி 27 திகதியிடப்பட்ட இலக்கம் NE/RP/631மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகை அறவிடாததால் 2008 ஆண்டு வரை நகரசபைக்கு கிடைக்க வேண்டிய தொகையான ஒரு கோடியே ஜம்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து இருநூறு (1 53 43 200) ரூபா கிடைக்காமல் போயுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோல மத்திய மாகாண மதிப்பீட்டாளர் 2019 ஆகஸ்ட் மாதம் 21 திகதியிடப்பட்ட இலக்கம் NE/RP/897 மதிப்பீட்டு அறிக்கையின்படி 2010 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மதிப்பீட்டு தொகையை அறிவிடப்பட வேண்டும். ஆனாலும் அதனையும் இதுவரையில் அறவிடப்படாமையின் காரணமாக 2009 முதல் 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய இருபத்து மூன்று கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் (23 94 43 500) கிடைக்காமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி புதிய குத்தகை அறிவிடுவது தொடர்பாக ஏற்பட்ட விரோதம் காரணமாக மத்திய மாகாண ஆளுநரின் 3/2/35 மற்றும் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதியிடப்பட்ட கடிதங்களின்படி மாநகர சபை முன்வைக்கின்ற புதிய குத்தகை தொடர்பாக வினவப்பட்டுள்ளது.இது தொடர்பாக தங்களுடைய CPC/NE/MC/MR/L 2009/30 மற்றும் 2012 பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின்படி தாங்கள் பதில் வழங்கியிருந்தாலும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள்; 9 வருடங்களாக நடைமுறைபடுத்தாமல் இருந்துள்ளன.

மாநகர சபை விதிகளின்படி 171 (1) விதிப்படி அல்லது வேறு ஏதாவது எழுதப்பட்ட சட்டத்தின்படி மாநகர ஆணையாளருக்கு இருக்கின்ற அதிகாரங்களின்படியும் சபையின் முழுமையான சம்மதத்துடன் ஒரு கடிதத்தின் மூலமாக சபையில் கடமையாற்றுகின்ற அதிகாரி ஒருவருக்கு அதிகாரங்களை பாரப்படுத்த முடியும்.

சபையின் வருமானத்தை அறிவிடுவது தொடர்பான அதிகாரம் அல்லது பொறுப்பு மாநகர ஆணையாளர், மாநகர கணக்காளர், வருமான பரிசோதகர் ஆகியோரை சார்ந்தது.

முறையாக குத்தகை செலுத்தியவர்கள் 125 கடை உரிமையாளர்கள் மாத்திரமே.

ஏனையோருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டாலும் அவை உரியவர்களிடம் சென்றடையவில்லை. வருவமான வரித்துறையினர் ஆணையாளரை ஏமாற்றியுள்ளதுடன் தங்களுடைய பொறுப்பில் இருந்தும் விலகியுள்ளனர்.

260 கடை உரிமையளார்களின் ஆவணங்கள முறையாக பேணப்படவில்லை இவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய குத்தகை பணத்தை பெற்றுக் கொள்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த 40 வருடங்களாக குத்தகைகாரர்களின் முறையான ஆவணம் பேணப்படாமை தொடர்பில் 220 சந்தர்ப்பங்கள் ஆய்வின் பொழுது தெரியவந்துள்ளது. குத்தகை தொடர்பான கணினி மயப்படுத்தப்பட்டிருந்தாலும் அதனை முறையாக பேணப்படாமை தெரியவந்துள்ளது. 57 கடை குத்தகைக் காரர்களின் அறவிட வேண்டிய தகவல்கள் உட்பட பல விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.

2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய மூன்று கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து பதின்மூன்றாயிரத்து நூற்று அறுபத்து நான்கு ரூபா (3 22 13 164) 5 வருடங்கள் முதல் 30 வருடங்களாக அறவிடப்படாமல் இருக்கின்றது இந்த தொகையானது 139 கடை உரிமையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக நுவரெலியா மாநகர சபையின் தகவல் அறியும் அதிகாரி மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பின்வரும் தகவல்களை நுவரெலியா மாநகர சபையின் பொறியியலாளர் கே.பி.ஏ.சேனாரத்ன வழங்கியுள்ளார்.

சிரேஷ்ட மதிப்பீட்டாளர், மதிப்பீட்டாளர் திணைக்களத்திற்கு நுவரெலியா மாநகர சபையால் அனுப்பி வைத்துள்ள 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 திகதியிடப்பட்ட கடிதத்தில் நுவரெலியாவில் அமைந்துள்ள அனைத்து வர்த்தக தொகுதிகளுக்கும் புதிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகர சபைக்கு நிலுவையாக உள்ள குத்தகை தொகையை உடனடியாக செலுத்துமாறு 2021 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பொது ஒலிபெருக்கி மூலமாக வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் வர்த்தமாணி அறிவித்தலின்படி வியாபார நிலையங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணினி மயப்படுத்தலின் போது விடுபட்டுள்ள கடைத் தொகுதிகள் தொடர்பான விடயங்களை மீள கணினிமயப்படுத்தித்தருமாறு அதனை முன்னெடுக்கின்ற நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று காரணமாக குறித்த செயற்பாடு தாமதமடைந்துள்ளது.

இருப்பிட குத்தகை இடைநிறுத்தல் தொடர்பாக வியாபார நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு கொரோனா தொற்று காரணமாக செயற்பாடு தாமதமடைந்துள்ளது. இது தொடர்பான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

வர்த்தக நிலையங்களின் குத்தகை பெயர் மாற்றம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கணக்காய்வின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதே பொது மக்களின் கேள்வியாகும். தற்பொழுது நுவரெலியா மாநகர சபையை ஜக்கிய தேசிய கட்சி ஆட்சி செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

**2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய மூன்று கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து பதின்மூன்றாயிரத்து நூற்று அறுபத்து நான்கு ரூபா (3 22 13 164) 5 வருடங்கள் முதல் 30 வருடங்களாக அறவிடப்படாமல் இருக்கின்றது இந்த தொகையானது 139 கடை உரிமையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.**

நூரளை தியாகு...✍

# சிறுவர்களுக்கு ஏற்படும் மிஸ்சி நோய்

**சிறுவர்களின் நோய் எதிர்க்கும் திறனில் ஏற்படும் ஓர் அசாதாரணத் தன்மையால் உடற் தொகுதிகளில் ஒருவகை அழற்சி நிலை ஏற்படுகிறது. கொவிட் –19 வைரஸ் கிருமி சுவாசத் தொகுதியை தாக்குவதால் சுவாச அறிகுறிகள் ஏற்படுகின்றன. ஐந்து வயதிற்குட்பட்ட மற்றும் விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு முகக்கவசம் அணிவது தவிர்க்கப்படுதல் வேண்டும். சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளைக் கடைப்பிடித்து சமூகப் பொறுப்புடன் செயற்படுவதன் மூலமே எம்மையும் எமது சிறுவர்களையும், கொவிட்–19 தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும் !**

***Multi system Inflammatory Syndrome in Children* எனும் புதிய மிஸ்சி நோய் நிலைமை சிறுவர்களின் நோய் எதிர்க்கும் திறனில் ஏற்படும் ஓர் அசாதாரணத் தன்மையால் உடற் தொகுதிகளில் ஏற்படும் ஒருவகை அழற்சி நிலையாகும். இதன்போது இதயம், சிறுநீரகம், ஈரல் போன்ற உடல் தொகுதிகள் பாதிக்கப்படுவதனால் இந்நோய் நிலைமை உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது என மட்டு. போதனா வைத்தியசாலையின் விசேட சிறுவர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சித்திரா கடம்பநாதன், ஞாயிறு தினகரன் வாரமஞ்சரிக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்தார்.**



## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட சிறுவர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சித்திரா கடம்பநாதன்

**கேள்வி : சிறுவர்களிடத்தே ஏற்படுகின்ற கொவிட்19 தொற்றுத் தொடர்பாக கூற விளைவது ?**

**பதில் :** உலகளாவிய ரீதியில் கொவிட் 19 தொற்றானது, கொரோனா வைரஸ் வகையை சேர்ந்த SARS COV 2 எனப்படும் வைரஸால் ஏற்படுகிறது. இந்தத் தொற்று சிறுவர்களையும் தாக்குகின்றது. இது ஒரு பெருந்தொற்று நிலையாக (Pandemic) உலக சுகாதார நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளது. கொவிட்19 தொற்றின் தீவிரத் தாக்கம் அதிகமாக இருப்பதனால் தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கையும் இறப்பு வீதமும் அதிகமாக உள்ளது. இலங்கையிலும் சிறுவர்கள் இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்கள். தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது இது, கணிசமாக சிறுவர்களையும் தாக்குகிறது.

சிறுவர்களில் இதன் தாக்கம் ஒப்பீட்டளவில் பெரியவர்களை விட குறைந்ததாக காணப்படுகிறது. இது ஓர் புதிய நோயாக இருப்பதால், சிறுவர்களில் இது சார்ந்த தரவுகள் மற்றும் ஆய்வுகள் இன்றுவரை மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது.

**கேள்வி : கொவிட் 19 தொற்று சிறுவர்களில் எவ்வகையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது ?**

**பதில் :** கொவிட் 19 வைரஸ் கிருமி சுவாசத் தொகுதியை தாக்குவதால் முக்கியமாக சுவாச அறிகுறிகள் ஏற்படுகின்றன. மேலும் இத்தாக்கத்தின் போது குருதிக்கு ஒட்சிசன் கிடைக்கும் அளவு குறைவடைகிறது. இந்நிலை ஏனைய உடல் அவயவங்களையும் பாதிப்பதால் ஆபத்தான விளைவுகள் ஏற்படுகின்றன. இதன் தாக்கத்தை சிறிய (Minor), மிதமான (Moderate), மற்றும் பாரிய (Severe) என மூன்று வெவ்வேறு நிலைகளாக வகைப்படுத்தலாம். பெரும்பாலான சிறுவர்களில சிறிய தாக்கமே ஏற்படுகிறது. அநேக சிறுவர்களில் எந்த வகையான நோய் அறிகுறிகளும் காணப்படுவதில்லை. சிலருக்கு சாதாரண தடிமன், இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன. இவர்களுக்கு விசேட சிகிச்சைகள் தேவைப்படுவதில்லை.

மிதமான தாக்கம், சிறிய வீதத்தினரில் காணப்படும். இதன் அறிகுறிகள் சாதாரண நியூமோனியா காய்ச்சலுக்கான அறிகுறிகள் போன்று இருக்கும். அதாவது மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ச்சியான கூடிய காய்ச்சல் (39.5 C/102 F) மிதமான தொடர்ச்சியான காய்ச்சலாகவும், தொடர்ச்சியான இருமல், சுவாசிப்பதில் சிரமம், பசியின்மை, சோர்வு, தொடர்ச்சியான வாந்தி, வயிற்றோட்டம், வயிற்று வலி என்பன அறிகுறிகளாக இருக்கும். இந்நோய் நிலைக்குள்ளான சிறுவர்கள் கட்டாயமாக நோயின் ஆரம்ப நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, வைத்தியர்களால் சிகிச்சை முறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். பெரும்பாலானவர்கள் தகுந்த சிகிச்சையின் பின்னர் வீடு செல்கின்றனர். இவர்களுக்கான சிகிச்சை தகுந்த நேரத்தில் கிடைக்காவிட்டால், ஆபத்தான தாக்கத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்படலாம்.

பாரிய தாக்கத்துக்கு மிகச் சிறிய வீதத்தினரே உள்ளாகின்றனர். இவர்களில் மோசமான நியூமோனியா காய்ச்சல் மற்றும் ஏனைய தொகுதிகளில் ஏற்படும் விளைவுகள் ஆபத்தான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மிகவும் கூடிய தொடர்ச்சியான காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம், உணவு, நீராகாரம் உட்கொள்ளாமை, உடல் வெளிறிய நிறம் அடைதல், சிறுநீர் போகாருத்தல் அல்லது குறைவாகப் போதல், மயக்கம் அடைதல், கைகள், கால்கள் போன்ற அவயவங்கள் குளிர்தல் என்பன இந்நிலைக்கான அறிகுறிகளாக காணப்படுகின்றன.

இந் நிலைக்கு உள்ளான சிறுவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும். சிறுவர்களுக்கான சிகிச்சைகள் தகுந்த நேரத்தில் கிடைக்காவிட்டால் உயிர் இழப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

**கேள்வி : எவ்வாறான சிறுவர்கள் மோசமான அல்லது பாரிய கொவிட்19 தொற்றுத்தாக்கத்திற்கு உள்ளாகின்றனர் ?**

**பதில் :** பொதுவாக இரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கள். கட்டுப்பாட்டுக்குள் வராத நீண்டகால நோய்த் தாக்கத்திற்கு உள்ளான சிறுவர்கள் (poorly controlled chronic illnesses) மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் குறைந்த நிலையிலுள்ள சிறுவர்கள், குறை மாத சிசுக்கள், புற்றுநோய், நெப்ரோடிக் நோய் போன்ற நோய்க்குள்ளானோர் மற்றும் சில மருந்துகள் ( Steroid மருந்துகள்) பாவிப்பவர்கள் பாரிய தாக்கத்துக்கு இலகுவில் உட்படுகின்றனர்.

**கேள்வி : கொவிட்19 தொற்று சிசுக்களிலும் ஏற்படுகிறதா?**

**பதில் :** இத்தொற்று ஒரு தாய்க்கு பிரசவத்தின்போது கண்டுபிடிக்கப்பட்டால் தாயின் நோய்த்தாக்க வீரியம் குறைவாக இருக்கும்போது, பிரசவத்தின் பின்னர் சிசு, தாய் உடனேயே பராமரிக்கப்படுகின்றனர். தாய்க்கு நோய்த்தடுப்பு முறைகளை உரிய முறையில் பின்பற்றுவதற்கு அறிவுறுத்தப்படுகிறது. எந்தவித இடையூறுமின்றி தாய்ப்பாலூட்டல் ஊக்குவிக்கப்படுகிறது. சிசுக்களில் அறிகுறிகள் காணப்பட்டால் தொற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை பெரும்பாலான சிசுக்களில் தொற்று அடையாளப்படுத்தப்படவில்லை.

**கேள்வி : தற்போது அதிகமாகப் பேசப்படும் சிறுவர்களில் ஏற்படுகின்ற மிஸ்சி நோய் (MIS C) எனப்படும் நோய் நிலை தொடர்பாக கூற விளைவது ?**

**பதில் :** இது Multisystem அல்லது (Mystery) Inflammatory Syndrome in Children ( MISC) எனப்படும் நோய் நிலையாகும். கொவிட் தொற்றுக்கு பின்னர் சிறுவர்களுக்கு ஏற்படும் மிஸ்சி நோய் தொடர்பாக தெளிவான காரணம் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்நிலைக்கு உள்ளான சில சிறுவர்களில் கொவிட்19 தொற்றுக்கான பரிசோதனை முடிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே இது கொவிட்19 தொற்றுக்குப் பின்னரான நிலையாக இருக்கலாமென நம்பப்படுகிறது. பொதுவாக தொற்று ஏற்பட்டு இரண்டு தொடக்கம் ஆறு வாரங்களின் பின்னர் இந்நிலை ஏற்படுவதாகத் தரவுகள் கூறுகின்றன. இது அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும் சிறுவர்களில் ஏற்படுகிறது.

*Multi system Inflammatory Syndrome in Children* எனும் புதிய மிஸ்சி நோய் நிலைமை சிறுவர்களின் நோய் எதிர்க்கும் திறனில் ஏற்படும் ஓர் அசாதாரணத் தன்மையால் உடற் தொகுதிகளில் ஏற்படும் ஒருவகை அழற்சி நிலையாகும். இதன்போது இதயம், சிறுநீரகம், ஈரல் போன்ற உடல் தொகுதிகள் பாதிக்கப்படுவதனால் இந்த நோய் நிலைமை உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது.

நேர்கண்டவர் :
பாக்கியராஜா மோகனதாஸ்...✍
(மண்டூர் குறூப் நிருபர்)




வெள்ளனக் காலத்தால வேலைக்கு போறவை மாதிரி அமளிப்பட்டு கிழக்கால எழும்பின சூரியன் அதே வேலைக்குப் போறவை பஸ்சுக்கு காத்துகொண்டு நிண்டு நிண்டு மணிக்கூட்டைப் பார்த்துச் சூடாகிற மாதிரியே மெல்ல மெல்ல சூடாகி மேலே எழும்பி வந்து கொண்டிருந்தான். அலுவலகத்துக்குப் போறதுக்கு தயாராகிக் கொண்டிருந்த பிஎச்ஐ மணியம் மேல எழும்பி வந்த சூரியனையும் பார்த்து தன்ரை மணிக்கூட்டையும் பார்த்து “தேவி கெதியா என்ரை பையை எடுத்துக் கொண்டு வா” எண்டு குசினியுக்கை கைவேலையாயிருந்த தன்ரை மனிசிக்கு குரல் கொடுத்தபடியே வந்து முற்றத்தில் நிண்ட தன்ரை மோட்டச் சயிக்கிளை ஸ்டார்ட் செய்தார்.

தேவியோ வாற சாடையைக் காணேல்லை அவள் வரும்வரையும் முகநூலிலை கண்டதையும் கவிதை எண்ட பெயரில போட்டுவிட்டு லைக்கிற்கு காத்துக் கொண்டிருக்கும் புதுக்கவிஞர் மாதிரி மணியம் காத்துக் கொண்டிருந்தார். மணியம் ஏறத்தாழ ஆறடி உயரமான கறுத்த மெல்லிய உடல்வாகு உடையவர். முன்னுக்கு சற்றே துருத்திக்கொண்டு நிற்கும் பற்கள் அவருக்கு கொஞ்சம் எடுப்பாகவே இருந்தாலும் அவர் சிரிக்கும் போது கருங்கல்லில காகம் எச்சம் போட்டது போல இருக்குது எண்டு அவற்றை பிள்ளையள் அவரைப் பகிடி பண்ணுவினம்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மணியம் அக்சிலேடரை முறுக்கினபடி மூக்குக்கு மேல் வழுக்கி விழுந்த கண்ணாடியை இடது கையால் உயர்த்தி விட்டபடி “என்னப்பா இன்னும் காணேல்லை” எண்டு கொஞ்சம் குரலை உயர்த்திக் கத்தினார். அவர் அப்பிடி கொஞ்சம் கோபமாகக் கத்தேக்கை கண்கள் போட்டிருக்கிற சோடாப்புட்டிக் கண்ணாடிக்குள்ளாலை பிதுங்கி வெளியிலை விழுகிறமாதிரி இருக்கும். “என்னப்பா விடியக்காலமையே சுடுதண்ணி குடிச்ச என்னவோ மாதிரி இந்தக் கத்து கத்துறியள் அயலட்டையில உள்ள ஆக்கள் என்ன நினைப்பினம்” எண்டபடி மணியத்தின் பையைக் கொண்டு வந்து தேவி குடுத்தாள்.

தேவி பையைக் குடுத்தது தான் தாமதம் மோட்டர் சயிக்கிளை முறுக்கிக் கொண்டு வேகமா போற மணியத்தை பார்த்த தேவி “இந்த ஆள் போற வேகத்தை பார்த்தால் இன்னும் இரண்டொரு வருசத்திலை ரிற்றையர் பண்ணுற ஆள் மாதிரியாத் தெரியேல்லையே” எண்டு மனசுக்கை நினைச்சபடி திறந்து கிடந்த கேற்றை இழுத்து சாத்திவிட்டு வீட்டுக்குள்ள போனாள். வேகமாப்போன மணியம் நகரின்ரை நுழைவாயிலில் இருந்த இலங்கை வங்கியின் வெளிப்புறவாயிலை அண்டி இருந்த ஏரிஎம் மிசினுக்கு கிட்டவா காசு எடுக்கிறதுக்கெண்டு தன்ரை மோட்டச் சயிக்கிளை நிப்பாட்டினார் . காசை எடுத்து தலையைக் குனிஞ்சு எண்ணிக் கொண்டு வரேக்கை “சேர்” எண்ட குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தார் .

கொஞ்சம் வாட்டசாட்டமான சினிமாவில வாற நவீன வில்லன் மாதிரி பணக்காரத்தனமான தோற்றம் கொண்ட ஒரு இளந்தாரிப் பெடியன் தன்ரை மோட்டச்சயிக்கிளை ஸ்ராண்ட் போட்டு நிப்பாட்டிப் போட்டு அவருக்குக் கிட்டவா வந்தான். மணியம் கண்ணாடிக்குள்ளால உத்து உத்து பார்த்தும் அவனை அவரால அடையாளம் காண முடியவில்லை .

“என்ன சேர் என்னைத் தெரியேல்லையே ஞாபகம் இல்லையே” எண்டான் அவன். “இல்லைத் தம்பி விளங்கேல்லை நீர் ஆரெண்டு சொல்லும்” எண்டார் மணியம். “சேர் அஞ்சு வருசத்துக்கு முந்தி நான் உதில ரவுனுக்கை சந்தையில கீரை வித்துக் கொண்டிருந்தனான். அப்ப ஒருநாள் நீங்க வந்து நான் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமல் கீரை விக்கிறன் எண்டு என்ரை கீரைக் கட்டுகளை பறிச்சு குப்பைக் கிடங்குக்கை போட்டுப் போட்டு எனக்கு கோட்டில கேசும் போட்டனீங்கள் எல்லே ஞாபகம் இருக்கே” எண்டான் .



\+ + + + + + + + + + + +

அண்டைக்கு ஒருநாள் வேலை நிமித்தமாக தன்ரை சக அலுவலர்களுடன் நகரில இருந்த சந்தைக்குப் போன மணியம் வியாபாரிகள் எல்லாம் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி தங்கடை சாமான்களை விக்கினமோ எண்டு பரிசோதிச்சார். அப்படி சரியான வழிமுறைகளை பின்பற்றாம சாமான் வித்த வியாபாரிகளின்ரை சாமான்களைப் பிடுங்கி அழிச்ச மணியமும் அவற்றை சகாக்களும் அந்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யிறதுக்கான ஆயத்தங்களையும் செய்திச்சினம்.

அப்படி அவை பாத்துக்கொண்டு வரேக்கை சந்தையின்ரை கேற்றுக்கு கிட்டவாக ஊத்தையான அங்கங்கை குறுக்கும் மறுக்குமா தையல் போட்டிருந்த களிசான் சேட்டோடு எண்ணையைக் கண்டு கனநாட்கள் போன வாரப்படாத நல்லா வளர்ந்த பரட்டைத் தலையோட நிண்ட பெடியொண்டு ஏறத்தாழ பதினைஞ்சு வயதிருக்கும் ஒரு பசளைப் பையை நிலத்தில விரிச்சுப் போட்டு அதுக்கு மேல கீரைக் கட்டுக்களை அடுக்கி வைச்சு “கீரை கீரை” எண்டு கத்தி வித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவன் பசி பட்டினி ஒண்டும் அவனுக்கு புதுசான விஷயம் இல்லை எண்டது அவன்ரை தோற்றத்தைப் பார்த்தாலே ஆருக்கும் வடிவா விளங்கும் .

சந்தைக்கு கீரை விற்க வந்த அவன்ரை தாய் அவன் கீரை வித்துக் கொண்டு வாற காசில உலை வைக்கக் காத்துக் கொண்டிருந்திருப்பாள். அவன்ரை தம்பி தங்கச்சிமார் அம்மா எப்ப உலை வைப்பா எண்டு காத்துக் கொண்டிருந் திருக்கக் கூடும். அதமாதிரி அவன்ரை வருத்தக்காரத் தேப்பன் மோன் கொண்டு வாற காசில கொஞ்சம் எடுத்து மருந்து வாங்குவதற்காக காத்துக் கொண்டிருந்திருக்கக் கூடும் .

அண்டைக்கு சந்தைக்கு அவன் விற்கக்கொண்டு வந்த கீரைக் கட்டுக்களில் ரெண்டு மூண்டு கட்டுகள் அளவிலே தான் விலைப்பட்டு இருந்தது. அவன் முகத்தில் லேசாக ஒரு சோகத்தை வருவிச்சிருந்தது.

சுப்பர் மார்கெட்டில் விலை கேக்காமல் பொருள் வாங்கும் மேட்டுத்தன ஆக்கள் எண்டு தங்களைக் காட்டிக் கொள்ள விரும்பும் அரைகுறைகள் இரண்டொருத்தர் “என்ன தம்பி கீரைக்கு உந்த விலை சொல்லுறாய் குறைக்க மாட்டியோ, சும்மா விளையிற கீரைதானே” எண்டு அடாவடி பண்ணிக் கொண்டிருந்தனர். “இல்லை அம்மா இது எங்கட வீட்டு தோட்டத்தில நாங்கள் பாத்தி போட்டு விளைஞ்ச கீரை. நானும் தம்பி தங்கச்சிமாரும் அம்மாவோடை சேர்ந்து கஷ்டப்பட்டு தண்ணி இறைச்சு காவல் காத்து வளர்த்தது.

நல்ல கீரை தயவு செய்து நம்பி வாங்குங்கோ அம்மா” எண்டு பசிக்களையுடன் கெஞ்சி கொண்டிருக்கும் போதுதான் மணியம் தன்ரை ஆக்களோடை அந்தப் பக்கம் வந்தார்.

வந்தவர் “அடே தம்பி உதென்ன ஊத்தை உடுப்போட நிண்டு ஊத்தை பையில கீரையை அடுக்கி வைச்சு வித்துக் கொண்டு இருக்கிறாய். இப்பிடி சுகாதாரம் இல்லாமல் வித்தால் வாங்கிச் சாப்பிடுகிற ஆக்களுக்கு கண்ட வருத்தம் எல்லே வரும். உன்னை ஆர் இப்பிடி விக்கச் சொன்னது நீ இப்பிடி எல்லாம் இஞ்சை கீரை விக்கேலாது எழும்பு’ எண்டதும் அவனிட்டை கீரை வாங்க விலை பேசிகொண்டிருந்த இரண்டொருத்தரும் அங்கையிருந்து மெல்ல நழுவிப் போட்டினம் .

அவை போனதும் அடுக்கி இருந்த கீரைக் கட்டுக்களை மணியமும் அவற்றை உதவியாளர்களும் அள்ளி எடுத்தினம். அப்படி அவை அள்ளி எடுக்கேக்கை அந்தப் பெடியன் “சேர் எடுக்காதையுங்கோ இதை வித்துக் கொண்டு போற காசை வைச்சுத்தான் நாங்கள் எல்லாரும் சாப்பிட வேணும் இல்லாட்டில் எல்லாரும் பட்டினி கிடக்க வேணும். எங்கட வருத்தக்கார அப்பாக்கு மருந்து வாங்க வேணும். சேர் உங்கட காலைப் பிடிச்சுக் கேக்கிறன் தயவு செய்து எடுக்காதையுங்கோ” எண்டு அவரின் காலைப் பிடிச்சவன் விக்கி விக்கி அழுதான்.

அவன் அழுவதைப் பார்த்த கொஞ்சம் இளகின மனம் உள்ள ஆக்கள் ரெண்டொருத்தார் “என்ன பி எச் ஐ ஐயா உங்க எத்தினையோ விதமான அநியாயம் செய்து உழைக்கிற கன பேரை கண்டும் காணாமலும் விட்டுப் போட்டு உந்த பஞ்சத்தில கஷ்டப்படுகிற பெடியன்ரை கீரையளைப் பிடுங்கிறியள். உங்களுக்கு மனசாட்சி எண்டதே கிடையாதே. உந்தக் கீரையை வித்து அவன் என்ன காணி பூமி வாங்கி வீடே கட்டப் போறான் . தானும் தன்ரை குடும்பமும் ஒரு வேளை சோறு தின்னத்தானே விக்க விடச் சொல்லிக் கேக்கிறான். அவனை விக்க விட்டுப் போட்டுப் போங்களேன்” எண்டினம்.

அதைக் கேட்டதும் மணியம் ”இஞ்சை பாருங்கோ நீங்கள் உங்கட வேலையைப் பாருங்கோ நாங்கள் எங்கட வேலையைப் பாக்கிறம். அப்படி இல்லாமல் கனக்க கதைச்சா எங்கட கடமையை செய்ய விடாமல் தடுக்கிறியள் எண்டு உங்களுக்கு மேல கேஸ் போட வேண்டி வரும் “ எண்டதும் “உவன் குறுக்கால போற பி எச் ஐ எப்பிடியும் நாசமாத்தான் போவான்” எண்டு திட்டியபடியே அவை அந்த இடத்த விட்டுப் போட்டினம் .

அவை போனதும் அள்ளிய கீரையைக் கொண்டு போய் குப்பைக் கிடங்கில போட்டவர்கள் அந்தப் பெடியனுக்கு எதிராக கேஸ் போடுவதற்கான ஆயத்தங்களை செய்யிறதுக்கெண்டு போச்சினம். அழுது அழுது களைச்சுப்போன அந்தப் பெடியன் இண்டைக்கு வெட்டியால் உலை வைக்கிறதுக்கு என்ன வழி எண்டு கவலைப்பட்டபடி தன்ரை பழைய கறளேறின சயிக்கிளை மெல்ல மெல்ல உருட்டிகொண்டு சந்தையை விட்டு வெளியில போனான்.

\+ + + + + + + + + + + + + + +

மணியத்துக்கு அஞ்சு வருசத்துக்கு முதல் நடந்த சம்பவம் மெல்ல மெல்ல ஞாபகத்திற்கு வந்தது. இவன் முந்தி நடந்த சம்பவத்துக்கு இப்பதான் பழி வாங்க வந்திருக்கிறானோ வாளாலை கீளாலை வெட்டிகிட்டிப் போடுவானோ எண்டு கொஞ்சம் பயப்பிடத் தொடங்கினார்.

எண்டாலும் தன்ரை பயத்தை வெளியில காட்டாம “ஓமடா தம்பி இப்பதான் ஞாபகம் வருகுது .... இப்ப நீர் என்ன செய்யிறீர் “என்று கேட்டார். “நான் இப்ப நல்லா இருக்கிறன் சேர், நீங்க நான் கீரை விக்கிறதை நிப்பாட்டின பிறகு நாங்கள் ரெண்டு மூண்டு நாள் பட்டினி கிடந்தம்.


பேந்து அம்மா அப்பாவும் தம்பி தங்கச்சிகளும் பட்டினி கிடக்கிறதை என்னாலை பார்க்க ஏலாமல் போச்சுது. அதால எங்கட ஊரில கசிப்பு விக்கிற ஒருத்தருக்கு உதவியா போய்ச் சேர்ந்தன். அவர் சொல்லுற இடங்களுக்கு எல்லாம் ஆருக்கும் தெரியாமல் கசிப்பை கொண்டு போய் குடுத்து வந்தனான் அதால எனக்கு நல்ல காசு கிடைச்சுது. நாங்கள் நல்லா மூண்டு வேளையும் சாப்பிட்டம் நல்லா உடுத்தம். அப்பாவுக்கு தேவையான மருந்தெல்லாம் வாங்கிக் குடுத்தன்” எண்டவன் அவரைப் பாத்து கொஞ்சம் நக்கலாச் சிரிச்சான்.

சிரிச்சு முடிய “இப்ப நானே சொந்தமா தொழில் செய்யுறன் அஞ்சாறு பேர் என்னட்டை வேலை செய்யினம். எனக்கு எல்லா இடங்களிலும் நல்ல செல்வாக்கும் இருக்கு. இப்ப உங்களை மாதிரி உத்தியோகம் பாக்கிற ஆக்களாலை என்னை ஒண்டும் செய்ய ஏலாது சேர் என்றவன் உங்களுக்குத் தான் நன்றி சொல்ல வேணும் சேர் என்றான். அண்டைக்கு நீங்கள் என்னை கீரை விக்க விடாமல் துரத்தாமல் விட்டிருந்தால் நான் இன்னும் கீரைதான் வித்துக் கொண்டிருந்திருப்பன். நாங்கள் இன்னும் அரை வயிறும் கால் வயிறும் தான் சாப்பிட்டிருப்பம் இப்ப உங்கட புண்ணியத்திலை நாங்கள் நல்லா இருக்கிறம் சேர்” எண்டான் .

“சேர் உங்களுக்கு ஏதும் உதவி தேவை எண்டால் ஏதும் கந்தோர் வழிய ஏதும் அலுவல் நடக்க வேணும் எண்டால் ஒண்டுக்கும் யோசிக்காமல் என்ரை நம்பருக்கு போன் பண்ணுங்கோ, எனக்கு இப்ப நல்ல செல்வாக்கு இருக்குது. பொலிசிலை ஏதும் பிரச்சினை எண்டாலும் சொல்லுங்கோ. இப்ப அவை எல்லாரும் என்ரை கையுக்குள்ளைதான் இருக்கினம்“ எண்டு தன்ரை போன் நம்பரைக் கொடுத்தவன் வங்கிக்குள்ளை போனான் .

சமூக விசுவாசியாக இருந்த ஒருத்தனை சமூகத் துரோகியாக மாற்றிய தன்ரை அளவுக்கு மீறிய யதார்த்தம் இல்லாத கடமை உணர்ச்சியை வெறுத்த மணியம் குற்ற உணர்ச்சியுடன் தலையைக் கவிழ்ந்தபடி அதே சந்தைக்கு டியூட்டிக்குப் போறதுக்காகத் தன்ரை மோட்டச் சயிக்கிளை ஸ்டார்ட் பண்ணினார். **(யாவும் கற்பனை)**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 11




திரு/திருமதி.செல்வி ..................................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..................................................

..................................................

..................................................

திகதி .................... கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 11
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :11

**இடமிருந்து வலம்**

(01) ஒரு கருமத்தை செய்து முடிப்பதற்குரிய வழிமுறை ஏற்பாடு.
(04) இது ஒரு தானிய வகை.
(06) தாய்.
(07) யானை திரும்பிவிட்டது.
(08) இனிமை.
(09) பெண்களைக் குறிக்கும்.
(10) படகு, உணவருந்தும் பாத்திரம் என்றெல்லாம் சொல்லலாம். (திரும்பியுள்ளது)
(12) இசைவு அல்லது சம்மதத்தைக் குறிக்கும் சொல். (திரும்பியுள்ளது)
(14) கறிச்சரக்குகளில் ஒன்று.
(15) முகத்தில் அல்லது உடலின் தோல் பகுதியில் ஏற்படும் சிறு தடிப்பு.
(17) வட இந்தியாவிலுள்ள ஒரு நகரம்.
(19) மந்தி.
(21) எல்லை அல்லது அணை.
(23) நிசப்தம்.
(24) நினைவின் அடையாளம். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(01) கல்யாணம்.
(02) தோலினாலான ஓர் இசைக் கருவி.
(03) வெற்றிலை. (குழம்பியுள்ளது)
(04) கால்நடைகளுக்கு ஏற்படும் ஒருவகை நோய். (குழம்பியுள்ளது)
(05) 1959ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு திரைப்படம். (குழம்பியுள்ளது)
(11) இதுவும் ஒரு கறிச்சரக்கு.
(13) உணவு.
(16) இரத்தம். (குழம்பியுள்ளது)
(18) கோபம். (குழம்பியுள்ளது)
(20) மன்னனின் மனைவி குழம்பிவிட்டாள்.
(21) கடுமையானது.
(22) உண்ணுதல்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 09

### விடைகள்

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 01. தீவனம் | 04. தந்தி | 07. விதம் |
| 08. விசாரணை | 09. புரம் | 10. மாதம் |
| 11. ஆனி | 12. தில் | 14. அவரை |
| 16. தோம்பு | 17. கம்மல் | 18. புல் |
| 19. நாணல் | 21. கிலி | 22. குடும்பம் |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 01. தீவிரம் | 02. வதம் | 03. புனம் |
| 04. சாதம் | 05. தந்திரம் | 06. திணை |
| 08. விமானி | 11. ஆவல் | 13. புயல் |
| 14. அம்புலி | 15. மரை | 16. தோரணம் |
| 17. கல்வி | 19. நாடு | 20. பல் |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 08

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**திருமதி ஆர். ஞானச்சந்திரன்,**
இல. 40, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு**

**எம்.ஏ.எச்.எம். வபா,**
23, பெரகும்பா வீதி,
குருநாகல்.

**மூன்றாம் பரிசு**

**சி. அருந்ததி,**
241/15, ரொக்ஹில்,
பதுளை.

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எல்.எம். அஸ்வர்,**
இல. 60,
தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை,
கொழும்பு 10.

2. **ஏ. சந்தியாகு,**
34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர,
கண்டி.

3. **ஏ.எல்.ஏ. சலாம்,**
215, கரகொட,
எட்டியாந்தோட்டை.

4. **ஜே.எவ். சஹானி,**
310ஏ, கோங்கஹ மாவத்த,
எந்தேரமுல்ல,
வத்தளை.

5. **ஏ.எச். அப்துல் அலீம்,**
மே/பா ஏ.எச்.ஏ. ஹுசைன்,
கயார் வீதி,
ஏறாவூர்.

6. **எஸ். கனரெத்தினம்,**
975, அன்புவழிபுரம்,
திருகோணலை.

7. **அப்துல் ஜலீல்,**
191/3, மூர் வீதி,
மன்னார்.

8. **ஆர். அய்னா ஷெய்னப்,**
இல. 117, அன்னல் வீதி,
மாஞ்சோலைசேனை,
கிண்ணியா 3.

✦✦✦

# கசப்பும்... இனிப்பும்...



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு 1




இன்னும் இன்னும் மூன்றே மூன்று ஆண்டுகள் தானாம்!

**"தாய்வான்"** என்ற நாட்டை சீன தேசம்! ஆக்கிரமித்து விடக்கூடுமாம்!

ஓர் அதிர்ச்சியான தகவலை, ஒருவர், **'சைனா டைம்ஸ்'** என்ற நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவிப்பு?

அவர், சிங்குவோ செங் அச்சோம் தாய்வான் - பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துகள்!

2025ஆம் ஆண்டுக்குள் தாய்வான் முழுமையாக ஆக்கிரமிக்கும் வல்லமையை சீனா பெற்றுவிடும். சீனாவுக்கு தாய்வானைக் கைப்பற்றும் வலிமை இப்போதே இருக்கிறது. ஆனால், அந்த நடவடிக்கையால் ஏற்படக்கூடிய இழப்புகளையும் எதிர்ப்புகளையும் 2025ஆம் ஆண்டுக்குள் சீனா குறைந்தபட்ச அளவுக்குக் குறைந்துவிடும்.

சமீபத்தில் நான்கு நாட்கள் தொடர்ந்து தாய்வானின் வான் எல்லைக்குள் சுமார் 150 சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன. அந்தத் தீவு நாட்டு எல்லைக்குள் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் சீனப் போர் விமானங்கள் ஊடுருவியது இதுவே முதல் முறையாகும்.

இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்த தாய்வான் ஜனாதிபதி சாய் இங் வென் 'சீனாவுக்கு எதிராக தாங்கள் அசட்டுத் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டோம்.ஆனால்எங்களது எல்லைகளைக் காக்க என்ன வேண்டுமானாலும் செய்வோம்' என்றார்.

பாதுகாப்புத் துறைக்கு 24,000 கோடி தாய்வான் டொலர் விசேட நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து தாய்வான் பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டது.

இந்தத் தகவலை வைத்துக் கொண்டு எந்தக் கருத்தையும் பேனாப் பதியாது. என் மூத்த பேனா பதியாது இருப்பது இலங்கைக் குட்டித்தீவில்! கடல் சூழ் பிரதேசத்தில் இங்கேயும் பலருக்கு அந்தப் பயம்!

## இனிப்பு 1




நமது முன்னோர்கள் அனுபவித்திராத, அறிந்திராத அருமையான சில நிகழ்வுகள் நாம் வாழும் காலத்தில் நமக்கு!

அதிலும் கலை இலக்கிய ஊடகத் துறையினருக்கு அதிவிசேடம்.

சென்றமாதத்தில் தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர் பெருமகனார் அல்லாமா ம.மு. உவைஸ் நூற்றாண்டுப் பூர்த்தியைக் கொண்டாடி மகிழ அரசு வெளியிட்ட அஞ்சல் நினைவு முத்திரையைத் தொடர்ந்து இம்மாதத்திலும் அப்படியொரு நிகழ்வு! (16.02.2022)

அச்சு ஊடகத்துறை ஜாம்பவான்' என ஏகமனதாக அனைவராலும் 'முத்திரை குத்தப்பட்டு' விட்ட ஆளுமை மிகு பேனா மன்னர் கிழக்குச் சீமை **(எஸ்.டி) சிவநாயகம் அய்யா** அதே பெருமையை, பெரும் கௌரவத்தைப் அரசிடமிருந்து பெற்று விட்டார்!

அதிலும் ஓர் அதிசயம், ஊடகத்துறையின் உச்சியில் அமர்ந்து கொண்டவாறே ஆன்மிக சீலராக ஸ்ரீ சத்திய சாயி பாபா பக்தராக நடைபயின்ற அறிவு ஜீவி, அந்த மகானுக்காக அமைந்த ஆலய மண்டபத்திலேயே தன் நூற்றாண்டு நினைவஞ்சல் முத்திரை வெளியிடப் பெறும் பாக்கியம் பெற்றது!

கிழக்கின் திருகோணமலையில், 1921 ஜூலை 02ல் பூமித்தாயின் வெளிச்சம் கண்ட எஸ்.டி. எஸ். அய்யா, வெகு இளமையிலேயே கூட்டுறவுச் சங்கப் பொறுப்பை ஏற்றுக் கடமையாற்றியவர்.

கல்வி கற்ற காலத்தில் நடத்திய கையெழுத்து இதழும் **'கல்கி'** சஞ்சிகையும் அதன் ஆசிரியர் **ரா. கிருஷ்ணமூர்த்தி**யாரும் வேறொரு இலக்கை நோக்கிப் பயணிக்க வைக்க தேனக மட்டக்களப்பில் குடியேறியவர், தன் 25, 26ஆம் அகவையில் ஐக்கிய தீபம் (1946) உதயம் (1947) என இதழ்கள் வெளியிட்டு, 1948ல் நமது மூத்த 'தினகரன்' துணை ஆசிரியராகவும் பளிச்சிட்டார்.

சுதந்திரன் (1950)
தமிழின்பம் (1962)
வீரகேசரி (1964)
தினபதி, சிந்தாமணி (1966)
மாணிக்கம் (1976)
சூடாமணி (1997)

என இலங்கை தமிழ் இதழ்களின் ஜாம்பவான் ஒருவர் பரிணமித்தார்!

அவர் ஏற்றிவைத்த 'ஏணி' யில் கால் பதித்த எம் போன்றோர் 'எஸ்.டி. எஸ். அய்யா' என்ற வார்த்தையைத் தவிர வேறொன்றும் உச்சரியோம்!

1950ல் நான் வாழ்ந்த கோட்டடிக்குப் (ஹல்ஸ்டோர்ஃப் வீதி) பக்கத்துத் தெருவில் (பண்டாரநாயக்க மாவத்தை) **"சுதந்திரன்"** செயல்பட்ட பொழுதே அய்யாவை அறிய வந்தேன்.

அதுவும் எப்படி? அந்த இதழின் 'மாணவர் மன்றம்' பக்கத்திற்குக் பாகிஸ்தான் லியாக்கத் அலிகான் பற்றிய கட்டுரை ஒன்றை, எதிர்வீட்டு எம்.எச்.எம். இபுராஹிம் (சுதந்திரன்) துணை ஆசிரியர் வழி வழங்க, "தம்பி, உன் எழுத்து ரொம்ப வித்தியாசம்! தொடர்ந்து எழுதணும்!" என்று முத்திரை குத்த, அது பிற்காலத்தில் **"தினபதி"** முதலாம் இதழில் முதல் தலைப்புச் செய்தி வரை இந்தப் பேனையை இழுத்துச் சென்றதை இன்று நினைக்கையில், இன்பக் கனவாக இதயகீதமாக ஒலிக்கிறது.

எவர் எவர் எப்படி எப்படி நினைத்தாலும் சரி தமிழ் பேசும் இலங்கை முஸ்லிம் சமூகத்திலிருந்து கணிசமானவர்களை இலக்கியம், இதழியல் இரண்டிலும் ஊடாடச் செய்த மாமனிதர் நூற்றாண்டுகாணும் இந்த நினைவு முத்திரையாரே! இவரைத் தொடர்ந்தவர்களாகவே, கே. கைலாசபதியும் ஆர். சிவகுருநாதனும் நடை போடுகிறார்கள்.

தெளிவாகவே சில பதிவுகளை இட்டு விடட்டுமா?

இலக்கியத் தாகம் மேலிட்டவர்களாகத் தவியாய்த் தவித்த கிழக்கிலங்கை மண்ணின் முஸ்லிம் மைந்தர்களாகிய கவிஞர் அப்துல் காதிர் லெப்பை, பித்தன் கே.எம். ஷா, புரட்சிக் கமால், அ.ஸ. அப்துஸ்ஸமது, ஈழ மேகம் எம்.ஐ.எல் பக்கீர் சாலி தம்பி, யூ.எல். தாவூது, யுவன் எம்.ஏ. கபூர், அண்ணல் மருதூர்க் கொத்தன் ஆகியோரை கதை, கவிதை, கட்டுரைகளில் பிரபல்யமடைய வைத்து பிற்காலத்தில் எழுத்துலக ஜாம்பவான்களாக்கினார். இதில் பதுளையைச் சேர்ந்த சாரணா கையூமும் சேர்வார்.

"கிழக்கிலங்கையின் இலக்கிய முயற்சிகளை ஊக்குவித்து அத்துறையில் மட்டக்களப்பு பின் தங்கிவிடாது பார்த்துக் கொண்ட பெருமை இவரையே சாரும்" எனப் பிரபல யாழ். திறனாய்வாளர் இரசிகமணி கனக செந்திநாதன் தன் ஈழத்து இலக்கிய வளர்ச்சி நூலின் (1964) 194ஆம் பக்கத்தில் பதிந்துள்ளது கல்லின் மேல் எழுத்து!

அன்றைய 'தினபதி'யில் நாள் தோறும் வந்த 'கவிதா மண்டலம்' மரபுக்கவிஞர்களுக்கு மகுடம் சூட்டியது. அவர்களுள் தலையாய கவிமணியாகச் சுடர்விட்டவர் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரீபுத்தீன்!

அவருடன் சட்டென்று என் நினைவலைகளில் எம்.எச்.எம். அஷ்ரப் (மர்ஹூம்), பாவேந்தல் பாலமுனை பாறூக், சோலைக்கிளி அதீக், ஆசுகவி அன்புடீன், திக்குவல்லை கமால், மன்சூர் ஏ. காதர் போன்றோர் வலம் வருகின்றனர்.

எவ்வாறாயினும், மன்னார் கலைவாதி கலீல், சம்மாந்துறை அஸீஸ், மருதூர் அலிகான், பதியத்தலாவை ஃபாறூக், மாத்தளை கமால், கவிவாணன் அஸீஸ், கொழும்பு கலைக்கமல் (பாடகர்) மற்றும் பெண் மணிகள் றிஸ்வியா நஃபீல், சித்தி பரீதா, மும்தாஜ் போன்றவர்களையும் தேடலிட்டுப் பட்டியலிடவே வேண்டும். அப்படியும் யாரும் விடுபட்டிருந்தால் மன்னிக்கவும்.

இதேபோல், பல முஸ்லிம் ஊடகவியலாளர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்.

நவமணியின் முதல் ஆசிரியரான எம்.பி.எம். அஸ்ஹர். தினகரன் எஃப் எம். பைறூஸ் (மர்ஹூம்கள்) முதற்கொண்டு. இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் லத்திப் பாறூக், எம்.எல்.எம். அய்யூப், கலைவாதி கலீல், நௌஷாத் முஹிதீன் பீ.எம். முர்ஷிதீன் நூறுல் அய்ன் நஜ்முல் ஹூசைன் ஆகியோருடன் சமீபத்தில் இறை அழைப்பை ஏற்ற முஃபீதா உஸ்மான திருவாட்டியாரையும் இணைக்க வேண்டும்,

**இன்றையப் பொழுதில் இலங்கை இதழியல், ஊடக வரலாற்றில் தேசிய நாளேட்டாளர் ஒருவர், முதன் முதல் அஞ்சல் முத்திரையில் அலங்கரிக்கப்படுகிறவர். எங்கள் ஊடக ஜாம்பவான் 'எஸ்.டி.எஸ்' அய்யா அவர்களே!**

**ஆனந்தம், அளப்பரிய ஆனந்தம்!**






# கொலைக்கான காரணம் இன்னும் புரியவில்லை கொலைகாரனின் நோக்கமும் தெரியவில்லை

16

சிறிது நேரம் சிந்தித்து விட்டு, மெல்லத் திரும்பி அருகில் நின்ற இப்ராஹிமைப் பார்த்தார்.

"கண்ணன் சொல்லுவதை வைத்துப் பார்த்தால் தீபிகா, தீபனைத் தவிர இன்னும் இரண்டு பேர் வந்திருக்கிறர்கள். ஒன்று பெண் மற்றது ஆண். அதுவும் வசதியான ஒருகாரில் வந்திருக்கிறார்கள். அப்படியானால் அவர்கள்தான் கொலைகாரர்கள். இன்னுமொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் அவர்கள் வரும் போது கையோடு தீந்தை டின்னையும் எடுத்து வந்திருக்கிறார்கள். அதுவும் தீபிகாவிற்கும் தீபனுக்கும் தெரியாமல் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை வைத்து பார்க்கும் போது ஏற்கனவே திட்டமிட்டுத்தான் இந்தக் கொலையை செய்திருக்கிறார்கள். இதன் படி இந்த கேசில் கொலைகாரன் ஒருவன் மட்டுமல்ல இருவர். இவர்கள் இருவரும் திட்டமிட்டுத்தான் இந்தக் கொலைகளை செய்திருக்கிறார்கள்!"

"அதெப்படி சேர் அவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க...?"

"இதில் நீங்கள் ஒருவிஷயத்தை கவனித்தார்களா இப்ராஹிம். அவர்கள் வரும் போது கையோடு ஒரு தீந்த டின்னையும் எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். அதுவும் தீபிகாவுக்கும் தீபனுக்கும் தெரியாமல்தான். அதை கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலிருந்தே இது திட்டமிட்ட கொலையென்று புரியவில்லையா... ம்... பார்ப்போம். இவர்கள் யாருடன் மோதுகிறார்கள் என்று!" சொல்லி விட்டு,

பற்களை கடித்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

"சரி, இப்போது நாம் போவோம் ரோட்டுக்கு போனதும் வேறு ஏதாவது சாட்சியங்கள் கிடைக்கிறதா என்று விசாரித்துப் பாருங்கள்!"

முன்னால் நடந்தார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

"ஆகட்டும் சேர்!"

எல்லோரும் மலை அடிவாரத்திற்கு வந்ததும்,

இன்ஸ்பெக்டர் ஜீப்பில் ஏறி அமர்ந்து கொண்டார்.

இப்ராஹிம் விரைந்து சென்று அக்கம் பக்கத்தில் விசாரிக்க ஆரம்பித்தார்.

அந்த விசாரணையின் போது,

பக்கத்தில் இருந்த பழக்கடைக்காரர் ஒருவரிடமிருந்து ஒரு தகவல் கிடைத்தது.

"சேர் நீங்க சொல்லும் அந்த நேரத்தில் நீல நிற கார் ஒன்று மலை அடிவாரத்தில் நிறுத்தப் பட்டிருந்தது. சுமார் ஆறுமணி அளவில் அது போய் விட்டது. இந்த மாதிரி கார்கள் இந்த நேரத்தில் தினமும் அங்கு வந்து போவதால் அந்தக் காரின் மீது நாங்கள் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை!"

இந்த தகவலோடு எல்லோரும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

மறுநாள்,

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

இன்ஸ்பெக்டர் ராகவன், சர்ஜன் வசந்த, பொலிஸ் கான்ஸ்டபிள் இப்ராஹிம்,

ஆகியோர் உட்பட மொத்தமாக ஏழுபேர்,

காலை ஆறுமணிக்கெல்லாம் வட்டவள வளைவில் இருக்கும் பாதாளத்திற்கு செல்வதற்குத் தயாரானார்கள்.

ஆனாலும்,

பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ரஞ்சனுக்கு,

இவர்களின் இந்த பயணத்தின் மீது ஐயம் வந்து விட்டது.

அது,

தீபிகாவும் தீபனும் கொலை செய்யப்பட்டு மூன்று வாரங்கள் ஆகிவிட்டன.

இதற்குப் பிறகும் பாதாளத்திற்கு சென்று தகவல்களைத் தேடுவது பயனுள்ளதாக இருக்குமா? என்பதில் தான் அவருக்கு வந்து ஐயம்.

செல்வதற்குத் தயாராக இருந்த இன்ஸ்பெக்டர் இன்பராஜை அழைத்து விசாரித்தான்.

"ஏன் இன்பராஜ் இப்போது அந்த பாதாளத்திற்கு சென்று தகவல்களைத் தேடுவதால் ஏதாவது பலன் கிடைக்குமென்று நீங்கி நினைக்கிறீங்களா?"

"நானும் ஆரம்பத்தில் அப்படிதான் சேர் நினைத்தேன்... ஆனா நேற்று அங்கு சென்று விசாரித்த பிறகு முக்கியமான மூன்று சாட்சியங்கள் கிடைத்திருக்கிறது...!"

"என்ன... முக்கியமான சாட்சியங்களா... அது என்ன?" வியப்பை விழிகளில் கட்டிக் கொண்டு கேட்டார் இன்ஸ்பெக்டர் ரஞ்சன்.

"ஒன்று... அன்று அதிகாலை ஐந்து மணிக்கு அங்கு போனவர்களைப் பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது!"

"அதாவது எத்தனை பேர் போனார்கள் என்றா?"

"ஆமாம் சேர்... தீபிகாவையும் தீபனையும் தவிர மேலும் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அவர்களுடன் போயிருக்கிறார்கள்!"

"சரி... அடுத்த சாட்சியம் என்ன?"

"இரண்டாவது கிடைத்த சாட்சி விலை உயர்ந்த ஒரு காரில் தான் அவர்கள் வந்திருக்கிறார்கள். அதுவும் நீல நிறக் கார். மூன்றாவதாக இருப்பது ஒரு நிழல் சாட்சி!"

"நிழல் சாட்சியா! அது என்ன இன்பராஜ் அது?" வியப்புடன் கேட்டார் OIC ரஞ்சன் "

"தீபிகா என்ற இந்த மாணவி தற்கொலை செய்துக் கொள்ளப் போகிறேன் என்று கடிதம் எழுதியிருந்தாலும் அதை அவள் செய்யவில்லை. சில சமயம் பெற்றோரை பயமுறுத்துவதற்காகவோ அல்லது தங்கள் காதலுக்கு பெற்றோர் அனுமதிப் பெற்றுக் கொள்வதற்காகவோ செய்த காரியமாகக் கூட இருக்கலாம். அப்படி அவள் செய்த அந்த முட்டாள் தனமான காரியத்தினால் அவளுடைய உயிரும் அப்பாவியான அந்த தீபனின் உயிரும் அநியாயமாகப் போய்விட்டது.!"

"நீங்கள் எப்படி இன்பராஜ் இவ்வளவு உறுதியாக சொல்றீங்க

"கேலியாக தீபிகா கேலியாக எழுதிய அந்தக் கடிதம் எப்படியோ அந்த கொலைகாரர்களின் கைக்கு கிடைத்திருக்கிறது. இதனால் இந்த கொலைகாரன் தீபிகாவின் நண்பனாகத் தான் இருக்க வேண்டு மென்று நான் நினைக்கிறேன் சேர்.. அவன்தான் தீபிகாவின் கடிதத்தை வைத்துக் கொண்டு அதில் தீபனின் கை ஒப்பத்தையும் போட்டு தீபிகாவின் அண்ணனுக்கு அனுப்பி இருக்கிறான்!"

"சரி அடுத்தபடியாக தீபிகாவையும் தீபனையும் எப்படி பாதாளத்தின் அருகில் அழைத்து சென்றிருக்கிறான்?"

"அந்த கேள்விதான் சேர் எனக்கும் உதைக்கிறது! கொலைகாரன் நன்றாக திட்டமிட்டேதான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறான். அது தான் சேர் நேற்று நான் சொன்ன அந்த நிழல் சாட்சி அதை நிரூபித்திருக்கிறது!"

"அந்த நிழல் சாட்சியைப் பற்றி கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்களேன்...!"

"அவர் இப்படிச் சொன்னதும் தனது கால் சட்டைப் பையில் இருந்த செல்போன் எடுத்து,

ஏதோ 'டச்' பண்ணிவிட்டு OIC ரஞ்சனிடம் அதைப் பார்க்கும் படி கொடுத்தார் இன்பராஜ், அதை வாங்கியப் பார்த்தார் ரஞ்சன்.

பிறகு,

அதில் இருந்ததை வாசித்தார்.

தீபன் தீபாவின் காதல் கதை 2012ஜூலை மாதம் 12ஆம் திகதி அதிகாலை 5 மணியுடன் முடிவடைகிறது! "இது என்னது இன்பராஜ்?"

"அந்தக் கடிதத்தைப் பார்த்தவர்களுக்கு இந்த வாசகத்தை பார்த்த உடன் இவர்கள் இருவரும் கண்டிப்பாக தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள் என்றுதான் எண்ணத்தோன்றும். ஆனாலும் உண்மையில் நடந்தது அது வல்ல...?"

"அப்படியானால் இதை எழுதியது தீபாவையும் தீபனையும் கொலை செய்தவர்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?"

"ஆமாம் சேர்... இவர்கள் இருவரையும் பாதாளத்தில் தள்ளி விட்டு அவர்கள் கொண்டுவந்த தீந்தையினால் இந்த வாசகத்தை பாறையில் எழுதி விட்டார்கள். அதன் மூலம் பொலிஸாரை ஏமாற்ற அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்!

"ம்...அப்படியும் இருக்கலாம் ஆனால் அந்த கொலைகாரனுக்குத் தெரியாது இன்பராஜைப் போன்றவர்கள் பொலிசில் இருக்கிறார்கள் என்பது... என்ன அப்படித்தானே இன்பராஜ்?"

ரஞ்சன் இப்படிக் கேட்டதும்,

இன்பராஜ் இதழ்விரித்துச் சிரித்தாரே தவிர, கொடுக்கவில்லை! வார்த்தைகளுக்கு வாய்ப்பு.

"உண்மையிலேயே நீங்க மிகவும் திறமைசாலிதான் இன்பராஜ். உங்கள் சிந்தனை எல்லாம் வித்தியாசமாகவே இருக்கிறது... உங்களை போன்றவர்கள் எல்லா பொலிஸ் நிலையங்களிலும் இருந்தால்... கொலை காரர்களை விரைவில் கண்டு பிடித்து விடலாம்"

ரஞ்சனின் பாராட்டு மழையில் நனைந்து,

உள்ளம் பூரித்துப் போனார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

**(இளமை வளரும்)**



# படித்ததும் பகர்வதும் 84





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### மின்சார சிக்கனம்!

நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் காரணமாக எதிர்காலத்தில் மிசாரத்தடை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை தோன்றுமென்ற அச்சநிலை உருவாகியுள்ளது. இதனால் ஒவ்வொருவரும் மின்சாரத்தை மிகச்சிக்கனமாக பாவிக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது.





நாட்டின் குடிமகன் என்ற வகையில், நாம் மின்சார பாவனையை குறைத்துக் கொள்வதன் மூலம் எமது பணத்தை சேமிக்க முடிவதோடு, நாட்டின் பொருளாதாரத்துக்கும், அபிவிருத்திக்கும் உதவிட முடியும். அத்துடன் எதிகாலத்தில் மின்வெட்டு ஏற்படுவதையும் தவிர்த்துக்கொள்ள இயலும்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நாம் தடையில்லாது மின்சாரத்தை பெற்றுக்கொள்ளவும், மின்வெட்டு ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையை தடுத்திடவும் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இதன்படி, அன்றாட மின்சார பாவனையாளர்கள் தினமும் மாலை 6மணி முதல் 10மணி வரை மின்னழுத்தி, மின்னடுப்பு, மின்சார ஹீட்டர்கள், சலவை இயந்திரம், காற்றுப்பதனாக்கி (எயர் கண்டிஷனர்) ஆகியவற்றை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்றன அத்தியாவசிய தேவைகள் தவிர்த்து 80% மின் விளக்குகளை அணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் மாலை 2.30 மணி முதல் 4.30 மணி வரையான காலப்பகுதியில், பொருத்தமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவையற்ற மின் விளக்குகளையும், தேவையற்ற மின் விசிறிகளையும் அணைத்திட வேண்டும். அலுவலக நேரத்தின் பின்னர் அனைத்து மின் விளக்குகளையும் அணைத்திட ஆவணை செய்தல் அவசியம்.

எல்லோரும் எந்நேரமும், காற்றுப்பதனாக்கியின் (எயர் கண்டிஷனர்) வெப்பநிலையை 26 செல்சியஸில் பராமரிப்பதை உறுதி செய்தல் முக்கியம். விளம்பர பலகைகள் மற்றும் பெயர்ப் பலகைகளில் மின் விளக்குகள் ஒளிரவிடப்படுவதை தவிர்க்கவும், ஜெனரேட்டர்கள் வைத்திருப்பவர்கள் அவற்றைப் பயன்படுத்தி, அம்மின்சாரத்தின் மூலம் மாத்திரம் காற்றுப்பதனாக்கியை (எயர் கண்டிஷனர்) செயற்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இத்தகைய நடைமுறைகளை முறையாக பின்பற்றுவதன் மூலம் சுமார் 200 மெகாவொட் மின்சார பாவனை நாளாந்தம் குறைக்கப்படுவதுடன், மின் தடைக்கான தேவையும் தவிர்க்கப்படும்.

எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படுவதையும் தவிர்த்துக்கொள்ளவும் தடையில்லா மின்சாரத்தைப் பெறவும் வேண்டுமாயின் மீண்டும் அறிவிக்கும் வரை இத்தகைய நடவடிக்கைகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு நாட்டு மக்கள் அனைவருக்கும் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் அறிவுறுத்தல்களை நாமும் பின்பற்றி, புத்திசாலித்தனமாக, மிகச்சிக்கனமாக மின்சாரத்தை பயன்படுத்தி, மின்வெட்டு ஏற்படுவதையும் தவிர்த்து, எம் பணத்தையும் சேமிப்பதோடு நாட்டு நலனுக்கும் துணை நிற்போம்.

## நெஞ்சுக்கு நீதி

**துன்பத்தில் துவள்வோரின் துயர் துடைக்க**
**துணிவோடு எபோதும் பணி செய்வோம்**
**இன்பத்தில் வாழ்ந்திடவே நன் நெறியில்**
**இதயத்து விருப்போடு துணை புரிவோம்!**

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### இலங்கையில் மின்சார மோட்டார் சைக்கிள்

போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில் விரைவான பயணத்துக்கு உதவுவதோடு இளைஞர்களின் அபிமானம் பெற்ற வாகனமாகத் திகழ்வன மோட்டார் சைக்கிள்கள்.

மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு நற்செய்தியாக, மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர், சசிரங்க டி சில்வாவினால் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள் நம்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள் பாவனைக்கு வரப்போகிறது.



ஒரு தடவையில் சுமார் நாலு மணிநேரம் மின்சாரத்தில் சார்ஜ் செய்தால், அதன்மூலம் இம்மோட்டார் சைக்கிளில், 120 கிலோமீற்றர் வரை பயணிக்க முடியும் என சசிரங்க டி சில்வா தெரிவித்துள்ளார்.

மணிக்கு 110 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க க்கூடியவகையில், நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மோட்டார் சைக்கிள் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சந்தைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருள் பிரச்சனைக்கு சிறந்த தீர்வாக அமையக் கூடிய, சிக்கன வாழ்வுக்கு துணை சேர்க்கும், நம்நாட்டு பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் இந்த நல்ல கண்டுபிடிப்பைத் தந்த சசிரங்க டி சில்வாவுக்கு எமது பாராட்டுக்கள். இத்தகைய அவரது நன் முயற்சிகள் தொடர வாழ்த்துக்கள்!

## சிந்தனை செய் மனமே

### நான்கு மனைவிகள்!

ஒருவனுக்கு நான்கு மனைவிகள் இருந்தார்கள். ஆனால் அவன் தனது நான்காவது மனைவியை மட்டும் மிக அதிகமாக நேசித்தான். அந்த மனைவியின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றினான். அவளுக்குத் தேவையானதை எல்லாம் செய்து கொடுத்தான். அவன் தனது மூன்றாவது மனைவியைக் கூட நேசித்தான். ஆனால் அவளை தனது நண்பர்களுக்கு முன்னால் காட்டிக்கொள்ள பயந்தான். பிறரோடு ஓடி விடுவாளோ என்ற அச்சம்தான்.



அவன் தனது இரண்டாவது மனைவியையும் நேசித்தான். ஆனால்தனக்கு பிரச்சினைகள் வரும்போது மட்டும்தான் அவளிடம் போவான். அவளும் அவனுடைய பிரச்சினைகளில் உதவினாள். எனினும் அவன் தனது முதல் மனைவியை ஒருபோதும் நேசிக்கவே இல்லை. ஆனால் அவளோ அவன்மீது மிகவும் நேசம் வைத்திருந்தாள். அவனது எல்லா தேவைகளையும் அவள் கவனித்து கொண்டாள்.

ஒருநாள் அவன் மரணப் படுக்கையில் விழுந்தான். தான் இறக்கப்போவதை உணர்ந்துவிட்டான். தான் இறந்த பின் தன்னுடன் இருக்க ஒரு மனைவியை விரும்பினான். எனவே தன்னுடன் வர யார் தயாராய் இருக்கிறார்கள் என அறிந்துகொள்ள விரும்பினான். தான் அதிகம் நேசித்த நான்காவது மனைவியை அழைத்தான்.

அவளோ அதிரடியாக மறுத்துவிட்டு அவனை விட்டு நீங்கினாள். அவன் தனது மூன்றாவது மனைவியை அழைத்தான். அவளோ "நீயோ சாகப்போகிறாய். நான் வேறு ஒருவருடன் போகப் போகிறேன்" என்று கூறிவிட்டு சென்றுவிட்டாள். பிறகு தனது இரண்டாவது மனைவியை அழைத்துக் கேட்டான். அவளும் "சாரி என்னால் உன் கல்லறை வரைக்கும் மட்டும்தான் வரமுடியும். கடைசி வரை உன்னுடன் வரமுடியாது" என்று மறுத்துவிட்டாள்.

நொந்துபோன அவன் இதயம் தளர்ந்து போனது. அப்போது தான் அவனது முதல் மனைவியின் குரல் ஒலித்தது. "நீ எங்கே போனாலும் நான் உன்னுடனே இருப்பேன். உன்னுடன் நான் கண்டிப்பாக வருவேன்" என்று சொன்னாள். ஆனால் அவளோ எலும்பும் தோலுமாக சாகும் தருவாயில் இருந்தாள். காரணம் அவன் அவளை சரியாககவனித்துக் கொள்ளாததுதான். அவன் வருந்தினான். 'நான் நன்றாக இருக்கும் போதே உன்னையும் சரியாகக் கவனித்திருக்க வேண்டும். தவறிவிட்டேன்.' என்று அழுதான். அந்த வருத்தத்திலேயே மரித்தும் போனான்.

உண்மையில் நம் அனைவருக்குமே இந்த நான்கு மனைவியர் உள்ளனர். நான்காவது மனைவி நமது உடம்பு. நாம் என்னதான் வாழ்நாள் முழுக்க நன்றாகக் கவனித்துக் கொண்டாலும் கடைசியில் நம்முடன் வரப்போவதில்லை. நாம் இறந்ததும் அதுவும் அழிந்து போகிறது.

மூன்றாவது மனைவி நமது சொத்து சுகம்தான். நாம் மறைந்ததும் அவை வேறு யாருடனோ சென்றுவிடுகின்றன. நமது இரண்டாம் மனைவி என்பது நமது குடும்பம் மற்றும் நண்பர்கள்.

அவர்கள் நமது கல்லறை வரையில் தான் நம்முடன் கைகோர்ப்பார்கள். அதற்குமேல் நம்முடன் கூட வரப்போவதில்லை. நாம் கவனிக்காமல் விட்ட முதல் மனைவி நமது ஆன்மா. நாம் நன்றாக இருக்கும் போது நம்மால் கவனிக்கப்படாமல் நலிந்து சிதைந்து போய் இருந்தாலும் நம்முடன் இறுதி வரை கூட வரப்போவது நமது ஆன்மாதான். எனவே நம் ஆன்மாவை எப்போதும் சிறப்பாகப் பேணுவோம்.

## தகவல் களஞ்சியம்

### ஒன்பது கோடிக்கு உணவு உண்ட நாடாளுமன்ற பிரமுகர்கள்!

நாடாளுமன்றத்திற்கு வருகை தரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களின் உணவு மற்றும் குடிபானங்களுக்காக மாத்திரம் கடந்த ஆண்டு சுமார் 9 கோடி ரூபா செலவிடப் பட்டுள்ளதாக பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை



நாடாளுமன்றத்தில் செயற்படுகின்ற குழுக்களுக்கு சமூகமளிக்கும் அரச அதிகாரிகளுக்கும் இங்கேயே உணவு விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் உணவு பொருட்களில் முன்னெடுக்கப்படுகின்ற மோசடிகள் மற்றும் வீண் விரயங்களை தவிர்ப்பதற்கு, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

### கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதோர்


இலங்கையில் இதுவரை 20 வயதுக்கு மேற்பட்ட 11 இலட்சத்து 70 ஆயிரம் பேர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. 20 தொடக்கம் 29 வயதுக்கிடைப்பட்டவர்களில் 719,000 பேரும், 30 தொடக்கம் 60 வயதுக்கிடைப்பட்டவர்களில் 03 இலட்சத்து 86 ஆயிரத்து 408 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 64,234 பேரும் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

### டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

ஜனவரியில் மாத்திரம் நாட்டில் 7,702 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில் 2,122 டெங்கு நோயாளர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டதுடன், இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. கடந்த வருடம் ஜனவரி மாதத்தை விட இவ்வருடம் 5,580 டெங்கு நோயாளர்கள் கூடுதலாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## ஞாபகம் வருகிறதா?



***1952ம் ஆண்டில் பயிற்சி பெற்ற இலங்கயின் முதலாவது பெண் ஆசிரியைகள், சிலாபம் ஹம்ஸா ஆலிப், அளுத்கம பாத்திமா சகரியா, தும்புளுவாவ ஆமினா உம்மா தாஜுதீன், நிந்தவூர் மைமூனா காதர்*** (பட உதவி: உடுதெனிய தையிப்)

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**









இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புத்தக வெளியீடுகளின் கண்காட்சி கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கடந்த சனி, ஞாயிறு இரண்டுதினங்கள் நடைபெற்றன. இப்புத்தக கண்காட்சியை திறந்து வைத்த மேல் மாகாண ஆளுநர் கே. சி. லோகேஸ்வரன், மற்றும் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன், தில்லை நடராஜா, விவேகானந்த சபை உப தலைவர் வானதி ரவீந்திரன், மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மனாந்தஜீ மகராஜ், ஆகியோர் கண்காட்சியை பார்வையிடுவதை காணலாம்.



மகன், மகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் ஜோசப் தம்பதிகள்













மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் 88ஆவது பிறந்த தினம் கடந்த 16ஆம் திகதியன்று கொழும்பு கொட்டாஞ்சேனை நியூ வைஷ்ணவி திருமண மண்டபத்தில நடைபெற்றபோது ....

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 20 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 பெப்ரவரி 20 ஞாயிற்றுக்கிழமை

# சுவிட்சர்லாந்தை கலைக்க முயன்ற கடாபி

லிபிய முன்னாள் சர்வாதிகாரி முஅம்மர் கடாபி சுவிட்சர்லாந்து நாட்டை கலைத்துவிடும்படி ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டவந்த கதையை என்னவென்று சொல்வது.

தனது இரு வேலைக்காரர்களை தாக்கியதாக ஜெனீவா பொலிஸார் 2008 ஆம் ஆண்டு கடாபியின் மகன் மற்றும் மகனின் மனைவியை கைது செய்து இரண்டு நாள் சிறை வைத்தனர். கோபமடைந்த கடாபி, உள்நாட்டில் இருக்கும் சுவிஸ் நாட்டின் நெஸ்ட்லே, ஏ.பி.பி நிறுவனங்களை மூடினார். ஏதேதோ காரணம் கூறி இரு சுவிஸ் வர்த்தகர்களை கைது செய்தார், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக விமானங்களை ரத்துச் செய்தார், சுவிஸ் வங்கிகளில் இருந்த சுமார் 5 பில்லியன் டொலர் பணத்தை வாபஸ் பெற்றார். இத்தனை செய்தும் அவரது கோபம் அடங்கவில்லை.

ஐ.நாவுக்குச் சென்று பரிந்துரை ஒன்றை சமர்ப்பித்தார். அதாவது சுவிட்சர்லாந்தின் இத்தாலி பேசும் மக்கள் வாழும் பகுதியை இத்தாலியிடமும், ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழும் பகுதியை ஜெர்மனிடமும் பிரெஞ்ச் பேசும் மக்கள் வாழும் பகுதியை பிரான்ஸிடமும் கொடுத்து அந்த நாட்டை கலைத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



இது ஐ.நா விதிகளுக்கே முரணானது என்று கடாபியின் கோரிக்கையை அந்த அமைப்பு நிராகரித்துவிட்டது.

# அசலை விடவும் பாதுகாக்கப்படும் நகல்



மோனாலிசா ஓவியம் அதிகம் காட்சிக்கு வைத்து இப்போது அதன் நிறம் மங்கலடைந்து விட்டது. உண்மையில் இந்த விலை மதிப்பு மிக்க ஓவியத்தை விட டாவின்சியின் மாணவன் ஒருவரால் தீட்டப்பட்ட நகல் மோனாலிசா ஓவியம் பாதுகாக்கப்பட்டு வருவதால் அது அசலை விடவும் நிறம் மங்காமல் இன்றும் புதுப்பொலிவோடு காணப்படுகிறது. அதாவது டாவின்சி தீட்டிய மோனாலிசாவை விடவும் இந்த நகல் மோனாலிசா இளமையாக தெரியும்.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# நயாகராவில் இருந்து குதித்தவர் வழுக்கி விழுந்து பலி



பொப்பி லீச், நயாகரா நீர்வீழ்ச்சியில் இருந்து குதித்து சாகசம் புரிந்த இரண்டாமவர். 177 அடி உயரத்தில் இருந்து ஒவ்வொரு தருணத்திலும் ஆறு மில்லியன் கன அளவு நீர் பாயும் அந்த பயங்கர நீர்வீழ்ச்சியில் இருந்து பீப்பாய் ஒன்றின் உதவியோடே அவர் இந்த சாகசத்தை நிகழ்த்தினார். 1911 ஆம் ஆண்டு வெற்றிகரமாக அந்த சாதனையை புரிந்த பின் ஊரூராகச் சென்று தனது சாகத்தை பற்றி கூற ஆரம்பித்தார். ஆனால் பாருங்கள் 1926 ஆம் ஆண்டு பொப்பி லீச், நியூசிலாந்து சென்றிருந்தபோது ஓரெஞ்ச் பழத் தோலில் வழுக்கி விழுந்து உயிரிழந்தார்.

# 73 வயதிலும் குழந்தை பெற்ற சப்ளின்

உலகப் பிரபலம் பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளினுக்கு மொத்த 11 குழந்தைகள். ஆனால் மூத்த குழந்தைக்கும் இளைஞய குழந்தைக்கும் இடையிலான வயது வித்தியாசத்தை கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்.

சப்ளினின் மூத்த மகனின் பெயர் நோர்மான் ஸ்பென்சர் சப்ளின். 1919 ஆம் ஆண்டு பிறந்த அந்தக் குழந்தை மூன்று நாட்களிலேயே உயிரிழந்துவிட்டது. இப்போது உயிரோடு இருந்தால் அவருக்கு வயது 102.

ஆனால் சப்ளினின் கடைசி மகனுக்கு கிட்டத்தட்ட இதில் பாதி வயதே ஆகிறது. நடிகரும் இசையமைப்பாளருமான கிறிஸ்டோபர் சப்ளின் பிறந்தது 1962 ஆம் ஆண்டு. இப்போது அவருக்கு வயது 59. சப்ளினின் மூன்றாவது மனைவியான ஊனா ஓநைலுக்கே இவர் பிறந்தார்.

கிறிஸ்டோபர் சப்ளின் பிறக்கும்போது சார்லி சப்ளினுக்கு வயது 73. கிறிஸ்டோபருக்கு 15 வயது இருக்கும்போது 1977 ஆம் ஆண்டு தனது 88ஆவது வயதிலேயே சார்லி சப்ளின் மரணித்தார்.





# எம்மை விட்டு விலகும் நிலவு



நிலவு பூமியை விட்டு ஆண்டுக்கு 3.8 சென்டி மீற்றர்கள் விலகிச் செல்கிறது. 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய் கிரகத்தின் அளவு கொண்ட விண் பொருள் ஒன்று மோதியே நிலவு தோன்றியதாக நம்பப்படுகிறது. அப்போது பூமியில் இருந்து வெறுமனே 22,500 கிலோமீற்றர் தூரத்தில் தானாம் நிலவு இருந்தது. ஆண்டுக்கு ஆண்டு விலகிச் சென்று இப்போது நிலவு பூமியில் இருந்து 402,336 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது.

விஞ்ஞானிகளின் கணிப்புப்படி நிலவு தொடர்ந்து பூமியில் இருந்து விலகியபடி சூழல்கிறது. இதனை எமது விரல் நகம் வளரும் வேகத்தின் அளவு என்று சொல்லலாம். நிலவு இல்லாமல் போனால் பூமி நிலையற்றதாக மாறிவிடும் அப்போது மனிதர்கள் என்ன எந்த உயிர்களும் வாழ்வது சாத்தியமில்லாத ஒன்று தான். அதற்காக இப்போது பயப்படத் தேவையில்லை. அது நிகழ்வதற்கு பல பில்லியன் ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும். எப்படியோ மனிதனுக்கு அழிவு நிச்சம்.

# யாழ்ப்பாணத்தில் மேயர் பதவியை அலங்கரித்த எம். எம். சுல்தான்

**யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் கல்விச் செல்வத்தை உருவாக்குவதற்காக ஒஸ்மானியா கல்லூரி, கதீஜா கல்லூரி ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்கு அயராது உழைத்தவர்களுள் ஒருவர் எம்.எம். சுல்தான்.**

யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் கௌரவமான குடும்பத்தில் முஹம்மது அலிமரைக்கார் முஹம்மது கனி தம்பதியினருக்கு 1909 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி சுல்தான் பிறந்தார்.

சுல்தான் தனது ஆரம்பக் கல்வியை யாழ் மஸ்ற உத்தீன் பாடசாலை, யாழ், மத்திய கல்லூரி, யாழ் இந்து கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கற்றார், யாழ் இந்து கல்லூரியிலிருந்து சட்டக் கல்லூரிக்கு சென்றார். சுல்தான் சித்தியடைந்து வழக்கறிஞரானார்.

வழக்கறிஞரும் நொத்தாரிசுமான சுல்தான், அக்காலத்தில் யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் மிக்க பிரபல்யமான சட்டத்தரணி எஸ்.எம். அபூபக்கர் (கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களுடைய வாப்பா) அவர்களிடம ஜுனியராக ;இணைந்தார். ஜுனியராக இணைந்து பணி புரிந்த சுல்தான் மீது சட்டத்தரணி எஸ்.எம். அபூபக்கருக்கு நல்லபிப்பிராயம் ஏற்பட்டது. 1939 இல் வழக்கறிஞரும் நொத்தாரிசுமான சுல்தான் சட்டத்தரணி எஸ்.எம். அபூபக்கரின் மகள் ஸரீபாவை திருமணம் செய்தார். சுல்தான் ஸரீபா தம்பதியினர் முத்தான ஆறு ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண்பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர்.

வழக்கறிஞர் சுல்தானின் மாமா சட்டத்தரணி எஸ்.எம். அபூபக்கர், யாழ் மாநகர சபையின் ஓர் உறுப்பினராவார். மாமனார் எஸ்.எம். அபூபக்கர் காலமானதையடுத்து 1950 இல் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியின்றி ஏகமனதாக வழக்கறிஞரும் நொத்தாரிசுமான சுல்தான் யாழ். மாநகர சபையின் ஓர் உறுப்பினரானார்.




தினகரன் The Thinakaran
யாழ்ப்பாணத்தின் முதலாவது முஸ்லிம் மேயர்

யாழ் முஸ்லிம் வட்டாரத்தின் நன்மை கருதி அரசியல் தொடர்புடைய ஸ்தாபனமான அகில இலங்கை முஸ்லிம் லீக் கிளை ஸ்தாபனத்தை யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் சட்டத்தரணி சுல்தான் உருவாக்கினார். அதன் தலைவராகவும் சுல்தான் இயங்கினார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் உதவியுடன் சுல்தான் வெளிநாட்டு முஸ்லிம் பேரறிஞர்களை வரவழைத்து ஆண்டு தோறும் கொண்டாடும் மீலாத் விழாக்களில் சிறப்பு இஸ்லாமிய சொற்பொழிவுகளை மீலாத் மேடைகளில் முழங்க வைத்தார். யாழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் அரசியலிலும் சமூக சேவையிலும் முஸ்லிம் லீக் ஸ்தாபனம் பிரபல்யம் அடைந்தது.

1945 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் கல்விச் சகாய நிதியின் பிரதி நிதியாகவும் சுல்தான் நியமிக்கப்பட்டார்.

சுல்தான், யாழ் முஸ்லிம் கல்விச் சபையின் தலைவராக இருந்து, ஒஸ்மானியா கல்லூரியையும் கதீஜா கல்லூரியையும் ஸ்தாபிப்பதற்கு பல வருடங்களாக அயராது அரும்பாடுபட்டவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1951 இல் யாழ் முஸ்லிம் சனசமூக நிலையத்தை குவாஸி சுல்தான் உருவாக்கி அதன் போசகராக இறுதி வரை கடமையாற்றியுள்ளார்.

1951, 1954 ஆகிய வருடங்களில் நடைபெற்ற மாநகர சபை தேர்தல்களிலும் போட்டியின்றியே ஏகமனதாக சுல்தான் தெரிவு செய்யப்பட்டார்.

சுல்தான் 1950 ஆண்டு முதல் 1973 வரை குவாஸியாக செயற்பட்டார்.

குவாஸி சுல்தான் மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசல் பரிபாலன சபையின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.

1954 ஆம் ஆண்டிற்கு பின்னர் நடைபெற்ற தேர்தலில் வேறு எவராவது முன்வந்து தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாக குவாஸி சுல்தான் தேர்தலிலிருந்து ஒதுங்க நினைத்தார். நண்பர்களும் மக்களும் விடவில்லை மக்கள் வலிந்து கேட்டார்கள். மாநகர சபைத் தேர்தலில் போட்டி இடுமாறு வேண்டினார்கள். மக்களின் வேண்டுகோளை ஏற்று அடுத்து வந்த மூன்று தேர்தல்களிலும் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார்.

யாழ், நகரசபை , மாநகர சபையாக தரம் உயர்த்தும் நோக்குடன் உள்ளூராட்சி சேவை கமிசனால் அனுப்பப்பட்ட எல்லை நிர்ணய விசாரணைக் குழு முன்னிலையில் கடுமையாக வாதாடி யாழ். முஸ்லிம்களுக்காக மாநகர சபையில் இரு வட்டாரங்களை பெற்றுக் கொடுத்தார்.

யாழ் மாநகர சபையின் தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்று 1955 ஆம் ஆண்டு யாழ் மாநகரத்தின் முதலாவது முஸ்லிம் மேயராக குவாஸி சுல்தான் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். குவாஸி சுல்தான் மேயராக இருந்த காலத்தில் செய்த சேவையும், நேர்மையான நிர்வாகத்தையம் யாழ் மாநகர மக்கள் பாராட்டினார்கள்.

1957 ஆம் ஆண்டு அரசாங்கங்கத்தினால் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிவாசல் சொத்து நிர்ணயசபை (வக்புசபை) யில் ஏழு பேர் கொண்ட உறுப்பினர்களில் சுல்தானும் ஒருவராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குவாஸி சுல்தான் 1950 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரை இருந்து யாழ் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து குவாஸி பதவியை தொடர்வதற்காக இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 1966 இல் குவாஸியாக இருப்பவர் அரசியலில் ஈடுபடக் கூடாது எனும் புதிய சட்டம் அமுலுக்கு வந்ததால் குவாஸி பதவிக்கு முதலிடம் கொடுத்தார். இது வரவேற்கத் தக்க விடயமாகும். (குவாஸி என்பது முஸ்லிம் தனியார் சட்டத்தில் நீதிச்சேவை ஆணைக்குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவர். கணவன், மனைவிக்கிடையிலான பிரச்சினைகளை தீர்த்து வைத்தல், விவாகரத்து சம்பந்தமான விடயங்களை தீர்த்து வைத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்.)

அரச கரும மொழி பற்றியும் இந்த விடயத்தில் முஸ்லிம்களின் நிலை என்ன என்பது பற்றியும் ஆராய்வதற்காக 1955 ஆண்டு டிசம்பர் மாதம் அகில இலங்கை முஸ்லிம் லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டில் குவாஸி சுல்தான் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் என்றும் சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி குரல் எழுப்பினார். இதற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காத போதும் சிங்கள மொழியே அரச கரும மொழியாக வேண்டும் என பெரும்பான்மை அங்கத்தவர்களினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கைச்சாத்திடாமல் மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் நாம் தமிழரே என்று கூறி குவாஸி சுல்தான் அந்த மா நாட்டை விட்டு வெளிநடப்பு செய்தார்.

இந்த செய்தி சகல பிரபல செய்தித்தாள்களிலும் முன் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்தது.

குவாஸி சுல்தான் வெளிநடப்பு செய்து கொழும்பிலிருந்து திரும்பியதும் யாழ் புகையிரத நிலையத்தில் தமிழ் மக்களாலும் மாநகர சபை உறுப்பினர்களாலும் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

குவாஸி சுல்தான் யாழ் முஸ்லிம்களுக்கு கல்வி, சமய, அரசியல் போன்ற பல துறைகளில் நற்பணியாற்றியுள்ளார் என்றால் மிகையாகாது. குவாஸி சுல்தான் 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மாதம் 19 ஆம் திகதி தனது 67 ஆவது வயதில் காலமானார்.



**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**

# மறுவாசல்

முல்லை முஸ்ரிபா


Design by S.Nakeem

## கவிதை

# மாயவித்தை

கவிதை ஒரு மாய வித்தை. சொல் எனும் மாயக்கோல் கொண்டு கவி வித்தைக்காரர் காட்டும் மாய உலகின் படிமங்களாலானது கவிதை எனும் மாயம்.

உலகம் தோன்றியகாலம் முதல் கவிதை அதன் அர்த்தச் செறிவை வெளிப்படுத்தி வரும் நுட்பங்களும் நுணுக்கங்களும் அடர்ந்த கற்பனை வெளி அல்லது அனுபவ வெளிமிகுந்த அவதானிப்புக்குரியது. சொல்லென்ற வித்தைக் கருவியை வித்தைக்காரர் அசைத்து அசைத்து அல்லது சுழற்றிச் சுழற்றிக் காட்டும் விம்பவெளியில் ஆயிரமாயிரம் மாய ஜாலங்கள் காட்டும் தோற்றங்கள், மாறும் காட்சிகள் உள்ளிழுக்கும் உணர்வின் திரட்சியை அல்லது கவிச்சியை கவிதை வித்தையில் அதிகம் பெய்யக் காணுகிறோம். மாஜாயாலக் கவிதையிலும் காணுகிறோம்.

தெலுங்குக் கவிதை வரலாற்றில் முக்கிய அடையாளமாகத் தெரிந்தவர் அஜந்தா. பெனுமர்த்தி விசுவநாத சாஸ்திரி (1929 –1998) என்கின்ற அஜந்தா மரங்கள் விழும் காட்சி என்கிற முதல் கவிதையிலேயே கவனத்தை ஈர்த்தவர். குறைவாக எழுதி நிறைவாக நின்ற கவிச்சொல்லி. ஆந்திர பிரபா பத்திரிகையாசிரியராகப் பணிசெய்தவர்.

தனது கவிதைகள் பிரசுரமான பின் தனக்கும் கவிதைக்கும் எந்தவித தொடர்புமில்லையென்ற கருத்துடையவர் கவி அஜந்தா. படைப்பாளி இறந்து விட்டான் என்றகோட்பாடு இதன் சார்புடையதே.

1997இல் சாகித்யஅகாதெமி விருதுவென்ற 'ஸ்வப்னலிபி'' (கனவுப்பிரதி)கவிதைத் தொகுப்பு நண்பர் குழாத்தின் வேண்டுதலின் பேரில் பிரசுரமான கவிதைகளை நினைவு கூர்ந்தெழுதியது.

கவி வேகுண்டமோகன் பிரசாத்(மோ) மொழிபெயர்த்த அஜந்தாவின் 'மாயை வித்தைக்காரன்''வாசிப்பின் மாயக்கவிதைதான்.

கண்ணாடியென்றால்
சுவற்றில் தொங்கும் உடலென்று
பொருளல்ல
உன் மனச்சாட்சி எப்போதும்
உன் பிரதிபலிப்பின் பின்னாலிருக்கும்
மாயாஜால வித்தைக்காரன்
எப்போதும் வீரம் செறிந்தகுதிரை வீரன்
எப்போதும் உலகின் ரகசியங்களை
உடைத்துத் தின்னும் ஒரு கோமாளி
வெளியாளாக கண்ணாடி உன்
உள்ளாழமான உலகம்
கண்ணாடியில் மிதக்கும் பிம்பங்களை
அகற்ற முடியாது
அதனால்
நானே கண்ணாடிக்குள் நுழைந்தேன்
என் பிம்பம் இனி
கண்ணாடிக் குள்ளில்லை
ஆனால் நான் அங்கிருக்கிறேன்
தனியாய் உடலற்று

## ஔவன் கவிதை

### மீநிழலின் குரல்

புராதனத்தின் அதிகாலை மீதடர்ந்த கறையின் மேல்
நம்பிக்கையின் வேர்ச் சொல்லைப் பொழிந்தாள்

அவள் நெஞ்சுள் மீதமாயிருந்த அருள்ச் சொல்
நம்பிக்கையின் விதைப்பு
பல்லாயிரம் அர்த்தச் செறிவோடு விருட்சம்
கொண்டது
நிழலுமற்ற அந்தரிப்பின் கீழ்
இவளோடொத்தவர்கள் அலை கையில்
கர்வத்தின் மீக்கொண்டெழுந் காவி வெட்கையில்
அவிகையில்
அதிகாரத்தின் சூழ்ச்சியின் கரங்களில் மாள்கையில்

இவளிடம் மீதமாயிருந்ததொரு ஒற்றைச் சொல்
ஒளிச் சொல் ஞானச் சொல் வீரியச் சொல்
விடுதலையின் பெயர்ச் சொல்

விதைத்தாள்
நம்பிக்கையின் விதைப்பு
பல்லாயிரம் அர்த்தச் செறிவில் மகா விருட்சம்
கொள் காலம்
இனியொரு புராதன அமைதியில் மீநிழல் அடரும்



# புதிய அரிச்சுவடி

நெடுங்கணக்கில் மீதவனுக்கு நெருக்கமில்லை. அவனது பள்ளி நாட்கள் பல நெடுங்கணக்குப் பரீட்சையால் தொலைந்திருக்கின்றன.

வீமா, அட்டவணை மீது வெறித்துப் பார்த்தான். அவனது நெற்றிக் கண்ணிலிருந்து திரண்ட அக்னிப் பொறி நெடுங்கணக்கு அட்டவணையின் மீது அடர்ந்தது.....''அ க்கினிக்குஞ்சொன்று கண்டேன். அதை அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்.......'அசரீரித்துக் கொண்டிருந்தது.

குருவானவள் மனனமிடக் கொடுத்த பாடப் பரப்பின் மேல் அவன் சுய விசாரணை செய்யவும் தொடங்கி விட்டான். சத்திர சிகிச்சைக்காரனாக எனக்கு முன் தோன்றினான். அவன் பிஞ்சு விரல் சிவப்பு பென்சிலால் அட்சரங்கள் சிலவற்றுக்கு வட்டமிட்டான்;. வேறு சிலவற்றைக் குறுக்குக் கோட்டினால் வெட்டி விடுகிறான். இன்னும் சிலவற்றை நிறப்பேனாவால் மாற்றுகிறான்... மூன்றாம் நாள்,

ஙா, ஙி, ஙீ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ.... அட்சரங்களுக்கு வட்டமிட்டான். அடுத்த நாள், ஞீ,ஞே,ஞை,ஞோ,ஞௌ...... என்பவற்றுக்கும் வட்டமிட்டான்.

வீமா....பிறகொரு நாள் அவனது சுய அட்சரப் பயிற்சி தொடர்ந்தபோது கீழ்வரும் எழுத்துக்ளுக்குக் குறுக்காக வெட்டி விட்டான். ஔ, கௌ, ஙௌ,சௌ, ஞௌ, டௌ, ணௌ, தௌ,நௌ, பௌ, மௌ,யௌ,ரௌ,லௌ,வௌ,ழௌ,ளௌ ,றௌ,னௌ. மேலதிகமான ஒரு பயிற்சியும் கீழே காணப்பட்டது. அவன் குறுக்குக் கோடிட்டதற்கும் பயிற்சி செய்ததற்குமிடையே அதிக காலம் இடைவெளி இருக்கவில்லை.

அவ்வையார்
கவுரவம்
சவுக்கியம்
மவுனம்
பவுர்ணமி
யவ்வனம்
வவ்வால்

இப்போதெல்லாம் அவனது குருவானவளைவிடவும் நான் தான் அவனது சுய பயிற்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு தடவை வீமாமுவின் நெடுங்கணக்குப் பயிற்சியில் ஊணாவுக்கு இரட்டை வட்டமிட்டிருந்தான். ஏனப்படிச் செய்தான். ஊணா உயிரல்லவா. உயிரில் எப்படிக்கை வைப்பது? இது சாத்தியமா? முறையானதா?

குருவானவள் கண்டிருந்தால் என்னவாகும்? நான் குழம்பிப் போனேன். அவன் தெளிவாகவே இருந்தான்.

நான் தூங்கி வழியும் கணங்களில் என் தூக்கத்தின் மீது அவன் விரிவுரை நிகழ்த்தத் தொடங்கி விடுவான்.

இ ஈ, குறில்நெடில் தொடர்பு பொருத்தமில்லை என்பான். அட்டவணை முழுவதும் தேடித் தேடிக் காட்டுவான். இதுசரி.....இது பிழை....என்பான்.

உயிர் பத்தா? பன்னிரெண்டா? என்பான்...

குருவானவள் அட்டவணை முழுவதும் மனனமிடச் சொல்வது நியாயமில்லை என்றான். எழுத்துக்களைச் சரியாக உச்சரித்தபடி தூங்கிப் போவான்.....இப்படியே நாட்கள்....பலவாகும்.

ஒரு.....நாள் அட்டவணையை மாற்ற வேண்டுமென்றான். அவனது குரலில் அழுத்தமிருந்தது...

நான் ஆம் எனத்தலையாட்டுவதா? இல்லை, மௌனித்து விடுவதா? நானென்ன...பண்டிதனா? இலக்கணியனா? மொழியியலாளனா? இல்லை. பல்கலைக்கழகப் பேராசானா? அட்டவணையை மாற்றி அங்கீகரிக்க. குருவானவள் மீது இரக்கம் சுரந்தது. அவளால் என்ன செய்திட முடியும் அவள் பனுவலை ஒப்புவிப்பவள் மட்டும் தானே. இதற்காக இப்போதுதான் போராடிச் சம்பளமும் கொஞ்சம் அதிகரித்திருக்கிறாள். அவள் பாவம். இவனது வினாக்கொத்துகளுக்கு அவளது களஞ்சியத்தில் பதிலில்லை.

வீமாமு இன்னொரு நாள் வேறு சில அட்சரங்களைச் சேர்த்திருந்தான்.

அவனது நடவடிக்கைகள் எனக்கு ஆச்சரியமூட்டின. பனுவல்களின் முன்பக்கத்தில் முழுதாயுள்ள அட்டவணை மீது இவன் நடாத்தும் விசாரணை சரியென்றால்...? பனுவலே பிழையாயிடுமே.....என்றொரு ஏக்கமும் எனக்கு....

அவன் வட்டமிட்டவற்றை/
குறுக்குக் கோடிட்டவற்றை/
இரட்டைவட்டமிட்டவற்றை/
மேலதிகமாகச் சேர்த்தவற்றை
மீண்டும் மீண்டும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தேன். இந்த நோட்டம் அவனது குருவானவளுக்கும் இருக்குமோ? அவளுடன் பேசினாலென்ன?....... பேசியபோது ஏமாந்து போனேன். குருவானவளிடம் வீமாமுவின் சிந்தனைக்கு விருந்துமில்லை, தூண்டலுமில்லை ஒரு செத்த மனோநிலை...

ஆனால் அவன் என்னைத்தொடர்ந்தான். அல்லது நான் அவனைத் தொடர்ந்தேன்.

அவன் அடையாளமிட்டவற்றை மீளவும் பார்த்தேன். நான் பேச்சிலும் எழுத்திலும் இவற்றைப் பயன்படுத்துகிறேனா?.... அப்படியென்றால், இவை 'உறக்க நிலை எழுத்துக்கள்'' அவனது கேள்ளியொன்றுக்கு இந்த பதிலைச் சொன்னேன். அவன் திருப்தியுறவில்லை. ஒரு பதிலுக்குப் பல கேள்விகள் அவனுக்குள் சிறகுகட்டின....

குருவானவள் சிறகை வெட்டித் திருத்தப் பார்க்கிறாள். நானோ வளர்த்து திருப்தியும் பெறப் பார்க்கிறேன்...

'உறங்கும் எழுத்து எதற்கு?''

'அட்டவணையின் பெட்டிகளை நிரப்பி ஒழுங்கமைக்க'' மேலும் சுட்டிக் காட்டுகிறான். 'இதுக்கு மேல் இத வச்சிருக்கு'' பார்த்தேன். அவனது அட்சர ஞானம் சரிதானெனக் கண்டு கொண்டேன். 'ஊணாக்கு மேலளாணா? ''இதனை ஊவண்ணா என அவனது ஆய்வு மனதால் ஏற்க முடியவில்லை.

மேலும் வீமாமுவிடம் கேள்விகள் உண்டு. அரவு மேல் குத்து வச்சா 'ர்''என்று எப்படி வரும்?

அ,இ இருக்கிறதுதானே. 'ஐ'' ஏன்?

அ, உ உள்ளபோது 'ஔ'' எதற்கு?

அவனது கேள்விகள் முதிர்ந்தவை.

அவன் சில சொற்களை பயிற்சி செய்திருந்தான்.

பஸ்.... ஜாயா.... ஷரிஅத்.. ஹுமான்.....

இந்த எழுத்துக்கள் அட்டவணையில் எங்கே? நானும் தேடினேன். இல்லை. பாவம் குருவானவள் என்ன விளக்கம் கொடுப்பாளோ?

பிறகொரு நாள் குருவானவளிடம் கேட்டான். 'இந்தளாணாவை ஏன் ஓணாவுக்குப் பக்கத்தில் போட்டு ஔ என்கிறாங்க''

குருவானவள் அவன் மீதெழுந்த வெறுப்புணர்வை அரிச்சுவடி மீது காட்டியிருந்தாள். அவனது வட்டங்கள் மீது கோழி முட்டைகளை அடுக்கியிருந்தாள். சிவப்புக் கோழி முட்டைகள்.

இவனுக்கு கோழி முட்டைகள் மீதும் குருவானவள் மீதும் இரக்கம் கசிந்திருக்க வேண்டும். அல்லது கோபம் வெடித்திருக்கவேண்டும். அப்படியே உறங்கிக் போனான்.

மீண்டும் அவன் 21ஆம் நூற்றாண்டில் கண் விழித்தபோது அதே அரிச்சுவடி. அதே பனுவல்களின் முழுப்பக்கத்தில். மனம் வருந்தினான் வீமாமு. வீமாமுவின் மீசை துடித்தது. அவனது கையில் குறு வடிவிலான புதிய அரிச்சுவடி ஒளிர்ந்தது.

**பொன் மீரா**

# சங்கவி பிலிம்ஸின் கலாவிபூஷண விருது வழங்கிய விழா BMICH இல்










படங்கள்:
எம்.நஸார், ருக்மல் கமகே










# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கவிமணி பாயிஷா நௌபல்

**தமிழகத்தோடு தொடர்பு கொண்டு கவிதை பாடுவதில் மற்றும் அல்ல கவிதைகள் மூலம் உறவுகளை வளர்த்துக் கொள்வதில் செயற்பட்டு வருகின்ற ஒரு பெண்மணியை அண்மையில் சந்தித்தோம்.**

இவர், கவிதை பாடுவதில் வல்லமைக் கொண்ட முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பாயிஷா நௌபல். அவரைச் சந்தித்து உரையாடியதில் கிடைத்த தகவல்களை பரிமாறிக் கொள்கிறோம்.

**உங்கள் ஊரைப் பற்றிக் கூறுங்களேன்.**

இயற்கை எழில் கொஞ்சும் இலங்கையில், வளங்கல் நிறைந்த மீன்கள் காதல் பாடும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளது எனது ஊர். இவ் ஊர் கடல், வயல், குளம், ஆறு, ஓடைகள் என அனைத்தும் சுற்றிவளைத்து இயற்கையை தன்வசப்படுத்தி கொண்ட ஓடைஓரமாக அமைந்துள்ளது. இங்கு மீராஓடை என்னும் ஊர் அமைந்துள்ளது. புகழ் பூத்த பாடகி மீராஉம்மா குடிசையிட்டு வாழ்ந்ததால் இவ்விடத்துக்கே மீராஓடைஎன பெயர் பெற்றது.



**உங்களை பற்றிய ஒரு சிறிய அறிமுகம் தாருங்கள்....**

என்னைப் பற்றிக் கூறுவதாக இருந்தால் நான் மீராவோடை எனும் ஊரில் யாஸீன்வாவா சேகுலெப்பை, அகமது லெவ்வை கதீஜா உம்மா ஆகியோருக்கு ஆறு ஆண் வாரிசுகள், மூன்றுபெண் வாரிசுகள். நான் அவர்களில் கடைசிப் பிள்ளையாக பிறந்து அதே ஊரில் கல்வி கற்று யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து மீராவோடை 4 ஆலீம் வீதியில் கணவர், மகள், மகன் என இரு குழந்தைகளின் தாயாக வாழ்ந்து வருகிறேன்.

**நுட்பம் குழுமத்தின் ஐந்தாவது ஆண்டை முன்னிட்டு 1001 கவிதைகள் தொகுப்பை வெளியிட இருப்பதாக அறிந்தோம். இது பற்றி கூறுங்கள்...!**

ஆமாம் குழுமம் என்பதை விட நாம் எனலாம். இது இலங்கையில் பிறந்து வளர்ந்த எல்லோரையுமே சார்ந்தது. இலங்கையின் முதல் நூல் என்றாலும் இதன் பெருமை இலங்கை மக்களை சேர்ந்தவையே ஆகும். உலகில் பரந்து வாழும் சிறந்த கவிஞர்களை ஒரே கூரைக்குள் எந்த பாகுபாடும் இன்றி ஒன்று சேர்ப்பதே எமது நோக்கமாகும். ஆண்கள், பெண்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் என புரட்டும் பக்கம் எல்லாம் கவிஞர்கள் இவர்களா இவர்களா என வியர்த்து பார்க்க வைப்பதும் ஒரு நோக்கமே. படிக்கும் போது மன ஒற்றுமை, மகிழ்ச்சி, சமரசம் என உருவாகவேண்டும் என்ற ஒரு சுயநலமும்தான் எனக்கு உண்டு.



ஏன் என்றால் நான் என்றுமே இதனையே எதிர்பார்ப்பவர். இந்தநூலில் தங்களது ஆக்கமும் இடம்பெற வேண்டும் என்று விரும்புவோர் அவற்றை தாம் விரும்பிய தலைப்புகளில் 6090 சொற்களில் எழுதி அனுப்பலாம். இவற்றை வாட்சப் 0752224507 இன் ஊடாக அனுப்பலாம்.


**இலங்கையில் முகநூலில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நுட்பக் குழுமம் இதுவாகும். இதன் செயற்பாடுகள் என்னென்ன? இதனை நீங்கள் நிறுவிய நோக்கம் என்ன?**

அருமையான கேள்வி. இதனை நான் நிறுவக் காரணம், நான் 2015 காலப்பகுதில் முகநூலுக்குள் நுழைந்தேன். அன்றில் இருந்து என் இலக்கிய பயணம் முகநூலில் தொடர்ந்தது. அந்த நேரம் இந்தியாவில் மூன்று முகநூல் குழுமங்கள் மட்டுமே இருந்தன. அவந்நால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ், பரிசுகள், விருதுகள் என பெற்றேன். காலப்போக்கில் அக்குழுங்களில் உறுப்பினராகி, நிருவாகியாகி, உபதலைவர் என்ற பொறுப்போடு செயல்பட்டேன். பின் 2017 நான் அமுதசுரபி பூச்சோலை எனும் விழாக்களில் விருது பெறவும் எனது நூல்களை வெளியிடவும் கவிபாடவும் சென்னை சென்றிருந்தேன். அப்போதுதான் தெரிந்தது எவ்வளவு கவிஞர்கள் ஆளுமைகள் இலங்கையில் இருக்கிறார்கள் என்று. 139 விருதுகள் அந்தக்காலப்பகுதியில் இலங்கையருக்குக் கிடைத்திருந்தது. அனைத்தையும் நான் கொண்டுவந்து ஓட்டமாவடியில் முப்பெரும் விழா வைத்து அதில் முன்னாள் முதலமைச்சர் நஸீர் ஹாபீஸால் வழங்க வைத்தேன். அப்போது பல ஆளுமைகள் வேண்டிக்கொண்டதுக்கமையவே நுட்பக் குழுமத்தை ஆரம்பித்தேன். அது இன்று ஐந்துவருட நிறைவை எதிர்பார்த்து காத்திருப்பதை நினைத்தால் ஆச்சரியமே. இதனூடாக போட்டிகளை நடாத்துகிறோம். சிறந்த நடுவர்களைக் கொண்டு தெரிவு செய்து சான்றிதழ வழங்கி வருட இறுதியில் நினைவுச்சின்னம் வழங்கி வைப்போம். அத்தோடு தொகுப்பு நூல்களையும் வெளியீட்டு வருகிறோம்.

குழுமத்தின் நோக்கம் என்னவென்றால், ஆண், பெண், தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லாத இலக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துதலாகும். இந்த பாகுபாடுகளைத் தாண்டி சமூக ஒற்றுமை, நல்லிணக்கம் இந்த இரு தரப்புகளிடமும் நிலவ வேண்டும் என்பதே எனது நோக்கம் இவ்வாறான விழாக்கள் வெளியீடுகளில் தான் நாம் தொலைத்த நம் பிரதேச மத ஒற்றுமையை கொண்டுவர முடியும். இந்த நப்பாசை அதற்கான ஒரு தூரநோக்கு சிந்தனையோடானா ஒரு முயற்சியே ஆகும். அதற்கு நுட்பக் குழுமமும் நானும் ஒரு துரும்பு என்பதில் மகிழ்ச்சி அவ்வளவுதான்.
















# சாதனை படைத்த கிளிநொச்சி யுவதி: குவியும் பாராட்டுக்கள்!

அகில இலங்கை ரீதியாக *Leo clup of Colombo* நடாத்திய ஓவியப் போட்டியில் கிளிநொச்சியை பிறப்பிடமாக கொண்ட செல்வி இ.டயாளினி என்ற ஓவியர்,இரண்டாம் இடத்தைப் பெற்று, கிளிநொச்சி மண்ணுக்கும்,தாய் தந்தை,குருவிற்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

# நதுநசி கவிதைகள்

## அழுது விட்டேன்

ஆதரவற்ற நிலையில்
ஆனந்தமாக வாழும்
ஆக்கம் அத்தனையும்
ஆக்கினை என்று தள்ள.

பூக்கள் கூட இங்கு
பூக்கும் முன்னே
பூவிதழ் ஒடிந்து
பூரிப்பு இழந்து நிற்க.

ஏளனம் மட்டும்
ஏக்கம் கூட்டிய படி
ஏறும் முன்னே நம்மை
ஏரறுத்து பார் சுமக்க.

நலம் என சொல்ல
நயம் இல்லை எனக்கு.
நட்புக் கூட என்னோடு
நடந்திட மறுக்கும் போது.
மணந்திட நீயும்
மறந்திட்ட போதும்
மனம் எனைப் புரிந்து
மகிழ்ந்திட தந்தாய்.

தாயாக எண்ணி
தாங்கிடக் கண்டேன்.
தாகம் இருந்தும் உன்னிடம்
தா எனக் கேட்டிட தயங்கினேன்.

இல்லை என்று என்னில்
இன்னல் கொண்டு தன்னில்
இழிந்துரைத்து கண்ணில்
இனியும் வழியும் தன்னில்.

அழுது விட்டேன் சும்மா
அனல் பட்ட மண் புழுவா.

## அணைத்து விட்டதால்

அணைத்து விட்ட பெண்ணா
அன்பில் உன்னோடு நானா.

கண்ணில் தானா
கண்ணீர் வீணா.
கன்னி உன்னால் தானா
கனவாக போனேன் நானா.

பாசம் என்று போனா
பாவி என்று ஆனா
பாங்காய் தாங்கி நீயா
பாரில் புகழ்ந்தாய் பேரா.

போரில் நீ கவரி மானா
போனால் நான் வீணா.
போதை தந்தது நீயா
போல பாராய் உயிரா.

........ **அன்புடன் நதுநசி.**

# அம்மா..!

அம்மாவின் கருவறையில்
நாங்கள் தெய்வம்
ஆலயத்தின் கருவறையில்
அம்மா தெய்வம்

உயிரோடு உடல் தந்தாள்
உலாவ விட்டாள்தமிழ்
உணர்வோடு உணவு தந்தாள்
உயர வைத்தாள்.

இருள் வந்து சூழும் போது
நிலவாய் நின்றாள்
எமை வளர்த்து மரமாக்க
வேராய்ச் சென்றாள்

உறக்கமின்றி எம்மவர்க்கு
உயர்வைத் தந்தாள்
உழைத்துழைத்து உலகத்தில்
ஓடாய்த் தேய்ந்தாள்

தனைமறந்து எமக்காக
வாழ்ந்த தாயைஅவள்
தந்த உயிர் பிரியுமட்டும்
நிறுத்தி வாழ்வோம்.
அம்மாதான் நேரில் கண்ட
அன்புத்தெய்வம்
அதைவிடவும் ஆலயங்கள்
தேவையுண்டோ..`

எங்களை இப்போது
எவருக்கும் தெரிவதில்லை
தொழில் நுட்பமென்னும்
தூரதேசம் பேச, எழுத..
பல நுட்பம் வந்ததனால்
எங்களை இப்போது
எவருக்கும் தெரிவதில்லை.

அந்தக்காலத்தின்நாம்
அன்பின் பாலங்கள்..
பிரிந்து வாழ்ந்தாலும்
பிரியமுடன் வாழ்ந்தாலும்
எங்களைத்தான் எதிர் பார்த்தே
ஏக்கமுடன் இருப்பார்கள்.

ஊர் விட்டுத் தள்ளிப்போன
உறவுகளின் உணர்வுகளை
வேர் இருக்குமிடம்பார்த்து
விருப்போடு நாம் வருவோம்.

அந்தகிராமத்தின்
அதிகாரிகளை தெரியாது
ஆனால்..
குஞ்சு குருமான்கள்,இளம்
குடலை, பெரியோர்கள்
எல்லோர்க்கும் தெரிந்த முகம்
எமை காவும் தபால் காரர்

விசில் அடித்து கேட்டாலோ
பெல்லடித்துக் கேட்டாலோ
கடிதம் வருகுதென்று
கடப்பை மட்டும் ஓடிவந்து
இல்லையென்று மனமுடைந்து
எமை பேசி போனவர்கள்நாம்
அடுத்தநாள் கிடைத்துவிட்டால்
அதைச்சொல்லி மகிழ்வார்கள்.

வெறுப்போடு போனமகன்
வீம்போடு போனமகள்
என அழுது புலம்பும் பெற்றோர்
எமை பார்த்தே உயிர் வாழ்வார்.
வருந்திக்கிடக்கின்ற
வயதான காலத்திலும்
பேத்தி அவள்போட்டஎன்ர
பிரியமுள்ள கடிதமென்று
உற்றார் உறவுகட்குளம்மை
உரித்துரித்து காட்டிப்பல
சந்தோஷ மகிழ்சியில
“சா” எட்டிப் போனதப்போ..

வெளிநாடு போன அப்பாகுளிரில்
வேலைகளில் விறைத்தாலும்தன்
பிஞ்சுக்குழந்தைகளின்
கொஞ்சுமொழிக்கடிதமென்று
நெஞ்சில் எமை அணைத்தே
நிமதியாய் தூங்குவார்கள்.

தந்தி என்றொரு அண்ணன்
தபால் காட்டெனும் ஒரு தம்பி
எந்தன் உடன் பிறப்பே..
அண்ணனுக்கு வேலை
கிரமத்தை
அழவைத்து பார்ப்பதுவே

நத்தார்,புதுவருடம்
நம் உளவர் பொங்கலென
அத்தனைக்கும்
வாழ்த்துக்கூற..
அங்கு நிற்பான் என் தம்பி

எத்தனைதான் எழுத்துக்கள்
என்மேலே பதிந்தாலும்காதல்
இதயத்தால் எமைத்தொட்ட
காயிதமாய் நாமிருந்தால்

அவர் அவர் ஒளித்துவைத்து
அணுவணுவாய் எமைரசித்துநாம்
உருக்குலைந்து போனாலும்
ஒட்டியொட்டி வாழவைப்பார்.

வைபரென்றும்,வற்சாப்பென்றும்
வையகத்தில் பல விஞ்ஞானம்
எழுதி அளிப்பதுவேகையில்
எமைப்போல இருப்பதில்லை

பசுமையான அக்காலம்அன்பு
பாசத்தால் நிறைந்திருந்தோம்
சிந்தித்துப்பார்க்கின்றோம் அந்த
சிறப்பில்லை இக்காலம்.

என்றாலும்..
புதிய தலைமுறைக்கும்
புரியவேண்டும் குழந்தைகளே
உங்கள்..
பூட்டன் பேரனோடு நாம் வாழ்ந்த
பொன்னான காலமது.



**பசுவூர்க்கோபி**
**நெதர்லாந்து.**
**“கடிதங்களின்” கவலை..!**

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

செல்வி.மதுமிதா.
கலஹா.

**கேள்வி: 'காத்து வாக்குல ரெண்டு காதல்' படத்தின் இயக்குநர் யார்?**

**பதில்:** லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா, கவர்ச்சி நடிகை சமந்தா,'மக்கள் செல்வன்'விஜய் சேதுபதி ஆகியோர் நடித்திருக்கும் 'காத்து வாக்குல ரெண்டு காதல் படத்தின் இயக்குநர் விக்னேஷ் சிவன்.

எம்.மாகிரட்
எலபடகம.

**கேள்வி: பிமாண்ட இயக்குநர் ஷங்கரின் மகளும் நடிக்க வந்துவிட்டாராமே... அதைப்பற்றி ஏதாவது தகவல் சொல்லுங்களேன்..?**



**பதில்:** திரைப்படங்களில் ஆச்சரியத்தை அள்ளி வீசும் இயக்குநர் ஷங்கரின் மகளான அதிதிஷங்கர், இயக்குநர் முத்தையா இயக்கத்தில் கார்த்தி நடிப்பில் தயாராகி வரும் 'விருமன்' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் நடிகையாக அறிமுகமாகிறார் . இப்படத்தின் அனைத்து பணிகளும் நிறைவடைந்து விரைவில் வெளியாகவிருக்கிறது

இந்நிலையில் அதிதி ஷங்கர் படவெளியீட்டுக்கு முன்னரே, அவர் முதன் முதலாக சொந்தக் குரலில் பாடிய திரைப்பட பாடல் ஒன்று வெளியாகி இருக்கிறது.

'கனி' எனும் தெலுங்கு படத்தில் இவர் பாடிய பாடலுக்கு ஷங்கர் அறிமுகப் படுத்திய நடிகரான தமன் இசையமை த்திருக்கிறார். நடிகையாக அறிமுகமாகும் முன்னரே பாடகியாக தன்னுடைய திறமையை வெளிப்படுத்தியிக்கும் அதிதி சங்கருக்கு வாழ்த்துக்கள் குவிகிறது.

எம்.எம்.நிலாம்.
நிக்கவெரட்டிய.

**கேள்வி: நடிகர் ஜெயம் ரவி அவர்கள் இப்போது ஏதாவது படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?**

**பதில்:** தமிழ்த்திரையுலகில் தனித்துவம் வாய்ந்த நடிகர்களில் ஒருவராக வலம் வருபவர் ஜெயம் ரவி.'பொன்னியின் செல்வன்'முதலாம் பாகத்தில் நடித்து முடித்திருக்கும் இவர்,தற்போது 'பூலோகம்' படத்தை இயக்கிய இயக்குநர் கல்யாண கிருஷ்ணன் இயக்கத்தில் தயாராகி வரும்'அகிலன்' என்ற படத்தில் நடித்து வருகிறார். நடிகை பிரியா பவானி சங்கர் நாயகியாக நடித்து வரும் இந்தப் படத்திற்கு, மறைந்த இயக்குநர் எஸ். பி.ஜனநாதன் திரைக்கதை எழுதி இருக்கிறார்.

கி. கேசவன்,
மட்/கிரான்குளம்

**7 நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த "அவன் தான் மனிதன்"எத்தனையாம் ஆண்டு திரைக்கு வந்தது?**

1975ஆம் ஆண்டு இந்தப் படம் திரைக்கு வந்தது

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# 'கடைசி விவசாயி' படம் வெளியாக விஜய் சேதுபதி ரூ.8 கோடி உதவி





கடைசி விவசாயி படம் வெளியாக விஜய் சேதுபதி ரூ.8 கோடி கொடுத்து படத்தை திரைக்கு கொண்டுவர உதவினார்.

விஜய் சேதுபதி நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். நண்பர்களுக்காக சில படங்களில் சம்பளமே வாங்காமல் இலவசமாக நடித்துக்கொடுக்கிறார். அப்படி அவர் சமீபத்தில் இலவசமாக நடித்துக்கொடுத்த படம் ‘கடைசி விவசாயி.’ அப்படியிருந்தும் அந்த படம் திரைக்கு வரமுடியாமல் தவித்தது. ரூ.8 கோடி இருந்தால் படம் திரைக்கு வரும் என்ற நிலையில், விஜய் சேதுபதி உதவ முன்வந்தார். ரூ.8 கோடி கொடுத்து படத்தை திரைக்கு கொண்டுவர உதவினார்.

விஜய் சேதுபதி உதவவில்லை என்றால், ‘கடைசி விவசாயி’ திரைக்கு வந்திருக்க மாட்டார்'' என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

# கார் கேட்ட மகளுக்கு பாடம் கற்றுக்கொடுத்த நடிகர் ரகுமான்

நடிகர் ரகுமான் கார் கேட்ட தனது மகளுக்கு ஒரு அழகான பாடம் கற்று தந்துள்ளார்.

நடிகர் ரகுமானுக்கு 2 மகள்கள். மூத்த மகளுக்கு சமீபத்தில்தான் திருமணம் நடந்தது. இளைய மகள் கல்லூரியில் படிக்கிறார். இவருக்கு கார் ஓட்டுவதில் அலாதி பிரியம். 18 வயதை கடந்த அவர் தனக்கு சொந்தமாக கார் வேண்டும் என்று ஆசைப்பட்டார். தனது ஆசையை அப்பாவிடம் தெரிவித்தார்.

அதைக்கேட்ட ரகுமான், மகளுக்கு ஒரு ‘டெஸ்ட்’ வைத்துள்ளார். ‘‘முன்பெல்லாம் கார் ஓட்டுபவர்களுக்கு காரை பற்றிய அடிப்படை பிரச்சினைகள் தெரியும். கார் டயர் ‘பஞ்சர்’ ஆனால் அதை கழற்றி மாட்ட தெரிந்திருக்க வேண்டும். காரை ஓட்டுபவரே டயரை கழற்றி மாட்டி விடுவார்.

கார் ஓடிக்கொண்டிருக்கும்போது பாதி வழியில் நின்றுவிட்டால், அதை பழுது பார்க்க தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இந்த காலத்தில் எல்லோரும் அடுத்தவர்களை சார்ந்தே வாழ்கிறார்கள். கார் டயரை தனி ஆளாக கழற்றி மாட்ட தெரியுமா, சொல். கார் வாங்கி தருகிறேன்'' என்று மகளிடம் ரகுமான் கூறினார்.

ரகுமானின் மகளும் அப்பாவின் அறிவுரையை ஏற்று, கார் டயரை கழற்றி மாட்டினார். உடனே மகளுக்கு ரகுமான் கார் வாங்கி தருவதாக வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்.



# வாணி போஜன் நடித்த காட்சிகளை கத்திரி போட்டு தூக்கிய மகான் படக்குழு



மகான் படத்தில் விக்ரமுக்கு இன்னொரு ஜோடியாக வாணி போஜன் நடித்திருந்தார். வாணி போஜன் சம்பந்தப்பட்ட காட்சிகளை மொத்தமாக நீக்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.


விக்ரம் துருவ்விக்ரம் இணைந்து நடித்துள்ள புதிய படம் ‘மகான்’. கதாநாயகிகளாக சிம்ரன், வாணி போஜன், சிருஷ்டி டாங்கே ஆகியோர் நடித்திருந்தனர். இந்த படம் சமீபத்தில் ஓ.டி.டி. இணையதளத்தில் வெளியானது. கார்த்திக் சுப்புராஜ் இயக்கியுள்ள இந்த படத்துக்கு ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. காரணம் இது விக்ரமுக்கு 60வது படம் ஆகும்.

இந்த நிலையில் படம் வெளியான பிறகு ரசிகர்களுக்கு வியப்பு மேலோங்கி இருக்கிறது. படத்தில் வாணி போஜன் நடித்த காட்சிகள் எதுவும் இடம் பெறவில்லை. சிம்ரன் மற்றும் சில பெண் கதாபாத்திரங்கள் மட்டுமே படத்தில் இடம்பெற்றுள்ளன. இதனால் ‘வாணி போஜனுக்கு என்ன ஆச்சு?’ என்று அவரது ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

படத்தில் விக்ரமுக்கு இன்னொரு ஜோடியாக வாணி போஜன் நடித்திருந்தார். படத்தின் நீளம் அதிகமாக இருந்ததால் சில காட்சிகளை வெட்டுவதற்கு படக்குழுவினர் ஆயத்தமானார்கள். முக்கியமான காட்சிகளை வெட்ட முடியாது என்பதால் வாணி போஜன் சம்பந்தப்பட்ட காட்சிகளை மொத்தமாக நீக்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நீக்கப்பட்ட அந்த காட்சிகளையும் ‘அன்சீன்’ காட்சியாக இணையதளத்தில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இருந்தாலும் தான் நடித்த காட்சிகள் மொத்தமாக நீக்கப்பட்டுள்ளது குறித்து வாணி போஜன் வருத்தத்தில் உள்ளார் என்றும், இது தொடர்பாக நண்பர்கள், உறவினர்களிடம் ஆதங்கப்பட்டு கொள்கிறார் என்றும் பேசப்படுகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து கார்த்திக் சுப்புராஜ் விளக்கமளித்தபோது, ‘சிம்ரனை விக்ரம் பிரிந்த பின்னர் வாணிபோஜனுடன் அவருக்கு காதல் ஏற்பட்டது என்றும் இது குறித்த காட்சிகள்படமாக்கப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் இரண்டாவது அலை காரணமாக பல காட்சிகள் படமாக்க முடியவில்லை என்றும் குறிப்பாக கூட்டம் அதிகமாக உள்ள காட்சிகளை படமாக்க முடியவில்லை என்பதால் வாணிபோஜன் கேரக்டர் படத்திலிருந்து தூக்கப்பட்டுவிட்டதாகவும் கார்த்திக் சுப்புராஜ் கூறியுள்ளார்.



# ஆண்கள் நிஜ ஹீரோவாக என்ன செய்ய வேண்டும்? நடிகை ஆண்ட்ரியா யோசனை





தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாகவும் மற்றும் பாடகியாகவும் வலம்வரும் ஆண்ட்ரியா ஜெர்மையா தற்போது சோஷியல் மீடியாவில் ஒரு முக்கியமான வேண்டுகோளை முன்வைத்துள்ளார். நீங்கள் நல்லது செய்ய விரும்பினால் இன்றே ரத்ததானம் செய்யுங்கள் என்று நடிகை ஆண்ட்ரியா கூறியுள்ளார்.

தமிழ் சினிமாவில் துணிச்சலான கதாபாத்திரங்களில் நடித்து புகழ் பெற்றவர் நடிகை ஆண்ட்ரியா. இவரது நடிப்பில் பிசாசு2’, ‘மாளிகை’ படங்கள் விரைவில் திரைக்கு வரவுள்ளது. ‘கா’, ‘நோ என்ட்ரி’, ‘வட்டம்’ மற்றும் பெயரிடப்படாத 2 படங்களிலும் நடித்து வருகிறார்.முன்னணி நாயகியாக வலம் வரும் ஆண்ட்ரியா பின்னணி பாடகியும் ஆவார்.

சமீபத்தில் வெளியான ‘புஷ்பா’ படத்தில் ‘ஓ சொல்றியா மாமா...’ என்ற பாடலை தனது கிறங்கடிக்கும் குரலால் பாடி கிளுகிளுப்பூட்டினார். சமூக வலைத்தளத்தில் மிகப்பெரிய ரசிகர் பட்டாளத்தை கொண்டுள்ள நடிகை ஆண்ட்ரியா தற்போது ஒரு முக்கியமான வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

“நீங்கள் நிஜ ஹீரோவாக இருக்க வேண்டுமென்றால் அனைவரும் ரத்ததானம் செய்யுங்கள். உங்களின் ஒவ்வொரு துளி ரத்தமும் ஒரு உயிரை காப்பாற்றும். 80 சதவீத இளம் பெண்கள் ரத்ததானம் கொடுக்க முன் வந்தாலும், உடல்ரீதியாக அவர்களால் சரியான முறையில் ரத்ததானம் கொடுக்க முடியவில்லை. அந்த சிக்கலை நானே பல முறை சந்தித்துள்ளேன். எனவே ஆண்களே... நீங்கள் நிஜ ஹீரோவாக வேண்டும் என்றால், ரத்ததானம் செய்யுங்கள். இதற்காக உங்களுக்கு நான் ஒரு பாடலை பாடுவேன்”.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். அத்துடன் ரத்ததானம் செய்யும் தனது புகைப்படத்தையும் அவர் பதிவிட்டுள்ளார். ஆண்ட்ரியாவின் இந்த வேண்டுகோளுக்கு அவரது ரசிகர்கள் பெருமளவில் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# பாரத் லங்கா கலாசார நிறுவனமும் இந்திய தூதரகமும் நடத்திய பாடல் வெளியீட்டு விழா















சங்கர் , ஜயகிருஷ்ணர் இருவர் இணைந்து இசையமைத்த திரைப்பட பாடல் வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை (12)மாலை கொழும்பு 7. அனர்த்த முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த தூதரகத்தின் துணைத்தூதுவர் வினோத் கே.ஜாகோப் மங்கள விளக்கு ஏற்றி ஆரம்பித்தது வைப்பதையும்.அண்மையில் மறைந்த இசைக் குயில் லதா மங்கேஷ்காரின் படத்திற்கு மலர் தூவி புஷ்பாஞ்சலி செலுத்துவதையும் அருகில் புரவலர் ஹாசிம் உமர் அருகில் இருப்பதையும் படங்களில் காணலாம்.

## லிற்றில் எய்ட் திறன்விருத்தி மையம் நாடத்தும் கவிதை , கட்டுரை, சிறுகதை போட்டிகள்

**கருப்பொருள்**

1. தொழிநுட்பம்,
2. கல்வி
3. பொருளாதாரம்
4. சமூகம்
5. வாழ்வியல்

மேற்குறிப்பிட்ட கருப்பொருளுக்கமைவாக 250300 சொற்களுக்கு மேற்படாமல் ஆக்கம் இருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு போட்டியில் மாத்திரமே பங்கு பெற்றலாம். வயதெல்லை 18 வயதிற்கு உட்பட்டோராக இருத்தல் வேண்டும். ஆக்கங்கள் தெளிவான எழுத்துக்களில் கையெழுத்து பிரதியாகவோ கணினிப்படுத்தியோ ஆக்கங்கள் 01.03.2022 ற்கு முன்னதாக எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். போட்டிகளில் வெற்றிபெறும் ஆக்கங்கள் little bird சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். நடுவர்களின் தீர்பே இறுதியானதாகக்கொள்ளப்படும். சஞ்சிகை வெளியீட்டுவிழாவில் பரிசுத்தொகை வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

முதலாம் பரிசு 5000/=
இரண்டாம் பரிசு3000/=
மூன்றாம் பரிசு1000/=

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
லிற்றில் எய்ட்,
கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி.
அல்லது
littleaidsl@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பலாம்.
கைபேசி இலக்கம் 0777378556

FRIENDLY PASANGA

அர்ஜுன் தயாரிப்பில் துஷான் சஜன் கதை இயக்கத்தில் கார்த்திக் இசையமைப்பில் துஷான் சஜன், ராகுல், தனு, கீர்த்தி, ரஷி ஆகியோரின் நடிப்பில் கடந்த 14 ஆம் திகதி "துஷான் சஜனின் ‘Face Book' தளத்தில் "உன்னோடு நானும்" எனும் குறும் திரைப்படத்தின் முதல் பார்வைக்கு வெளியிடப்பட்டது.

இந்த படத்திற்கான ஒளிப்பதிவு "ஷேன் ஸ்டூடியோ" மற்றும் லிடோவில் செய்யப்பட்டது. லிடொ, ரஷி, ஜிவானி நித்யா ஆகியோரின் இணைப்பில் வெளிடப்படவுள்ள இத் திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது...

இந்த திரைப்படம் வெகு விரைவில் "Friendlypasanga" யூடியூப் சேனலில் வெளியாகும் என அறிவிக்கப்படுகின்றது.


பிரசன்யா – வத்தளை


சாரீக் – அமீன்


டிலக் ஷன் – திருகோணஸ்வரம்


சந்திரமோகன் – நீர்கொழும்பு


கிரெஸ்கட்


மனோ பிரியா – வெள்ளவத்தை

# செல்ஃபி உலா



நண்பனுடன் இல்ஹாஸ்


மூதூர் – சகான்



துஷான் – வவுனியா


ராமன் – வத்தளை


## எண்களை இணைத்து நிறம் தீட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்



## படத்திலுள்ள மிருகங்களின் பெயர்களை எழுதுங்கள்



## சொற்களை உருவாக்குவோம்




1....................
2....................
3....................
4....................
5....................
6....................

## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்






சுவிட்சர்லாந்தில் ஆண்டுக்கு ஒரு நபர் பத்து கிலோவுக்கு சமமான சொக்லேட்டை சாப்பிடுகின்றார்.

# குறைபாடிருப்பின் பொருட்களை மீள உற்பத்தி செய்து வழங்குவதே எமது தொழில் வெற்றியின் ரகசியம்

## 15 வருடங்களாக கைத்தறி உற்பத்தி நிலையம் நடத்தும் உலகேஸ்வரன்

**கண்கவர் ஆடைகள் பலரின் வாழ்க்கையை வண்ணமயமாக்கும். வண்ண ஆடைகளால் அலங்கரிக்கப்பட்ட தொழிற்சாலையாக காட்சியளிக்கிறது கொட்டகலை தர்மபுரத்தில் அமைந்துள்ள கைத்தறி உற்பத்தி நிலையம். இத்தொழிற்சாலை 46 வயதான வி.உலகேஸ்வரனின் முயற்சியின் வெளிப்பாடாகும்.**

"இனங்கள் நாட்டை வளப்படுத்த வேண்டும். நமது பன்முகத் தன்மையில் ஒரு தனித்துவம் இருக்கின்றது.

அந்த தனித்துவம் அனைவரையும் ஒன்று சேர்க்கிறது. கலாசார அடிப்படையிலான அழகான படைப்புகள் மிகவும் அற்புதமானது" என்ற ஆபிரிக்க அறிஞர் ஜோன்சனின் கூற்றை தன் தொழிலில் வெளிப்படுத்தி வருகிறார் உலகேஸ்வரன். தொழிற்சாலை மட்டுமல்லாது உலகேஸ்வரனின் குடும்பமும் இரண்டு வண்ணங்கள் இணைந்து ஜொலிக்கிறது. இவரின் மனைவி மதுபாசினியை மேல் மாகாணத்திலுள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையில் சந்தித்து திருமணம் செய்து கொண்டதாக இவர் குறிப்பிட்டார்.

பேசும் மொழிகள் வேறானாலும் இருவரது நோக்கத்தை ஒன்றாகக் கொண்டு தொழிலை உருவாக்கி ஒரு நிறுவனமாக கட்டியெழுப்பியுள்ளனர். இருவரும் ஆடைத்தொழிற்சாலையில் பணிசெய்யும் போது சேகரித்த பணத்தினைக் கொண்டு இயந்திரம் ஒன்றை வாங்கி நிறுவனத்தினை ஆரம்பித்துள்ளனர். முதல் வருடம் எதிர்பார்த்தப்படி இலகுவானதாக அமையவில்லை. வாடிக்கையாளர் தளத்தினை அமைத்துக் கொள்வதிலும், பொருத்தமான இயந்திரங்களை பெற்றுக்கொள்வதிலும் பாரிய சவால்கள் காணப்பட்டபோதிலும் பிற்காலத்தில் தம்முடைய உற்பத்திகளை விரிவாக்கி தொழிலை பலப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2008ம் ஆண்டு ஒரு ஊழியருடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியாபாரம் பின்னாளில் 25 ஊழியர்களுடன் இயங்கும் தொழிற்சாலையாக வளர்ச்சியடைந்தது. மென்மையான நூல்களைக் கொண்டு நுட்பமாக தயாரிக்கப்படும் உற்பத்தியென்பதால் ஒவ்வொரு உற்பத்திக்கும் நீண்ட நேரமெடுக்கும். அத்தோடு தனித்துவமான உற்பத்தியாக இவை வெளிவரும். இங்கு பணியாற்றுபவர்களை ஊழியர்கள் என்ற





அழைப்பதைவிட கலைஞர்கள் என்று அழைத்தால் பொருத்தமாக இருக்கும்.

"இங்கு பணிசெய்யும் அனைவரும் இப்பிரதேசத்தை சேந்தவர்கள். அவர்களில் அதிகமானோர் பெண்கள். இதுவொரு கிராமப்பகுதி என்பதால் தொழில் வாய்ப்புகள் கிடைப்பது மிக அரிது" என உலகேஸ்வரன் கூறினார். எதிர்க்காலத்தில் வியாபாரத்தை விரிவுப்படுத்தி, பெண்களுக்கு அதிகத் தொழில்வாய்ப்பை வழங்கவும் அவர் எதிர்ப்பார்க்கிறார்.

தற்போது இந்த நிறுவனம் சாரம், பெண்களுக்கான சாரி மற்றும் ஏனைய ஆடைகள், படுக்கை விரிப்புகள் என பல உற்பத்திகளை உருவாக்குகின்றது. இவற்றை கொழும்பு, வெலிமடை, பலாங்கொடை மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களில் சந்தைப்படுத்துகின்றனர். வாடிக்கையாளர்கள் உற்பத்தியில் திருப்தியில்லை என்றால் உலககேஸ்வரன் அதனை மீளபெற்றுக் கொண்டு புதிய உற்பத்தியாக வழங்குகின்றார். இது இந்நிறுவனத்தின் சிறப்பம்சமாகும்.

நான் ரொம்ப பிஸி...

"எங்கள் தயாரிப்புகளுக்கான உத்தரவாதத்தினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றோம். ஏதும் குறைகளிருப்பின் பொருட்களை தொகுதியாக மீளவும் உற்பத்தி செய்து வழங்குவோம்" என்றும் இதுவே நிறுவன வெற்றியின் அடிப்படையாகும் எனவும் உலகேஸ்வரன் குறிப்பிட்டார்.

"வியாபாரப் போட்டியாளர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நாங்கள் சிறந்த மூலப்பொருட்களைக் கொண்டு தரமானப் பொருட்களைச் சந்தைப்படுத்துகின்றோம். எனவே எமது உற்பத்திகளுக்கு சிறந்த கேள்விக் காணப்படுகிறது" என்பது உலகேஸ்வரின் திடமான நம்பிக்கையாகும்.

கிறிசலிஸ் நிறுவனத்தின் பங்களிப்பு, நிறுவனத்தின் உற்பத்தியை 30 சதவிகிதத்தால் அதிகரித்துள்ளது. பணியாளர்கள் இலகுவாக பணிசெய்ய கூடியவகையில் அதி நவீன இயந்திரமும் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் உற்பத்தி மற்றும் வருமானத்தை எதிர்காலத்தில் அதிகரிக்கும். " முன்பு நாங்கள் ஒரு நாளில் 15 சாரங்களை வடிவமைக்கின்றோம். தற்போது அதை 45தாக அதிகரிக்கும் வாய்ப்பு எமக்கு கிட்டியுள்ளது. எமது செயற்திறன் வெகுவாக அதிகரித்துள்ளது" என்றார் உலகேஸ்வரன். இவர் தனது புதிய கட்டடத்தினை கொட்டகலை தொழில் வலயத்தில் அமைக்கவுள்ளார். இச்செயற்பாடு அடுத்த வருட இறுதிக்குள் நிறைவடைந்ததும் மேலதிகமாக 50 தொழில் வாய்ப்புக்களை வழங்க எதிர்பார்கின்றார்.





தொடர்புகளுக்கு:
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

# முகப்பருக்களை இயற்கை முறையில் குணப்படுத்துவது எப்படி?

**முகப்பரு விஷயத்தில் சரியான நேரத்தில் தகுந்த சிகிச்சை எடுக்காவிடில் முகத்தில் கரும்புள்ளிகள், ஆழமாக தழும்புகள் ஏற்பட்டு விகாரமான தோற்றத்தை ஏற்படுத்தும்.**

பெண்களுக்கு மிகவும் எரிச்சலூட்டும் ஒரு விஷயம் முகப்பருக்கள் ஆகும். உங்களுக்கு அதில் உடன்பாடில்லை என்றால், தங்களுக்கு பிடித்த சாக்லேட் சாப்பிடுவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிப்பவரையும், சாக்லேட் சுவைத்தப்பின் பயந்தபடியே முகத்தை பார்ப்பவரையும் கேட்டுப் பாருங்கள்! அவர்கள் பல வகையான உணவுகளை உண்ணவே அச்சப்படுவார்கள். அவை முகத்தை அழகின்றி ஆக்குவதுடன் வலியையும் தருகின்றன.

**பருக்களை விரட்ட அளிக்கும் டிப்ஸ்கள் இதோ:**

## ரோஸ் வாட்டர் மற்றும் ஆஸ்ட்ரிஞ்சன்ட்

எண்ணெய் பசையுள்ள சருமம் உடையவர்களுக்கு அதிகம் பருக்கள் உண்டாக வாய்ப்பிருக்கிறது. அதனால் சருமத்தில் எண்ணெய் பசை ஏற்படுவதை தவிர்ப்பது அவசியம். தினசரி இருமுறையாவது முகத்தை நல்ல தரமான பேஸ் வாஷ் (Face Wash) கொண்டு கழுவ வேண்டும். முகத்திற்கு ரோஸ் வாட்டரை கீழே கூறியபடி உபயோகப்படுத்தவும்:

நல்ல தரமான ரோஸ் வாட்டர் மற்றும் ஆஸ்ட்ரிஞ்சன்ட் எடுத்துக் கொள்ளவும்.

முகத்தில் மெதுவாக தடவவும். தினசரி இரு முறை இதை செய்யவும்.

## மஞ்சள் மற்றும் தயிர்

மஞ்சள், தயிர் இரண்டுமே மருத்துவ மற்றும் காயங்களை குணமாக்கும் தன்மைகள் உடையது. அவை பருக்களை விரட்டி தூய்மையான சருமத்தை அளிக்கும். இவற்றை உபயோகிக்கும் முறை :

இரண்டையும் குழைத்து பேஸ்ட் ஆக்கவும். முகத்தில் சமமாக பூசவும்.

15 – 20 நிமிடங்கள் கழித்து, கழுவவும்.

## சந்தனம் மற்றும் ரோஸ் வாட்டர் பேஸ்ட்

சந்தனத்திற்கு வலியை குறைக்கும் தன்மையும் பரு மற்றும் மாசுவை நீக்கும் சக்தியும் உண்டு. அதை பின் வருமாறு உபயோகிக்கவும்:

சந்தனப்பொடியுடன் ரோஸ் வாட்டருடன் கலந்து குழைக்கவும்.

உங்கள் நெற்றி மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடவவும்.

ஒரு மணி நேரம் கழித்து கழுவவும்.

## வேப்பிலை

வேப்பிலை உங்களுக்கு தூய்மையான, அப்பழுக்கற்ற சருமத்தை அளிக்கக் கூடிய ஒரு மிகச் சிறந்த கிருமி நாசினி. அதை உபயோகிக்கும் முறை:

சில வேப்பிலைகளை எடுத்து நன்கு கழுவவும்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் அந்த இலைகளைப் போட்டு, அடுப்பை லேசாக எரிய விட்டு சில நிமிடங்கள் கொதிக்கவிடவும்.

அந்த நீரின் நிறம் மாறத் தொடங்கும் பொழுது அடுப்பை அணைத்து விடவும்.

அந்த நீரை ஆற விடவும் பின் வடிகட்டி அந்த நீரில் தினமும் முகத்தை கழுவவும்.













## வெள்ளரி சாறு

வெள்ளரிசாறு முகத்தில் சுரக்கும் எண்ணெய் பசையை கட்டுபடுத்துகிறது. அதன் குளிர்ச்சி தன்மை உங்கள் சருமத்தை குளிர்வித்து ஈரத்தன்மை அளிக்கிறது. அதை உபயோகிக்கும் முறை:

இரண்டு மேசைக் கரண்டி வெள்ளரிச் சாருடன் ஒரு மேஜைக்கரண்டி பால் மற்றும் சில துளிகள் எலுமிச்சை சாறு சேர்க்கவும்.

ஒரு பருத்தி பஞ்சை இந்த சாறில் முக்கி முகத்தை துடைக்கவும்.

இது உங்கள் முகத்தை நன்கு சுத்தம் செய்ய உதவும்.

மேற்கூறிய குறிப்புகளுடன், நாம் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை:

நிறைய நீர் அருந்துங்கள்.

உடல் தூய்மை எவ்வளவு முக்கியமோ அந்த அளவு உங்கள் முக தூய்மையும் அவசியம்.

மன அழுத்தமும் பருக்களை உண்டாக்கும் என்பதால், மன அழுத்ததிலிருந்து விலகி இருங்கள்.

துரித உணவுகளை தவிர்த்து விடுங்கள்.








# நூல் வெளியீட்டு விழா


பல்துறை ஆளுமை கொண்டவரும் எழுத்தாளரும் ஒளி, ஒலிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீன் மொழிபெயா்த்த ”நான் இன்னும் உயிா்ப்புடன் இருக்கின்றேன்” (பெண் ஆளுமைகளின் உரைகள்) நூல் வெளியீட்டு விழா (12.02.2022) சனிக்கிழமை கொழும்பு அல்ஹிதாய வித்தியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை உதவிப் பணிப்பாளா் பாத்திமா றினுஸியா தலைமையில் நடைபெற்றது.


பிரதம அதிதியாக முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும் சிங்கப்பூர் இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றிய பேரியல் அஷ்ரப் கலந்து கொண்டாா். நூலின் முதற்பிரதியை இம்ரான் நைனார் பெற்றுக் கொண்டாா். வரவேற்புரையை கவிஞா் பாத்திமா ஸிமாரா நிகழ்த்த, சட்டத்தரணி பாத்திமா நூல் பற்றிய விமா்சன உரையை நுஸ்ரா நிகழ்த்தினார். சருக், மௌலவியா நஸ்லின் ரசீத், மௌலவியா அகீலா பத்தீன் ஆகியோரரும் உரை நிகழ்த்தினாா்கள். முகநூல் நண்பா் வட்டம் அஷ்ரப் சிகாப்தீனுக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி கௌரவித்தனா்.


மேற்குலகில் வாழும் இஸ்லாமிய செயற்பாட்டாளா்களான பெண் ஆளுமைகள் பலரின் கருத்தாழம் மிக்க உரைகளை மொழிபெயா்த்து இந் நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள உரைகள் மிகப் பொருத்தமான தலைப்புக்களில் நம் கவனயீர்ப்புக்குரிய காத்திரமான கருத்துக்களைக் கொண்டனவாக உள்ளன. அநீதிகளையும் அராஜகங்களையும் கண்டு அஞ்சித் துவண்டு போகாது, முடங்கி விடாது அவற்றைத் தட்டிக் கேட்டு அவற்றுக் கெதிராக குரல் கொடுப்பதோடு அவற்றை களையவும் முயற்சி செய்வது நமது கடமை என்ற செய்தியையும் இந்நூலில் உள்ளது..

**அஷ்ரப் ஏ சமத்)**

















# கொழும்பு லயன்ஸ் கிளப் ஒப் கோல்ட் சிட்டியின் 14 வது வருடாந்த கூட்டம்

கொழு ம்பு லயன்ஸ் கிளப் ஒப் கோல்ட் சிட்டியின் 14 வது வருடாந்த கூட்டம் சென் மைக்கல் வீதி கொழும்பு 03 கொள்ளுப்பிட்டி கோல்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இந் நிகழ்வில் ரீஜன் (Region) செயற்பாட்டளர் லயன் கமால் சில்வா (Zone ), லயன் நினேஸ் அமிர்தய்யா ஆகியோருடன் கழகத் தலைவர் லயன் சொ. செந்தில் குமார், செயலாளர் லயன் மனோகரன், பொருளாளர் லயன் சதாசிவம், கவனரின் செயலாளர் லயன் பீட்டர் செல்வராஜ், செயற்பாட்டாளர் லயன் பொன் பத்மநாதன்,, லயன் கார்த்திகேசு , உறுப்பினர்களான லயன் சிவகுருநாதன், லயன் பாலசிறிதரன், லயன் தேவராசன், லயன் சிவகுமார் (சுசி), லயன் ஆனந்தராஜ், லயன் லோகவர்தணன், லயன் உதயவர்தணன், லயன் விஜயகுமார், லயன் ராஜேந்திரன் மற்றும் அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.










# சங்கவி பிலிம்ஸின் கலாவிபூஷண விருது வழங்கிய விழா BMICH இல்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.